போகர் 7000

7-ம் காண்டம்



தாமரை நூலகம், சென்னை - 600 026.

போகர் சத்த காண்டம்

ஏழாம் காண்டம்

பதிப்பாசிரியர்

ஆர். சி. மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 64

இரண்டாம் பதிப்பு : டிசம்பர் - 1995

மூன்றாம் பதிப்பு : செப்டம்பர் - 2002

நான்காம் பதிப்பு : டிசம்பர் - 2012

ஐந்தாம் பதிப்பு செப்டம்பர் 2018

ஆறாம்பதிப்பு நவம்பர் 2021

ஏழாம் பதிப்பு மார்ச் : 2023

நூலைப்பற்றி

உரிமைபெற்றது

நூலின் பெயர் : போகர் சத்த காண்டம்
ஏழாம் பாகம்

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : மார்ச் : 2023

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : 21 செ. மீ. x 14 செ. மீ

தாளின் தன்மை : 16.6 கி.கி. வெள்ளைத்தாள்

எழுத்தின் அளவு : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 254+8

பிரதிகள் : 1000

நூலின் விலை : ரூ 150.00

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை - 34

பதிப்புரை

போகர் ஏழாவது காண்டம் உங்கள் கைகளில் தவழ்வதைக்கண்டு பெருமை அடைகிறோம். தமிழ் கூறும் நல் உலகுக்கு இந்தச் சிறந்த விருந்தைப் படைக்க வேண்டும் என்று நாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பயன் அளித்துள்ளது.

நீண்ட நெடுங்காலமாக கண்ணில் காண்பதற்குக் கூட அரிதாக இருந்த போகர் 7000, போகர் நிகண்டு போன்ற நூல்களை வெளியில் கொண்டு வந்ததை எண்ணி புளகாங்கிதம் அடைகிறோம். போகர் 12000 எனும் படைப்பு இருப்பதாகவும் அதை எப்படியேனும் வெளிக்கொணர வேண்டுமென பல நல்ல உள்ளங்கள் தெரிவிக்கின்றன(ர்). ஆனால் அந்த புத்தகத்தை வைத்திருப்பதாக ஒரு சிலர் தெரிவித்து விட்டு அதைக் கேட்டு அணுகினால் வேறு யாரிடமோ கொடுத்துவிட்டதாகவும், திரும்ப கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கின்றனர். இதே போன்று தான் அகத்தியர் 12000 எனும் நூலும் கிடைத்தபாடில்லை. அதிலாவது முதல் ஐந்து காண்டங்களையாவது வெளியிட்டிருக்கிறோம் எனும் மகிழ்ச்சி எங்களுக்கு உண்டு.

புத்தகம் அல்லது ஓலைச்சுவடிகள் வைத்திருப்பவர்கள் அவற்றை எங்களுக்குத் தந்து உதவினால் அவற்றை பதிப்பித்து உரிய மக்களின் பயன்பாட்டுக்கு உதவ வாய்ப்புள்ளது என மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்

எஸ்.பி.இராமச்சந்திரன்

பொருளடக்கம்

91/4

பேர்கர் 7000

கடவுள் துணை

மஹா மகத்துவம் பொருந்திய

போக முனிவர்

சத்த காண்டம் - 7000

ஏழாவது காண்டம்

காப்பு

தானான பிரகாசமான நந்தி
தண்மையுள்ள மனோன்மணியாள் பாதம்போற்றி
கோனான வேல்முருகர் தாள்பணிந்தேன்
கொற்றவனே அரி அயனும் பதந்தாள் போற்றி
மானான அகஸ்தியனார் பாதம்போற்றி
மகத்தான கமலமுனிதாள்பணிந்தேன்
தேனான சதாசிவத்தின் அடிபணிந்தேன்
தேற்றமுடன் காலாங்கி பாதங்காப்பே. (6001)

காப்பானப் பதினெண்பேர் முனிவர்தானும்
பலபலவாய்ப் பாடி வைத்தார் நூல்கள்பேதம்
மூப்பான நூல்களுமே அனேகம் சொன்னார்
முனையான சித்துமகா ரிஷியார்தாமும்
வாப்பான பெருநூலில் அனந்தம் சொன்னார்
வளமையுடன் இன்னூல்போல் யாரும்சொல்லார்
தாப்பான நூலிதுதான் சப்தகாண்டம்
தண்மையுடன் பாடிவைத்தேன் ஏழாயிரந்தானே.
(6002)

தானான சப்தகாண்டம் ஏழாயிரத்தில்
தண்மையுள்ள காண்டமிது ஏழாங்காண்டம்,
கோனான காலாங்கி கடாட்சத்தாலே
கூறினேன் வையகத்து அதிசயங்கேள்,
தேனான மணிபோல் ஏழாயிரத்தில்
தேற்றமுடன் சொல்லிவைத்தேன்ஏழாங்காண்டம்.
மானான கடைக்காண்டம் நீதிமார்க்கம்
மன்னவனே உந்தமக்காய் ஓதினேனே. (6003)

ஓதினேன் சீனபதி மாண்பருக்கு
உத்தமனே காண்டம் ஏழாயிரந்தான்,
நீதியுடன் சன்மார்க்க நிலையும்சொன்னேன்
நிஷ்களங்கம் ஆனதொரு வழியும்சொன்னேன்,
பாதிமதி சடையணிந்த தம்பிரான்கள்
பாருலகில் செய்ததொரு நூலையெல்லாம்,
ஆதியந்த முடிவுடனே பொருள் ஆராய்ந்து
அப்பனே சின்மயத்தின் வழிசொன்னேனே. (6004)

சொன்னதொரு பொருள்கள்எல்லாம் இதில் அடக்கட
சுந்தரனே போகர் ஏழாயிரந்தான்.
மன்னவர்கள் வையகத்து வாழ்க்கை எல்லாம்
மார்க்கமுடன் இதிலடக்கம் சொல்லொண்ணாது,
தென்னவர்கள் தேவாதி முனிவர் தாமும்
தேற்றமுடன் செய்ததொரு நூலையானும்
பன்னவே திரட்டியல்லோ பெருநூலாக
பாரினிலே வினோதவகை சொல்லிட்டேனே. (6005)

இட்டேனே இதிகாசப் பொருள்களெல்லாம்
எழிலான போகர் ஏழாயிரத்தில்,
சட்டமுடன் பாடியல்லோ நுணுக்கமாக
சாங்கமுடன் செய்துவைத்த பெருநூலப்பா,
நட்டமது வாராது இந்நூலப்பா
நலமான வேதையிது கோடிக்கோடும்
திட்டமுடன் நாதாக்கள் சொன்னதில்லை
தீர்க்கமுடன் சப்தகாண்டம் பண்புதானே. (6006)

பண்பான அறுவகை காண்டத்துள்ளே
பலகோடி வேதைமுகம் அனந்தம்சொன்னேன்,
நண்பான நாதாக்கள் நீதிமார்க்கம்
நலமுடனேயா ரேனும் சொன்னதில்லை,
திண்பான நீதிவழிக்கு உரியசித்தை
தீர்க்கமுடன் பாடிவைத்தேன் இன்னூலுக்குள்
வன்பான பெருநூல்தான் குருநூலாகும்
வண்மையடன் பாடிவைத்தேன் காண்டமாமே.(6007)

காண்டமாம் சப்தகாண்டம் ஏழாயிரந்தான்
காவியங்கள் போல ஒருநூலும் இல்லை,
பாண்டவாள் வையகத்து மாண்பரெல்லாம்
பாங்குடனே சித்துவகை முனிவர்வாழ்க்கை,
தாண்டவம்போல் குருநூல் ஏழாயிரத்தில்
சாற்றினேன் அறுகாண்டம் தன்னிற்குள்ளே,
பூண்டதொரு லோக அதிசயங்கள் எல்லாம்
புகட்டினேன் காலாங்கி கடாட்சந்தானே. (6008)

தானான சப்தகாண்டந் தன்னைப்போலே
சாற்றினார் அகஸ்தியனார் முனிவர்தானும்,
கோனான பன்னீர் ஆயிரந்தானப்பா
கொற்றவனே புலஸ்தியருக்கு உபதேசித்தார்,
பானான பனிரெண்டு காண்டம்சொன்னார்
பாலகனே ஆயிரத்துக்கு ஒருகாண்டந்தான்,
தேனான மனோன்மணியாள் கிருபையாலே
தேற்றமுடன் பாடிவைத்த நூல்தான்பாரே. (6009)

பாரேதான் ஏழுலட்சம் காப்புதன்னை
பாலகனே பாடிவைத்தார் அனந்தமாக,
நேரேதான் இன்னூல் ஏழாயிரந்தான்
நேர்மையுள்ள காண்டமது தன்னைப்போலும்,
சீரேதான் அகஸ்தியனார் உண்டுசெய்த
சிறப்பான பன்னீராயிரத்தைப் போலும்,
ஆரோதான் சொன்னதுண்டோ நூலையப்பா
அப்பனே யானுமல்லோ உரைத்திட்டேனே. (6010)

உரைத்தேனே வெகுநூல்கள் அனந்தம்கோடி
உத்தமனே இன்னூலுக் கொப்பதாமே,
கரைத்ததொரு பொருள்கள்எல்லாம் இதிலடக்கம்
காசினியில் கண்டவர்கள் விடுவாரோசொல்,
நரைதிரையும் வருவதில்லை இந்நூல்கண்டால்
நாதாக்கள் தான்முதலோர் நாணுவார்கள்,
சுரையடர்ந்த கதைபோலே எண்ணவேண்டாம்
சுந்தரனே குருநூலாம் மெய்நூலாமே. (6011)

ஏழாவது காண்டம்

நூலான நூலுக்குள் மார்க்கம் சொன்னேன்
நுட்பமுடன் மார்க்கமது என்னவென்றால்,
பாலான சித்தருக்கு நீதிசொன்னேன்
பாங்குடனே அதீதவழி விதியுஞ்சொன்னேன்,
சேலான சன்மார்க்கந் துன்மார்க்கந்தான்
செப்பினேன் கடைக்காண்டம் ஏழினுள்ளே,
மாலான மகுத்துவங்கள் சொல்லொண்ணாது
மகத்தான நீதி வழிபாடுகாணே. (6012)

காணவே சத்தகாண்டம் ஏழினுள்ளே
கருவான கடைக்காண்டம் தன்னுக்குள்ளே,
பூணவே சிடிகையென்ற நுணுக்கமப்பா
புகட்டினேன் புலிப்பாணி மைந்தாகேளு,
ஆணவங்கள் தானொடுங்கி மைந்தாநீயும்
அப்பனே சித்தாதி முனிவர்க்கெல்லாம்
நாணலுடன் முடிவணங்கிக் கரங்குவித்து
நாற்பாத கமலமதை வணங்குவாயே. (6013)

வணங்கியே நூலதனைப் பதனம்பண்ணு
வகையில்லாக் கசடருக்கு ஈயவேண்டாம்,
சுணங்கமெனும் கழுதையப்பா மாண்பர்தாமும்
சுந்தரனே வெகுபேர்கள் இருப்பாருண்டு,
கணமுடைய ராட்சதர்கள் தன்னைப்போல
கருமிகளும் மெத்தவுண்டு ஈயவேண்டாம்,
மணங்கமழும் புண்ணியர்கள் தம்மைத்தேடி
மகத்தான நூல்கொடுத்தால் புனிதமாமே. (6014)

புனிதமாம் கருமிகட்கு கொடுத்தாயானால்
பூபால கண்மணியே பாபம்எய்தும்,
கனிவுடைய புண்ணியர்கள் வெகுபேருண்டு
காசினியில் உன்னைவந்து நூல்கேட்டாலே
இனிதான வார்த்தையது மிகவும் கூறி
எழிலான நூலுக்கு சாபம்தீர்த்து
தனியாகத் தான் அழைத்து உபதேசித்து
தாரணியில் பிழைக்கும் வகை சொல்லுவீரே. (6015)

சொல்லவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
துரைராஜ காலாங்கி நாதர்தம்மை
புல்லவே அவர்தமது பதாம்புயத்தை
போற்றியே என்னாளும் மனதுவந்து,
அல்லலது விட்டகற்றி அன்புகூர்ந்து
அப்பனே சதாநித்தம் மனதிலுன்னி,
வெல்லவே உபதேசம் ஓதியல்லோ
விருப்பமுடன் நூல்கொடுத்தால் புண்ணியமாமே.
(6016)

புண்ணியமாம் இன்னமொரு மார்க்கங்கேளு
புகழான புலிப்பாணி மைந்தாபாரு,
மண்ணிலே வெகுகோடி சித்துதாமும்
மகத்துவங்கள் கொண்டதொரு புனிதவான்கள்
நண்ணியதோர் நூல்களெல்லாம் மிகவுங்கூறி
நலமுடனே மறைத்துவைத்தார் அனேகங்கோடி,
உண்மையாய் நூலதனைப் பாடியல்லோ
உத்தமனே மறைத்ததினால் ஒன்றுங்காணே. (6017)

ஒன்றான சித்துமுனி ரிஷியைப்போலும்
ஓகோகோ நாதாக்கள் தன்னைப்போலும்,
குன்றான நூலதனை மிகவும்பாடி
குகைதனிலே மறைத்துவைத்தார் கோடிமாண்பர்,
வென்றிடவே அகஸ்தியரும் மிகவாய்ப்பாடி
வெட்டவெளி குகைதனிலே மறைத்துவைத்தார்,
தென்திசையில் சித்தர்களும் தாமுமல்லோ
தெளியாமல் மலைமீதில் அளித்தார்தானே. (6018)

தானான சாத்திரத்தைப் பாடியல்லோ
தன்மையுடன் குகைதனிலே வைத்தாரப்பா,
கோனான கும்பமுனி ரிஷியார்தாமும்
கூட்டமிட்டு சாத்திரத்தை மறைத்துவைத்தார்,
மானான காலாங்கி நாதர்தாமும்
மார்க்கமுடன் நூலதனைப் பாடியல்லோ,
தேனான சீடவர்க்க மாண்பருக்குத்
தேற்றமுடன் நூல்கொடுத்தார் திண்ணமாமே. (6019)

போகர் இமயகிரி வடபாகத்தில் சிங்கம் குட்டி ஈனுவதைக் கண்டது

திண்ணமாம் இன்னமொரு மார்க்கம்பாரு
தீர்க்கமுடன் புலிப்பாணி மைந்தாகேளு,
வண்ணமா மேருவுக்கு வடபாகத்தில்,
மகத்தான கடலோரம் காட்டகத்தில்,
நண்ணவே சிங்கமதை யானும்கண்டேன்
நாதாக்கள் சித்துமுனி அங்கும்உண்டு,
திண்ணமுடன் குளிகையது கொண்டுமல்லோ
தீர்க்கமுடன் வனத்தை இறங்கினேனே. (6020)

இறங்கினேன் வடபாகம் கடலோரத்தில்
எழிலான இருளடைந்த கானகந்தான்
உறங்குமே கரடிபுலி சிங்கந்தானும்
ஓகோகோ நாதாக்கள் மெத்தஉண்டு
திறமுடைய கரிக்கூட்டஞ் சொல்லொண்ணாது
திரளான வடகோடி கானகத்தில்
குறைவன்றி வாழுமது மிருகமெல்லாம்
கொற்றவனே இமயகிரி வடபாகந்தானே. (6021)

தானான முற்பக்கம் அரிகள்கூட்டம்
தாக்கான பிற்பக்கங் கரிகள்கூட்டம்,
கோனான மேற்பக்கம் பரிகள்கூட்டம்
கொற்றவனே கீழ்ப்பக்கம் நரிகள் கூட்டம்,
தேனான நடுமையற் கானகந்தான்
தேவி மனோன்மணியாளும் அறியாநாடு,
மானான பரிதிமதி காணாநாடு
மகத்தான சில்லென்ற காடுதானே. (6022)

காடான நடுமையம் கானகத்தில்
கரடிபுலி சிங்கமது வாழும்நாடு,
தாடாண்மை கொண்டதொரு தழைத்தநாடு
தகைமையுள்ள கானகந்தான் சித்தர்நாடு,
நாடாளும் ராஜர்பதி கண்டதில்லை
நலமுடனே தேவரிஷி இருக்கும்நாடு,
பாடாண்மை கொண்டதொரு பசுக்கள்நாடு
பாரினிலே யாரேனும் காணார்தாமே. (6023)

காணாரே அவ்வனத்தின் மகிமைதன்னை
கதை உரைப்பேன் புலிப்பாணி மன்னாகேளு,
தோணாமல் சித்தர்முனி ரிஷிகளுக்கும்
தொல்லுலகில் கண்டறியா அதிசயங்கள்
ந்நாணாது சிங்கமென்ற காட்டகத்தை
நன்மையுடன் குளிகைகொண்டு சென்றுயானும்,
வீணாகக் காலமது கழியாமல்தான்
விருப்பமுடன் சிலகாலம் இருந்திட்டேனே. (6024)

இட்டேனே நெடுங்காலம் அடியேன்தானும்
எழிலான காலாங்கி கிருபையாலும்,
திட்டமுடன் குளிகைகொண்டு கானகத்தில்
தீர்க்கமுடன் சுற்றிவரும் காலம் தன்னில்
பட்டையம்போல் ஆண்சிங்கம் பெண்ணைக்கண்டு
பாச்சலுடன் மோகமது அதிகமாகி,
சட்டமுடன் கலவிதனில் மிகக்கலந்து
சாங்கமுடன் இருக்குமது காலந்தானே. (6025)

காலமாம் ஆணுடனே பெண்ணும்கூடி
கலவிதனில் இருக்கின்ற நாளும்கண்டேன்
தாலமாம் பன்னிரண்டு வருஷந்தானும்
தாக்கான பெண் சிங்கஉருவுமாகி,
கோலமுடன் பூரணமாம் கர்ப்பம்கொண்டு
கொற்றவனே ஈனுகிற காலமாச்சு,
சாலமது என்சொல்வேன் மன்னாகேளு
சாங்கமுடன் ஒருவருந்தான் கண்டிலாரே. (6026)

பெண் சிங்கம் யானைக் கூட்டத்தில் குட்டி ஈனுவது

கண்டேனே கானகத்தில் அதிசயங்கள்
கண்கொள்ளா மகிமையது என்னசொல்வேன் ;
அண்டர்முனி ராட்சதர்கள் அறியாநாடு
அவ்வனத்தில் சிங்கமது கர்ப்பங்கொண்டு
பண்டுபல வஸ்துக்கள் அருந்தியல்லோ
பாங்குடனே கெர்ப்ப வேதனையுமாகி,
அண்டமுடி யாமல் அது சிங்கந்தானும்
அவனிதனில் வேதனைகள் படுகலாச்சே. (6027)

ஆச்சப்பா ஆண்சிங்கம் தானுமல்லோ
அரிவைஎனும் பெண்சிங்கம் தன்னைக்கண்டு,
பாச்சலுடன் யானையது இருக்கும் கூட்டம்
பான்சலது வாராமல் சிங்கத்தாலும்
மேச்சலுடன் பெண்சிங்கம் தன்னைக்கூட்டி
மேன்மையுடன் தான் அறிந்து மனதுவந்து
மாச்சலது வாராமல் கரிக்கூட்டந் தன்னிலங்கே,
மன்னவனே சென்றல்லோ நிற்கலாச்சே. (6028)

நிற்கவே கரிகூட்டம் முன்னதாக
நேரான சிங்கமது பின்னதாக,
சிற்பனமாய் முதுகொடுத்து நின்றுகொண்டு
வீரமுடன் குட்டியது ஈன்றபின்பு,
சொற்பெரிய குட்டியென்ற சிங்கந்தானும்
சுந்தரனே மத்தகெஜந் தலையிற்பாய்ந்து
உற்பனமா மூளையது உரிந்துமல்லோ
உத்தமனே சிங்கமது இறங்கும்பாரே. (6029)

பாரேதான் சிங்கமது இறங்கும்போது
பாங்கான கரிக்கூட்டம் நடுங்கியல்லோ
நேரேதான் தலைவாறு திசைமாறிதானும்
நேர்மையுடன் கானகத்தைச் சென்றுபோகும்,
சீரேதான் சிங்கமென்ற குட்டிதானும்
திறளான கரிக்கூட்டம் தன்னில்சென்று
வீரேதான் நான்குநாள் இரையும்கொண்டு
விடுபட்டு காட்டகத்தே வருகுங்காணே. (6030)

காணவே சிங்கமது பிறவியல்லோ
கைலாய நாதருட கடாட்சத்தாலே
தோணவே வையகத்தில் குட்டிஈன்று
தொல்லுலகில் வாழ்குவது மகிமைமெத்த
ஆணவங்கள் அதிகமுண்டு அரிதனக்கு
அவனியிலே ராஜனென்ற மிருகமாச்சு
பூணவே வையகத்தின் மிருகமெல்லாம்
புகழான சிங்கத்தில் கீழுமாச்சே. (6031)

கீழான மிருகமது அனேகம்உண்டு
　　கீர்த்தியுள்ள சிங்கமது ராசனப்பா,
பாழான காடுகளில் இருக்குஞ்சிங்கம்
　　பார்த்தவர்கள் ஆரேனும் கண்டதுண்டோ,
சாழலுடன் கானாறு தன்னிலப்பா
　　சட்டமுடன் விழுந்திறந்த கதைகேட்டார்கள்
ஆழான மடுக்களிலே விழுந்திறந்த
　　அதிசயங்கள் வையகத்தில் கண்டார்தாமே. (6032)

சிங்கத்தினால் சித்தர்கள் மடிந்தது

தாமான இன்னமொரு மார்க்கம்பாரு
　　தன்மையுள்ள புலிப்பாணி மைந்தாகேளு,
கோமான்கள் அறிந்ததில்லை குவலயத்தில்
　　கொற்றவனே இன்னமொரு மகிமைசொல்வேன்,
சாமானிய மானதொரு சித்தரப்பா
　　சட்டமுடன் அம்பதுபேர் கூட்டமாக,
ஆமான மாகவல்லோ கூட்டங்கூடி
　　அடவான காட்டகத்தில் வந்திட்டாரே. (6033)

வந்ததொரு வழிதனிலே மார்க்கங்கண்டு
　　வண்மையுட சிங்கமது கர்ச்சித்தல்லோ,
சிந்தனையாய் மாண்பருட சைகைதன்னை
　　சீறலுடன் தானறிந்து கோபமிஞ்சி
தொந்தரவு செய்வதற்கு மனதுவந்து
　　தோற்றமுடன் பாச்சலது அதிகமாகி
விந்தையுடன் சிங்கமது வேவுகொண்ட
　　வீரியத்தைக் கண்டார்கள் சித்துதாமே. (6034)

சித்தர்கள் சிங்கத்தைக் கண்டு
கல்லாலமரத்தின் மேலேறிக்கொண்டது

சித்தான சித்துமுனி ரிஷிகள் தாமும்
　　சீறலுடன் வருகின்ற சிங்கந்தன்னை
புத்தியுள்ள சித்துமுனி பார்த்துஏங்கி
　　புகழான அம்பதுபேர் கூட்டத்தோடும்
பத்தியுடன் கல்லாலின் மரத்தின்மேலே
　　பரிவுடனே ஏறியல்லோ பார்க்கும்போது,
சுத்தியெங்கும் பார்த்துமல்லோ சிங்கந்தானும்
　　சுந்தரனார் அம்பதுபேர் காணலாச்சே. (6035)

காணவே சிங்கமது சித்தர்தம்மை
கனதான வீரியத்தால் கோபமிஞ்சி,
தோணவே சிங்கமது ஏதுசெய்யும்
தோற்றாமல் கோபமது அதிகம்கொண்டு
பாாணம்போல் சிறுநீரை பூமிதன்னில்
பள்ளமதாய்ச் செய்துமல்லோ மண்ணைத்தானும்,
பூணவே மூத்திரத்தில் வாலைவிட்டு
புகழுடனே மண்ணதனைப் பிரட்டலாச்சே. (6036)

பிரட்டியே வால்தனிலே மண்ணையேத்தி
பின்பக்க மாகவல்லோ திரும்பியேதான்,
வரட்டியே வாலதனைத் தூக்கியேதான்
வளமையுடன் மண்ணதனை நோக்கியல்லோ,
துரட்டியே வால்சுற்றி எரியும்போது
துப்புரவாய் மண்ணதனை மேலேநோக்கி
மிரட்டியே தானெரிய மண்தானப்பா
மீறியே சித்தரின் மேல்விழுகலாச்சே. (6037)

விழுகவே நாற்பத்தி எண்மர்பேரில்
வி“மான மண்ணதுவும் மேலேபட்டு,
பழுதுபடா மேனியதில் விஷமுங்கண்டு
பாங்குடனே நித்திரைகள் வந்தாற்போலே,
நழுகியே சிங்கமது சென்றபின்பு
நடுக்கமுடன் திரேகமது ஒடுக்கமாகி,
முழுதுமே நாற்பத்தியெண்மர் பேரும்
மூதுலக மண்மீதில் விழுந்திட்டாரே. (6038)

மண்ணான பூமிதனில் விழுந்தபோது
மயக்கமுடன் கண்ணுறங்கி இருந்தாற்போலும்
திண்ணமுடன் மடிந்தார்கள் சித்தரெல்லாம்
தீர்க்கமுடன் வையகத்தைக் கண்டதில்லை,
எண்ணியே மரத்தின்மேல் இருந்தபேர்கள்
எழிலான இருவருமே இறங்கியேபின்,
குண்ணியே முகம்வாடி மனமயர்ந்து
குவலயத்தில் படிந்தவரைக் கண்டார்தாமே (6039)

தானான மண்படாத இரண்டுபேரும்
சட்டமுடன் மரம்விட்டுக் கீழிறங்கி,
கோனான சிங்கமது சென்றபின்பு
கொற்றவனே இருவருமே அறிந்துகொண்டு,
தேனான மனோன்மணியை மனதிலுன்னி
தெளிவுடனே புத்தியது மிகவுமாகி,
பானான சித்துமுனி இருவர்தானும்
பரிட்சிக்க எண்ணமது கொண்டிட்டாரே. (6040)

கொண்டுமே மரத்தடியை விட்டிறங்கி
கொற்றவர்கள் சிங்கத்தின் பள்ளங்கண்டு,
விண்டிடவே மூத்திரமாம் பள்ளங்கண்டு
விருப்பமுடன் சோதனைகள் செய்யவெண்ணி
கண்டிடவே கரமதனி லிருந்தசெம்பை
கட்டழகர் தானெடுத்து மண்ணிற்போட,
கொண்டதொரு செம்பதுவும் தங்கமாச்சு
கொற்றவனே அதன் விஷயத்தை அறிந்தார்பாரே.
(6041)

பாரேதான் விஷம்ஏறிப் பழுக்கலாச்சு
பாங்கான அரியினது மூத்திரந்தான்
நேரேதான் மண்ணதினில் விஷமுமாகி
நேர்மையுடன் சித்தரின்மேல் படுகலாச்சு,
சீரேதான் தேகமது புண்ணுமாகி
தீர்க்கமுடன் தான்இறந்தார் சித்தரெல்லாம்
ஆரோதான் கண்டவர்கள் உலகில்இல்லை
அப்பனே சித்தர்முனி கண்டார்தானே. (6042)

கண்டாரே சித்துமுனி ரிஷியார்தாமும்
கானகத்தில் நடந்ததொரு அதிசயத்தை
தண்டம்போல் தான்கண்டு பிரமித்தேங்கி
தாரணியில் குளிகைகொண்டு சீனந்தன்னில்
வண்ணமுடன் சீனபதி மாண்பருக்கு
வளமான அதிசயத்தை எடுத்துக்கூற,
திண்ணமுடன் மனதுவந்து மனங்களித்து
தீர்க்கமுடன் சீனபதிக் கேகினாரே. (6043)

போகர் சீனபதிக்கு வந்தது

ஏகவே இன்னமொரு மார்க்கங்கேளு
எழிலான புலிப்பாணி மணியேபாரு,
சாகமுடன் நெடுங்காலம் வடமேருதன்னில்
சட்டமுடன் நானிருந்தேன் சிலதுகாலம்,
பாகமுடன் சிங்கத்தின் அதிசயத்தை
பாரினிலே நாதாக்கள் கண்டதில்லை
வேகமுடன் யான்கண்டு சீனத்தார்க்கு
விருப்பமுடன் உபதேசம் செய்திட்டேனே. (6044)

செய்தேனே வடமேரு தன்னிலப்பா
சிறப்பான சிங்கத்தின் மகிமைதன்னை,
வெய்யபுகழ் சீனபதி மாண்பருக்கு
விருப்பமுடன் உபதேசம் செய்தேன்யானும்,
பையவே யான்கொண்ட காயகற்பம்
பட்சமுடன் அவர்களுக்குக் கொடுத்தேன்பாரு,
துய்யவே சீனபதி மாண்பர்எல்லாம்
துப்புரவாய் காயாதி கொண்டார்பாரே. (6045)

பாரேதான் காயாதி கொண்டபின்பு
பாங்கான சீனபதி மாண்பர்தம்மில்,
நேரேதான் சிலதுபேர் ஞானவானாய்
நேர்மையுடன் குளிகையது பூண்டுகொண்டு,
தீரேதான் வடமேரு கானகத்தில்
தீர்க்கமுடன் தான்சென்று காணுதற்கு,
வீரேதான் குளிகையது பூண்டுகொண்டு
விருப்பமுடன் வடமேருவுக் கேகினாரே. (6046)

ஏகினார் சிங்கமென்ற காட்டகத்தில்
எழிலான நாதாக்கள் தன்னைப்போலே,
பாகமுடன் காயாதி கொண்டுமல்லோ
பக்குவமாய்க் குளிகையிட்டுக் கானகத்தில்,
சாகமுடன் சிங்கமதைக் கண்டார்அங்கே
சட்டமுடன் சிங்கமது கெர்ச்சித்தேதான்,
வேகமுடன் சீனபதி மாண்பர்தம்மை
வீறுடனே கொல்லுதற்கு வருகலாச்சே.
(6047)

வருகவே சித்துமுனி தம்மைப்போலே
வாகான சீனபதி மாண்பர் எல்லாம்,
பெருகவே கல்லாலின் மரத்தின்மேலே
பேரான முன்னிருந்த சித்துபோலே
சொருபமதைக் கண்டவுடன் மரத்தின்பேரில்
சுந்தரனே பார்த்துமல்லோ திகைத்துநின்று
அருவுமென்ன சிங்கமதைக் கண்டுமல்லோ
அப்பனே பிரமித்து நின்றிட்டாரே. (6048)

நின்றாரே சித்துமுனி ரிஷியார்தாமும்
நேரான சிங்கமது கண்டுமேதான்,
கொன்றிடவே தன்மனதில் உறுதிக் கொண்டு
கூரான சிங்கமது ஏதுசெய்யும்,
வென்றிடவே முன்போலே மண்ணைவாரி
விட்டெரிய சீனபதி மாண்பரெல்லாம்,
தன்றிடவே கல்லாலின் மரத்தின்பேரில்
சட்டமுடன் மேலிருந்து விழுந்தார்தாமே. (6049)

தாமான சீனபதி மாண்பரெல்லாம்
தகமையுடன் மண்ணதனில் விழுந்துமேதான்,
பூமான்கள் விஷமதுவும் சகியாமற்றான்
புகழன தேகமது சிலிர்த்துமல்லோ,
நாமான பஞ்சேந்திரியம் உள்ளடங்கி
நமனுக்கு ஆளாகிப் பொறிகலங்கி
வேமான மாகவல்லோ மண்ணின்பேரில்
விழுந்துமே பிரண்டிருக்கக் கண்டிட்டேனே. (6050)

போகர் சீனபதி மாண்பருக்கு சிங்கத்தின் விஷத்தை முறித்து உயிர் கொடுத்தல்

கண்டேனே சீனபதி மாண்பர்தம்மை
கடுகனவே விஷமேறி இறந்தபேர்க்கு,
தண்டகம்போல் காயாதி முறிப்புதானும்
தகைமையுடன் தான்கொடுத்து எழுப்பியல்லோ,
மண்டலங்கள் உள்ளவும் சிங்ககற்பம்
மடியாமல் இருப்பதற்கு மனதுவந்து,
விண்டவே யான்கொடுத்து உயிர்கொடுத்தேன்
விட்டகுறை இருந்ததினால் எழுந்தார்பாரே. (6051)

பாரேதான் சீனபதி மாண்பருக்கு
 பாங்கான கற்பமுறை யானும்சொல்லி,
நேரேதான் பிழைப்பதற்கு வழியும் சொன்னேன்
 நேர்மையுடன் கருவாளி கண்டுகொள்வார்,
சீரேதான் சித்தர்முனி மார்க்கந்தன்னை
 சிறப்புடனே யான் உரைத்தேன் மாண்பருக்கு,
வேரே தான் மற்றோரால் சொல்லப்போமோ
 வேதாந்த காலாங்கி கடாட்சந்தானே. (6052)

தானான சீனபதி மாண்பர் எல்லாம்
 தகமையுடன் தான் எழுந்து முடிவணங்கி,
கோனான காலாங்கி கடாட்சத்தாலே
 கொற்றவனார் சீனபதி மாண்பர் எல்லாம்
பானான விட்டகுறை இருந்துமல்லோ
 பாங்குடனே என்னாலே எழுப்பப்பட்டார்,
மானான மகதேவர் கடாட்சத்தாலே
 மறைபொருளை யானுமல்லோ உணர்ந்திட்டேனே.

போகர் உச்சிலிங்கத்தேளைக் கண்டது

உணர்ந்தேனே இன்னமொரு மார்க்கம்பாரு
 உத்தமனே புலிப்பாணி மைந்தாகேளு,
மணங்கமழும் வடகோடி கானகத்தில்
 மார்க்கமுடன் மகமேரு பக்கந்தன்னை,
கணமுடனே அனேகவித தெய்வந்தானும்
 காட்டகத்தே வாசமது செய்துகொண்டு,
பிணமதனை ஆபூதிகொள்ளுங் காளி
 பேரான காட்டகத்தை கண்டேன்தானே.
(6054)

தானேகேள் அண்டமுனி அறியாக்காடு
 தகமையுள்ள வனந்தனிலே திரிந்துயானும்
மானேகேள் மகமேரு சாரல்பக்கம்
 மகத்தான குன்றுகளும் மலையும்உண்டு
தேனான மலைதனிலே வாசம்செய்யும்
 தேளதுவும் திரள் கூட்டம் சொல்லொண்ணாது
கோனான தேளதுவின் கூட்டந்தன்னை
 தேற்றமுடன் கோடிவரையான் பார்த்தேனே.
(6055)

பார்த்தேனே செந்தேளாம் கோடிவர்க்கம்
சாங்கமுடன் யுகம்பிரித்து நடக்கும்போது,
தீர்த்தலிங்கம் தனில்உதித்த செந்தேளப்பா
தீரமுடன் கோடிதளம் வருகும்போது,
ஆர்த்தியுடன் மேலேறி வருகுந்தேளாம்
அப்பனே உச்சிலிங்கத் தேளேயாகும்
மூர்த்தியுடன் மும்மூர்த்தி யானபேரும்
மூதுலகில் நடுங்குவது திண்ணமாமே. (6056)

திண்ணமாம் உச்சிலிங்கத் தேள்தானப்பா
தீர்க்கமுடன் காட்டகத்தே இருக்கண்டேன்,
வண்ணமுடன் மலைச்சாரல் காளிகோயில்
வளமான தேவதா ஸ்தலமுங்கண்டேன்,
எண்ணரிய கோயிலது மூலஸ்தானம்,
எழிலாக ஆள் நுழைய இடமும் உண்டு
கண்ணமுடன் காளிதனைக் காணவென்றால்
சாங்கமுடன் சுரங்கம் வழி செல்வார்பாரே. (6057)

பாரேதான் தேவதா ஸ்தலத்துக்குள்ளே
பாங்கான வழியதுவும் மூலஸ்தானம்
நேரேதான் காளிதனைக் காணவென்றால்
நேர்மையுடன் மார்பாலே நகர்ந்துமல்லோ,
தீரேதான் எண்சாணு விடமுந்தாண்டி
தீர்க்கமுடன் காளிதனைக் காணலாகும்,
கூரேதான் அதற்கப்பால் காளிவாசல்
கொற்றவனே தானிருக்கக் காணலாமே. (6058)

சுரங்கத்தில் உச்சிலிங்கத் தேளிருப்பது

காணலாம் உச்சிலிங்கத் தேள்தானப்பா
கடியதொரு சுரங்கமதில் வாசஞ்செய்து
பூணவே நெடுங்காலம் வாசஞ்செய்து
பொங்கமுடன் இருக்குமந்தக் காலந்தன்னில்
நீணவே அவ்விடத்தி கரிக்கூட்டங்கள்
நீதியுன் சொல்லுவதற்கு லக்கோயில்லை
ஆணவங்கள் மிஞ்சியல்லோ யானைக்கூட்டம்
அப்பனே கணக்குண்டோ சொல்லொண்ணாதே.

யானை கோனானைத் துரத்துவது

ஒண்ணாது காட்டகத்தே கோனான் தானும்
உத்தமனே மாடாடுமேய்க்கும் ஸ்தானம்,
அண்ணாந்து பார்ப்பதற்கு முடிகொள்ளாது
அப்பனே பசுக்கூட்டம் மெத்தஉண்டு,
கண்ணாலே யானையது கோனான் தன்னை
கடைநோக்கிப் பார்த்தல்லோ சீறலாகி,
மண்ணோடே தும்பிக்கை யால்புரண்டி
மகத்தான கோனானைத் துரத்தலாச்சே. (6060)

ஆச்சப்பா கரியல்லோ கோனானைத்தான்
அப்பனே துரத்துகின்ற வேளைதன்னில்,
பாச்சலுடன் கோனானும் ஓட்டங்கொண்டு
பதுங்கியே செல்வதற்கு காளிகோயில்,
மூச்சடங்கி ஓடியல்லோ தேவஸ்தானம்
முனையாளி காளியது மூலஸ்தானம்,
மாச்சலது வருவதற்கு முன்னதாக
மகத்தான சுரங்கவழிச் சென்றான்தானே. (6061)

சென்றானே கோனானுங் காளிபக்கம்
செம்மலுடன் பதுங்கியல்லோ முற்புறத்தில்,
நின்றானே கோனானும் உடல்நடுங்கி
நீதியுடன் காளிபுறம் தன்னில் நிற்க,
குன்றேரி வாழுகின்ற யானையப்பா
கொற்றவனே சுரங்கம்வழி வருகலாச்சு,
வென்றிடவே யானையது தும்பிக்கையால்
வீரமுடன் சுரங்கமது நுழையலாச்சே (6062)

நுழையவே சுரங்கத்தின் வழியிலப்பா
நுண்மையுடன் தும்பிக்கை விட்டுமல்லோ,
குழையவே தேகமது செல்லாமல்தான்
கொற்றவனே யானையது நின்றுகொண்டு
தழை மேய்க்கும் கோனானை தும்பிக்கையால்
தட்டாமல் நாற்புறமும் தடவும்போது,
நுழையவே கதிதனக்கு இடமுமில்லை
நுட்பமுடன் இடையூறு நேரலாச்சே. (6063)

ஆச்சுதே தும்பிக்கை யாலேதானும்
அப்பனே கோனானைத் தேடும்போது,
மூச்சடங்கித் தானிருந்து கோனான்தானும்
முனையான காளியின்மேல் சிந்தையாகி,
மாச்சலது வாராமல் இருந்துகொண்டான்
மகத்தான யானையின்தன் தும்பிதன்னை,
வீச்சலுடன் உச்சிலிங்கத்தேள் தானப்பா
வீரமுடன் கொட்டிடவே சத்தமாமே. (6064)

சத்தமது கொண்டிடவே யானைதானும்
சதுரான மலைதனிலே கேட்கும்போது,
முத்திபெறும் சித்தர்களின் கூட்டத்தார்கள்
முனையான சத்தமதைக் கேட்டுமேதான்,
புத்தியுடன் யானையது தன்னையல்லோ
புகழான உச்சிலிங்கத்தேள் தானப்பா,
வெத்தியுடன் கொட்டியதோர் தேள்தானென்று
வீரமுடன் சித்தர்களும் அறிந்திட்டாரே. (6065)

அறிந்தாரே உச்சலிங்கத் தேள்தானப்பா
அப்பனே கரிதனையே கொட்டிற்றுஎன்று,
செறிந்துமே மலைதனையே விட்டிறங்கி
செம்மலுடன் யானையது பக்கல்வந்தார்,
குளியான யானையது விஷமும்மீறி
கொப்பனே நெருப்பதுபோல் எரியுதங்கே,
முறியுடனே தந்தமெல்லாம் பற்றியல்லோ
முனையான கொழுந்துவிட்டு எரியலாச்சே. (6066)

எரிந்துமே பிரிதிவென்ற சாம்பலாச்சு
எழிலான யானையது மடிந்துபோச்சு
சொரிந்ததொரு சாம்பல்தன்னை சித்தர்கண்டு
சோராமல் அவரவர்கள் பங்குவீதம்,
புரிந்துமே பங்கதுவும் பகரும்போது
புகழான கோனானும் சுரங்கத்தண்டே,
வரிந்துமே கோனானை சித்தர்கண்டு
வகையுடனே வளப்பமதைக் கேட்டிட்டாரே. (6067)

கோனான்மீதில் இரக்கம்வைத்து சித்தர்கள் பங்கு கொடுத்தது

கேட்டவுடன் கோனானும் மனம்நடுங்கி
கெவனமுடன் சித்தர்கட்கு கூறலுற்றான்,
வாட்டமுடன் மாடாடு மேய்க்கும்போது
வளமான யானையது என்னைக்கண்டு,
தாட்டிகமாய்ச் சீறலது மிகவுண்டாகி
சட்டமுடன் எந்தனையுந் துரத்தலாச்சு,
கோட்டமுடன் யானையது வருகும்போது
கொப்பெனவே யான்பயந்து ஓடினேனே. (6068)

ஓடினேன் தங்குதற்கு இடமில்லாமல்
ஓகோகோ நாதாக்கள் முனிவரேகேள்,
தேடியே காளியது தேவஸ்தானம்
தேற்றமுடன் யான்கண்டு மனதுவந்து,
வாடியே சுரங்கமது வழியில்சென்று
மகத்தான காளியின்தன் பக்கல்நின்றேன்,
நீடியே யானையது எந்தனைத்தான்
நிஷ்களங்க மாகவல்லோ தேடலாச்சே. (6069)

ஆச்சையா சித்துமுனி ரிஷியாரேகேள்
ஆங்காரம் உள்ளதொரு யானைதானும்,
மூச்சடங்கித் தும்பிக்கை தன்னினாலே
முனையான சுரங்கத்தின் வழியினுள்ளே,
பாச்சலுடன் தும்பிக்கை விட்டபோது
பாழான சுரங்கமதின் மகிமையேதோ,
கூச்சலுடன் வீறிட்டு அலறியேதான்
கொப்பெனவே பிரதிவென்ற சாம்பலாச்சே.
(6070)

சாம்பலாய்ப் போனதொரு சேதிகண்டு
சட்டமுடன் சுரங்கமது உள்ளிருந்து,
தீம்புகளும் நேராது என்றுசொல்லி
தீர்க்கமுடன் வெளியரங்கம் வந்தேனென்றான்.
வீம்புடைய கோனானின் வார்த்தைதன்னை
விருப்பமுடன் சித்தர்முனி கேட்டு உவந்து,
நாமிவனுக் கோர்உதவி செய்யவென்று
நலமுடனே சித்தரெல்லாம் நினைத்திட்டாரே. (6071)

நினைத்துமே உச்சிலிங்கத் தேளினாலே
நிஷ்களங்க மானதொரு திரவியங்கள்,
சுனைபோலே ஏமமென்ற தங்கந்தானும்
துப்புரவாய் நந்தமக்கு வாய்த்துதென்று,
சுனையான கோனானால் வந்தபாக்கியம்
காசினியில் சதகோடி சொல்லொண்ணாது,
பனையளவு பாக்கியமும் இவனாலாச்சு
பட்சமுடன் சித்தர்முனி எண்ணினாரே. (6072)

எண்ணியே சித்தர்முனி மனதுவந்து
எழிலான கோனானைத் தானழைத்து,
பண்ணவே யேமமென்ற வித்தைதன்னை
பட்சமுடன் அவனுக்கோர் பாகம் ஈந்து
வண்ணமுடன் செய்பாகங்கை பாகங்கள்
வளமையுடன் காண்பித்து விதியும்சொல்லி,
சுண்ணமென்ற சாம்பல்தனை ஓர்பாகந்தான்
சுத்தமுடன் கைகொடுத்துப் போ என்றாரே. (6073)

போமென்று சொல்லியல்லோ முனிவர்தானும்
பொங்கமுடன் கோனானுக்கு உறுதிகூறி,
நாமென்ற காலாங்கி வாக்குபோல
நலமுடனே ஞானோப தேசம்செய்து
தாமென்ற பிரிதிவாஞ் சாம்பல்தன்னை
சட்டமுடன் தான்கொடுத்து மதியும்சொல்லி,
வேமென்ற காட்டகத்தே சித்தர் தாமும்
வேமமுடன் குகைதனிலே சென்றிட்டாரே. (6074)

சென்றவுடன் கோனானும் சாம்பல்தன்னை
செம்மலுடன் அவர்பதிக்கு கொண்டுசென்று,
பொன்னான மாற்றதுவும் செம்பிலேற
புகழான செம்பதுவும் தங்கமாச்சு,
மன்னவனைப் போலாகக் கோனான்தானும்
மகதேவர் சித்தர்முனி தம்மைப்போலும்,
தென்னகரில் ராமருட செல்வம்போலும்
திரளான கோடிவரை பார்த்திட்டானே. (6075)

பார்த்தானே சித்தருட மகிமைதன்னால்
பாங்கான யேமமென்ற வேதைதன்னை,
சீர்த்தியுடன் முறைசெய்த தபோபலத்தால்
சீர்பெற்றான் கோனானும் சித்துதம்மால்,
பேர்பெற்றான் கோனானும் காட்டகத்தில்
பேருலகில் விட்டகுறை இருந்ததனால்
தார்வேந்தர் மெச்சிடவே தரணிதன்னில்
தாமுமொரு சிவயோகி போலானானே (6076)

போகர் சதுரகிரி அதிசயத்தை புலிப்பாணிக்கு கூறல்

ஆனானே இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
அப்பனே புலிப்பாணி புத்திவானே,
கோனானின் கதையுரைத்தேன் மகிமையல்ல
கொற்றவனே இன்னமொரு மகிமைசொல்வேன்,
தேனானதேவி மனோன்மணியாள் பாதம்
தேற்றமுடன் யான்வணங்கி காதைசொல்வேன்,
பானான காலாங்கி நாதர்பாதம்
பட்சமுடன் யான்வணங்கி பகருவேனே. (6077)

பகருவேன் புலிப்பாணி மன்னாகேளாய்
பாருலகில் குளிகைகொண்டு சித்தியேதான்,
நிகரமுடன் வையகத்து அதிசயத்தை
நீதியுடன் யான்கண்டு மலையில்தேடி,
சிகரமது சதுரகிரி மலையிலப்பா
சிறப்புடனே யான்இறங்கி இருக்குங்காலம்,
நிகரமுடன் கிரிதனையே சுத்தியல்லோ
நீடுழி காலம்வரை திரிந்திட்டேனே. (6078)

பனையளவு சித்தரை போகர் கண்டது

திரிந்துமே மலையோரம் தன்னில் சென்று
தீர்க்கமுடன் யான்காணும் வேளைதன்னில்,
புரிந்துமே சிகரமது கிரியில்நின்று
புகழான பனையளவு சித்துதாமும்,
தெரிந்துமே மலையைவிட்டுக் கீழிறங்கி
சிறப்புடனே மாண்பர்களைக் காணும்வண்ணம்,
செரிந்துமே மகிமையது கோடியுண்டு
தேசமதில் விதியுள்ளார் காண்பார்பாரே. (6079)

சதுரகிரிசித்தர் பொதிமாட்டுக்காரரை புகையிலை கேட்டது

பாரேதான் இன்னமொரு மார்க்கம் சொல்வேன்
பாலகனே புலிப்பாணி மன்னாகேளு,
ஆரோதான் பொதிமாட்டுக் காரப்பா
ஆயிரம்பேர் ஒரு கூட்டமாகக்கூடி,
தேரோடும் பாவனைபபோல் மாண்பரெல்லாம்
தேற்றமுடன் மலையோரம் செல்லும்போது,
சீரோடும் புகையிலையின் பொதிகைதன்னை
சிறப்பான சித்துமுனி கண்டிடடாரே. (6080)

கண்டாரே புகையிலையில் வாசம்தன்னை
பாங்கான பனையளவு சித்துதானும்,
கொண்டதொரு புகையிலையின் எண்ணமப்பா
கொற்றவனே மயக்கமது மிகவுண்டாகி,
எண்ணமுடன் புகையிலையின் வர்க்கந்தன்னை
ஏற்றமுடன் புகைபிடிக்க மனதயர்ந்து,
வண்ணமுடன் மலையைவிட்டுக் கீழிறங்கி
வளமுடனே வருவதற்கு எண்ணினாரே. (6081)

எண்ணியே சித்துமுனி ரிஷியார்தாமும்
எழிலான கிரியைவிட்டு இறங்கும் போது,
நிண்ணதொரு பனமரம்போல் தோற்றமாச்சு
நிஷ்களங்க மாகவல்லோ இறங்கும்போது,
தண்ணமுடன் மேற்பதியை விட்டுமல்லோ
தாழவே படிப்படியாய் இறங்கும்போது,
புண்ணியனார் சித்துமுனி ரிஷியார்தாமும்
புகமுடனே இறங்கிவரக் குறைவானாரே.
(6082)

குறைவான ரோமமென்ற கரடிபோலும்
கொற்றவனே சித்துமுனி ரூபங்கண்டார்,
திறையான பொதிமாட்டுக் காரரெல்லாம்
தீர்க்கமுடன் சித்துமுனி இறங்கும் நேர்மை,
மறைவாக ஆள்ரூபம் குறைந்துகாணும்
மகத்தான ரோமமது தெரியவில்லை,
முறையான மகத்துவத்தை எண்ணாமல்தான்
மூர்க்கமுடன் சித்துதம்மை வசனிப்பாரே. (6083)

வசனிக்க பொதிமாட்டுக் காரரெல்லாம்
 வளமையுடன் ஒருவருக்கொரு உவமைகூறி,
நிசமுடைய பனையளவு சித்துபோலும்
 நீதியுடன் சித்துதமை மதியாமல்தான்,
புகழுடைய தேவாதி சித்துதம்மை
 புகழான மருத்துவங்கள் எண்ணாமல்தான்,
சகம்போன்ற ஆயிரம்பேர் மாண்பரெல்லாம்
 கட்டாக ஒருவருக்கோர் பேசுவாரே.

(6084)

பேசுவார் மலையைவிட்டு இறங்கும்சித்தை
 பேரான மகுத்துவங்கள் அறியாமல்தான்,
காசுபணம் இல்லாத சித்தரென்றும்
 கருதுவான் சதுரகிரிஇருக்கு மாண்பன்,
வீரபுகழ் மகுத்துவங்கள் இல்லார் என்றும்
 வீசுமுடன் ஒருவருக் கொருவர் உகந்துபேசி
ஆசுகவி போலாக வார்த்தைகூறி
 அப்பனே சம்வாதம் செய்வார்தானே.

(6085)

தானான பொதிமாட்டுக் காரரெல்லாம்
 தகமையுடன் ஒருவருக்கோர் வாதுகூறி,
கோனான குருஎன்று மதியாமல்தான்
 கொற்றவனே கும்பலது மிகவுங்கூடி
கோனான புகையிலையின் பொதிகைதன்னை
 தேற்றமுடன் தானிறக்கி முதுகொள்ளும்
மானான சாவடியாம் கிரியோரந்தான்
 மகத்தான அமுதுகொள்ள நண்ணுவாரே.

(6086)

நண்ணியே ஏகாந்த கூட்டந்தன்னில்
 நலமுடனே தானிருக்கும் வேளையப்பா,
திண்ணமுடன் கிரிதனிலே இருந்தசித்து
 தீர்க்கமுடன் மாண்பருட கூட்டந்தன்னில்
தண்மையாய் பொதிமாட்டுக் காரர்தம்மை
 தகமையுடன் சித்துமுனி அருகில்சென்று,
உண்ணவே புகையிலையின் கற்பமப்பா
 உத்தமரே எனக்கருளும் என்றிட்டாரே.

(6087)

என்றுமே ஏதுரைத்தார் முனிவர்தாமும்
எழிலான மாண்பர்களின் முகத்தைநோக்கி,
குன்றுமேல் சித்துமுனி ஒருவர்உண்டு
குவலயத்தில் ஒரு நாளும் வருவதில்லை,
இன்றுமுதல் காற்றினது வாடையாலே
எழிலான புகையிலையின் வாசமப்பா,
வென்றிடவே அவர்தமக்கு காணலாச்சு
விட்டகுறை இருந்ததனால் கிடைக்கலாச்சே.(6088)

ஆச்சப்பா பொதிமாட்டுக் காரர்பாலா
அப்பனே எந்தனுக்கு மனதுவந்து.
மூச்சடங்கித் தானிருக்குஞ் சித்துவென்னும்
முனையான வனத்துரிஷி முனிவருக்கு.
பாச்சலென்ற புகையிலையின் கற்பமப்பா
பட்சமுடன் நீரவர்க்குத் தருவீரானால்,
மாச்சலென்ற வினையகலும் உந்தமக்கு
மகயோக புண்ணியமது கிட்டும்பாரே. (6089)

பொதிமாட்டுக்காரர்கள் சித்தர்பெருமையறியாமல் பகடிசெய்யல்

பாரேதான என்றலுமே யோகிதானும்
பாங்குடனே சித்துமுனி நாதருக்கு,
சீரேதான் புகையிலையின் கற்பந்தானும்
சிறப்புடனே யாங்களது கொடுப்போமானால்,
நேரேதான் உம்மாலே மகிமைஎன்ன
நேர்மையுடன் எந்தமக்குக் கூறும்என்றார்
தீரேதான் சித்துமுனி ரிஷியார்தாமும்
சிறப்புடனே மனதுஉவந்து கூறுவாரே. (6090)

கூறுவார் வாய்திறந்து முனியார்தாமும்
கொப்பெனவே பொதிமாடடுக் காரருக்கு,
தேறுதலாய் வார்த்தையது கூறும்போது
தேற்றமுடன் அதிலொருவன் தான்எழுந்து,
மாறுதலாய் சித்துமுனி தம்மைபார்த்து
மகத்தான ரிஷியாரே பண்பாய்க்கேளும்
ஆறுபடை சூழ்ந்திருக்கும் நதிஓரத்தில்
அசோகம்என்ற விருட்சமது விழுகலாச்சே. (6091)

சித்துமுனி சாய்ந்த அசோகமரத்தை நேராய்நிறுத்தல்

விழுந்ததொரு அசோகமென்ற விருட்சந்தன்னை
வீறுடனே நிமிரவது செய்வீர் ஆனால்,
பழுதுபடாத் திருமேனி தன்தனக்கு
பட்சமுடன் கெற்பமது தருவோம்நாதா,
வழுதுணையாம் கற்பமது கொண்டபோது
மகத்தான சித்துமுனி எங்களுக்கு,
முழுதுமே புகையிலையின் கற்பந்தன்வன
முனையாக யாம்கொடுப்போம் காணீர்தானே. (6092)

காணவே மாண்பர்எல்லாம் கூறும்போது
கருவான சித்துமுனி ரிஷியார்தாமும்,
தோணவே அவர்களுக்கு பிரம்மைதோன்ற
துப்புரவாய் சித்துமுனி நாதரல்லோ,
வேணதொரு காயாதி கொன்ற சித்து
வேகமுடன் அசோகம்என்ற விருட்சந்தன்னை,
பூணவே தான்நோக்கிப் பார்த்துமல்லோ
புகழான விருட்சமதை நிமிர்த்தினாரே. (6093)

நிமிர்த்தவே விருட்சமது தான் எழுந்து
நீதியுடன் நிலையூன்றி நிற்கும்போது.
சமர்த்துள்ள சித்துமுனி தம்மைக்கண்டு
தாரணியில் உம்மகிமை பெரிதுமல்ல,
கமர்போன்ற கானகத்தில் இருக்குங்கல்லாம்
கடிதானமலைக் கல்லைத் தன்னைத்தானும்,
சுமந்துமே எந்தனிடம் கொண்டுவந்து
சுந்தரரே கொடுத்தாலே நம்புவோமே. (6094)

நம்புவோம் என்றல்லோ மாண்பர்எல்லா
நயமுடனே வார்த்தையது மனதுவந்து,
வம்புடனே சித்துமுனி தம்மைக்கண்டு
வளமுடனே வார்த்தையது கூறும்போது,
தெம்புடனே குண்ணுமலை தன்னைத் தூக்கி
தீரமுடன் பொதிமாட்டுக் காரர்முன்னே
கும்பல்தனில் குண்ணதனை எடுத்துமல்லோ
கொப்பனவே கொண்டல்லோ போட்டிட்டாரே.(6095)

போட்டாரே சித்துமுனி ரிஷியார்தாமும்
பொங்கமுடன் கொண்டுவந்து மாண்பர்முன்னே,
நீட்டமுடன் குண்ணதனைக் கொண்டுவந்த
நிலையான வித்தையது மகிமையல்லோ,
வாட்டமுடன் இன்னமொரு மார்க்கம்செய்தால்
மகத்தான மகிமைஎன்று நம்பியல்லோ
கூட்டமுடன் உந்தமக்குப் பணிகள்செய்து
கொப்பனவே சீடர்களாய் இருப்போம்தானே. (6096)

தானானவார்த்தையதுகேட்டபோது
தன்மையுடன் சிவஞான சித்துதாமும்.
கோனான பொதிமாட்டுக் காரர்தம்மை
கொப்பெனவே மகிமையது என்னவேண்டும்,
தேனான மகிமையது வேண்டுமானால்
தேற்றமுடன் சித்தொளிவும் செய்யக்கூடும்,
மானான மகதேவர் கடாட்சத்தாலே
மார்க்கமுடன் மகிமையது அதிதமுண்டே. (6097)

பொதிமாட்டுக்காரர்
சித்துவை மழை வருஷிக்கச் சொன்னது

தருவேன்என்று சித்துமுனி கூறும்போது
தகமையுள்ள பொதிமாட்டுக் காரர்தாமும்,
குருவான சித்துமுனி ரிஷியாரேகேள்
கொற்றவரே எங்களுக்கு இன்றுதானும்,
பருவமழையு மின்னல்இடி காந்தல்தாமும்
பட்சமுடன் வரவழைப்பீர் ஆனால்அல்லோ,
திருவான குருவென்று உம்மைத்தானும்
தீரமுடன் என்னாளும் வந்திப்போமே. (6098)

வந்திப்போம் உம்மையொரு குருவாய்எண்ணி
மகத்தான நாதாக்கள் நீர்தான்என்றும்,
சிந்திப்போம் சதாகாலம் அர்ச்சித்தேதான்
சீருடனே சின்மயத்தை மனதிலுன்னி
எந்நாளுங் கிரிவாழும் பதாம்புயத்தை
எழிலான சற்குருவை மெய்க்குருஎன்றுஎண்ணி,
பன்னியே கிரிதனிலே மாண்பரெல்லாம்
பாங்குடனே சதாநித்தம் அர்ச்சிப்போமே. (6099)

போமேதான் வார்த்தையது கூறும்போது
பொங்கமுடன் வனத்துமகா ரிஷியார்தாமும்,
தாமேதான் சொன்னபடி வனத்தில்தானும்
தகமையுடன் மண்காற்று மழையுமாக,
ஆமேதான் மின்னல்இடி ஜோதிபோலும்
அவனிஎல்லாந் தத்தளிக்க மிகவேசெய்தார்,
வேமேதான் பொதிமாட்டுக் காரர்எல்லாம்
விருப்பமுடன் கண்டல்லோ பிரமித்தாரே,
(6100)

பிரமிக்க சிறுபாலர் மாண்பர்எல்லாம்
பேரான சித்துமுனி ரிஷியார்தம்மை,
வர்மமுடன் பதாம்புயத்தை சுற்றிவந்து
மனதுஉவந்து முடிசாய்த்து அஞ்சலித்து
தர்மமுள்ள நாதாந்த சித்தேநாங்கள்
தாரணியில் என்னாளும் உந்தனைத்தாம்,
மர்மமது வையாமல் வையகத்தில்
மார்க்கமுடன் என்னாளும் வசனிப்போமே.
(6101)

வசனிப்போம் சற்குருவே எந்தநாதா
வளமையுடன் என்னாளும் கிரியில்வாழும்
நிசமுடைய வேதாந்த சித்தேகேளும்
நிஷ்களங்கம் ஆனதொரு சொரூபபாதா,
துசங்கொண்ட வீராதி சித்தேகேளும்
துவாபரமாம் மூன்றுயுகம் தன்னில்தானும்,
குசமுடைய சின்மயத்தில் இருந்தசித்தை
கோடான கோடிவரை கண்டிட்டோமே.
(6102)

கண்டோமே அஷ்டகிரி தன்னில்நாதா
காணோமே உம்மைப்போல் ஒருவரேனும்,
தொண்டுசெய்து வெகுகோடி மாண்பர்எல்லாம்
தொல்லுலகில் கெட்டார்கள் அனந்தம்கோடி
விண்டுஉரை சொல்கேளாத வீணர்கோடி
வெகுகோடி வையகத்தில் கண்டதுண்டு,
துண்டரிக மானதொரு சித்துபோலே
துப்புரவாம் வையகத்தில் காணோம்தானே.
(6103)

பொதிமாட்டுக்காரர் புகையிலை கற்பம் கொடுத்தது

தானான கற்பமது கொடுக்கவேதான்
தகமையுள்ள பொதிமாட்டுக் காரர் எல்லாம்
கோனான கிரிதனிலே இருக்குஞ்சித்து
கொற்றவனார் மாயாவின் சித்துவுக்கு,
மானான புகையிலையின் கற்பந்தன்னை
மார்க்கமுடன் சித்தரவர் கொள்வதற்கு
பானான மாண்பர்எல்லாம் ஒன்றாய்கூடி
பட்சமுடன் அம்பாரங் கட்டினாரே.
(6104)

கட்டினார் மாண்பர்எல்லாம் ஒன்றாய்க்கூடி
கனமான சுமையதுவும் என்ன சொல்வேன்,
இட்டமுடன் சுமையதுவை எடுக்கும்போது
எழிலான சித்துமுனி நடுக்கங்கொள்ள,
வட்டமுடன் பாலரெல்லாம் ஒன்றாய்க்கூடி
வளமான சித்தருக்கே கொண்டுசென்று,
பட்டமரம் போலேயல்லோ மாண்பர்எல்லாம்
பரதவித்து நின்றல்லோ பார்த்திட்டாரே.
(6105)

பார்த்தவுடன் மலையில்வந்த சித்துதாமும்
பாலரெல்லாம் தான்நடுங்க கரத்தில்ஏந்தி
தீர்த்தகிரி சிவலிங்கப் பொதியைப்போலும்
திறமுடனே கிரிதனிலே கொண்டுசென்று
பூர்த்தியுடன் குருபாதந்தன்னை வணங்கி
புகழுடனே அஞ்சலிகள் மிகச்செய்தாரே.
(6106)

செய்யவே சித்துமுனி சீடர்தாமும்
சிறப்புடனே குருநாதர் மனதுஉவந்து,
துய்யபுகழ் புகையிலையின் கற்பந்தன்னை
துப்புரவாய் மனதுஉவந்து நாதர்தாமும்,
வெய்யவே காயாதி கற்பந்தன்னை
வேண்டியே விருப்பமுடன் கொடுத்தமாண்பர்,
பையவே எவ்விடத்தில் இருப்போரப்பா
பான்மையுடன் அவர்களுக்கு விதிசொல்வீரே.
(6107)

குருஉத்திரவின்படி சீடராகிய சித்து பொதிமாட்டுக்காரருக்கு உபதேசித்தல்

விதியான குருமதியின் உபதேசத்தை
வித்தகனார் சீடவர்க்கத் தானும்கேட்டு
மதியான உபதேசம் மாண்பருக்கு
மார்க்கமுடன் செய்வதற்கு மனதில்எண்ணி
துதியுடனே பொதிமாட்டுக்காரர் தம்மை
தும்புரவாய் அவர்மனதில் எண்ணங்கொண்டு
நிதியதுவுந் தான்கொடுத்து மாண்பருக்கு
நீதியுடன் உபதேசம் பண்ணினாரே. (6108)

எண்ணியே பொதிமாட்டு மாண்பர்தம்மை
எழிலாக வரவழைக்க மனதுபூண்டு,
வண்ணமுடன் சரமாரி பொழியவல்லோ
மார்க்கமுடன் மகதேவர் தனைநினைந்து.
திண்ணமுடன் ரிஷியாரும் நினைக்கும்போது
தீர்க்கமுடன் பிரளயங்கள் அதிகமாகி
எண்ணமுடன் பொதிமாட்டுக் காரரெல்லாம்
எழிலான மலைதனிலே வந்திட்டாரே. (6109)

வந்ததொரு மாண்பர்எல்லாம் சித்துதம்மை
மகதேவர் முன்னிருந்த சித்துஎன்றுஎண்ணி,
சொந்தமுடன் அவர்பாதம் முடிவணங்கி
சுந்தரர் என்றுஎண்ணி தூரஞ்சென்றோமையா,
அந்தமுடன் சரமாரி பொழிந்துமல்லோ
ஐயனே பிரளயங்கள் அதிகமாகி
விந்தையுடன் வந்ததொரு இடை யூறதன்னால்
விசனமுடன் மலையேறி வந்தோம்தாமே. (6110)

வந்தோமே என்று சொல்லி மாண்பர்எல்லாம்
வளமுடனே சித்துவுக்கு கூறும்போது.
பந்தமுடன் மாண்பருக்கு சித்துதாமும்
பட்சமுடன் கூறலுற்றார் நாதர்தன்னை
விந்தையது உபதேசம் செய்வதற்கு
வித்தகனார் குருமொழியின் வாக்கதாச்சு,
சிந்தனையாய் எல்லோரும் வந்திருந்து
சிறப்புடனே சித்துமுனி கூறினாரே. (6111)

கூறினார் சித்துமுனி மாண்பருக்கு
குவலயத்தில் நீங்கள்செய்த அறத்தினாலே.
மீறியதோர் உங்களுக்கு உபதேசங்கள்
மிக்கமனு நீதியுடன் குருவின்வாக்கு
தேறியே பலநூலும் ஞானம்தேர்ந்து
தேற்றமுடன் உங்களுக்கு உபதேசங்கள்
சீறியே கோபமது வாராமல்தான்
சிறப்புடனே உபதேசம் செய்தார்பாரே. (6112)

பாரேதான் உபதேசம் செய்தவண்ணம்
பாருலகில் யாருக்குங் கிட்டாதன்று
நேரேதான் கிரியிலுள்ள வனப்பும்வாய்ந்து
நேர்மையுடன் மநுநீதி கலைக்கியானம்
கூரேதான் வேதமுதல் ஆறு சாத்திரம்
குறிப்பான கலைக்கியானம் அறுபத்துநான்கு
தீரேதான் மாண்பருக்கு உபதேசித்தார்
தீர்க்கமுடன் சித்துமுனி ரிஷியார்தாமே.
(6113)

பொதிமாட்டுக்காரருக்கு ஏமவித்தை காண்பித்தது

தானான ரிஷியாரும் அன்புகூர்ந்து
தகமையுடன் பொதிமாட்டுக் காரருக்கு,
கோனான குருசொன்ன வாக்குபாதம்
குவலயத்தில் யாதொன்றும் குறைவில்லாமல்,
மானான மனோன்மணியாள் கடாட்சத்தாலும்,
மகத்தான காலாங்கி கிருபையாலும்
தேனான தேவர்முனி ரிஷியார்பாதம்
தெளிவுடனே வாதமது போதிப்பாரே.
(6114)

போதிக்க வாதமது ஏதுஎன்றாக்கால்
போக்கான மலைதோறும் குவடுதோறும்
ஆதித்தன் சந்திரனார் காணாவண்ணம்
அகஸ்தியனார் மலைமூலி அனைத்தும்காட்டி
வாதிகளும் அறியாத மூலிவர்க்கம்
வளமையுடன் கிரிமூலி பசுமூலியாவும்.
வேதிக்கி மூலிகளும் அனைத்துங்காட்டி
வேகமுடன் உபதேசம் செய்திட்டாரே. (6115)

செய்துமே ஏமமென்ற வித்தைதன்னை
செப்பினார் பொதிமாட்டுக் காரருக்கு
கைதவமாம் மூலிகைக்குச் சாபம்சொல்லி
கபடு அகற்றி உளவுமுதல்யாவும்காட்டி
வையகங்கள் தான்புகழ மாண்பருக்கு
வண்மையுடன் ஏமமென்ற வித்தைதன்னை,
துய்யபுகழ் மாண்பருக்கு உளவுமூலி
செப்பினார் நாதரிஷி செப்பினாரே (6116)

பொதிமாட்டுக்காரருக்குக் காண்பித்த மூலியெல்லாம் போகர் புலிப்பாணிக்கு கூறல்

செப்பவே இன்னமொரு மார்க்கம்கேளு
செயலான புலிப்பாணி மைந்தாபாரு
ஒப்பமுடன் பொதிமாட்டுக் காரர்தாமும்
ஓகோகோ நாதாக்கள் முனிவருக்கு
தப்பிதங்கள் நேராமல் புகையிலைகற்பம்
சட்டமுடன் தான்கொடுத்த உபசாரத்தால்
செப்பவே ஏமமென்ற மூலிதன்னை
செயலாகக் காண்பித்தார் கண்டிட்டேனே. (6117)

கண்டேனே வனத்தினுட மூலிஎல்லாம்
கருவாகக் குளிகைகொண்டு கிரியைசுற்றி
விண்டதொரு மூலிகையின் வகுப்பைஎல்லாம்
விருப்பமுடன் உந்தமக்கு உபதேசங்கள்,
பண்டதுபோல் யான்பகுத்துச் சொல்வேன்அப்பா
பட்சமுடன் மூலியது போக்குசொல்வேன்
சண்டமா ருதம்போல் செய்வாய்நீயும்
சாங்கமுடன் கருமிகட்குச் சொல்லொண்ணாதே.

வசளை மூலி 1008–மாற்று

சொல்லவென்றால் இன்னமொரு மார்க்கம்கேளு
தூயதான வசளைஎன்ற மூலிமார்க்கம்
புல்லவே கருவசளை கொண்டுவந்து
புகழான முப்பூவும் கூடச்சேர்த்து
கொல்லவே தாம்பரமாம் தகட்டின்மேலே
கொப்பெனவே முப்பூவை மத்தித்தேதான்
மெல்லவே தகட்டின்மேல் பூசியேதான்
மேன்மையுடன் கோழிஎன்ற புடந்தான்போடே. (6119)

போடேதான் புடமதுவும் ஆறிப்பாரு
 பொங்கமுடன் மாற்றதுவும் என்ன சொல்வேன்.
கூடேதான் நவலோகம் செந்தூரங்கள்
 கூறான மூலிகைக்கு ஈடும்உண்டோ
நாடேதான் மூலிவகை அறியாமாண்பர்
 நாட்டினிலே சுட்டலைந்து கெட்டார்கோடி
மாடேதான் குருமுடிக்கும் வகையும்காணார்
 மட்டிகளாம் கூர்மையில்லா மாண்பர்தானே. (6120)

பொன்முசுட்டை 500–மாற்று

மாண்பான இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
 மகத்தான புலிப்பாணி மன்னாகேளு
காண்பான பொன்முசுட்டை மூலிதானும்
 காடுஎல்லாம் திரிந்தாலும் கிடையாதப்பா,
மாண்பான கான் ஆறு குகைகள் கண்டு
 மடிந்தவர் கணக்கில்லை கோடாகோடி,
சாண்பாம்பு நீளமப்பா மூலிதானும்
 சட்டமுடன் ஆணிவேர் அறாமல்தானே. (6121)

ஆணியாம் மூலிகைக்கு மூலமப்பா
 அப்பனே காண்நீளம் சொல்லலாகும்
காணிமுதல் காடுஎல்லாந் திரிந்திட்டாலும்
 கசடருக்கும் கிட்டாது கருமிகட்கும்,
வாணியாம் சரஸ்வதியாள் வீற்றிருக்கும்
 வளமான மூலியது பொன் முசுட்டை,
பாணியது பூமிவளம் தன்னிலப்பா
 பாங்கான மூலமது காணதன்றே (6122)

அன்றான மூலிகைதான் கொண்டுவந்து
 அப்பனே முப்பூவும் கூடச்சேர்த்து
குன்றான சமூலமுடன் கூட்டியல்லோ
 கொற்றவனே குருத்தயில மாகக்கொண்டு
வென்றிடவே நவலோகத் தகட்டின்மேலே
 வீரமுடன் தைலமதைப் பூசியல்லோ,
சென்றிடவே பாண்டம்என்ற ஓட்டிலப்பா
 செம்மலுடன் சீலையது வலுவாய்ச்செய்யே
(6123)

செம்பான செம்பதுவும் என்னசொல்வேன்
செழிப்பான தங்கம்என்ற செம்புமாச்சு.
அம்பொன்னாம் தங்கம் என்ற செம்புதன்னை
அப்பனே பதிதனிலே நூற்றுக்கு ஒன்று,
கும்பிடவே தான் உருக்கி குரு ஒன்றுஈய
குற்றமற்ற மதியதுவும் தங்கமாச்சு,
வெம்பியதோர் விஷமதுவும் தீண்டினாற்போல்
வேதாந்த சித்தனும் தங்கம்காணே. (6132)

காணவே தங்கமதை என்னசொல்வேன்
கைலாசநாதருந்தான் காணமாட்டார்,
பூணவே சுயத்தங்கம் பிறவித் தங்கம்,
புகழான நாதாக்கள் செய்யும் தங்கம்,
ஆணவங்கள் காமியங்கள் ஒடுக்கும் தங்கம்
அரகரா இத்தங்கம் என்ன சொல்வேன்,
வேணதொரு நாதாக்கள் பாடுபட்டு
வேதைமுகம் காணாமல் மறைத்திட்டாரே.
(6133)

மறைத்தாரே இத்தங்கம் யாருக்கென்றால்
மகத்தான சிவயோகி ஞானிகட்கும்,
குறைத்தங்கம் மானாலே வையகத்தில்
கொற்றவர்கள் மாண்பருக்கு விடுதியாகும்,
நிறைந்ததொரு பரிபூரண தங்கமப்பா
நீதியுள்ள ஞானிகட்கும் சிவயோகிக்கும்,
மறைகொண்டு கானகத்தில் வாழுஞ்சித்து
சீரான தேவரிஷி வாய்க்குந்தானே.
(6134)

வாய்க்குமே மற்றவர்க்கு சித்தியில்லை
மகத்தான கொற்றவரும் கண்டதில்லை,
காய்க்குமே இம்மூலி வேதைதன்னை
காசினியில் யாருக்குங் கிட்டாதப்பா.
தேக்கமலம் வீற்றிருக்கும் அம்பாள் பாதம்
தொழுதுமே பணிந்துநித்தம் சதாகாலந்தான்,
சேய்போலே அம்பாட்குப் பணிகள்செய்து
சித்தம்வர மனது உவந்து நடந்துகொள்ளே.
(6135)

சிறியாநங்கை 84 மாற்று

கொள்ளவே இன்னமொரு அதிதம்சொல்வேன்
கூரான புலிப்பாணி மகனேகேளு,
எள்ளளவும் கோளாறு நேராமல்தான்
எழிலான கானகத்தின் மூலிகண்டேன்.
மெள்ளவே சிறியாளின் நங்கைதன்னை
மேன்மையுடன் கொண்டுவந்து கூறக்கேளும்.
விள்ளவே மூலியது சாற்றிலப்பா
வீரமுடன் சூதமதைத் தாக்கிடாயே. (6136)

நாகவேதை

தாக்கவே சூதமென்ற சரத்தைத்தானும்
தண்மையுள்ள நாகமதில் தன்னிலூட்டே.
நோக்கமுடன் நாகமது கண்ணடைந்து
நொருங்கியே சவளையது போலேயாகும்,
ஊக்கமுடன் சவளைதனை எடுத்துமைந்தா
ஓகோகோ நாதாக்கள் சொன்னநீதி.
தூக்கமது கொள்ளாமல் செம்பிலப்பா
துப்புரவாய் நூற்றுக்கு ஒன்றுதாக்கே. (6137)

ஒன்றான சவளையது கொடுத்தபோது
உத்தமனே மாற்றதுவும் என்னசொல்வேன்,
வென்றிடவே மாற்றதுவும் அறுபத்துநான்கு
வேதாந்தத் தாயாரும் உரைத்தநீதி,
குன்றினில்வாழ் சித்தர்முனி கூறாரப்பா
குவலயத்தில் உந்தனுக்காய் உரைப்பேன்யானும்
சென்றிடவே நெடுங்காலம் மலையில்காத்து
செம்மலுடன் வாங்கியதோர் வேதைபாரே. (6138)

பாரேதான் சிறியாளின் நங்கைவேதை
பாருலகில் யார்செய்வார் மாண்பரப்பா,
நேரேதான் `நாதாக்கள் செய்யும்வேதை
நேர்மையுடன் கண்டறிந்து மனதுவந்து,
தீரேதான் உந்தமக்கு மனங்களித்து
தீர்க்கமுடன் யான்கொடுத்த வேதைதன்னை,
சீரேதான் மற்றவரும் காணாமல்தான்
சீருலகில் புத்திவானாய் வாழ்வீர்தாமே, (6139)

பெரியாநங்கை 128–மாற்று

வாழவே இன்னமொரு அதிதஞ்சொல்வேன்
மகத்தான புலிப்பாணி அதிதவானே.
தாழவே பெரியாளின் மூலியப்பா
தாரணியில் சித்தர்களும் காணமாட்டார்,
மூழவே கண்டாலும் கூறமாட்டார்,
முனையான மூலிதனை மறைத்துப்போவார்,
சூழவே கானகத்தில் இருக்கும்மூலி
சுடர்மூலி விடமூலி சுருதியாமே. (6140)

சுருதியாம் மூலியுட வேதந்தன்னை
சுந்தரனே என்ன சொல்வேன் மச்சகேந்திரா,
நிருதியாம் காடெல்லாம் திரிந்தாலுந்தான்
நிஷ்களங்கம் ஆனதொரு மூலிதன்னை,
குருதியாம் அம்மூலி நிறமேயாகும்
குவலயத்தில் கண்டவர்கள் விள்ளாரப்பா,
பருதிமதி காணாத விருட்சத்தின்கீழ்
படர்ந்துமே தான் இருக்கும் மூலியாமே.
(6141)

மூலியாம் தழைஅதனைக் கொண்டுவந்து
முனையான ரசமதுவும் துலமேயாகும்,
நாலிலோர் பங்கதுவும் சூதந்தன்னை
நலமுடனே தான்கூட்டி மத்தித்தேதான்,
வேலியெனும் வீரமதைக் கால்தான்கூட்டி
வேகமுடன் தான்குழைத்து மன்னாகேளு,
பாலியெனும் பரித்தகட்டில் பூசியேதான்
பாங்கான ஓட்டிலிட்டுச் சீலைசெய்யே.
(6142)

சீலையது செய்தபின்பு ரவியில்வைத்து
சிற்பரனே கோழிஎன்ற புடத்தைப்போடு,
வேலையெனும் புடமதுவும் ஆறிப்பின்பு
வேதாந்தத் தாயதனை மனதில்உன்னி,
நூலையது வரன்முறையாய்த் தொகுப்புங்கண்டு
நுட்பமுடன் கைபாகம் செய்பாகந்தான்,
மாலையுடன் புடம் ஆறி எடுத்துப்பாரு
மகத்தான ஏமமது களங்கமாச்சே. (6143)

ஏமமென்ற களங்கதனை எடுத்துமைந்தா
        எழிலான வெள்ளிதனில் நூற்றுக்குஒன்று
வாமமுடன் தான்உருக்கி குருஒன்றுஈய
        மகத்தான வெள்ளியது ஏமமாச்சு,
நாமமென்ற வெள்ளியது பிறவித்தங்கம்
        நாதாக்கள் சுண்டதொரு நாகத்தங்கம்,
ஆமமென்ற தங்கமது வர்ணத்தங்கம்
        அப்பனே மூலிகையின் பெருமைபாரே
(6144)

பெருமையாய் அனேகவித போக்குமுண்டு
        பேரான வழலைக்கு மூலிவேண்டும்,
கருமமது தான் அகற்றிப் புண்ணியவானே
        காசினியில் சித்துபோல் பெயரும்கொண்டு
அருமையுள்ள சித்தருக்கு அடிபணிந்து
        அன்புடனே ஏவலது மிகப்புரிந்து,
ஒருமைபட வையகத்தில் எந்நாளும்
        உலகமதில் பெயருண்டாய் வாழ்வீர்தானே.
(6145)

தானான மாற்றதுவும் நூற்றிருபத்தெட்டு
        தண்மையுள்ள நாதாக்கள் செய்யுந்தங்கம்
கோனான சித்துமுனி அனேகமாக
        கூறினார் வெகுகோடி நூலிலப்பா,
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
        தேற்றமுடன் கண்டறிந்த வேதைதன்னை,
மானான மகதேவர் புண்ணியத்தால்
        மகிழ்ச்சியுடன் என்னாளும் மணம்கொள்வீரே.
(6146)

மணமுடனே சிதாபாசம் மனதில்உன்னி
        மார்க்கமுடன் மதியமுர்தம் கொண்டுமல்லோ
கணலதுவும் நேராமல் யோகந்தன்னில்
        கழற்சியுடன் சிவயோக நிலையில்நின்று,
குணமுடனே திரிகரண சொருபராக
        குவலயத்தில் அஷ்டாங்க யோகம்கண்டு,
வணங்கியே அஷ்டநிலை பதியைக்கண்டு
        வாமமுடன் அர்ச்சித்த வலுகொள்வீரே.
(6147)

உண்டான வித்தையது அனேகம்உண்டு
உத்தமனே பார்க்களன்றால் கண்கொள்ளாது.
திண்டான வித்தைவ்யது சொல்வீரானால்
தீரமுடன் செய்வதற்கு ஐயமில்லை,
பண்டான குலைகளவு இல்லாவிந்தை
பட்சமுடன் எந்தமக்குச் சொல்வீரானால்.
வண்மையுடன் செய்துமல்லோ உந்தமக்கு
வளமையுடன் காட்சிவயது தருவேன்பாரே. (6148)

கறுப்புக் கோடாசுழி 50-மாற்று

கொள்ளவே இன்னமொரு குணமும் சொல்வேன்
கூரான புலிப்பாணி புனிதவானே,
விள்ளவே காடுஎல்லாம் திரிந்தாலும்தான்
விட்டகுறை இருந்தாலே லபிக்கும்பாரு,
வெள்ளமது கண்டாலே அழியும்மூலி
வேதாந்தத் தாயிருக்கும் மூலியப்பா,
எள்ளளவும் குற்றமது நேராமூலி
எழிலான கறுப்பு கோடாலியாமே. (6149)

கோடான சுழியென்ற மூலியப்பா
கொற்றவனே கொண்டுவந்து சொல்லக்கேளும்
தாடான மூலிரசம் துலமேயாகும்
தாக்கான வீரமது வராகன்ஒன்று,
கூடான சூதமது வராகன்ஒன்று
கொற்றவனே மூன்றையும் தான் ஒன்றாய்க்கூட்டி,
வாடாமல் வெண்ணையது போல்அரைத்து
வளமான செம்பதினில் பூசிடாயே.
(6150)

பூசவே மயினமதை செம்புதன்னில்
புகழாக லேபித்துக் காய்ந்தபின்பு,
வாசமுடன் கரியோட்டில் இட்டுமைந்தா
வளமையுடன் சில்லிட்டிச் சீலைசெய்து,
பாசமதுதான் அகல ஆவியில்வைத்து
பட்சமுடன் கோழிஎன்ற புடத்தைப்போடு,
கோசமென்ற பீஜமது சேர்ந்ததாலே
கொற்றவனே செம்பதுவும் வரணமாச்சே. (6151)

ஆச்சப்பா செம்பதுவும் வரணமீறி
அப்பனே மாற்றதுவும் ஐம்பதாகும்,
மார்ச்சலென்ற களிம்பதுவும் விட்டு அகன்று
மகத்தான செம்பதுவும் பழுப்புமீறி
காச்சலுடன் திரைசுவடு களிம்போடுஊரல்
கசடகற்றி சவளையுடன் அழுகல்மாறி,
ஆச்சரியம் ஆனதொரு ஊட்டங்காய்ப்பு
அப்பனே கரகரப்புடன் நயப்புதானே.
(6152)

தானான பிறவியென்ற தங்கம்போலே
தண்மையுள்ள குற்றமது நீங்கியேதான்,
கோனான குருத்தங்கம் பிறவித்தங்கம்
குவலயத்தில் நாதாக்கள் செய்யும்தங்கம்
மானான மகமேருவான தங்கம்
மகத்தான மூலியுட காரசாரம்,
தேனான பரிசமது பட்டபோது
தெளிவான உறுதியென்ற தங்கந்தானே.
(6153)

தங்கமாம் பதிதனிலே நூற்றுக்கொன்று
தாக்கடா சோடசமும் காணுங்காணும்,
வங்கமாம் படுபாவியான வங்கம்
வளமான வர்ணமதைக் கொள்ளாதப்பா
புங்கமாம் அஷ்டசித்தி இதற்குள்ளாகும்
புகழான தங்கமது பிறவித்தங்கம்,
பங்கமது வாராது நாததங்கம்
பாருலகில் மாண்பருக்குக் கிட்டாதன்றே.
(6154)

அன்றான விதியொளி வருவான் ஆனால்
அவனுக்கே கிட்டுமது மற்றோர்க்கு இல்லை,
குன்றான மலைநாடு தேசந்தன்னில்
கொற்றவரும் சிவயோகி மாண்பர்உண்டு,
தென்திசை யில்அகஸ்தியனார் மலையில் அப்பா
தீரமுடன் சென்றுவந்தோர் கோடி உண்டு,
வென்றிடவே அவர்களிலும் கருமியுண்டு
வேதாந்த சிவயோகி தானும்உண்டே.
(6155)

உண்டான மனோலயத்தை அறிந்துகொண்டு
உத்தமனே நூல்பார்த்த வாதிகண்டு
கண்டாலும் விள்ளாத காணியாளர்
கசடகற்றிமனம் பொருந்தி கருத்திலுன்னி,
அண்டர்முனி தேவாதி ரிஷிகட்குஒப்பாம்
அப்பனே முற்பவத்தை அகற்றிவாழும்
சண்டமெனும் மாருதம்போல் பாசம்விட்டு
சட்டமுடன் வாழுகின்ற யோகியாமே. (6156)

யோகியாம் தத்துவத்தில் மிகுந்தவானாய்
யோகமெனும் பதிதனக்கு உகந்தசீடன்,
போகமது தான் அகற்றி பொதிந்துவாழும்
பெருங்கமுடன் ஞானம்என்ற மாண்பர்கண்டு.
ரோகமது இல்லாத புண்ணியவானாய்
நொடிக்குள்ளே பகுத்தறிவு கொண்டதீரன்.
காகமது நேராத சீடன்கண்டு
சட்டமுடன் உபதேசஞ் செய்திட்டாரே. (6157)

சிகப்புசித்திரமூலம் 25-மாற்று

செய்யவே இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
செயலான புலிப்பாணி அதிதவானே.
துய்யதமிழ்ப் பாண்டியனுக்கு ஒப்பதாமே
துரைராஜ சுந்தரனே புகலக்கேளீர்,
வையகங்கள் தான்புகழும் வனாந்திரத்தில்
வண்மையுள்ள சிவந்தகொடி வேலியப்பா,
மெய்யான மலைதனிலே மெத்தஉண்டு
மேதினியுளோர் காண்பதுவும் அரிதுபாரே. (6158)

பாரேதான் மலைதனிலே சுற்றும்போது
பாங்கான பாறையின்தன் வெப்புதன்னில்.
நேரேதான் விளைந்திருக்கும் சிவந்தமூலி
நெடிதான கொடிவேலி என்னலாகும்,
சீரேதான் கொடிவேலி தனைஎடுத்தது
சிறப்புடனே சூதமதை எடுத்துமைந்தா
வீரேதான் வீரமது களஞ்சிகூட்டி
நீதியுடன் மத்தித்து ரவியில்போடே. (6159)

போடவே சீலையது வலுவாய்ச் செய்து
பொங்கமுடன் கனஎருவில் புடத்தைப்போடு
நீடவே புடம் ஆறி எடுத்துப்பாரு
நிலையான செம்பதுவும் என்னசொல்வேன்,
கூடவே செம்புதனைப் பதனம்பண்ணு
கொற்றவனே கவச குண்டலத்துக்காகும்,
ஆடவே மாற்றதுவும் இருபத்தைந்து
அப்பனே குங்குமப்பூ நிறமுமாச்சே.
(6160)

ஆச்சுதென்று விடுகாதே இன்னங்கேளு
ஆகாகா நாதாக்கள் மறைந்தஜோதி,
வாச்சுதே சிவயோகிக்கு உகந்ததங்கம்
வர்ணதங்கம் இதற்கல்லோ ஈடாமோதான்,
போச்சுதென்று விடுகாதே புண்ணியவானே
புகழான நாதாக்கள் ஆடுங்கூத்து,
காச்சுதே சிவந்த சித்திரமாமூலி
கனகமென்ற வேதையது கைக்குள்ளாச்சே.
(6161)

உள்ளான பொருள்எல்லாம் இதிலேதோயும்
உத்தமனே நாதாக்கள் கூறாரப்பா.
கள்ளமின்றி நேராக ஏமவித்தை
காசினியில் சித்துமுனி செய்யுமார்க்கம்,
எள்ளளவும் பிசகதுவும் வாராதப்பா
எழிலான வித்தையது என்னசொல்வேன்.
கொள்ளைகொண்ட குருவினது வாக்குதானும்
குவலயத்தில் பொய்யாது மெய்யதாமே. (6162)

மெய்யான சிவந்த சித்திரமாமூலி
மேதினியில் வெகுமாண்பர் காணாமல்தான்,
பொய்யான மூலிதனை மெய்என்றுஎண்ணி
பொங்கமுடன் கெட்டலைந்தார் கோடிகோடி,
துய்யதமிழ் சாத்திரங்கள் கூறும்வண்ணம்
துப்புரவாய் தலைமாடு கால்மாடாக,
செய்யதொரு காப்பேடு பாராமல்தான்
சேனைதிரள் மாண்பர்களும் கெட்டார்தாமே.
(6163)

மேற்படி மூலிகற்பம்

கெட்டாரே சிவந்த சித்திரமாமூலி
கெடியான வையகத்தில் காணாமல்தான்,
பட்டலைந்து மலைவளங்கள் குண்ணுநாடு
பாருலகில் தேடியல்லோ காணாமல்தான்,
அட்டகிரி தான்புகழும் மேருதன்னில்
அன்பான மூலிதனைக் கண்டறிந்து
விட்டகுறை இருந்ததொரு தன்மையாலே
மேதினியில் சிலபேர்கள் கண்டார்தாமே (6164)

கண்டாரே காலாங்கி கிருபையாலே
காசினியில் நாதாக்கள் இருக்கும்ஸ்தானம்,
தொண்டுமிக செய்தல்லோ மூலிதன்னை
தோறாமல் மனதுஉவந்து கற்பங்கொள்ள,
சண்டமா ருதம்போலே மூலிகற்பம்
சாங்கமுடன் இருவேளை உண்டுமல்லோ
வண்டுமுது கோடதுபோல வர்ணங்கொண்டு
வையகத்தில் வெகுமாண்பர் இருந்தார்தானே.
(6165)

தானான மூலியது கொண்டபோது
தாக்கான வாசியது கீழ்நோக்காகும்,
கோனான குருநாதர் சொன்னவாக்கு
குவலயத்தில் பொய்யாமல் மெய்என்று எண்ணி,
தேனான சிவப்பு சித்திரமாங்கற்பம்
தேசமதில் கோடான கோடிபேர்கள்.
மானான மலைவளத்தில் இருந்துகொண்டு
மார்க்கமுடன் கற்பமது கொண்டிட்டாரே.
(6166)

கற்பமாம் சித்திரமாம் மூலிகற்பம்
கனமுடனே உண்டவர்க்கு வயதேசொல்வேன்,
சொற்பம்என்று எண்ணாதே துய்யபாலா
சொர்ணம்போல் தேகமது மின்னும்பாரு,
விற்பனமும் மிகஉண்டாம் அறிவும்உண்டாம்
விருத்தமது வாராது பாலன்போலாம்,
அற்பமென்று நினையாதே அரியபாலா
ஆயிரமாம் வருடமது இருக்கலாமே. (6167)

இருக்கவென்றால் உலகுபதி சித்துதாமும்
எழிலுடனே நெடுங்காலம் இருந்தசித்து,
பொருக்கவே காயாதி கற்பம்கொண்டு
பொன்னுலகு பதிதனிலே சேர்ந்தாரப்பா,
வருத்தமுடன் வெகுகோடி சித்துதாமும்
வளமான மூலிகற்பங் கொண்டுமேதான்
திருக்கமலம் வீற்றிருக்கும் அம்பாள்பாதம்
தீர்க்கமுடன் நெடுங்காலம் இருந்தார்பாரே. (6168)

போகர் புலிப்பாணிக்கு பொய் இன்னதென்று கூறல்

பாரேதான் இன்னமொரு பண்புசொல்வேன்
பாங்கான புலிப்பாணி பாக்கியவானே,
நேரேதான் உலகுபதி மாண்பர் எல்லாம்
நெடிதான பொய் அதனை நுகரும்நேர்மை,
தீரேதான் யான்தெய்வம் என்பார்தானும்
திரளான சார்வாகம் பொய்யேயாகும்
கூரேதான் கடவுளெனும் மதம்பொய்
குவலயத்தில் தேவன் இல்லை என்பார்தாமே.
(6169)

தாமான மார்க்கமது பொய்யேயாகும்
சகலகலை அறிவதும் பொய்யேயாகும்
நாமான மோகனங்கள் பொய்யேயாகும்
நலமான வசியமுதல் மாற்றம்பொய்யே,
வேமானம் உள்ளதொரு உச்சாடனங்கள்
வெகுபிறட்டு கலைதிரட்டு மேதினிக்குள்,
சாமானிய மானதொரு தேவசங்க
சட்டமுடன் வரவழைத்தல் பொய்யதாமே.
(6170)

பொய்யான செப்பிடுகள் வித்தைபொய்யே
பொங்கமுடன் தூலங்கள் சொல்லப்பொய்யே.
துய்யகெஜ தரணமது சுத்தம்பொய்யே
துப்புரவாய்க் குளிசங்கள் எல்லாம் பொய்யே,
வெய்யபுகழ் தேகமது தானும்பொய்யே
மேதினியில் இருப்பவரும் பொய்யேயாமே,
நையவரும் முகமதில் எல்லாம்பொய்யே
நாதாக்கள் சொல்லுமுறை சிலபொய்தானே. (6171)

ஏழாவது காண்டம்

போகர் புலிப்பாணிக்கு மெய் கூறல்

தானான புலிப்பாணி தார்வேந்தாகேள்
தண்மையுடன் சொல்லுகிறேன் தருமவானே,
கோனே தான் உலகுபதி மாண்பர்எல்லாம்
கோர்வையுடன் பலநூலும் கற்றும் என்ன,
வீணேதான் பொய்மெய்யும் அறியாமாண்பர்
விருதாவாய் சிவயோகம் செய்துகொண்டு
காணாமல் வையகத்தில் உண்மை தன்னை
கசடுஅகற்றி மெய்அறிய மறந்தார்பாரே. (6172)

பாரேதான் வையகத்தில் தெய்வம் உண்டு
பாங்கான மோட்சம் என்ற வீடும்உண்டு,
நேரேதான் பாவிகட்குந ரகம் உண்டு
நீடாழி உலகமது அழிவதுஉண்டு,
சீரேதான் வாதமது மெய்யே ஆகும்
சிறப்பான குளிகையது மெய்யே ஆகும்,
வீரேதான் கற்பமது மெய்யே ஆகும்,
விருப்பமுடன் இறப்பதுவும் மெய்யதாச்சே. (6173)

நன்னாரிகற்பம்

ஆச்சப்பா புலிப்பாணி புனிதவானே
அவனிதனில் இன்னம்உண்டு கற்பங்கேளீர்,
மாச்சலென்ற நன்னாரி கற்பமப்பா
மகத்தான கற்பமதை ஆண்டு கொண்டால்,
பாச்சலென்ற உதிரமது விஷம்காணாது
பாங்கான தேகமது கணல் ஏறாது
வீச்சுடனே நேத்திரங்கள் குளிர்ந்துகாணும்
வீரான சுவாசமது கீழ்நோக்காமே. (6174)

நோக்கான மூலிகையாம் கற்பம் தன்னில்
நுணுக்கமுள்ள மாண்பர்களும் கொண்டுவந்து,
தாக்கான மதிமயக்கம் பூண்டுகொண்டு
வண்மையுடன் தவநிலைக்கு உறுதிகொண்டு,
வாக்குமனம் சித்தருடமார்க்கம் பொங்கி
வளமையுடன் வாசியது கீழேநோக்கி,
தேக்கமுடன் சிவயோக பதியில் சென்று
தேற்றமுடன் நெடுங்காலம் இருக்கலாமே. (6175)

கற்பம் உண்பவர்க்கு ஏமசித்தி லிங்கப்போக்கு

இருக்கவே இன்னமொரு மகுத்துவந்தான்
எழிலான புலிப்பாணி திலாதவானே,
பொருக்கவே காயாதி கொண்டபோர்க்கு
பொங்கமுடன் சீவனத்துக்கு இடமேதென்றால்,
திருக்கையிலை தான்இருக்கும் சிவனார்ஆணை
தீர்க்கமுடன் வாதமது புகலக்கேளும்,
பெருக்கமுடன் காலாங்கி நாதர்பாதம்
பெருமையுடன் யான்வணங்கிக் கூறுவேனே. (6176)

கூறுவேன் ஜாதிலிங்கம் பலந்தான்ஒன்று
கொற்றவனே முலைப்பாலில் ஊறப்போடு,
தேறுதலாய் முப்பொழுதும் ஆனபின்பு
தெளிவுஇருத்து லிங்கமதை எடுத்துமைந்தா,
மாறுபடா எறிகாலன் பாலையப்பா
மார்க்கமுடன் எண்சாமம் சுருக்குதாக்கு,
வீறுடைய குமரியின்தன் பாலால்தானும்
விருப்பமுடன் நாற்சாமம் சுருக்குதாக்கே. (6177)

தாக்கான லிங்கமதை எடுத்துபாலா
தண்மையுடன் ஆறாதாரச் சரக்காம்.
போக்கான சரக்கதுவும் ஏதுஎன் றாக்கால்
பொங்கமுடன் துருசுவெடி யுப்புக்காரம்
நோக்கான சாரமுடன் சீனம்தானும்
நுண்மையுள்ள கரியுப்பு கூடச்சேர்த்து,
வாக்கதுவும் பிசகாது வண்ணமப்பா
வளமையுடன் தீநீராஞ் செயநீர்தானே. (6178)

தானான ஆறாதாரச் சரக்கால்
தாரணியில் அண்டபிண்டம் தானுமாச்சு,
கோனான குருஅருளும் காணலாகும்
கொப்பெனவே சத்திசிவம் மாற்றிகாண்பீர்.
பானான செந்தூர கட்டுப்போக்கும்
பாங்கான களங்கு முதனாலாகும்
தேனான தேவிமனோன் மணியாள்பாதந்
தேர்ந்தெடுத்த ஆறாதாரம் தான்பாரே. (6179)

பாரேதான் ஜெயநீரில் அனந்தம்போக்கு
    பாடினார் ஜெகதலத்தில் முனிவர்கோடி,
நேரேதான் குருக்கிடையும் கருக்கிடையுமப்பா,
    நெடிதான சாஸ்திரங்கள் அனந்தம்சொன்னார்.
வேரேதான் சாஸ்திரத்தில் இந்தப்போக்கு
    வேதைமுகம் காணுதற்கு குறிகள்காணார்,
நீரேதான் சாஸ்திரத்தின் உளவுகண்டு
    நீதியுடன் ஆறா தாரத்தைக்காணே.
(6180)

காணவே ஆறாதாரத்தைக் கண்டால்
    கனகம்எனும் வாதமது கைக்குள்ளாச்சு,
தோணவே லிங்கமது தன்னிலப்பா
    தோறாமல் எண்சாமம் சுருக்குதாக்கு,
வேணவே செயநீரில் நின்றபாகம்
    வேகமுடன் தூரதனில் நின்றசத்து.
நீணவே சத்ததனை எடுத்துமைந்தா
    நிகட்சியுடன் லிங்கமதில் கவசம்பூசே.
(6181)

பூசியே லிங்கமதில் கவசம்போடு
    புகழான லிங்கமது புடந்தான்பத்து,
மாசில்லா லிங்கமது மணல்தானப்பா
    மகத்தான புடமதுவும் பத்தேயாகும்.
தேசியெனும் ஊசிநீர் ஆறாதாரம்
    தெளிவுடனே சுருக்கதனால் கட்டும்பாரு,
ஊசியெனும் காந்தமது லிங்கமப்பா
    உத்தமனே உருக்கது போலிருக்கும்பாரே
(6182)

உருக்கவே லிங்கமது எடுத்துமைந்தா
    உத்தமனே மேற்போக்கு கூறக்கேளும்,
பொருக்கமுடன் சாரம்என்ற செயநீர் தன்னால்
    பேரான தங்கமதை பத்துக்கொன்று,
குருக்கியே தங்கமதை ஜெயநீராக்கி
    கூசாமல் லிங்கமதில் சுருக்குதாக்கு,
நெருப்பினிலே வைத்தல்லோ சூடுதாக்கி
    நேரான ஜெயநீரை சுருக்குதாக்கே. (6183)

தாக்கிடவே லிங்கமது இறுகிமைந்தா
தண்மையுடன் வெட்டுருக்கு போலேகாணும்,
நோக்கிடவே மேற்போக்கு புகலக்கேளும்
நுட்பமுடன் தேனதனை சுருக்குதாக்கு,
வாக்குடனே காலாங்கி நாதர்பாதம்
வண்மையுடன் அவர்பாதம் வணங்கியல்லோ,
தீக்குழியில் அயமதனால் கட்டிதன்னை
தீர்க்கமுடன் தான்எடுத்து செப்பக்கேளே

(6184)

கேளேதான் லிங்கமதை இரும்பில்வைத்து
கெடியான தேனதனை மனதுவந்து,
பாளேதான் போகாமல் சுருக்குதாக்கு
பட்சமுடன் லிங்கமது இருகிக்காணும்,
தூளேதான் சுருக்கதுவும் அறுபத்துநான்கு
சுயமான தேன் அதனால் சுருக்குதாக்கு
மீளேதான் லிங்கமது ஜெயக்கட்டாகும்
மிக்கான கட்டதுவும் அரிதாம்பாரே.

(6185)

அரிதான கட்டதனை எடுத்துமைந்தா
அப்பனே சிற்றண்ட தயிலம்வாங்கி
பொரியான வெங்காரம் பத்துக்கொன்று
பொங்கமுடன் தைலமதில் சேர்த்துமல்லோ,
வரியான லிங்கமதை சுருக்குதாக்கு
வண்மையுள்ள லிங்கமது இளகிக்காட்டும்,
பரியான தங்கமது செயநீர் சேர்ந்து
பாங்கான லிங்கமது மெழுகுமாச்சே.

(6186)

ஆச்சப்பா லிங்கமது கல்மெழுகேயாகும்
அப்பனே மெழுகுதனைப் பதனம்பண்ணு,
காச்சலென்ற லிங்கமது இறுகிக்காட்டும்
கருவான லிங்கமது போக்குசொல்வேன்,
மாச்சலது வாராமல் லிங்கந்தன்னை
மயங்காமல் கருவங்கம் சுத்திசெய்து.
பாச்சலுடன் வங்கமதை லிங்கந்தன்னை
பட்சமுடன் தான்உருக்கி இடைதானூயே. (6187)

இடையான இடையதுவும் என்னவென்றால்
எழிலான சரியிடையே செப்பலாகும்,
மடைபோன்ற வங்கமதை உருக்கிமைந்தா
மயங்காமல் உருக்குமுகம் தன்னில்ஈந்து,
கடையான தங்கமதில் வங்கலிங்கம்
கருவுடனே உருகிநின்ற களங்குதன்னை,
தடையறவே தங்கமதில் கொடுத்துமைந்தா
சட்டமுடன் தான் உருக்கி எடுத்துப்பாரே. (6188)

எடுத்துமிகப் பார்க்கையிலே என்னசொல்வேன்
எழிலான களங்கமது ஏமவித்தை,
தொடுத்ததொரு களங்குதனை எடுத்துபாலா
தோறாமல் வெள்ளிசெம்பில் பத்துக்குஒன்று,
கொடுத்திடவே உருக்குமுகம் தன்னிலீய்ந்து
கொற்றவனே செம்பதனை ஊதிப்போடு,
விடுத்ததொரு மாற்றதுவும் என்ன சொல்வேன்
விட்டகுறை இருந்தவர்க்கு லபிக்குந்தானே. (6189)

தானான வெள்ளியது என்னசொல்வேன்
தண்மையுள்ள மாற்றதுவும் ஆறதாகும்,
மானான மட்டநிகர் நாலுக்கொன்று
மகத்தான தங்கமது ஒன்றுசேரு,
தேனான தேவியுட கடாட்சத்தாலே
தேற்றமுடன் மாற்றதுவும் எட்டதாகும்,
கோனான புடத்துக்கு உறுதிதங்கம்
குவலயத்தில் யார்அறிவார் சித்தர்தானே. (6190)

சித்தான சித்துமுனி நாதர்தாமும்
சிறப்பான ரிஷிதேவர் சொன்னமார்க்கம்.
முத்தான வேதையிது இன்னம்சொல்வேன்
முனையான மார்க்கமது போலொண்ணாது,
பக்தியுடன் சிவராஜ யோகிமாண்பர்
பாலகனே செய்யும்வகை அனேகம்உண்டு,
சுத்தியுள்ள செம்பதுவும் துலம்தானொன்று
துறையான லிங்கமது துலந்தான்ரெண்டே. (6191)

துலமான செம்பதனில் லிங்கம்கொண்டு
        தூக்கான லிங்கமதை கிராசம்ஈவாய்,
நலமான இருண்டசெம்பு கட்டிப்போகும்
        நாற்றமுள்ள ஊறல்அது ஏகிப்போகும்
சலமான ஊறலது ஏகியல்லோ
        சாங்கமுடன் திரைசவடும் அற்றுப்போகும்,
குலமான தங்கமதை சரியாய்ச் சேர்த்து
        [illegible]கைதனிலே தான்உருக்கி எடுத்திடாயே
(6192)

எடுத்துமே மதிதனிலே பத்துக்குஓன்று
        ஏழிலான தங்கமதை தாக்குதாக்கு,
கொடுத்திடவே மாற்றதுவும் ஆறதாகும்
        கொப்பெனவே தங்கமது எட்டில்ஒன்று
அடுத்துமே தான்கொடுத்து உருக்கிக்கொண்டு
        அப்பனே வாரடித்தப் புடந்தான்போடு,
தொடுத்ததொரு மாற்றதுவும் என்னசொல்வேன்
        தோறாமல் வயததுவும் ஏழதாமே.
(6193)

ஏழான பொன்னதுவும் பசுமைமெத்த
        எளிதான ஏற்றம்ஒன்று இன்னம்சொல்வேன்,
தாழான மட்டமது மாற்றுகாணும்
        தண்மையுள்ள பசுமையது என்னசொல்வேன்.
காழான துருசினுட செந்தூரத்தால்
        கருவான மாற்றதுவும் அதிதங்காணும்,
சூழான சூதவித்தை ஏமவித்தை
        சுந்தரனே சொல்லவுந்தான் நாவொண்ணாதே.
(6194)

ஒண்ணாது இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
        ஓகோகோ புலிப்பாணி உகந்தபாலா,
கண்ணான லிங்கமது களஞ்சிஒன்று
        கருவான நாகமது களஞ்சிஒன்று,
மண்ணான வாயுவென்ற பிரிதுவிதானும்
        மகத்தான வங்கமது களஞ்சிஒன்று,
திண்ணமாம் லோகமதை ஒன்றாய்க்கூட்டி
        தீரமுடன் மூசைதனில் உருக்கிடாயே. (6195)

உருக்கியே கண்விட்டு ஆடும்போது
உத்தமனே லிங்கமென்ற களஞ்சிதன்னை,
பெருக்கியே உருக்குமுகந் தன்னிலப்பா
பேரான லிங்கம் குருஒன்றுாய
வருக்கமுடன் மூசைதனை ஆற்றிப்பாரு
வளமான களங்கமது என்னசொல்வேன்,
சுருக்கமுள்ள சிமிட்டுவித்தை வேதைகாணும்
துப்புரவாய் மூசைதனை உடைத்துப்பாரே. (6188)

உடைத்துமிகப் பார்க்கையிலே என்னசொல்வேன்
உத்தமனே லோகமென்ற களங்குலிங்கம்,
தடையறவே மதியதுவும் ஏழதாகும்
தாக்கான ரவியதுவும் மூன்றதாகும்
கடையான களங்கமது ஒன்றதாகும்
களங்கமற தானுக்கு குருஒன்றுாய,
மடைபோன்ற களங்கமதைத் தான்எடுத்து
மகத்தான ஓட்டில்வைத்து ஊதிப்போடே. (6197)

போடேதான் கரிஓட்டில் ஊதும்போது
பொங்கமுடன் வெள்ளியது சவளைபோலாம்,
நாடேநீ செம்பகல ஊதிப்போடு
நலமான பசும்பொன்னு என்னசொல்வேன்.
தேடேநீ புடமதனில் தாக்கிப்பாரு
தெளிவான தங்கமது ஜோதிமெத்த,
ஆடேநீ ஜீவனத்தை செய்து கொண்டு
அப்பனே தவநிலையை சாதிப்பாயே (6198)

நத்தை கற்பம்

சாதிப்பாய் இன்னமொரு கற்பம் சொல்வேன்
சற்பாத்ரம் உள்ளதொரு மைந்தாகேளு,
மேதினியில் ஏரிதனில் வளருகின்ற
மேன்மையுள்ள நத்தையது ஒன்றுவீதம்,
ஆதியென்ற முப்பதுவும் கூடச்சேர்த்து
அப்பனே மண்டலந்தான் கொண்டாயானால் ;
நீதியுடன் காயமது கற்பம் மீறி
நீணிலத்தில் வெகுகாலம் இருக்கலாமே. (6199)

இருக்களன்றால் கோடிவரை இருக்கலாமே
எழிலான காலாங்கி உண்ட கற்பம்.
திருக்கமலம் வீற்றிருக்கும் தாயார்பாதம்
தீர்க்கமுடன் என்னாளும் மனதில் உன்னி,
வருக்கமுடன் நத்தையின் தன் கற்பந்தன்னை
வாகுடனே கொண்டவதற்கு காயசித்தி,
பெருக்கமுடன் முப்பூவின் வலுமையாலே
பேரான நத்தையது கற்பமாச்சே. (6200)

கற்பமென்ற நத்தையது ஏது என்றாக்கால்
கருவான பிரிதிவினில் வளர்ந்த பிண்டம்,
சொற்பமென்று நினையாதே துய்யபாலா
துப்புரவாய் பிரிதிவினில் வளர்ந்தசொர்னம்,
விற்பனர்கள் ராஜாதி யோகிமாண்பர்
விருப்பமுடன் கொண்டருளும் காயகற்பம்,
துப்புர்வாய் இருந்தோர்க்கும் ஒன்றுமில்லை
துறைகோடி வரைகோடி கற்பமாமே. (6201)

கற்பமுண்பதற்கும் ஔஷதம் பலிப்பதற்கும் வாதஞ் செய்வதற்கும் சூட்சம் முப்பு

வரையான இன்னமொரு மார்க்கம் சொல்வேன்
வளமையுள்ள புலிப்பாணி இந்திரகோபா,
திரைமறைவு நேராமல் முப்புமார்க்கம்
செப்புகிறேன் உந்தமக்குப் புனிதவானே,
முறையான வழிபாடு முன் அனந்தம்
முனையான சுருக்கமது இதில் அடக்கம்
குறையாது சிடிகைஎன்ற வேதையப்பா
குவலயத்தில் சித்துமுனி சொல்லார்தானே. (6202)

தானான மனோன்மணியாள் கிருபையாலும்
தாக்கான காலாங்கி கடாட்சத்தாலும்
தேனான முப்பூவின் வளமைதன்னை
தேற்றமுடன் வெளியாங்க மாகச் சொல்வேன்,
பானான முப்பூவை எடுக்குமார்க்கம்
பாலகனே முறைபாடு வழிபாடாகும்,
மானான பங்குனியாம் பருவந்தன்னில்
மார்க்கமுடன் அமாவாசை பருவந்தானே. (6203)

பருவமாம் வடக்கு வெகுதூரமப்பா
பாங்கான அளர்பூமி தன்னில்சென்று.
உருவுடனே நடுச்சாம வேளைதன்னின்
உத்தமனே மனோன்மணியை மனதில்எண்ணி.
குருவான பூநீரை எடுப்பதற்கு
கொற்றவனே வெடிகாலத் தன்னிலப்பா.
பருவமுடன் பூர்க்குமந்த முப்பு தன்னை
பட்சமுடன் தான்எடுத்து அறையக்கேளே
(6204)

கேளேதான் முப்பூவென்ற பூநீர்தன்னை
கவனமுடன் பீங்கானில் பதனம்பண்ணு
நாளேதான் போதாமல் குருமுடிக்கும்
நலமாக கைபாகம் சொல்வேனப்பா,
பாளேதான் போகாமல் பூநீர்தன்னை
பாங்கான நிலமதனில் சொல்லக்கேளீர்
ஆளேதான் பூநீர்கள் எடுத்தபூமி
அதிலிருக்கும் மர்மமதை அறைவேன்பாரே.
(6205)

பாரேதான் ஓர் ஆளு மட்டமாக
பான்மையுடன் குழியதுதான் தோண்டும்போது
நேரேதான் பிரமமென்ற கல்தான்பா
நேர்மையுடன் தான் இருக்கும் நிகலக்கேளு,
தீரேதான் பிரமமென்ற சுக்கான்கல்லை
தீரமுடன் தான்எடுத்து சொல்லக்கேளு,
சேரேதான் கல்லதனைப் பதனம்பண்ணு
செயலான பாக்கியமும் அனேகம் உண்டே.
(6206)

உண்டான இன்னமொரு மர்மம் சொல்வேன்
உத்தமனே முப்பூவின் மார்க்கமப்பா.
திண்டான கல்லுப்பு வேணமட்டும்
திரமுடனே தான்எடுத்து புகலக்கேளும்,
வண்மையுடன் கல்லுப்பை பதனம் பண்ண
வாகுடனே போகும்வகை வண்மைபாரீர்,
நண்பாக மூன்றையும்தான் முடிப்பதற்கு
நலமான மும்மூர்த்தி சொரூபந்தானே.
(6207)

காடி முடிக்க விபரம்

தானான பழச்சாறு என்றமார்க்கம்
தண்மையுடன் முடிப்பதற்குப் பருவம்சொல்வேன்.
கோனான குருவைஎன்ற நெல்தானப்பா
கொற்றவனே அவிக்காமல் தான்எடுத்து,
பானான அரிசியது படிதான் நான்கு
பாலகனே தான்அளந்து வரிசைபாரீர்,
மானான புதுப்பாண்டம் தன்னில்தானும்
மார்க்கமுடன் தான்சமைக்கும் வகைதான்கேளே
(6208)

வகையான அரிசியது பொங்கியேதான்
வண்மையுடன் தான்இறக்கி ஆரப்போடு.
தொகையுடனே மருபாண்டந் தன்னிலிட்டு
தோறாமல் ஜலமதுவுஞ் சோடசந்தான்,
முகையுடனே பாணியென்ற தண்ணீர்தன்னை
முகியாமல் தான்காய்ச்சி இறக்கிக்கொண்டு,
பகையான வாசியென்ற சாதந்தன்னில்
பக்குவமாய் நிலம்விட்டு மூடக்கேளே. (6209)

மூடவே ரவிஎன்ற வெய்யில்தன்னில்
முனையான காடியென்ற பாண்டம்தன்னை,
நீடியே நாள்தோறும் அருணன்முன்னில்
நிலையான பாண்டமதை வெயிலில்வைத்து.
சாடியென்ற பாண்டமதில் ஜலமுந்தானும்
தாக்கான ரவியினிலே கண்டுமட்டும்,
கூடியதோர் ஜலமதனைக் காய்ச்சிமைந்தா
கொற்றவனே குறைவுக்கு விட்டிடாயே. (6210)

விட்டிடவே நாள்தோறுங் குறைவுமட்டும்
வீரான காடியென்ற பாண்டந்தன்னில்,
கொட்டளவு வெந்நீரை ஆறவைத்து
குறையாமல் நாள்தோறும் இப்படியேவாரு,
சட்டமுடன் பாண்டமதை ஆறுதிங்கள்
சாங்கமுடன் தினந்தோறும் ரவியில்வைத்து,
திட்டமுடன் ராக்காலம் பனியில்வைக்க
தீர்க்கமுடன் செய்குவதும் பாகமாமே. (6211)

பாகமாம் காடிஎன்ற பாண்டந்தன்னை
பரிதிமுன்னே தினந்தோறும் வைக்கும்போது,
நாகமது சீரியதோர் விஷத்தைப்போல
நாதாந்தக் காடிக்கி காரம் ஏறி,
வேகமுள்ள சரக்குக்கு காலனாச்சு
வேகாத சரக்கெல்லாம் வெந்துநீறும்.
யூகமுடன் காலாங்கிப் பாதம்போற்றி
உத்தமனே காடியது வழிசொன்னேனே.
(6212)

சொன்னதொரு காடிதன்னை ஆறுதிங்கள்
துப்புரவாய் ரவிதனிலே வைக்கும்போது,
நன்னயமாய் நாதாக்கள் செய்பாகந்தான்
நலமான பழச்சாறு என்னலாச்சு,
வின்னமது நேராது முப்புமார்க்கம்
விள்ளார்கள் சித்துமுனி ரிஷிகள்தேவர்,
பன்னவே சாத்திரத்தில் சூட்சமுப்பு
பாடவில்லை சித்தர்களும் பாடார்தானே.
(6213)

தானான ஆதிஎன்ற முப்புதன்னை
தண்மையுள்ள பதினெண்பேர் சித்துதாமும்
மானான சாஸ்திரத்தில் சூட்சமாக
மார்க்கமுடன் முடிக்கும்வகை சொல்லார் தாமும்,
கோனான குருநூலாம் சப்தகாண்டம்
கூறினேன் போகர் ஏழாயிரத்தில்
பானான சூட்சமென்ற முப்புதன்னை
பாருலகில் மாண்பருக்குப் பாடினேனே.
(6214)

பாடினேன் காடியென்ற பழச்சார்சொன்னேன்
பான்மையுள்ள நாதாக்கள் மறைத்துவிட்டார்
நீடியதோர் சிவமுப்பு இந்தமுப்பு
நீடாழி உலகமெலாம் இதிலடக்கம்
கூடியதோர் கருவிகர ணாதியந்தம்
குருவான ஜெயநீர்கள் இதில்அடக்கம்
ஆடியதோர் சரக்கு அறுபத்துநான்கும்
அப்பனே சிவமுப்பால் மடிவுகாணே.
(6215)

மடியவே சரக்கு அறுபத்துநான்கும்
மார்க்கமுடன் கைபாகஞ் செய்பாகந்தான்
முடியுமே கைபாகம் தவறிட்டாலும்
முனையான வயித்தியத்துக் காதியாகும்
அடியான காயகற்பம் இதுவேயாகும்
அப்பனே காடியென்ற பழச்சார்தானும்
நெடியான காரமது ஏற்றுதற்கு
நேர்மையுடன் கைபாகஞ் சொல்லக்கேளே. (6216)

காடி திராவகம்

சொல்லவே காடியென்ற மார்க்கந்தன்னை
தோறாமல் திராவகமாய் முடிப்பதற்கு
வெல்லவே வாலைஎன்ற சக்ரவாலை
வேகமுடன் தீநீராய் வாங்குதற்கு
புல்லவே காடிஎன்ற மண்பாண்டத்தில்
புகழான வாலையதை மேற்பொதிந்து
சில்லுடனே சீலையது வலுவாய்ச்செய்து
தீர்க்கமுடன் வாலுகையாம் அடுப்பில்ஏற்றே. (6217)

ஏற்றவே தீபதூபந்தான் கொடுத்து
எழிலான வாலைஎன்ற பாண்டத்திற்கு
நாற்றிசையுங் குழல்அமைத்து சீசாவைத்து
நலமுடனே திராவகத்தை இறக்கிக்கொண்டு
மேற்புறமாம் ஜலமதனைத் தள்ளிநீக்கி
மேன்மையுடன் மறுபடியும் ஜலத்தைவாறு
ஆற்கமுடன் மறுபடியுங் குழலமைத்து
அப்பனே திராவகத்தை வாங்கிடாயே. (6218)

வாங்கியே திராவகத்தை பதனம்பண்ணு
வளமான காடியென்ற பழச்சார்தன்னை
தூங்கியே திரியாதேஅருண் மைந்தாகேள்
துப்புரவாய் குருமுடிக்குந் திராவகந்தான்
ஏங்கியே திராவகத்தை முடியாமல்தான்
எழிலான வையகத்து மாண்பரெல்லாம்
சாங்கமுடன் சாத்திரத்தை உணராமல்தான்
சட்டமுடன் பலதுறையாய்ப் போனார்தாமே.
(6219)

தாமான வழலையது எடுக்கும்பூமி
    தாக்கான நெடுங்காசி தன்னில் அப்பா,
பூமான்கள் சொல்வதற்கு வளப்பஞ் சொல்வேன்
    புகழான திண்டிக்கல் பீம்பாறையாகும்
நாமேதான் சொன்னபடி திருப்புவனமாகும்
    நலமான ஆவடியார் கோயில்தானும்
வேமேதான் விலாடபுரம் தன்னில் தானும்
    மிக்கான வயநாடு பூமியாச்சே.

(6220)

ஆச்சப்பா தென்காசி பதியில்தானும்
    அப்பனே கன்னியா குமரியாகும்
நீச்சான வளையலென்ற குப்பிதன்னை
    நேர்மையுடன் தான்முடிக்கும் காளாஸ்திரிதானும்
மூச்சுடனே நெடுந்தூரம் சென்றாலப்பா
    முனையான பாளமென்ற கோயம்புத்தூர்
வீச்சுடைய பூமியது பள்ளநாடு
    வீரான கள்ளழகர் நாடுதாமே.

(6221)

நாடான நர்மதா தேசமப்பா
    நலமான சித்தூராஞ் சிங்கிநாடு
பாடாண்மை கொண்டதொரு சீனதேசம்
    பாங்கான முப்பூவுக் கிடமேயாகும்
கோடான கோடிமனு மாண்பர்க்கெல்லாம்
    கொற்றவர்க்கு இன்னாடே வஞ்சிநாடு
தாடாண்மை கொண்டதொரு தேசமப்பா
    தாரணியில் பூவிழலை எடுக்கும் நாடே.

(6222)

எடுப்பதற்கு இந்நாடு சிந்துதேசம்
    எழிலான தேசமெல்லாம் பின்னாடாகும்
கொடுப்பதற்கு சிவயோகி மாண்பருக்கு
    கோடான கோடிமுறை இதிலொப்பாகும்
தடுப்பதற்கு இப்பூமி விட்டாலப்பா
    தாக்கான பூமிவளம் தமக்குமில்லை
உடுக்கையென்ற பிரமக்கல் தானுமப்பா
    உத்தமனே எடுக்கும்வகை செப்பினேனே.

(6223)

செப்பினேன் வழலையது எடுப்பதற்கும்
செயலான காடியது முடிப்பதற்கும்
ஒப்பான முப்பூவின் மார்க்கந்தனை
ஒழுங்குடனே முடிப்பதற்கும் வழிதான்சொன்னேன்
தப்பிதங்கள் இல்லாமல் குருமுடித்தால்
தண்மையுள்ள முப்பூவும் முடியும்பாரே.
(6224)

பூநீறுகாய்ச்சல்

பாரேதான் பூநீறு சுத்திசெய்து
பாகமுடன் எடுப்பதற்கு வகையைக்கேளு
நேரேதான் பூநீறு படிதானப்பா
நிலையான முன்சொன்ன காடிதானும்
சீரேதான் பூநீரில் விட்டுமைந்தா
சிறப்புடனே கலக்கியதைத் தெளிவு இறுத்து
கூரேதான் ரவிதனிலே காயவைத்து
கொப்பெனவே உப்பதனை எடுத்திடாயே.
(6225)

எடுத்துமே இப்படியே பத்துமுறைகலக்கி
எளிதான ரவிதனிலே காயவைத்து
தொடுத்ததொரு உப்பதனைப் பதனம்பண்ணு
தோறாமல் பத்துமுறை செய்தஉப்பை
கெடுத்திடா வண்ணமது பீங்கான்தன்னில்
கவனமுடன் பதனமாய்ச் செய்துகொண்டு
நடுத்தெருவாங் கருமியென்ற மாண்பருக்கு
நவிலாதே நவின்றிட்டால் சாபமாமே (6226)

பிரம்மக்கல்சுண்ணம்

சாபமாம் இன்னமொரு மார்க்கங்கேளு
தப்பாது காலாங்கி வாக்குதானும்
பாபமது நேராது புண்யவானே
பாருலகில் சித்துமுனி சொல்லார்தாமும்
கோபமது கொண்டல்லோ முனிவர்தாமும்
கூறாரே சிவமுப்பு சூட்சந்தன்னை
தாபமுடன் மனோன்மணியாள் கடாட்சத்தாலே
சாங்கமுடன் அடியேனும் நவின்றிட்டேனே. (6227)

இட்டதொரு பிரம்மக்கல் தனையெடுத்து
ஏழிலான கருப்பதனை நீக்கிமைந்தா
தொட்டளவு குருசொன்ன வாக்குபோலே
துறைமுகமுங் கண்டறிந்து பளிங்குக்கல்லாய்
சட்டமுடன் கல்லதனை இடித்து மைந்தா
சாங்கமுடன் பச்சையென்ற பூநீர்தன்னை
திட்டமுடன் கல்லுக்கு ரெண்டேயாகும்
தீரமுடன் தான்கலந்து பாண்டம்வையே. (6228)

பாண்டமது தனிலமைத்துப் பாகங்கேளீர்
பாங்காக முன்னுரைத்த காடிநீரை
வேண்டியே பூநீறுக் கரைதானப்பா
விருப்பமுடன் பாண்டமதில் இட்டுமைந்தா
தூண்டியதோர் கருமானம் இரண்டும்வேக
துப்புரவாய்க் காடியென்ற நீரினாலே
மாண்டிடவே தானெரிப்பாய்க் காடிநீர்தான்
மார்க்கமுடன் சுண்டமட்டும் எரித்திடாயே. (6229)

எரித்துமே பச்சையென்ற காடிநீரால்
ஏற்றமுடன் தான் அலம்பி ரவியில்போடு
மரித்துமே பிரமமென்ற கல்தானப்பா
மகத்தான எண்ணையது கக்கிப்போச்சு
குறித்தபொருள் பிரமமென்ற சுண்ணக்கல்தான்
கூரான தேகமதில் அதிகங்கொண்டு
தெரித்துமே பொடிப்பொடியாம் தகடுபோலாம்
தெளிவான சுன்னத்துக் கிடந்தானாச்சே. (6230)

ஆச்சென்று விடுகாதே இன்னம்கேளு
அப்பனே காலாங்கி சொன்னநீதி
காச்சலென்ற சுன்னமதைத் தானெடுத்து
கருவான கல்வமதில் இட்டுமைந்தா
மாச்சலென்ற சிற்றண்டம் கருதானப்பா
மகத்தான பிரமக்கல் சுன்னந்தன்னை
வீச்சுடனே தான் அரைப்பாய் மடியுமட்டும்
வீரான சுன்னமதைப் பில்லைசெய்யே. (6231)

செய்யவே சிறுபில்லை காசதாக
செம்மலுடன் ரவியுலர்த்தி சொல்வேன்பாரீர்
துய்யதொரு பில்லைமுகம் தான்உலர்த்து
துப்புரவாய் மூசையிட்டு சீலைசெய்து
வையகத்தே தானிருக்கும் கருமமான
வளமான பாகமதை அறியாமல்தான்
கைபாகந் தவறாமல் மைந்தாநீயும்
கருத்துடனே உலையில்வைத்து ஊதுவாயே. (6232)

ஊதவே சுன்னமது வாதமாகும்
உத்தமனே மூசை தனை உடைத்துப்பாரு
நீதமுடன் ஊதிடவே சுன்னமாகும்
நிலையான சுன்னமது பிரமக்கல்லாம்
தோதமுடன் மூசைதனை உடைத்துப்பாரு
சுந்தரனே சுன்னமது பிரமக்கல்லாம்
சாதமது தான்கொடுக்கும் சுக்காங்கல்லாம்
சட்டமுடன் நாதாக்கள் பெருமைபாரே. (6233)

பாரேதான் சுன்னம்என்ற பிரமக்கல்லை
பாங்குடனே பீங்கானில் பதனம்பண்ணு
நேரேதான் சரக்குக்கு ஏறலாச்சு
நெடிதான பிரமக்கல் என்றசுன்னம்
ஆரோதான் முடிப்பார்கள் அப்பாகேளு
ஆதிஎன்ற சுன்னமதை முடியாரப்பா
சீரேதான் சாத்திகிரத்தின் உளவு ஆராய்ந்து
சிறப்புடனே பார்த்துவைத்த சுண்ணமாமே. (6234)

கல்லுப்பு காய்ச்சும் முறை

சுண்ணமாம் இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
சுந்தரனே ரகுபாலா புண்யவானே
வண்ணமுடன் கல்லுப்பு பெரிதாய்க்கொண்டு
வளமுடனே படியதுவும் தானெடுத்து
திண்ணமுடன் பாண்டமதில் இட்டுமைந்தா
தீர்க்கமுடன் முன்சொன்ன காடிநீரை
நண்ணமுடன் மறுபாண்டம் தன்னிலப்பா
நலமுடனே ஜலமதனை படிதான்வாரே.
(6235)

வார்க்கையிலே முன்சொன்ன காடிநீர்தான்
வளமான பாண்டமதில் இட்டுமைந்தா,
தீர்க்கமுடன் தான்கலக்க தெளிவுஇறுத்து
தீரமுடன் பாண்டமதை அடுப்பில்ஏற்றி
ஏர்க்கவே உப்பதுவும் பூர்க்குமட்டும்
எழிலான உப்பதனை காய்ச்சியல்லோ
சேர்க்கவே மறுபடியும் காடிவிட்டு
சிறப்புடனே கலக்கியதை எடுத்திடாயே (6236)

எடுத்திடவே இப்படியே பத்துமுறைகாச்சு
எழிலான கல்லுப்பும் குருவுப்பாகும்
கெடுத்திடா வண்ணமது பீங்கான்தன்னில்
கிருபையுடன் பதனமது மிகவாய்ச்செய்து
தொடுப்பதற்குமுன்போலே உப்பைநன்றாய்
சுத்தமுடன் சேர்க்கும்வகை விபரங்கேளு
அடுத்துமே முன்சொன்ன கைபாகந்தான்
அப்பனே முறைபாடு கூறுவேனே. (6237)

முப்பென்றதற்கு நாமம்

கூறவே முப்பென்ற மார்க்கந்தன்னை
குவலயத்தில் மாண்பர்களுந் தெளிவதாக
ஆறவே முன்சொன்ன வழலைமார்க்கம்
அப்பனே பலமதுவும் எடுத்துக்கொண்டு
மாறவே பிரமம்என்ற முப்புதன்னை
மார்க்கமுடன் பலமதுவும் எடுத்துக்கொண்டு
தேறவே கல்லுப்பு சுன்னந்தன்னை
தேற்றமுடன் பலமதுவும் ஒன்றாய்க்கூட்டே.
(6238)

கூட்டியே மூன்றையுந் தான்ஒன்றாய்க்கூட்டி
குறிப்புடனே வீரமுடன் புழுகுதானும்
தேட்டமுடன் வார்கனது ரண்டேயாகும்
தெளிவுடனே முன்சொன்ன காடிதன்னில்
வாட்டமுடன் தான் அரைப்பாய் நாலுசாமம்
வளமான பில்லையது லகுவாய்ச்செய்து
நீட்டமுடன் ரவிதனிலே காயவைத்து
நிஷ்களங்க மானதொரு அகலில்வையே. (6239)

அகலான பாண்டமது தன்னில்வைத்து
அப்பனே சீலையது வலுவாய்ச்செய்து
பகலான ரவிதனிலே காயப்போடு
பாங்குடனே காய்ந்தபின்பு செப்பக்கேளு
நிகலவே கோழியென்ற புடந்தான்போடு
நிஷ்களங்க மாகவல்லோ நீறிப்போகும்
புகலவே பற்பமதைப் பதனம்பண்ணு
புகழான மனோன்மணிக்கு பூசைசெய்யே.
(6240)

பூசையா மனோன்மணியாள் ஆறாதாரம்
பொங்கமுடன் தான்செய்து எடுத்துமைந்தா
ஆசையது கொள்ளாமல் அருண்மைந்தாகேள்
அப்பனே சீசாவில் பதனம்பண்ணு
காசுபணம் தேடுதற்கு உரிமைகேளு
கனமான பாஷாணம் பலந்தான்ஒன்று
மாசுபடா முப்பூவும் பலந்தான்காலாய்
மார்க்கமுடன் கல்வமதில் போட்டிடாயே.
(6241)

போட்டவுடன் சரக்கதுவும் ஒன்றாய்க்கூட்டி
பொங்கமுடன் முன்உரைத்த காடிநீரால்
வாட்டமுடன் தான்அரைப்பாய் சாமமப்பா
வளமான பில்லையது லகுவாய்ச்செய்து
நீட்டமுடன் ரவிதனிலே காய்ந்தபின்பு
நீதியுடன் முன்சொன்ன மார்க்கம்போலே
தேட்டமுடன் புடமதுவும் கோழிபார்
தெளிவுடனே போடுவதும் முறைதான்கேளே.
(6242)

முறையான புடமதுவும் ஆறிப்பின்பு
முனையான பற்பமதை எடுத்துமைந்தா
நிறைபோடு அணுவளவும் குறையுமில்லை
நீட்டமுடன் பற்பமது பாரமெத்த
குறையாது பாஷாணம் என்னசொல்வேன்
குவலயத்தில் சித்துமுனி கூறாவண்ணம்
அறைந்தேனே உலகுபதி மாண்பருக்கு
அப்பனே சிவயோக தலத்தில் நில்லே.
(6243)

நிற்கையிலே மனோன்மணியாள் மனதுஉவந்து
நிஷ்களங்க மாகவல்லோ உனக்குமைந்தா
சொற்பமென்ற வாதமது பலிக்கும்பாரு
சுந்தரனே உன்னைப்போல் சித்துமுண்டோ
அற்பமென்று நினையாதே துய்யபாலா
அருண்மைந்தா முப்பாலே எல்லாஞ்சித்தி
விற்பனர்கள் கொண்டாடும் இந்தவேதை
மேதினியில் சமுசாரிக் கானவாறே

(6244)

வாரான பற்பமது போக்குசொல்வேன்
வளமையுள்ள வெள்ளீயம் தன்னைத்தானும்
கூறான சேரதுதான் ஒன்றேயாகும்
குறிப்புடனே தான்உருக்கி செப்பக்கேளும்
நீரான பாஷாண பற்பம்தன்னை
நீமகனே வராகனிடை காலதாக
சேரோடும் வெள்ளீயம் உருக்கியல்லோ
செம்மலுடன் பற்பமதை தாக்குவாயே.

(6245)

தாக்குவாய் வெள்ளீயம் பற்பத்தாலே
தண்மையுள்ள நீரதுவும் முறிந்துகொள்ளும்
வாக்குடனே காலாங்கி மொழிபொய்யாது
வளமையுடன் போகர் ஏழாயிரந்தான்
நோக்கமுடன் நீர்வடிந்த வெள்ளிதன்னை
நுணுக்கமுடன் வறுமைவருங் காலந்தன்னில்
ஏக்கமது கொள்ளாமல் வெள்ளிதன்னை
எளிதாக சமுசாரி உண்ணலாமே.

(6246)

உண்ணவென்றால் சாபமது யாதுமில்லை
உத்தமனே சரக்குஅறுபத்து நான்கும்
திண்ணமுடன் இம்முறைபோல் செய்வாயப்பா
தீரமுடன் சரக்கு அறுபத்துநான்கும்
வண்ணமுடன் நீற்றுதற்குப் பிசகோயில்லை
வளமான முப்பூவின் சுன்னமப்பா
சுன்னமுடன் முப்பூவின் காரத்தாலே
நலமான சரக்கெல்லாம் நீறிப்போமே.

(6247)

நீறுமே சூதமென்ற சரக்குதானும்
நீதியுடன் பலமதுவும் எடுத்துக்கொண்டு
வீறுடனே முப்பூவை சரியாய்க்கூட்டி
வீரமுடன் முன்சொன்னகாடிதன்னால்
மாறுதலும் தேராமல் பறபந்தன்னை
மார்க்கமுடன் தான்அரைப்பாய் சூதங்கட்டி
நூலுடனே கலசமென்ற பாண்டந்தன்னில்
துப்புரவாய் சில்லிட்டுச் சீலைசெய்யே. (6248)

சீலையது எழுசீலை வலுவாய்ச்செய்து
சிறப்புடனே ரவிதனிலே காயவைத்து
வாலையென்ற யந்திரமாம் புவனைவாலை
வளமான வாலுகையாம் அடுப்புதன்னில்
காலையது ஜாமமது நாலதாக
கருவான சூதமதை எரிப்பாய்நீயும்
மாலையது சூதமதை எடுத்துப்பார்க்க
மகத்தான கடுங்கார சுன்னமாமே. (6249)

அறுபத்துநான்கு சரக்காலும் வேதைமுகம்

சுன்னமென்றால் சுன்னமது என்னசொல்வேன்
சுந்தரனே நாதாக்கள் செய்யும்வித்தை
வின்னமது வாராது இந்தப்போக்கு
விருப்பமுடன் செய்வதற்கு மனதுவந்து
அன்னமெனும் காடியின்தன் பழச்சாரப்பா
ஆகாயசித்துமுனி மறைத்தார்ஆங்கே
சொன்னமது முப்பூவால் கைக்குள்ளாச்சு
சோறாமல் செய்பவர்க்கு சித்தியாமே.
(6250)

சித்தியாம் பஞ்சபூத சரக்கைத்தானும்
சிறப்புடனே தான்எடுத்து செப்பக்கேளீர்
வெத்தியுடன் முப்பூவை சரக்குபதி
வேகமுடன் காடியின்தன் பழச்சாராலே
சுத்தியுடன் தான்அரைத்து பில்லைசெய்து
துப்புரவாய் ரவிதனிலே காயப்போடு
சித்தியுடன் ஓட்டிலிட்டுச் சீலைசெய்து
சாங்கமுடன் புடமதுவும் கோழிதானே. (6251)

தானான கோழியது புடமதாக
தண்மையுடன் ஆறினபின் எடுத்துப்பாரு
கோனான குருசொன்ன வாக்குபோலே
கொற்றவனே பற்பமது தவளம்போலாம்
மானான பற்பமதை எடுத்துமைந்தா
மகத்தான சீசாவில் பதனம்பண்ணு
பானான ரவிமதியில் தாக்கவல்லோ
பான்மையுடன் சொல்லுகிறேன் பண்பாய்த்தானே.
(6252)

பண்பான வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று
பாங்குடனே பற்பமதை ஒன்றுதாக்க
நண்பான மாற்றதுவும் ஏழதாகும்
நலமான புடமதுவுக் கேகாவர்ணம்
திண்பான பட்டசெம்பு ஆறுவெள்ளி
தீர்க்கமுடன் தான்கொடுக்க மாற்றெட்டாகும்
உண்மையுடன் தங்கமது நாலுக்கொன்று
உத்தமனே சேர்க்க நலமாகும்பாரே.
(6253)

பாரேதான் வமதுவும் மொன்பதாகும்
பாங்கான புடத்தங்கம் பிறவித்தங்கம்
சீரேதான் பஞ்சமுகக் கருத்துதானும்
சிறப்புடனே மறைத்துவைத்தார் சித்துதாமும்
நேரேதான் சரக்குஅறுபத்து நான்கும்
நேர்மையுடன் முன்சொன்ன முப்பூவாலே
வீரேதான் சுண்ணமென்ற முப்பூவாலே
விண்ணுலகும் மண்ணுலகுங் காணலாமே.
(6254)

காணலா முப்பூவா லனந்தப் போக்கு
காசினியில் நாதாக்கள் ஆடுங்கூத்து
பூணவே சிவயோகி சித்தருக்கு
புகட்டவில்லை இந்தவழி முப்பூமார்க்கம்,
தோணவே கைமுறையாய் எடுத்துபாகம்
துப்புரவாய் வையகத்து மாண்பருக்கு
வேணதொரு கருவிகர ணாதியந்தம்
விருப்பமுடன் பாடிவைத்தது உண்மைதானே.
(6255)

பாடினேன் முப்பூவின் வழலைமார்க்கம்
பாருலகில் சகலசித்தும் ஆடும்பாரு
நீடியேதோர் முப்பூவைக் குன்றிவீதம்
நீதியுடன் மண்டலந்தான் கொண்டாயானால்
வாடியதோர் திருமேனி சடலம்தானும்
வண்மையுடன் காயாதி கற்பத்தாலே
கூடியதோர் தேகமது சட்டைதள்ளும்
குணமான முப்பூவின் காட்சிகேளே.
))) (6256)

காட்சியாம் முப்பூவைக் கொண்டபேர்க்கு
காசினியில் நரைதிரையும் இல்லையப்பா
மாட்சியுடன் நெடுங்காலம் இருக்கலாகும்
மகத்தான வாசியது மேல்நோக்காது
நீட்சியுடன் பதாம்பயத்தை நண்ணலாகும்
நிஷ்களங்கம் ஆனதொரு சித்தனாவான்
மீட்சிபெற வையகத்தில் மாண்பரெல்லாம்
மேன்மையுடன் என்நாளும் துதிப்பார்பாரே.
(6257)

துதிக்கையிலே சித்துமுனி ரிஷியார்தாமும்
துரைராஜ சிவயோகி இவரேயென்பார்
மதிக்கவே எல்லவர்க்கும் யோகவானாய்
மகத்தான காயாதி கற்பத்தாலே
விதித்ததொரு வயததுவும் மேலதாகி
மேதினியில் வெகுகாலம் இருப்பாயப்பா
ததியான முப்பூவின் கைபாகந்தான்
சாற்றவில்லை வெகுகோடி ரிஷிகள்பாரே.
(6258)

கோடியாங் காலாங்கி கிருபையாலே
கூறினேன் போகர் ஏழாயிரந்தான்
தேடியே பார்த்தாலும் கிட்டாதப்பா
தேசத்தில் விட்டகுறை இருந்தால்கிட்டும்
வாடியே அலையாதே மன்னாகேளு
மகத்தான போகர் ஏழாயிரத்தில்
பாடியதோர் போகர் ஏழாயிரத்தில்
பாங்கான கடைக்காண்டம் முப்பூபாரே.
(6259)

பாரேதான் போகர் ஏழாயிரத்தில்
பட்சமுடன் காண்டமது ஏழுதன்னில்
நேரேதான் கடைக்காண்டம் ஏழிலப்பா
நெடிதான முப்பூவாஞ் சூட்சமப்பா
சீரேதான் வையகத்து மாண்பருக்கு
சிறப்புடனே பாடிவைத்தேன் சூட்சமாக
ஆரேதான் கருவாளி செய்வானப்பா
அப்பனே அண்டபிண்டம் அறிவான்கேளே.
(6262)

போகர் புலிப்பாணிக்கு பூநீறெடுக்க புத்தி கூறல்

கேளேதான் இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
கெடியான புலிப்பாணி மன்னாகேளு
மீளேதான் பூநீறு எடுப்பதற்கு
மீளாமல் வெகுமாண்பர் மாண்டாரப்பா
ஆளேதான் வகையறியா மாண்பரப்பா
அப்பனே சாத்திரங்கள் படித்துக்கெட்டு
தூளேதான் சுடுவாதி மாண்பர்கூடி
துறைமுகத்தைக் காணாமல் கெட்டார் தாமே.
(6261)

கெட்டதோர் மாண்பர்களின் சாத்திரவண்ணம்
கேடறியார் பாடறியார் அயனும்காணார்
நட்டதொரு பயிரதனை களைகள்போக்க
நாதாந்த சித்துமுனி சொல்லைப்போல
விட்டகுறை இருந்ததொரு மாண்பர்போல
வீணாக ஆசைகொண்டு மதியும்கெட்டு
தொட்டலைந்து பூநீராய் எடுக்காமல்தான்
சேர்ந்துருண்டு வெகுபேர்கள் மடிந்தார்தானே. (6262)

மடிந்தாரே வையகத்து மாண்பர்எல்லாம்
மகதேவர் கடவுளது ஏமவித்தை
கடிந்ததொரு பொருள் அறிய மாட்டாமல்தான்
காசினியில் வெகுமாண்பர் மாண்டாரப்பா
முடிந்ததொரு சிவானந்தப் பொருளைக்காண
மூதுலகில் யாராலும் கிட்டுமோசொல்
படிந்த பொருள்முப்பூவின் நிதானமார்க்கம்
பாருலகில் விதியாளி அறிவான்பாரே. (6263)

விதியான விதியிருந்தால் அதற்குக்கிட்டும்
வீணாக கருமிகட்கு கிட்டுமோசொல்
துதியான பராபரமான வஸ்துதன்னை
துறைமுறையாய்க் கண்டறிந்தோன் காண்பான்பாரு
மதியான மூடனுக்கு வாய்க்குமோசொல்
மகத்தான ஏமவித்தை பிரம்மவித்தை
கதிகாண எண்ணமது கொண்டபோர்க்கு
கைவசமாம் ஏமவித்தை கிட்டும்பாரே.
(6264)

கிட்டுதற்கு பூவழலைஎடுக்கவல்லான்
கீர்த்தியுடன் நடராஜன் அருளே வேண்டும்
தொட்டகுறி போவதுபோல் காண்பதற்கு
துரைராஜர் குருமுறைகள் வேண்டுமப்பா
பட்டமரம்போல் துளுக்கும் வழலைகாண
பராபரியாள் கிருபையது வேண்டுமப்பா
விட்டகுறை இருந்தாலே லபிக்கும்பாரு
விருதாவாய் மாண்டவர் கோடியாமே.
(6265)

கோடியாமனு கோடிராஜ மன்னர்
குவலயத்தில் வழலையுட மார்க்கம் தன்னால்
நாடியேவழலையது பூர்க்குங்காலம்
நலமுடனே கண்டறிய மாளாமல்தன்
ஓடியே இருமாப்பு வனப்புவாய்ந்து
ஓகோகோ மாண்பரெல்லாம் மடிந்தாரப்பா
நீடியதோர் பொருளதுவும் விஷகாலந்தான்
நிகட்சியுடன் எடுப்பதற்கு இல்லைதானே.
(6266)

இல்லையே வெகுபேர்கள் மாண்பரப்பா
எழிலான சாத்திரத்தைப் பாராமல்தான்
அல்லல்படும் துயரமது வறுமையாலே
அன்புடனே பூநீரை யெடுப்பதற்கு
தொல்லை எனும்சாத்திரத்தை முன்பின்னாக
சேராமல் பாடிவைத்தார் சித்தர்யாவும்
கல்லுதெய்வம் பேசுமென்று கையெடுத்து
காசினியில் கதையுரைத்த காட்சியாமே.
(6267)

காட்சியாம் கனகமென்ற பொருளையப்பா
காசினியில் வெகுபேர்கள் காண்பதற்கு
தாட்சியில்லா சாத்திரங்கள் கண்டுஆராய்ந்து
தடுமாறி தலைமாறிக் கலையும்மாறி
மாட்சியுடன் கோர்வையென்ற சாத்திரத்தை
மார்க்கமுடன் காணாமல் மயங்கினார்கள்
ஆட்சிபந்தம் வெகுநூல்கள் சொன்னாருண்டு
அப்பனே குருநூல்தான் பாரார்தானே. (6268)

பாராமல் மாண்பரெல்லாம் பதியுங்கெட்டு
பாங்கான சாத்திரத்தின் முறையுங்கெட்டு
நேரேதான் சாத்திரத்தை விட்டகற்றி
நேர்மையுடன் மதிஊன்றிப் பாராமல்தான்
பூராயமானதொரு ரிஷிகள் நூலில்
புகன்றிட்ட மர்மமதை அறியாமல்தான்
சாராய மானதொரு வஸ்துதன்னை
சாங்கமுடன் கற்பமென்று கொண்டிட்டாரே (6269)

கொண்டாரே லாகிரிகள் அருந்தியல்லோ
கோடானகோடி நூல்கள் மறைத்திட்டார்கள்
விண்டதொரு சாத்திரத்தை வினயங்கொண்டு
வீண்காலம் போக்கியல்லோ மடிந்திட்டார்கள்
தண்டனையாம் சாபமது உள்ளுமாகி
தாரணியில் வெகுபேர்கள் சமைந்திட்டார்கள்
சண்டமாருதம் போலே சத்தகாண்டம்
சாற்றினேன் போகர் ஏழாயிர மும்காணே
(6270)

புலிப்பாணிக்கு போகர் மறுபடியும் புத்திகூறல்

காணவே இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
கருவான புலிப்பாணி மைந்தாகேளு
தோணவே பூநீரை எடுக்கும்போது
சுந்தரனே உந்தனுக்கு பயமுண்டாகும்
வேணதொரு சித்துமுனி ரிஷிகள்தாமும்
வேதாந்தத் தாயினது கடாட்சத்தாலே
பூணவே வேஷமது மாறாமல்கொண்டு
புகழாக முன்னிற்பார் பிரம்மைபாரே. (6271)

பாரேதான் வேஷமது பூண்டுகொண்டு
பாங்கான கபாலமது ஏந்திக்கொண்டு
நேரேதான் முன்னாக வந்துநின்று
நேர்மையுடன் ஆங்கார கெர்ச்சிப்போடும்
ஆரோதான் பூநீரை எடுக்கவல்லான்
ஆண்பிள்ளை நீதானா என்றுகூறி
தேரோடும் சத்தமான கிரிச்சிபோலும்
தேற்றமுடன் சத்தமது கேட்கும்பாரே. (6272)

கேட்டுமேசித்து முனிஅசரீர் வாக்கு
கெவனமுடன் கேட்டதுவும் உந்தமக்கு
ஆட்களில்லா வனந்தனிலே இந்தஓசை
அப்பனே அதிசயங்கள் காணுதென்று
நீட்கமுடன் தலைஎடுத்துப் பார்க்குபோது
நிலையான கறுப்பண்ணா சாமிபோலே
வீட்கமுடன் முன்னிற்கக் கண்டபோது
வித்தகனே பயந்தொடுங்கிச் சாவார்தானே. (6273)

சாவாரே இன்னமொரு மார்க்கம் சொல்வேன்
சட்டமுடன் ஓம்என்ற கோஷத்தோடும்
ஆவதுபோல் மகமேரு தன்னைப்போலே
அப்பனே சடலமது கொண்டுமல்லோ
ஏவலுடன் சவுக்கார அழலையாலே
வேதாந்தத் தாயினது அருளினாலே
மேவலுடன் நடுக்கமது பலமுண்டாய்
மேதினியில் வெகுமாண்பர் மடிந்தார்தானே. (6274)

வையகத்து மாண்பர்
பூநீரெடுக்கும்போதுகருஞ்சாரையின் அபாயத்தை
போகர் புலிப்பாணிக்கு உபதேசித்தல்

தானான இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
தண்மையுள்ள புலிப்பாணி மைந்தாகேளு
கோனான எனதையர் காலாங்கிநாதர்
கொற்றவனார் எந்தனுக்குச் சொன்னநீதி
பானான வையகத்து மாண்பர்எல்லாம்
பாராமல் பூநீரின் அபாயம்தன்னை
மோனான மௌனமென்ற மதியீனத்தால்
மூதுலகில் சாபத்தால் மடிந்தார்தாமே. (6275)

மடிந்தாரே அன்போடும் கூடியல்லோ
மகத்தான மேன்மக்கள் இருவர்கூடி
துடிந்ததொரு பூநீரை எடுப்பதற்கு
துப்புரவாய் மனதுவந்து மாண்பர்தாமும்
விடிந்ததொரு நாழிகையில் ஜாமந்தன்னில்
விடுபட்டு வனாந்திரத்தில் இருவர்தாமும்
முடிந்ததொரு முப்பூவைக் காண்பதற்கு
முயற்சியுடன் பூமிவலம் சென்றிட்டாரே.
(6276)

சென்றாரே வனந்தனிலே இருவர்தாமும்
சிறப்புடனே பூநீரை எடுக்கும்போது
அன்றறிந்த கருஞ்சாரை சர்ப்பந்தானும்
அப்பனே பூநீற்றை எடுக்கவந்த
நின்றிருந்த சிவயோகி மாண்பர்தம்மை
நெடுந்தூரந்தான் துரத்தி வருகும்போது
குன்றான மலைபோல விருட்சமப்பா
கூறான விருட்சமதில் ஏறிட்டாரே.
(6277)

ஏறினதோர் மாண்பர்தம்மை கண்டபோது
எழிலான சர்ப்பமது விருட்சந்தன்னில்
சீறியேதான் கண்டுசினந்து மேதான்
தீர்க்கமுடன் சிவயோகி இருவர்தம்மை
மீறியே தீண்டுதற்கு விடமும்கொண்டு
மிக்கான மானிடரைக் காணும்போது
தூறியே சிவயோகி இருவர்தாமும்
துப்புரவாய் அம்பதனால் எய்திட்டாரே.
(6278)

எய்யவே சர்ப்பமதின் சிரசில்பட்டு
எழிலான சர்ப்பமது மடிந்துதாங்கே
பையவே சிவயோகி மாண்பர்தாமும்
பார்த்துமே சர்ப்பமது மடிந்ததென்று
துய்யநல்ல விருட்சமதை விட்டு இறங்கி
தூயதான வடிமட்டும் வருகும்போது
வெய்யதொரு அதிசயங்கள் என்ன சொல்வேன்
வேதாந்தத் தாயினுட மகிமைகேளே.
(6279)

இறந்துபோன கருஞ்சாரையை மற்றொரு கருஞ்சாரை மூலிகையாலெழுப்புதல்

கேளப்பா புலிப்பாணி மகனேமைந்தா
கீர்த்தியுள்ள மகிமையதும் என்னசொல்வேன்
ஆளப்பா சிவயோகி இருவர்தாமும்
அப்பனே பூவெடுத்த வண்மைதன்னை
மாளப்பா பூவெடுத்த காலந்தன்னில்
மகத்தான கருஞ்சாரைக் கண்டுமல்லோ
மீளப்பா போகாமல் இருப்பதற்கு
மீட்சியுடன் தந்திரங்கள் செய்யலாச்சே. (6280)

தந்திரமா மூலியுட மகிமைதன்னை
சதகோடி சூரியரும் கண்டதில்லை
விந்தையுள்ள சித்தரது திருக்கூத்தப்பா
விண்ணுலகும் மண்ணுலகுங் கண்கொள்ளாது
சிந்தையுடன் இருமனதும் ஒன்றதாகி
சிறப்புடனே பூவழலை எடுக்கும்போது
வந்துதல்லோ கருஞ்சாரை காலந்தானும்
வளமையுள்ள மகிமையது புதுமைதானே. (6281)

புதுமையாம் சர்ப்பமது என்னசொல்வேன்
புகழாக மூலிதனை மனதுஉவந்து
கதுமையுடன் கானகத்தில் சென்றுமல்லோ
கடிதான மலைக்குகைகள் தான்கடந்து
மெதுவான சஞ்சீவி மூலிதானும்
மேன்மையுடன் வாய்தனிலே கௌவிக்கொண்டு
பதுமமென்ற சர்ப்பமது இருக்கும்ஸ்தானம்
பான்மையுடன் வந்தல்லோ நிற்கலாச்சே. (6282)

நிற்கின்ற மறுசர்ப்பந் தன்னைக்கண்டு
நீதியுடன் சிவமாண்பர் இருவர்தாமும்
அற்பமென்று நினையாமல் ஆலோசித்து
அறிவுள்ள சர்ப்பமதை கண்ணில்கண்டு
துப்புரவாய் எய்ததொரு சர்ப்பந்தன்னை
துணிவுகொண்டு மூலிதனை மணங்கள்வீச
சொற்பெரிய சர்ப்பமது உயிருண்டாக்கி
சோறாமல் எழுந்திருக்கக் கண்டிட்டாரே (6283)

கண்டாரே சர்ப்பமது மூலிதன்னால்
கைலாசஞ் சென்றதொரு சர்ப்பந்தன்னை
பண்டுளவ மாலையணி கிருஷ்ணன்கொண்ட
பாங்கான மூலியது விஷமூலிதானும்
கொண்டல்லோ தான்கொடுத்து உயிர்உண்டாக்கி
கூட்டுறவாய் அழைத்துக்கொண்டு சென்றநேர்மை
சண்டமா ருதம்போலே இருவர்மாண்பர்
சட்டமுடன் பிரமித்துத் திகைத்திட்டாரே. (6284)

திகைத்துமே சிவமாண்பர் இருவர்தாமும்
தீர்க்கமுடன் மனஞ்சோர்ந்து நிற்கும் போது
புகைஅடர்ந்த வனந்தனிலே சர்ப்பந்தானும்
புகழ்சியுடன் முன் இறந்த சர்ப்பங்கூட்டி
பகைபோன்ற சிவமாண்பர் இருவர்காண
பாங்குடனே கானகத்தில் சென்றவண்ணம்
தகமையுடன் சர்ப்பமது கொண்டுசெல்ல
தாட்சியுடன் சிவமாண்பர் பார்த்திட்டாரே. (6285)

பார்த்துமே சர்ப்பமது சென்றதென்று
பாங்குடனே சிவமாண்பர் இருவர்தாமும்
நேர்த்தியுள்ள மூலிகைதான் என்றறிந்து
நேர்மையுடன் சிவமாண்பர் மனதில் எண்ணி
பூர்த்தியுடன் இருக்கப் பயந்தான்உண்டோ
புகழான அடிவார மரத்தில் தானும்
கார்த்திருந்து மூலிதனைக் கையில்தானும்
கவனமுடன் எடுத்துவர நண்ணினாரே. (6286)

சிவமாண்பரிருவரும் சர்ப்பத்தின் மூலியெடுத்து துன்பப்படுதல்

நண்ணியே சர்ப்பமது சென்றபின்பு
நாதாந்தத் தாயாரை மனதில் எண்ணி
குண்ணியே மனதுஉவந்து முகம்வாடி
கூரான மூலிதனை எடுக்கவல்லோ
வண்ணமுடன் சிவமாண்பர் இருவருந்தான்
வளமையுடன் உறவுகொண்டாடிக் கூடி
திண்மையுடன் மூலிதனை ஒரு தோழன்தான்
துப்புரவாய்த் தான்எடுக்கக் கண்டிட்டேனே. (6287)

கண்டேனே சிவமாண்பர் மூலிதன்னை
கரந்தனிலே மூலிதனைத் தொட்டபோது
அண்டர்பிரான் மகிமையது என்னசொல்வேன்
ஆகாகா வையகத்தில் யார்தான்கண்டார்
சண்டமாருதம் போலே சர்ப்பந்தானும்
சட்டமுடன் மூலிதனை வைத்த நேர்மை
தண்டகம்போல் அடியேனுங் கண்டுஏங்கி
சட்டமுடன் மகிமைதனைப் பார்த்திட்டேனே.
(6288)

பார்த்தேனே சிவமாண்பர் ஒருவன்தானும்
பண்பான மூலிதனைக் கரத்தில்தானும்
நேர்த்தியுள்ள மூலிதனை என்றுநம்பி
நேர்மையுடன் கரந்தனிலே எடுக்கும்போது
பூர்த்தியுள்ள மூலியது என்னசொல்வேன்
புகழான அஞ்சனமாம் மூலிதானும்
ஆர்த்தியுடன் சிவமாண்பர் தோழன்தன்னை
அப்பனே இழுக்கஅது பார்த்திட்டேனே.
(6289)

பார்த்தேனே மூலியது மகிமைதன்னை
பான்மையுடன் பிரம்மித்து ஏங்கும்போது
தீர்த்தமுடன் மூலியது வளத்தில்தானும்
தீர்க்கமுடன் சிவமாண்பர் கரத்தைப்பற்றி
நேர்த்தியுடன் மூலியது தன்னைத்தானும்
நேரான வனந்தனிலே இழுக்கும்நேர்மை
பூர்த்தியுடன் யான்கண்டு திடுக்கிட்டு ஏங்கிப்
புகழாகக் குளிகைகொண்டு வந்திட்டேனே.
(6290)

வந்தேனே கல்லாலின் மரத்தின்பேரில்
வளமையுடன் குளிகைகொண்டு நிற்கும்போது
அந்தமுள்ள சிவமாண்பர் தன்னைத்தானும்
அதிதமதாய்ச் சிறப்புடனே தான்இழுக்கும்
தந்திரமாம் மூலியது வண்மைமார்க்கம்
தண்மையுடன் மகிமையது கூறுவேனே.
(6291)

கூறுவேன் புலிப்பாணி புனிதவானே
குவலயத்தில் சித்துமுனி யாரேனும்தான்
சீறுகின்ற சர்ப்பத்தின் கற்பமூலி
சீருலகில் கண்டவர்கள் எவர்தான்உண்டு
தேறுபுகழ் பதினெண்பேர் நவகோடிதாமும்
தேசமதில் வெகுமகிமை பூண்டாரல்லோ
மாறுடைய கறுஞ்சாரை சர்ப்பமூலி
மாநிலத்தில் கண்டவர்கள் இல்லைதாமே.
(6292)

இல்லையே சித்தர்களும் வணக்கம்கூறார்
எழிலான சாத்திரத்தைத் தானும்காணார்
தொல்லையெனும் வனமூலி விஷத்தைக்காணார்
தொட்டதொரு கிட்டிருந்த மூலிகண்டார்
அல்லல்வினை தான்அறுக்கும் வசியமூலி
அவனிதனில் வெகுசித்தர் கண்டார்உண்டு
கொல்லிமலை திரிந்தாலும் இந்தமூலி
குவலயத்தில் கிட்டாது கிட்டாதன்றே.
(6293)

கிட்டாது என்றதொரு மூலிதானும்
கீர்த்தியுள்ள சிவமாண்பர் தன்னையல்லோ
எட்டாத பொருள்தேடிப் போனதாலே
எழிலான சிவமாண்பர் தானுமங்கே
சட்டமுடன் பனியைநம்பி உழுதவர்போல்
சாங்கமுடன் மூலியது வினயமாச்சு
விட்டகுறை இருந்ததனால் வாய்க்கும்பாரு
விண்ணாடர் மண்ணாடர் காணார்தாமே.
(6294)

தானான பதாம்புயத்தைக் கண்டாலல்லோ
தாக்கான வசியமூலி வாய்க்கும்பாரு
மானான சிவமாண்பர் மூலிகொண்டு
மகத்தான கானகத்தே செல்லும்போது
பானான பாம்பதுதான் சென்றபாதை
பாங்கான படும்பாதை என்றேஎண்ணி
கோனான குருதனையே மனதில்உன்னி
கொற்றவனார் மோசமென்று நினைத்திட்டாரே.
(6295)

மோசமது வந்ததென்று மனதில்எண்ணி
முனையான சிவமாண்பர் ஏதுசெய்தார்
பாசமுடன் கைதனிலே இருந்தமூலி
பட்சமுடன் பூமிதனில் உதறிட்டாரே
நாகமது கொண்டதொரு மூலிதானும்
நற்கமல கரந்தனிலே வீழாமல்தானும்
வீசலுடன் மூலியது கரத்தைப்பற்றி
விருப்பமுடன் கானகத்தில் இழுக்கலாச்சே. (6296)

ஆச்சப்பா மூலியது இழுக்கும்போது
அப்பனே கூடிருந்த தோழன்தானும்
மூச்சுடனே அவர்கரத்தை இவருங்கூடி
முனையாகத் தான்இழுக்கப் பார்த்தேன்யானும்
கூச்சலுடன் இருவருமே குய்யோ என்று
கூர்மையுடன் மனதுவந்து எண்ணங்கொண்டு
பாச்சலுடன் கரமிருந்த வாளால்தாமும்
பான்மையுடன் கரமதனை துணித்தார்பாரே. (6297)

பாரேதான் கரமதுவுந் துணிந்தபோது
பாங்குடனே மூலியுடன் கானகத்தில்
நேரேதான் கரந்தனையே மூலிதானும்
நேர்மையுடன் தானிழுத்துப் போகக் கடண்டேன்
சீரான சிவமாண்பர் இருவர்தாமும்
சிறப்புடனே மறுபடியும் பதிதிரும்பி
கூரான பூவழலை காய்க்குமார்க்கம்
குறிப்புடனே வந்துமல்லோ அமர்ந்திட்டோரே.(6298)

கருஞ்சாரை மூலியால் முப்பூ எடுக்கப்போன சிவமாண்பர் கரமிழந்து மறுபடியும் குரு அருளால் வழலைஎடுத்தல்

அமர்ந்தாரே சிவமாண்பர் இருவர்தாமும்
அப்பனே புலிப்பாணி மைந்தாகேளு
சுமந்ததொரு விருட்சமதில் இன்னும்மாண்பர்
சுந்தரனே மறுபடியும் ஏங்கிவந்து
சமர்த்துடனே பூவழலை எடுப்பதற்கு
சட்டமுடன் குருசொன்ன நீதிபோல
தமர்ந்திடா வண்ணமுடன் புனிதவான்கள்
சட்டமுடன் தான்எடுத்தார் புண்யராமே. (6299)

மூலியாலிழந்த கரத்தை சர்ப்பம் தன் ஆசீர்மத்திலிருக்கும் குருவாகிய சித்துவுக்குக் காண்பித்தல்

புண்ணியராம் புலிப்பாணி மைந்தாகேளு
புகழான சிவமாண்பர் கரத்தையல்லோ
வண்ணமுடன் சர்ப்பமது மனதுவந்து
வளமையுடன் தன்தேவன் குருநாதர்க்கு
திண்ணமுடன் கரந்தனையே காட்டஎன்று
தீர்க்கமுடன் வாய்தனிலே கௌவியல்லோ
எண்ணறிய நற்பொருளே எந்தன்நாதா
எழிலான கானகத்தின் வளமைகேளே. (6300)

சர்ப்பம் குருவுக்கு கரம் வந்த விசேடமுறைத்தல்

கேட்கவென்றால் அடியேனும் கானகத்தில்
கீர்த்தியுடன் ஆண்பெண்ணாய்த் தான் இருந்தோம்
மீட்கமுடன் இரைதேடிப் போகும்போது
மிக்கான கானகத்தில் யாம்திரிந்தோம்
சூட்சமுடன் பாலைஎன்ற வனத்தில்நாங்கள்
சுந்தரமே சித்தொளிவே போகும்போது
ஆட்கள் விட்டுஒருவரையும் பிரிந்துமல்லோ
ஐயனே கல்லாலமரம் கண்டோமே. (6301)
கண்டோமே சிவசித்து மாண்பர்தம்மை
கைலாச நாதரைப்போல் வேஷம்கொண்டு
உண்டான பொருள்தேடி கற்பம்உண்ண
உத்தமரே இருவர்தம்மைக் கண்டேன்யானும்
விண்டதொரு வழலைஎன்ற முப்பூதன்னை
விருப்பமுடன் எடுக்கவந்த மாண்பர்தம்மை
சண்டமாருதம் போலே துரத்தியானும்
சாங்கமுடன் சீறலது சீறினேனே. (6302)
சீறியே ஓடுகையில் மாண்பர்தாமும்
சிறப்பான கல்லாலன் மரத்தின்பேரில்
மீறியே எனைக்கண்டு பயந்தொடுங்கி
மீளாத மரத்தின்மேல் ஏறிநின்றார்
வீரியமாய் அம்பாலே எந்தனைத்தான்
விட்டல்லோ கொண்டுமே சிதைத்துப்போட்டார்
கீரியென்னும் விஷமூலி தன்னைத்தானும்
கிருபையுடன் எந்தனுக்குக் கொடுக்கலாச்சே.(6303)

கொடுக்கவே என்சேனை பிணையில்ஒன்று
கொப்பெனவே நான்இறந்த பாவனத்தை
அடுத்துமே கண்டல்லோ ஆலோசித்து
ஐயனே குருமூலி தேடிவந்து
படுத்திருந்த எந்தன்முன் வந்துநின்று
பாங்கான மூலிதனை முகத்தில்வைக்க
கடுத்தலையில் வில்லறுந்த நாணிபோலே
நாதனே உயிர்கொண்டு வந்திட்டேனே.
(6304)

வந்தேனே என்பிணையுங் கூடியல்லோ
வளமான மரம்விட்டு வந்தபோது
சிந்தனையாய் மூலிதனை விட்டகற்றி
சீறியே நாமிருவர் வந்தபின்பு
பந்தமுள்ள சிவமாண்பர் இருவர் தாமும்
பட்சமுடன் கல்லாலின் மரத்தைவிட்டு
சந்தோஷ மாகியல்லோ இறங்கிமாண்பர்
சட்டமுடன் மூலிதனைத் தொட்டிட்டாரே.
(6305)

தொட்டிட்ட மூலியது எந்தன்நாதா
துடர்ந்துமே கைதனையே பற்றியல்லோ
விட்டுவிடாது அவர் கரத்தைப் பிடித்துமல்லோ
வீறான நாமிருக்குங் கானகத்தில்
சட்டமுடன் கரந்தனையே பற்றியல்லோ
சாங்கமுடன் தான்இழுக்குங் காலந்தன்னில்
விட்டகுறை இருந்ததொரு புண்ணியத்தால்
வீரமுடன் விரல்தனைத் துண்டித்தாரே.
(6306)

துண்டிடவே கரமதுவும் எந்தன்பக்கம்
துப்புரவாய் விஷமூலி வேகத்தாலே
கண்டிதமாய் அவர்செய்த பாவத்தாலே
கர்த்தாவே கரமதுவும் வந்ததுஎன்று
திண்திரைசூழ் வையகத்தில் சமாதிபூண்ட
திரளான எந்தன்குரு தீர்க்கநாதா
கொண்டுவந்தேன் உந்தமக்கு சாட்சியாக
கொற்றவனே கதியென்ன என்னலாச்சே.
(6307)

வனத்து ரிஷியார் பாம்புக்கு இதவுகூறல்

ஆச்சென்று சொல்லுகையில் ரிஷியார்தாமும்
அங்ஙனமே சர்ப்பமதுக் கோதுவார்பார்
மூச்சடங்கி இருந்ததொரு சர்ப்பந்தன்னை
முசியாமல்உயிர் மூலிதான் கொடுத்து
பாச்சலுடன் கானகத்தில் பின்னுமல்லோ
பட்சமுடன் இருபேரும் வந்திட்டார்கள்
ஆச்சரியமானதொரு விஷமூலி தன்னால்
அப்பனே பிழைத்ததுவும் அருமைதானே. (6308)

தானான சற்குருவின் கடாட்சத்தாலும்
தாக்கான மனோன்மணியாள் கிருபையாலும்
கோனான மகதேவர் கிருபையாலும்
கூர்மையுடன் பிழைத்ததுவும் புண்ணியந்தான்
தேனான சிவமாண்பன் கரம்அரிந்து
தீர்க்கமுடன் வந்ததுவும் பாவமாச்சே
மானான பாவத்துக்கு இடங்கொடாமல்
மகத்தான சாபமதை நீக்குவீரே. (6309)

நீக்கினால் வெகுகோடி புண்ணியந்தான்
நிட்களங்க மானதொரு மாண்பருக்கு
ஆக்கமுடன் கரந்தனையே ஒட்டிக்கொள்ள
அப்பனே மூலியது கொண்டுவந்து
நோக்கமுடன் தான்கொடுத்து அனுப்பினாக்கால்
நொடிதான விரலதுவும் விருட்சந்தன்னில்
பாக்களவு பிறந்ததொரு கதையைப்போலே
பாங்கான விரலதுவும் ஒட்டும்பாரே. (6310)

ஒட்டுமே பின்னும்அந்த மாண்பர்தாமும்
ஓகோகோ வழலைதனைத் தான்எடுக்க
கிட்டியே மறுபடியும் வருவார் அங்கே
கீழான விரலதுவும் அவரைக்கண்டு
எட்டியேதான் துரத்திக் கையில்ஒட்டி
எழிலான வங்கமது பங்கம்நீக்கி
சுட்டியே சிவமாண்பர் தானுமப்பா
சொஸ்தமுடன் கரங்கொண்டு வாழ்குவாரே.
(6311)

வாழ்ந்தாலே தந்தமக்கு மோட்சமுண்டு
வளமான கீர்த்தியது அதிகமுண்டு
ஆழ்ந்ததொரு வார்த்தைக்குக் குறைவில்லாமல்
அங்ஙனவே மூலியது ஆராய்ந்தல்லோ
தாழ்ந்துமே குருபாதம் வாக்குத்தப்பி
தான்நடந்தாய் குருவுக்குப் பாவம்என்று
சூழ்ந்துமே குருஉரைத்த வாக்குபோலே
சூட்சமுடன் செய்யவல்லோ எண்ணலாச்சே. (6312)

தாம்பிர கற்பம் சிவலிங்கமானது

எண்ணவே இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
எளிதான புலிப்பாணி மகனேபாரு
வண்ணமுடன் காலாங்கி கிருபையாலே
வளமையுடன் லோகபதி எல்லாம்காண
திண்ணமுடன் குளிகையது பூண்டுகொண்டு
தீர்க்கமுடன் சீனபதி சென்றேன்யானும்
அண்ணிலெனும் பதாம்புயத்தை யானுங்கண்டு
அப்பனே காலாங்கி வரப்பெற்றேனே. (6313)

பெற்றதொரு வரத்தினால் அனேகம்பெற்று
பேரான பேரின்ப வீடறிந்து
கற்றதொரு சிவயோகி தவக்கியானி
கைலாச சட்டமுனி நாதர்கூட்டம்
சுற்றுமுள்ள திருமூல வார்க்கத்தோரும்
சுந்தரா னந்தரொடு ரோமர்தானும்
மற்றுமுள்ள சித்தாதி சித்தரெல்லாம்
மகிழ்ச்சியுடன் மலைதனிலே பார்த்திட்டேனே.
(6314)

பார்த்தேனே அவரவர்கள் செய்தநூலை
பாங்கான சமாதிமுகம் நின்றுகொண்டு
நேர்த்தியுள்ள பெருநூலுாங் கிரந்தங்கோடி
நெடிதான விரிநூலும் சுருக்கங்கோடி
பூர்த்தியுடன் அவரவர்க்கு இதவுகூறிப்
புகழான சாத்திரத்தைக் கையில்பற்றி
தீர்த்தமுடன் சிவலிங்கப் பதியில்சென்று
சிற்பரனே நூல்களை'யான் பூசித்தேனே. (6315)

பூசித்தேனே அதிதமென்ற நூல்கள்தம்மை
புகழான சீனபதி மாண்பருக்கு
வாசித்தேன் சந்தேகந் தெளிவுநீங்கி
வாகுடனே கருவிகர ணாதியந்தம்
நேசித்தேன் சீனபதிப் பெண்களைத்தான்
நெடிதான சாத்திரத்தின் மார்க்கங்கண்டு
ஆசித்தேன் நெடுங்காலம் அங்கிருந்தேன்
அப்பனே குளிகைகொண்டு பறந்திட்டேனே. (6316)

போகர் புவனகிரியில் உச்சிலிங்கத்தேளென்னும் சிறகுடைய செந்தேளைக் கண்டது

பறந்தேனே குளிகையது பூண்டுகொண்டு
பாங்கான இமயகிரி மேற்கே அப்பா
சிறந்ததொரு புவனம்என்ற கிரியில்யானும்
சிற்பரனே குளிகைவிட்டு இறங்கியேதான்
நிறைந்ததொரு குகைதனிலே சென்றேன்யானும்
நெடிதான தேவரிஷி கோடாகோடி
குறைந்ததொரு கணக்கதுவும் லக்கோயில்லை
கோடானகோடி சித்துமுனி கண்டேனே. (6317)

கண்டதொரு சித்துமுனி ரிஷியார்தாமும்
கைலாச புவனகிரி தன்னில்தானும்
அண்டமுடி போகாமல் யாகம்செய்து
அப்பனே தான்இருக்கும் காலம்தன்னில்
துண்டறிக மானதொரு கானகத்தில்
தாட்டீகம் உள்ளதொரு செந்தேளிஅப்பா
சண்டமாருதம் போலே இறக்கைகொண்டு
சட்டமுடன் இறங்கிநிற்கப் பார்த்திட்டேனே. (6318)

பார்த்தேனே புவனகிரி சிகரந்தன்னில்
பாங்கான செந்தேளின் கொடூரந்தன்னை
தீர்த்தமுடன் சிகரம்விட்டு மேலேநோக்கி
திகழான கொடிமுனையைப் பற்றிநின்று
வேர்த்துடலம் விஷமதுவந் தலைகொண்டேறி
மிக்கான சிகரமென்ற செம்புதன்னை
ஆர்த்துமே தானோக்கிக் கொட்டும்போது
அழகான செம்பதுவும் உருகிப் போச்சே. (6319)

உருகியே செம்பதுவும் மலைஓரத்தில்
உத்தமனே பாய்ந்துமல்லோ லிங்கமாச்சு
மெருகான லிங்கமது செம்புமாகி
மேன்மையுள்ள சமாதியென்ற பீடமாச்சு
திருவான பீடமது சித்தர்கண்டு
தீரமுடன் சிவலிங்கம் என்றுசொல்லி
பருவமது அமாவாசை காலந்தன்னில்
பட்சமுடன் குருபூசை செய்வார்தானே
(6320)

[illegible] பூசையது செய்யும்போது
தாக்கான சிவலிங்கம் தன்னில்நின்று,
தேனான ஜலமதுவும் முத்துபோலே
தேற்றமுடன் சிவலிங்கம் தன்னில்பொங்கி
கோனான வி"மதுவும் பொங்கியல்லோ
கொப்பெனவே ஜலமது வாய்சுத்திநிற்கும்
பானான நிலமதனை யெடுத்துசித்தர்
பாங்குடனே சீசாவில் அடைப்பார்பாரே.
(6321)

பாரேதான் ஜலமதனை எடுத்துமல்லோ
பாங்கான செம்பதனை உருக்கிக்கொண்டு
நேரேதான் ஆயிரமாம் களஞ்சிதானும்
நேர்மையுடன் தான்உருகுங் காலந்தன்னில்
சேரேதான் இருக்குமுகம் தன்னிலப்பா
சேர்வைகண்டு விஷநீரைத் தாக்குவார்பார்
கூரேதான் ஆயிரத்துக்கு ஓர்களஞ்சு
கொடுத்துமிக உருக்கியல்லோ எடுப்பார்காணே.
(6322)

காணவே ஆயிரத்து எட்டுமாற்று
கனமான தேவேந்திரன் தங்கமாச்சு
பூணவே தங்கமது பிறவித்தங்கம்
புகழான சித்துமுனி வழங்கும் தங்கம்
வேணவே பூசைக்கு உதவும்தங்கம்
வேறுபடாத் தங்கமது சுயம்புத்தங்கம்
நீணவே கைலாச நாதர்தாமும்
நீதியுடன் வீற்றிருக்கும் பீடந்தானே. (6323)

பீடமாம் ஆயிரங்கண் இந்திரர்க்கு
பேரான ஆசனத்தின் தங்கமாகும்
கூடகோ புரம்தனக்கு சிகரத்தங்கம்
குவலயத்தில் மாண்பர்களும் காணாத்தங்கம்
மாடமாளிகை நெருங்கும் மன்னர்தாமும்
மார்க்கமுடன் ஆதீனத் தங்கமாகும்
தேடறிய நாதாக்கள் ரிஷிகள்தேவர்
தேற்றமுடன் கண்டதொரு தங்கமாமே (6324)

தங்கமா புவனகிரி தன்னில்நின்று
தாக்கான விஷமீறி வந்ததங்கம்
லிங்கமாம் சமாதிஎன்ற பீடந்தன்னில்
நிட்களங்க மாகிவந்த தங்கமாச்சு
புங்கசித்தி எட்டுடனே பிறந்ததங்கம்
புகழான நாதாக்கள் வசிக்குந்தங்கம்
பங்கமிலாத் தங்கமது பாரில்மாண்பர்
பார்க்காத பிறவியென்ற தங்கமாச்சே. (6325)

பாஷாண கற்பம்

ஆச்சப்பா இன்னமொரு மார்க்கம் சொல்வேன்
அப்பனே புலிப்பாணி சுகுணமாரா
பாச்சலென்ற பாஷாண கற்பம்சொல்வேன்
பாருலகில் நாதாக்கள் சொன்னதில்லை
நீச்சுடைய சர்ப்பமது தான்பிடித்து
நீமகனே பாஷாணங் களஞ்சிரெண்டு
மூச்சுடனே சர்ப்பமது தான்இருக்க
முனியான பாஷாணந் தன்னைவாங்கே. (6326)

வாங்கியே அரவத்தின் வாயில்தன்னில்
வளமான பாஷாணங் களஞ்சிதன்னை
தூக்கியே திரியாமல் மைந்தாபாரு
துப்புரவாய் வாயில்வைத்து தைத்துப்போடு
ஏங்கியே போகாமல் பாண்டம்தன்னில்
எழிலாகத் தான் அடைத்து வாரமிட்டு
ஓங்கியே போகாமல் மேலும்மூடி
உத்தமனே பதனமது நாள்தானெட்டே. (6327)

எட்டான நாள் அதுவும் சென்றபின்பு
எளிதான பாண்டமதை திறந்துமைந்தா
கட்டான அரவத்தின் வாயைத்தானும்
கடுகெனவேதான் அவிழ்த்துப் பார்க்கும்போது
திட்டமுடன் அரவமது சீவன்செத்து
தீர்க்கமுடன் உயிரதுவும் சற்றேநிற்கும்
சட்டமுடன் பாஷாணந் தனைஎடுத்து
சாங்கமுடன் பாம்புக்குப் பாலைவாரே.

(6328)

வார்க்கையிலே அரவமது உயிருண்டாகி
வளமான அரவமது வனமேசெல்லும்
பார்க்கையிலே பாஷாணம் விஷந்தான்ஏறி
பாங்கான காயகற்பம் ஆச்சுதப்பா
தீர்க்கமுடன் பாஷாணந் தனைஎடுத்து
தினையளவு ஆகவல்லோ மண்டலந்தான்
ஏற்கையிலே மண்டலமும் மூன்றுகொண்டால்
எழிலான காயமது இறுகும்பாரே.

(6329)

இறுகுமே பாஷாண கற்பத்தாலே
எழிலான கற்பமது கொண்டபேர்க்கு
குறுகியே தேகமது வயிரம்போலாம்
குவலயத்தில் சித்துமுனி தம்மைப்போலே
அறுவதுவும் மிகவாகி புத்தியுண்டாய்
அவனியிலே நீயுமொரு சித்தனாவாய்
நறிவலென்ற திரைநரையும் அற்றுப்போகும்
நாதாந்த சித்தொளிவு நிதியுமாச்சே.

(6330)

சித்தான சித்துமுனி ரிஷிகள்எல்லாம்
தேசமதில் பலபலவாய் நூல்கள்கூறி
முத்தான பாஷாண கற்பஞ்சொல்ல
மூதுலகில் மறைத்துவைத்தார் சித்தர்எல்லாம்
சத்தசாகரம் கடந்து குளிகைபூண்டு
சாயுச்சிய பதவிதனைக் காணஎன்று
புத்தியுடன் காலாங்கி தாள்பணிந்து
புகழான கற்பமதைக் கூறிட்டேனே.

(6331)

கூறினேன் கற்பமதைக் கொண்டபேர்க்கு
குவலயத்தில் நெடுங்காலம் இருக்கலாகும்
மாறிட்ட மேனியது தங்கம்போலாம்
மகத்தான வாசியது மேல்நோக்காது
நீறிட்ட மேனியது தவளம்போலாம்
நிட்களங்க வாசியதுமே லோடாது
வீறிட்டு வார்த்தையது மொழிசொன்னாலும்
வீணாகி தேகமது குண்ணாதன்றே. (6332)

ஆமைகற்பம்

அன்றான புலிப்பாணி மைந்தா கேளு
அப்பனே சொல்லுகிறேன் உந்தனுக்கு
குன்றான மலையேறி குகைகடந்து
கூறான சுவர்ணகிரி பதி அமர்ந்து
வென்றிடவே குளிகையது பூண்டுகொண்டு
வீறான சிகரம்என்ற பதியைக்கண்டேன்
தென்திசையில் தட்சணாமூர்த்தி நாயன்
தோற்றமுடன் கண்டதொரு கூர்மந்தானே. (6333)

திரேதாயுகப்பிரளயத்தில் தட்சணாமூர்த்தி நாயன்மைந்தனை விழுங்கிய
கூர்மத்தை சுவர்ணகிரியில் போகர்கண்டது

தானான கூர்மமது தன்னைக்கண்டேன்
தாக்கான திரேதாயின் யுகத்திலப்பா
மானான பிரளயங்கள் வந்தபோது
மகத்தான கூர்மமது மலையில்சென்று
தேனான மனோன்மணி யாள்இருக்கும்பீடம்
தெரிசனமே செய்வதற்கு மனதில்உன்னி
பானான பார்லோகப் பிரளயத்தில்
பட்சமுடன் கூர்மமது வந்ததாச்சே. (6334)

வந்ததொரு கூர்மமதைக் கண்டேன்யானும்
வளம்பெரிய சுவர்ணகிரி மலையிலப்பா
அந்தமுடன் மலையைவிட்டுக் கீழிறங்கி
அப்பனே சுனையருகே சென்றேன்யானும்
சிந்தனையாய் மனதுஉவந்து படிஇறங்கி
சிற்பரனைத் தெரிசிக்க தியானம்கொண்டு
சந்தோஷ மாகியல்லோ சுனைஓரத்தில்
சட்டமுடன் இறங்கையிலே கண்டிட்டேனே. (6335)

சுனையில் கூர்மம் போகரைக் கண்டது

கண்டவுடன் கூர்மமது எனைப்பணிந்து
கைலாச நாதர்என்று தாள்பணிந்து
தெண்டமுடன் பதாம்புயத்தைப் பணிந்துபோற்றி
தெளிவாகச் சுனைஏறி மேலேநின்று
அண்டர்பிரான் எந்தனையும் காணவந்த
அன்பான போகரிஷி நாதாகேளும்
துண்டரிக மாகவல்லோ தட்சணாயன்
துப்புரவாய் சாபமது தந்திட்டாரே. (6336)

தந்ததொரு சாபத்தால் திரேதாயுகத்தில்
சட்டமுடன் பிரளயத்தில் வந்தேன்இங்கே,
அந்தமுடன் நெடுங்காலம் சுனையில்யானும்
அன்புடனே வாசமது செய்திருந்தேன்
சிந்ததொரு சுவர்ணகிரி சுனையில்தானும்
சிறப்பான சித்துமுனி வந்ததில்லை
விந்தையுடன் எந்தனுக்கு சாபந்தீர்க்க
விட்டகுறை இருந்ததனால் வந்தீர்பாரே. (6337)

பாரேதான் காலாங்கி நாதபாதா
பட்சமுடன் எந்தன்மேல் கிருபைவைத்து
சீரேதான் சாபமதை நிவர்த்திசெய்து
தீர்க்கமுடன் எந்தனையும் மீட்பீரானால்
நேரேதான் உந்தமக்குக் காயகற்பம்
நெடுங்காலம் தான்இருக்க யான்கொடுப்பேன்
கூரேதான் வார்த்தையது மொழியுங்கூறி
குறிப்புடனே வரலாறு கூறலாச்சே. (6338)

போகர் சாபம் நிவர்த்தி செய்தது

கூறவே கூர்மமது சொல்லும்போது
கொற்றவனே சாபமது நிவர்த்திசெய்தேன்
மீறவே கூர்மமதை சாபம் நீக்கி
மிக்கான கற்பமதைக் கேட்கும்போது
மாறவே எந்தனுக்குத் தெரியஓதி
மகத்தான கற்பமதைக் கேட்கும்போது
நாறலுடன் கூர்மமது வயிற்றிருக்கும்
நலமான குளிகைதனைத் தருகலாச்சே. (6339)

தருகவே வயிற்றிலுள்ள காயகற்பம்
தண்மையுடன் மனதுஉவந்து அடியேன்தானும்
பெருகவே யான்வாங்கி மண்டலந்தான்
பேரான குளிகைதனில் குன்றிஉண்ண
மெருகலுடன் தேகமது இறுகியல்லோ
மேதினியில் நெடுங்காலம் இருப்பதற்கு
பெருகவே காயாதி கற்பங்கொண்டு
பேரான உலகுதனில் வசித்திட்டேனே. (6340)

வசித்ததொரு குளிகையினால் எந்தனுக்கு
வாகான மகிமைகளும் அனேகம்உண்டு
பசியதுவும் இல்லையப்பா பண்புள்ளோனே
பாலகனே சித்தர்களுக்கு கிடைக்குமோசொல்
நிசிதமுள்ள காயாதி கற்பந்தன்னை
நிகழ்ச்சியுடன் முன்இருந்த நாதர்தாமும்
உசிதமுடன் கண்டவரும் யாருமில்லை
உத்தமனே நாதாக்கள் சொல்லார்பாரே. (6341)

கலைமான் கற்பம்

சொல்லாரே இன்னுமொரு மார்க்கம்சொல்வேன்
சுவர்ணம்என்ற மலையிலப்பா மேற்பாகத்தில்
வெல்லவே குளிகைகொண்டு அடியேன்தானும்
வேதாந்தத் தாயினது கடாட்சத்தாலே
புல்லவே வனந்தனிலே கலைமான் தன்னை
புகழ்ச்சியுடன் அடியேனும் கண்டபோது
நல்லதொரு கலைமானும் என்னைக்கண்டு
நலமுடனே ஓடிவந்து பணியலாச்சே. (6342)

பணிந்துமே எந்தனிட பாதம்போற்றி
பட்சமுடன் எந்தனையும் வினவிக்கேட்க
துணிந்துமே காலாங்கிநாதர் பாதம்
துப்புரவாய் மனதுவந்து அடியேன்தானும்
அணிகடவுள் பதாம்புயத்தின் சீடன்என்றேன்
ஆத்தாளின் கடைபாத தூசியென்றேன்
மணிபோன்ற வார்த்தையது கூறும்போது
மகத்தான என்குருவே என்னலாச்சே. (6343)

என்னவே காலாங்கி நாதசீடா
எழிலாக எந்தனுக்கு வந்தசாபம்
பன்னவே பஜண்டமகாரிஷியார் தாமும்
பாங்கான கானகத்தில் யாகம்செய்ய
துன்னவே அடியனால் வந்துநேர்மை
துப்புரவாய் யாதென்று வினவிக் கேட்பீர்
முன்னமே பெரியோர்கள் செய்தயாகம்
மூதுலகில் அடியேனும் அறியேன்தானே.
(6344)

தானான புஜண்டமகாரிஷியார் தாமும்
தன்மையுடன் தவஞ்செய்யும் காலந்தன்னில்
கோனான உமதையர் காலாங்கிநாதர்
கொற்றவனார் தாம்உரைத்த நீதிபோலே
தேனான மனோன்மணியாள் கிருபையாலும்
தேற்றமுடன் சாபமதை நீக்கஎண்ணி
பானானகுரு பரனார்ரிடியா சீர்மம்
பாங்குடனே யான்வணங்கி நின்றிட்டேனே.
(6345)

நின்றேனே புஜண்டமகா ரிடியார்பக்கல்
நிஷ்களங்கம் ஆனதொரு சமாதிதன்னை
சென்றேனே நெடுங்காலம் நானிருந்தேன்
தேஜொளியின் கிருபையது வண்மையாலே
வென்றதொரு யான்செய்த பாவந்தன்னை
வேட்கையுடன்அணி தவராவண்ணம் யானும்
குன்றுடனே மலைதேடி சமாதிபக்கல்
கொற்றவனே சாபமதால் சென்றிட்டேனே.
(6346)

இட்டதொரு சாபமதை நீக்கியல்லோ
எழிலாக எந்தனுக்குக் காட்சிதந்து
சட்டமுடன் ஞானோபதேசங் கொண்டு
சாயுச்சிய பதவிதனைக் காணஎன்று
திட்டமுடன் மனோலயத் தாய்அருளுந்தந்து
தீர்க்கமுடன் ஆசீர்மஞ் சாபநீக்கி
விட்டகுறை இருந்ததொரு நேர்மையாலே
விந்திக்கப் போகஎன்னவருள் கொள்வீரே.
(6347)

கொள்ளவென்று கலைமானும் கூறும்போது
கொப்பெனவே காலாங்கி கடாட்சத்தாலே
தெள்ளமிர்தமான பராபரியின் பாதம்
தேற்றமுடன் அடியேனும் முடிவணங்கி
எள்ளளவுந் தீங்குமிக நேராமல்தான்
எழிலான மனோன்மணியைப் போற்றிசெய்து
உள்ளபடி கலைமானைப் பாதுகாக்க
உவமையுடன் என்மனதில் எண்ணினேனே.

(6348)

எண்ணியே கலைமானின் சாபந்தீர்த்தேன்
எழிலான காயாதி தான்கொடுக்க
உண்ணவே நெடுங்காலம் நானிருந்தேன்
உத்தமனே சித்துமுனி ரிடியார் கூட்டம்
வண்ணமுடன் கலைமானின் கற்பந்தன்னை
வாகுபெற உண்டவர்கள் யாருமில்லை
கண்ணபிரான் கொண்டதொரு கற்பந்தானும்
கலைமானின் கற்பத்துக்கு ஈடாகாதே.

(6349)

ஈடான கற்பமதை உண்டேன்யானும்
எழிலான வையகத்து மாண்பரெல்லாம்
தேடாமல் கற்பமதை உண்டேன்என்று
தேசமதில் சந்நியாசி வேஷம்கொண்டு
கோடான கோடிபொருள் சம்பாதிக்க
கூறினார் கற்பமது கொண்டேன்என்று
தாடாண்மை கொண்டதொரு பொய்ஞ்ஞானிக்கு
தாரணியில் தனங்கொடுத்து கெட்டார்பாரே.

(6350)

பாரேதான் கற்பமதைக் கொண்டபோது
பாங்குடனே சீனபதி சென்றேன்யானும்
நேரேதான் குளிகையது பூண்டுகொண்டு
நெடிதான கடலோரம் சென்றுயானும்
சீரேதான் சுவர்ணகிரி இடபாகத்தில்
சிறப்புடனே மலை ஏறி சென்றேன்யானும்
ஆரோதான் கண்டவர்கள் யாருமில்லை
அப்பனே சுவர்ணகிரி கண்டிட்டேனே.

(6351)

கேசரி கற்பம்

கண்டேனே இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
கருவான புலிப்பாணி மைந்தாகேளு
சண்ட மாருதம்போல குளிகைகொண்டு
சாங்கமுடன் சுவர்ணகிரி இடபாகத்தில்
தண்டகா ரணியமதில் அடியேன்தானும்
சாங்கமுடன் சமாதிமுகம்தன்னில் நின்றேன்
அண்டர் பிரான்அருளினது கடாட்சத்தாலே
அப்பனே கடலோரம் அமர்ந்தேன்தானே. (6352)

தானான வையகத்து மகிமைஎல்லாம்
தாக்கான சுவர்ணகிரி கடலோரத்தில்
மானான மருத்துவங்கள் அதிகம்என்று
மார்க்கமுடன் சுந்தரா னந்தரேசர்
தேனான சாத்திரங்கள் பாடியல்லோ
தேற்றமுடன் குகைதனிலே வைத்தாரப்பா
கோனானஎன் குருவாம் காலாங்கிநாதர்
கொற்றவனார் எந்தனுக்குக் கூறினாரே. (6353)

கூறியதோர் நூலதுவும் பொய்யாதுஎன்று
கொற்றவனே சமாதிஎன்ற பீடம்நின்று
மீறியே அஷ்டாங்க யோகம்சென்று
மிக்கான தவநிலையில் நிற்கும்போது
நீறுடைய சுந்தரா நந்தரேசர்
நிஷ்களங்க சொரூபமென்ற சுடரேகொண்டு
மாறுடைய சித்தனைப்போல் வேஷங்கொண்டு
மார்க்கமுடன் தரிசனங்கள் தந்திட்டாரே. (6354)

தந்தாரே எந்தனுக்குத் தரிசனங்கள்
தாக்கான எந்தனையும் யாரென்றேதான்
சிந்தனையாய் மனதுஉவந்து கேட்கயானும்
சிறப்புடைய காலாங்கி சீடன்என்றேன்
அந்தமுடன் சீனபதி விட்டுயானும்
வையகனே குளிகையது பூண்டுகொண்டு
விந்தைகளை அறியவென்று இடபாகத்தில்
விருப்பமுடன் யான்பணிந்து துதித்திட்டேனே.
(6355)

சுந்தரானந்தர் கேசரிமார்க்கக் குளிகையது போகருக்கு கொடுத்தது

துதிக்கையிலே சுந்தரா னந்தரேசர்
துப்புரவாய் எந்தனுக்குத் துகள்அகற்றி
மதிப்புடனே எந்தனையு மனதுஉவந்து
மார்க்கமுடன் கண்டதொரு வினயத்தாலும்
விதிப்புடைய விட்டகுறை இருந்ததாலும்
விருப்பமுடன் உந்தமக்கு உபதேசங்கள்
கதிபெறவே ஞானோபதேசம் செய்து
கருவான கேசரியும் தருவேன்பாரே. (6356)

பாரேதான் புலிப்பாணி மைந்தாகேளு
பாங்குடனே சுந்தரா னந்தரேசர்
சேரேதான் எந்தனுக்குக் குளிகைதந்து
தேற்றமுடன் உலகுபதி மகிமைஎல்லாம்
நேரேதான் சதாகாலஞ் சீடனாக
நேர்மையுடன் என்மீதில் மனதுஉவந்து
கூரேதான் கேசரியின் மார்க்கந்தன்னை
குறிப்புடனே எந்தனுக்குக் கூறினாரே. (6357)

போகர் புலிப்பாணிக்கு சன்மார்க்க விதிகூறல்

கூறவே புலிப்பாணி மைந்தாகேளு
குவலயத்தில் எந்தனுக்கு சீஷமார்க்கம்
தேறவே கண்டல்லோ ஆராய்ந்தேதான்
தேற்றமுடன் இருப்பதற்கு முறையும் சொல்வேன்
மாறவே தொண்டுசெய்யும் சீடனுக்கு
மகத்தான சன்மார்க்கம் ஏதுஎன்றக்கால்
ஆறவே விசுவாசம் அருளும்வேண்டும்
அப்பனே அறிவுஜெபம் வேண்டும்பாரே. (6358)

வேண்டுமே ஆசையுடன் இன்பம்வேண்டும்
விருப்பமுடன் தவமுடனே பொறுமைவேண்டும்
தாண்டவம்போல் குருமொழியின் வணக்கம்வேண்டும்
தாரணியில் சீவகாருண்ணியம் வேண்டும்
ஆண்டகையின் பதாம்புயத்தை நண்ணல்வேண்டும்
அப்பனே இறக்கமுடன் ஈகைவேண்டும்
தூண்டியதோர் கருமானம் இன்னஞ்சொல்வேன்
துப்புரவாய்த் துகள்அகற்றி இருக்கநன்றே. (6359)

நன்றாக இறவாமல் முயற்சிதேடல்
நலமான கற்புடமை நண்ணல்வேண்டும்
குன்றான கொடிதொரு பாவம்நீக்கி
குவலயத்தில் இருப்பவனே சன்மார்க்கன்தான்
தென்திசை யில்அகத்தியர்க்கு நேர்மையாக
தேற்றமுடன் உபதேசம் செய்யவல்லோன்
நன்றிபுரி வேணாடு வாழுமாண்பர்
நலமான சித்துமுனிக்கு உவமையாச்சே.
(6360)

ஆச்சப்பா பொய்சூது கபடுதந்திரம்
அப்பனே நிந்தையுடன் நிலைமைமாறல்
பேச்சுடனே மெய்தவறல் பொறாமைகூறல்
பேரான பேரின்ப நிலைமறத்தல்
மூச்சடங்கி மெய்போலே யாகம்செய்தல்
முனையான நற்குருவை தூஷணித்தல்
ஆச்சரியம் ஆனதுஒரு களவு மார்க்கம்
அப்பனே நீக்குவதும் உண்மைபாரே.
(6361)

உண்மையாம் முன்புநயம் புரணிகூறல்
உத்தமரை உதாசினங்கள் மிகவும்பேசல்
நன்மையாம் பெரியோரைப்ப கடிகூறல்
நலமுடனே பரிசுத்தன் போலேகூறல்
கண்மையாம் மென்மேலும் போர்விளைத்தல்
கருவான போருக்கு முயன்றுநிற்கல்
தண்மையாம் சித்துமுனி நூல்கள்எல்லாம்
தான்அறிந்த பித்தனைப்போல் பிதற்றுவானே.
(6362)

பித்தன்என்றால் சொல்லுகிறேன் இன்னம்கேளு
பிணிதீர்க்கும் பண்டிதன்போல் பெயர்வகுத்து
சுத்தமுடன் காவிகஷாயம் பூண்டு
சுந்தரனே உபதேசங் கூறவல்லோன்
சத்திநெறி தவறாத தருமவான்போல்
தாரணியிலே வேடமது பூண்டுகொண்டு
புத்தியுடன் கோபமதை அற்றவன்போல்
புலம்பியே திரிவானே கழுதைமாண்பே.
(6363)

மாண்பான வையகத்தில் அனேகர் அப்பா
மார்க்கமுடன் பலபலவாய் வேஷங்கொண்டு
ஆண்பிள்ளை போலாக வீரங்கொண்டு
அதட்டியே வார்த்தையது மிகவும்கூறி
காண்பவர்கள் எல்லவர்க்குங் கருத்துளான்போல்
கைதனிலே ருத்திராட்ச மாலைபூண்டு
வீண்பிள்ளை யாகவல்லோ திரிந்துகொண்டு
விருதான வேஷமது கொள்வார்தானே. (6364)

தானான புலிப்பாணி யின்னங்கேளு
தண்மையுள்ள பூபாலா சொல்வேன் அப்பா
கோனான குருவருளும் பெற்றோனாக
குவலயத்தில் கீர்த்திகொண்டு இருப்போனாக
தேனான மனோன்மணியாள் பதாம்புயத்தை
தேற்றமுடன் என்னாளுந் துதிப்போனாக
பானான பரமசிவன் புத்திவானாய்
பாருலகில் வசித்திருக்கும் சீடன்பாரே. (6365)

கற்பமுண்ண கெந்தகத்தயிலம்

பாரேதான் இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
பாங்கான புலிப்பாணி மகனேகேளு
நேரேதான் உந்தமக்குக் காயகற்பம்
நெகிழ்ச்சியுடன் சொல்லுகிறேன் நேர்மையாக
வீரேதான் நெல்லிக்காய் கெந்திதானும்
விருப்பமுடன் பலமதுவும் ஐந்துசேரு
சீரேதான் தாளகமும் ரெண்டுசேரு
சிறப்பான சிங்கியது ஒன்றுகூட்டே. (6366)

கூட்டவே மனோசிலையும் ஒன்றுசேரு
குணமான கெவுரியது ஒன்றுசேரு
நாட்டமுடன் பூரமது ஒன்றுசேரு
நலமான வீரமது அரையேசேரு
வாட்டமுடன் பிணியது ஒன்றேசேரு
வகுப்பான லிங்கமது ஒன்று கூட்டு
தேட்டமுடன் துருசு அதுவும் ஒன்றேசேரு
தெளிவான துத்தமது ஒன்றுதூக்கே. (6367)

தூக்கியே சிற்றண்டம் கருவில் அப்பா
துடியாகத் தான்அரைப்பாய் நான்குஜாமம்
தாக்குவாய் வாலுழுவைத் தயிலத்தாலே
தான்அரைப்பாய் ஜாமமது எட்டதாக
நோக்கமுடன் கருஞ்சீரந் தயிலமப்பா
நுணுக்கமுடன் தான்அரைப்பாய் ஆறுஜாமம்
வாக்கதுவும் பிசகாத வண்ணமப்பா
வளமான தாழம்பூச் சார்தான்கூட்டே.
(6368)

சாறான தாழம்பூ நாலுஜாமம்
தண்மையுடன் மந்தாரை நாலுஜாமம்
நாறான சரக்கொன்றை நாலுஜாமம்
நலமான கொடிவேலி ஆறுஜாமம்
தேறான கௌதும்பை ஆறுஜாமம்
தேற்றமுடன் துவரையது நாலுஜாமம்
சேறான வெண்குன்றி ஆறுஜாமம்
செம்மையுடன் தான்அரைப்பாய் மைந்தாகேளே.
(6369)

கேளேதான் சரக்கெல்லாம் அரைத்தபின்பு
கெவனமுடன் பில்லையது லேசதாக
நாளேதான் போகாமல் ரவியில்வைத்து
நயமான புதுக்கலசம் தன்னிலப்பா
கோளேதான் நேராமல் மைந்தாநீயும்
குமுறவே தான்அடைத்துச் சீலைசெய்து
கீளே தான் கலசமது துவாரமிட்டு
கிருபையுடன் தயிலமது இறக்கிடாயே.
(6370)

இறக்கியே குழித்தயில மாகவல்லோ
எழிலான கலசமதில் வடிதான்கொண்டு
சிறக்கவே முப்பூவும் களஞ்சிசேர்த்து
சிறப்புடனே கலசமதில் பதனம்பண்ணி
திரமான தயிலமதை யாரேனுந்தான்
தீர்க்கமுடன் சொல்லவில்லை நூல்கள்தன்னில்
உரமான தயிலமது சித்துதாமும்
ஓகோகோ நாதாக்கள் சொல்வாரன்றே.
(6371)

அன்றான தயிலமதை ஆராய்ந்தேதான்
அவனிதனில் மாணவர்களும் பிழைக்கஎன்று
குன்றான வழிபாடு முறைபாடெல்லாம்
கூறினேன் போகர்ஏழா யிரத்தில்
தென்திசையில் பொதிகைமலை தன்னில்வாழும்
தெளிவான சித்துமுனி நாதர்தாமும்
வென்றிடவே தயிலமதை மறைத்துவைத்தார்
வேதாந்தம் உட்பொருளைக் காட்டார்தானே.
(6372)

தானான சாத்திரத்தின் உளவுகண்டு
தண்மையுள்ள கருவிகரணாதி எல்லாம்
கோனான எனதையர் காலாங்கிநாதர்
கொற்றவனார் எந்தனுக்குச் சொன்னநீதி
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
தேற்றமுடன் தயிலமதை வாங்கிமைந்தா
பானான பரிதிஎன்ற சூதந்தன்னில்
பாங்குபெற தயிலமதை களஞ்சிட்டே.
(6373)

நீட்டவே பத்துக்கு ஒன்றுமேதான்
நீதியுள்ள மதஆனை யடங்கிநிற்க
வாட்டமுடன் தயிலமதை இரண்டுஜாமம்
வாகுபெறத் தான்அரைக்க சூதமாகும்
தாட்டிகமாய்ச் சூதமதை செந்தூரிக்க
தண்மையுடன் சொல்லுகிறேன் மைந்தாபாரு
நாட்டமுடன் தாரம்என்ற நாகந்தானும்
நலமான களஞ்சியது ஒன்றுசேரே.
(6374)

சேர்த்துமே முன்சொன்ன தயிலத்தாலே
செவ்வையாய்த் தான் அரைப்பாய் நாலுஜாமம்
நேர்த்தியாய் மெழுகுபதம் ஆகுமட்டும்
நேர்மையுடன் தான்அரைத்து செப்பக்கேளீர்
ஊர்த்துவமாய் குப்பிக்குச் சீலைசெய்து
உத்தமனே சரக்கதனைக் குப்பிஇட்டு
தீர்த்தமென்ற குப்பிக்கு மாக்கல்லாக
திறமாக மேல்மூடி சீலைசெய்யே.
(6375)

செய்யவே தளவாயாம் சட்டிதன்னில்
சிறப்புடனே மணல்தனைக் கொண்டுவந்து
பையவே தளவாயாம் சட்டிதன்னில்
பாங்குடனே ரவியில் நாலுஉயரம்போடு
துய்யநல்ல குப்பிதனை மணமேடிட்டு
துப்புரவாய்க் குப்பிவாய்த் தெரியமூடி
எய்யவே மேற்பாண்டம் தன்னில்மூடி
உத்தமனே சீலையது வலுவாய்ச்செய்யே.
(6376)

வலுவான சீலையது செய்தபின்பு
மைந்தனே மயங்காமல் செய்வாயப்பா
மெலுவான வாலுகையாம் எந்திரத்தில்
மேன்மையுடன் தான் எறிப்பாய் நாலுசாமம்
சுலுவான தீபமது கமலம்போலாம்
சுந்தரனே தான் எறிப்பாய் செப்பக்கேளு
உலுவான தீபமது ஆறிப்பின்பு
உத்தமனே தான்எடுக்க வகையைக்கேளே.
(6377)

கேளப்பா கணபதிக்குப் பூசைசெய்து
கெட்டியாய் மனோன்மணியை மனதில் உன்னி
நாளப்பா போகாமல் செந்தூரத்தை
நலமாக சீசாவில் பதனம்பண்ணு
பாளப்பா போகாமல் தேகந்தன்னை
பட்சமுடன் நெடுங்காலம் இருப்பதற்கு
வேளப்பா காயாதிகற்பம் கொள்ள
விருப்பமுடன்சொல்லுகிறேன்பண்பாய்க்கேளே.
(6378)

பண்பான செந்தூரம் குன்றிவீதம்
பாலகனே மண்டலந்தான் இரண்டுவேளை
நண்பான தேன் அதனில் கொண்டாயானால்
நலமான தேகமது கல்தூண் ஆகும்
திண்பான வாசியதுமேல் நோக்காது
தீர்க்கமுடன் கொண்டவற்கு நரையும்இல்லை
உண்டான காயாதி கற்பம்எல்லாம்
உத்தமனே இதற்கீடு சொல்லொண்ணாதே.
(6379)

ஒண்ணாது செந்தூரந் தானுமப்பா
உத்தமனே கோடிவரை இருக்கலாகும்
கண்ணான செந்தூரந் தன்னைஅப்பா
கருத்துடனே பாச்சுகின்ற விதத்தைக்கேளு
மண்ணான செம்பதுவும் களஞ்சிநூறு
மகத்தான செந்தூரம் களஞ்சிஎன்று
ஒண்ணாது தான்உருக்கி மூசைதன்னில்
உத்தமனே தான்எடுத்து சாய்த்திட்டாயே.

(6380)

சாய்க்கவே செம்பதுவும் மாற்றோபத்து
தனியான மாற்றதுவும் என்னசொல்வேன்
வாய்ந்ததொரு பிறவிஎன்ற தங்கந்தானும்
மகத்தான தங்கமதுஇதற் கீடுண்டோ
தேய்ந்ததொரு தேய்வுஎன்ற தங்கமப்பா
தேற்றமுள்ள பிறவிஎன்ற தங்கமாச்சு
பேய்ந்ததொரு மலைபோலே விளைந்த தங்கம்
பெருமையுள்ள சிருஷ்டிப்புத் தங்கந்தானே.

(6381)

தானான தங்கமது யோகிதங்கம்
தன்மையுடன் சிவவேடம் பூண்டோர்க்காகும்
கோனான குருத்தங்கம் ஞானத்தங்கம்
கொற்றவர்கள் ராசாக்கள் அணியுந்தங்கம்
பானான மனோன்மணியாட்கு உகந்ததங்கம்
பாரினிலே சித்தர்மெச்சுந் தங்கமப்பா
தேனான குருக்கள்மார் அணியுந்தங்கம்
தேஜொளியின் சொரூபம்என்ற தங்கந்தானே.

(6382)

தங்கமாம் இன்னமொரு போக்குசொல்வேன்
தண்மையுள்ள புலிப்பாணி மகனேகேளு
பங்கமிலாத் தங்கம் என்ன சொல்வேன்
பாலகனே ஒன்பதுக்கு ஒன்றுதாக்கு
துங்கமுள்ள ரசிதமது மாற்றோபத்து
துடியான பசுமையென்ற ஏமமாச்சு
புங்கசித்தி எட்டுடைய சிவயோகிக்குப்
புனிதனே தங்கமது வாய்க்கும்பாரே.

(6383)

பாரேதான் கருமிகட்கும் சண்டாளர்க்கும்
பலியாது இவ்வேதை பலியாதப்பா
ஆரோதான் சாத்திரங்கள் அனேகஞ்சித்தர்
அபரிதமாய்ப் பாடிவைத்தார் கோடாகோடி
நேரேதான் இவ்வேதைக் குவமைகூற
நெடியபுகழ் வையகத்தில் யாராலாகும்
சீரேதான் விட்டகுறை இருந்தபேர்க்கு
தீர்க்கமுடன் வாய்ப்பதுவும் மெய்யதாமே. (6384)

மெய்யான வித்தையது என்னசொல்வேன்
மேதினியில் நாதாக்கள் கூறும்வித்தை
பொய்யான வித்தையது அனேகங்கோடி
பூட்டினார் வெகுகோடி மாண்பர்க்காக
வையகத்தில் வாழுகின்ற மாண்பருக்கு
மகத்தான செந்தூரம் உண்டபேர்க்கு
ஐயம் அற ரோகாதி ரோகம்எல்லாம்
அப்பனே உடலைவிட்டே ஏகும்பாரே. (6385)

விலாங்கு கற்பம்

ஏகுமே இன்னமொரு கற்பம்பாரு
ஏற்றமுடன் சொல்லுகிறேன் மைந்தாபாரு
பாகுடைய நெய்போன்ற விலாங்குதன்னை
பட்சமுடன் தான்பிடித்து பண்பாய்க்கேளு
சாகுதற்கு முன்பாக சூலந்தன்னை
சட்டமுடன் வாயிலிட்டு விலாங்குதன்னை
வேகுதற்கு பாண்டமது தான்அமைத்து
வேகமுடன் பூநீரைப் பாண்டம்போடே. (6386)

போட்டுமே விலாங்குதனை மேலேவைத்து
பொங்கமுடன் மேலும்அந்தப் பூநீர்விட்டு.
நாட்டமுடன் ஜலமதனை மேலேஇட்டு
நிஷ்களங்க மாகவல்லோ பாண்டம்மூடி
வாட்டமுடன் தான்அவித்து ரவியில்போடு
வளமான விலாங்கதுவும் உலர்ந்தபின்பு
தாட்டிகமாய்க் கல்லுரலில் இட்டுமைந்தா
சட்டமுடன் இரும்புஉலக்கை தன்னால்சாடே.
(6387)

சாடவே தூரணமாய்ச் செய்துகொண்டு
சட்டமுடன் சுக்குடனே ஓமம்சேர்த்து
கூடவே மிளகுடனே வாய்விளங்கம்
குணமான பரங்கியென்ற பட்டைதானும்
போடவே ஏலமுடன் ஜாதிபத்திரி
பொங்கமுடன் வெந்தயமும் இருசீரகந்தான்
தூடவே பச்சையென்ற பூரந்தானும்
சுத்தமுள்ள ரோசனையும் கூடச்சேரே.
(6388)

சேர்த்துமே வகைக்கு ஒருபலமதாக
சிறப்புடனே நெய்தேனும் விட்டுக்கிண்டி
பேர்த்துமே புதுக்கலசந் தன்னிலப்பா
பெருமையுடன் சீனி சர்க்கரையுங்கூட்டி
ஆர்க்கவே பரமபதம் தன்னில்அப்பா
அப்பனே முன்உரைத்த லேகியத்தை
தீர்க்கமுடன் தான்சேர்த்து கிளறிவாங்கு
திட்டமுடன் பீங்கானில் பதனம்பண்ணே.
(6389)

பண்ணவே கணபதிக்குப் பூசைசெய்து
பாலகனே சோடசத்தில் வைத்துப்போற்றி
உண்ணவே மண்டலந்தான் கொண்டாயானால்
உத்தமனே கழற்சிக்காய் விகிதம் கொள்ள
தண்ணமுடன் தேகமது இறுகிக்காட்டும்
தாக்கான வாசியது மேல்நோக்காது
கண்ணபிரான் செய்ததொரு குளிகையப்பா
கண்மணியே உந்தனுக்கு போதித்தேனே.
(6390)

போதித்தேன் விலாங்கினுட மாயாகற்பம்
பொங்கமுடன் சமுசாரிக்கு ஆனகற்பம்
வாதிகளும் கண்டு அறிந்து செய்வாரப்பா
வையகத்தில் நிதியுள்ளான் செய்யுமார்க்கம்
சோதித்து சாத்திரங்கள்கண்டு ஆராய்ந்து
சுந்தரனே உந்தனுக்கு ஓதிவைத்தேன்
சாதித்தால் குளிகைஎன்ற விலாங்குகற்பம்
சாங்கமுடன் யோகிகட்கு உறுதியாமே.
(6391)

உறுதியாஞ் சித்தின்பம் கொண்டபேர்க்கும்
உத்தமனே யாக்கை நரம்புடையபேர்க்கும்
நிறுதியெனுந் தாதுவிர்த்தி இல்லாதார்க்கும்
நீடுழி போகமது கொள்வோருக்கும்
குருதியது இல்லாத தேகத்தோர்க்கும்
குணமில்லா மணமில்லா மேனியோர்க்கும்
அறிவுகுன்றி இருப்பதொரு மாண்பருக்கும்
அழகான குளிகையது பாருபாரே.
(6392)

பாரப்பா குளிகையது கொண்டபேர்க்கு
பாங்குடனே ஏழானை பலமுண்டாகும்
ஆரப்பா குளிகையதுசெய்யப் போறார்
அப்பனே அறிவுடையோர் செய்யும்வேதை
நீரப்பா தனிலிருக்கும் விலாங்குகற்பம்
நீதியுள்ள கற்பமது என்னசொல்வேன்
பேரப்பா சிவயோகி செய்யாரப்பா
பேரின்பநிலை கடந்தோர் செய்யார்தாமே.
(6393)

செய்வார்கள் சிற்றின்பமுடைய பேர்கள்
ஜெகதலத்தில் கோடிஉண்டு லக்கோயில்லை
துய்யதமிழ்ப் பண்டிதங்கள் மெத்தஉண்டு
துப்புரவாய் செய்துமல்லோ அதிதம்செய்வார்
மெய்யான கற்பமதை செய்தபேர்கள்
மேதினியில் கலவிக்கு முதன்மையாவார்
பொய்யான கற்பமது கூறவில்லை
புண்ணியனே உந்தனுக்கு புகட்டினேனே.
(6394)

புகட்டினேன் உந்தனுக்கு அன்புகூர்ந்து
புகழான விலாங்கினது கற்பந்தன்னை
சகமுழுதும் சித்துமுனி சாத்திரத்தில்
சாங்கமுடன் மறைத்துவைத்தார் என்னசொல்வேன்
அகங்கொண்ட மாண்பர்களுக்கு ஆகாவென்று
அப்பனே சிடிகையெல்லாம் மறைத்துப்போட்டார்
சுகம்பெறவே அடியேனும் மனதுவந்து
சூட்டினேன் மாண்பர்களுக்கு உகந்தவாறே.
(6395)

வாறான சூத்திரத்தில் மறைத்ததுஎல்லாம்
வாகுடனே சாத்திரத்தில் பெருக்கிவிட்டேன்
கூறான சிடிகையென்ற மார்க்கம்தன்னை
குணம்பெறவே செய்தவர்க்கு எல்லாம்சித்தி
மாறாமல் கைபாகம் செய்பாகந்தான்
மன்னவனே செய்தவர்க்கு எல்லாம்சித்தி
தூறான மார்க்கமது சென்றபேர்க்கு
துப்புரவாய் யாதொன்றும் பலியாதன்றே. (6396)

பலியாது குடிகெடுக்கும் பாவியோர்க்கும்
பாங்கான சண்டாளர் துரோகியோர்க்கும்
வலிதான பலமுடைய கருமியோர்க்கும்
வாகுடைய சிடிகையென்ற வேதைதானும்
நலியாளர் தங்களுக்கு மவனாதியோர்க்கும்
நற்பெண்டிர்களைக் கெடுத்த துரோகியோர்க்கும்
சலியுடைய சப்பாணி குருடருக்கும்
சட்டமுடன் ஒருக்காலும் பலியாதன்றே. (6397)

அன்றான போகர்ஏழா யிரத்தில்
அப்பனே கடைக்காண்டந் தன்னில்அப்பா
குன்றானமலை போலேகோடி கற்பம்
கொட்டினேன் நாதாக்கள் அறிந்ததில்லை
தென்திசையில் அகத்தியனார் காவியத்தில்
தேற்றமுடன் வெகுகோடி பாடிவைத்தார்
வென்றிடவே சத்தகாண்டம் தன்னில்அப்பா
விருப்பமுடன் பாடிவைத்தேன் கோடியாமே.
(6398)

நாரை கற்பம்

கோடியாம் இன்னமொரு கற்பம்சொல்வேன்
கோபால என்குருவே குமரவேலா
வாடியே மயங்காதே மன்னாகேளு
வளமையுடன் நாரைஎன்ற கற்பம்சொல்வேன்
தேடியே கருநாரை கொண்டு ஆராய்ந்து
தேற்றமுடன் குடல்போக்கி சிறகுபோக்கி
ஆடியதோர் சூதமென்று யானைதன்னை
அப்பனே அதன்வாயிற் புகட்டிடாயே. (6399)

புகட்டவே இருவாயும் தைத்துமல்லோ
பொங்கமுடன் தாளியென்ற பாண்டந்தன்னில்
அகலமது சகணதுவும் விரல்தான்நாலு
அப்பனே பூநீரைப் பறப்பிமைந்தா
நிகலவே நாரையென்ற பட்சிதன்னை
நிஷ்களங்க மாகவல்லோ பாண்டம்வைத்து
புகலவே மேலும் அந்தப்பூநீர்விட்டு
புண்ணியனே மேற்பாண்டந் தன்னைமூடே. (6400)

மூடவே சீலையது வலுவாய்ச் செய்து
முசியாமல் தான்எரிப் பாய்இரண்டுசாமம்
நீடவே பட்சியது வெந்துமல்லோ
நீதியுடன் தீயாறி எடுத்துமைந்தா
கூடவே மேலிருந்த பாண்டம்நீக்கி
குற்றமற மாமிசத்தை எடுத்துமைந்தா
சாடவே குழிக்கல்லில் தன்னிலிட்டு
சட்டமுடன் இருப்புஉலக்கை தன்னாற்சாடே. (6401)

சாட்டியபின் தூரணமாய்ச் செய்துகொண்டு
சாங்கமுடன் தூரணத்தில் நாலுக்கொன்று
தாட்டிகமாய் பஞ்சமுஷ்டி தானும்சேர்த்து
சட்டமுடன் பஞ்ச திரவியங்களைந்தும்
வாட்டமுடன் திரிகடுகு திரிபலாதி
வகைவகைக்கு நாலுக்கு ஒன்றுசேரு
பூட்டவே இத்தாதி சரக்கைஎல்லாம்
புகழ்பெறவே நெய்தேனும் விட்டுக்கிண்டே. (6402)

கிண்டியே பரணிதனில் பதனம்பண்ணு
கீர்த்திபெற உண்பதற்கு விபரங்கேளு
தண்டகம் போல்இருவேளை உண்பாயானால்
தாட்டிகமாய் வாசியது மேல்நோக்காது
மண்டலந்தான் கொண்டவர்க்கு வாசியோகம்
மகத்தான மார்க்கம்எல்லாம் வழியேகாட்டும்
சண்டமாருதம் போலே இந்தகற்பம்
சாங்கமுடன் உண்பவர்க்குப் பலனைக்கேளே. (6403)

கேளப்பா குளிகையது கொண்டபேர்க்கு
கெடியான சின்மயத்தில் ஒடுக்கவாசி
நாளப்பா தன்மயமும் காணாமல்தான்
நலமான வாசிவழிக்கு இடங்கொடுக்கும்
ஆளப்பா ஆறுஆதாரத்தைக் காட்டும்
அப்பனே இதிலொடுக்கும் கலைகள்ரெண்டும்
தேளப்பா கொட்டியதோர் விஷத்தைப்போலும்
தேஜொளியின் பூரணத்தைக் காணலாமே.
(6404)

காணலாம் சுழுத்தியிலே இருந்துகொண்டு
கருவிகர ணாதியந்தம் மேலேதொட்டு
பூணலாம் விசுத்தியிலே வாசிநாட்டி
புகழ்பெற வேஅனாகத்தை மேலேபூட்டி
தோணவே சுடரொளியைத் தாக்கும்போது
சூட்சம்என்ற தலைதனையே பிரித்துக்காட்டும்
மாணவே மாயாதி சித்தரெல்லாம்
மார்க்கமுடன் மறைத்துவைத்தார் உண்மைபாரே.
(6405)

உண்மையாய் வாசிதனை நடத்தும்போது
உத்தமனே சிகாரமது முஞ்சிக்காட்டும்
தன்மையாய் நடுமையம் மவுனம்பார்த்து
தாக்குவாய் அங்கென்று கும்பித்தாக்கால்
வண்மையாங் கழுத்தியிலே கலைதான்நோக்கும்
வளம்பெறவே பூரணத்தைப் பதியக்காட்டும்
கண்மையாஞ் சுவாசமது கபாலம்பற்றி
கைலாய அங்குலத்தைக் காட்டும்பாரே.
(6406)

காட்டுமே சூட்சம்என்ற குதிரையாலே
கதிரொடுங்கி சடாபோலே கண்பிதுங்கி
நீட்டமுடன் பஞ்சபூதங்கள் ஐந்தும்
நிலையான ஒடுக்கவழி அடங்கநின்று
கூட்டமுடன் பிரிதிவினில் தேய்வுதங்கி
குறிப்புடனே தேய்வினிலே வாய்வுதங்கி
காட்டிவே ஆகாஸம் அப்பில்தங்கி
கனமான யோகநிலை நிறுத்தும்பாரே.
(6407)

பாரேதான் கண்ணாலே மனக்கண்ணாலே
பாங்குபெற யோகநிலை நடத்துதற்கு
சீரேதான் சித்துமுனி ரிஷிகள்தாமும்
சிறப்புடனே குண்டலியாம் யோகம்தன்னை
தேரேதான் நெடுங்காலம் கற்பம்உண்டு
தேற்றமுடன் யோகநிலை ஒடுக்கந்தன்னை
வேரேதான் கருவான நூல்கள்பார்த்து
விட்டகுறை இருந்ததென்று விட்டிட்டாரே. (6408)

விட்டாரே தேவதா ரிஷிகளெல்லாம்
விண்ணாடர் மண்ணாடர் மாண்பர்தாமும்
கெட்டாரே யோகநிலை சூட்சம்காணார்
கேடழிந்து பாடழிந்து விழலாய்ப்போனார்
தொட்டகுறி போலாக உந்தமக்கு
தோறாமல்ஓதி வைத்தேன் புண்ணியவானே
விட்டகுறை இருந்ததொரு புண்ணியத்தால்
வித்தகனே உந்தமக்கு அமைக்கலாச்சே. (6409)

ஆச்சப்பா காலாங்கி கிருபையாலும்
அப்பனே மனோன்மணியாள் ஆசீர்மத்தால்
மூச்சடங்கி வாசியோகம் செய்வதற்கு
முனையான காயாதி கற்பமெல்லாம்
வாச்சுதே புலிப்பாணி மன்னாகேளு
வளம்பெறவே உந்தமக்கு யோகம்காண
மாச்சலென்ற யோகநிலை உந்தமக்கு
மகத்தான மகிமைகளும் போதித்தேனே. (6410)

மயில் முட்டை கற்பம்

போதித்தேன் இன்னமொரு மார்க்கம்பாரு
புகழான புலிப்பாணி மகனே அப்பா
ஆதித்தன் சந்திரன்போல் உந்தமக்கு
அப்பனே யான் உரைப்பேன் மகிமைபாரு
சோதிமய மானதுஒரு மயிலின்முட்டை
சுந்தரனே மனதுஉவந்து முட்டை தன்னில்
பாதிமதி விந்துடனே ஆயின்நாதம்
பாங்குபெறத் தான்எடுப்பாய் களஞ்சிஒன்றே. (6411)

ஒன்றான களஞ்சியது வகைவகைக்கு
உத்தமனே தான்எடுத்து செப்பக்கேளீர்
குன்றாமல் முட்டைதனில் துவாரமிட்டுக்
குறையாமல் சரக்கொல்லாம் அடைந்துமைந்தா
வென்றிடவே சீலையது வலுவாய்ச்செய்து
விவரமுடன் துவாரமதை மறைத்துமைந்தா
சென்றிடவே பாண்டமதில் மணல்தான் கொட்டி
செழித்துமே மேலுமந்த மணலைக்கொட்டே.
(6412)

கொட்டியே மேற்பாண்டம் தன்னைமூடி
குமுறவே சீலையது வலுவாய்ச்செய்து
சட்டமுடன் வாலுகையாம் எந்திரத்தில்
சாங்கமுடன் தான்எரிப்பாய் நாலுசாமம்
பட்டயம்போல் மணலதுவும் சிவந்தபின்பு
பாலகனே எடுத்துப்பார் அண்டம்தன்னை
நட்டமென்ற காயாதிக்கு உறுதிபாச்சு
நலம்பெறவே கவசமதைப் பிரித்துவாங்கே.
(6413)

வாங்கியே கவசமதை எறிந்துபோடு
வளம்பெறவே அண்டமதை உரலில் இட்டுத்
தூங்கியே திரியாதே இருப்பு உலக்கை
துப்புரவாத் தான்கொண்டு சாடும்போது
பாங்குபெற மெழுகதுவும் என்னசொல்வேன்
பாரினிலே நாதாக்கள் மறைத்துவைத்தார்
ஏங்கியே இருந்தக்கால் என்னசித்தி
எழிலான கற்பமதைத் தேடிக்கொள்ளே.
(6414)

கொள்ளவே நயம்பெறவே கற்பந்தன்னை
குணபாகம் கைபாகம் செய்பாகத்தால்
மெள்ளவே குளிகைதனை முடித்துக்கொண்டு
மேதினியில் நீயுமொரு சித்தனைப்போல்
உள்ளதொரு வேஷமதை விடுத்துமல்லோ
உத்தமனே சிவராஜயோகன் போலே
விள்ளவே நெடுங்காலம் இருப்பதற்கு
விருப்பமுடன் காயாதி கற்பம் உண்ணே.
(6415)

உண்ணவே மண்டலந்தான் அந்திசந்தி
உத்தமனே மயில்கற்பம் கொண்டாயானால்
திண்ணமுடன் நரைதிரையும் அற்றுப்போகும்
தீர்க்கமுடன் நெடுங்காலம் இருக்கலாகும்
வண்ணமுடன் காயாதி கற்பத்தாலே
வளமான வாசிதனை நடத்தலாகும்
திண்ணமுடன் காலங்கி நாதர்தாமும்
சட்டமுடன் எந்தனுக்கு ஓதினாரே.
(6416)

ஓதவே காயாதி கற்பந்தன்னை
உத்தமனே உந்தமக்கு உரைத்தேனப்பா
நீதமுடன் காயாதி கற்பம்உண்டு
நீணிலத்தில் நீயும் ஒருத்தனைப்போல்
தோகமா யென்காலம் சென்றபின்பு
துப்புரவாய் லோகாதி லோகமெல்லாம்
சாதகமாய் தான்திரிந்து மைந்தாநீயும்
சட்டமுடன் சீனபதிக் கேகுவீரே.
(6417)

ஏகவே உந்தமக்கு வரமும்தந்தேன்
எழிலான மகிமைஎல்லாம் தான் உரைத்தேன்
போகவே குளிகையது பூண்டுகொண்டு
பொங்கமுடன் காயாதி கற்பம் உண்டு
சாகாமல் இருப்பதற்கு வினயம்கொண்டு
சட்டமுடன் காயாதி கற்பம்தன்னை
ஆகாயம் தன்னில்செல்ல குளிகைதானும்
அப்பனே உந்தமக்குத் தந்திட்டேனே.
(6418)

தந்தேனே என்று சொல்லி போகர்தாமும்
சட்டமுடன் சீனபதிக்கு ஏகியல்லோ
அத்தமுடன் சீனபதி பெண்களுக்கு
அவனிதனில் நடந்தது ஒரு அதிசயங்கள்
சொந்தமுடன் தாம் உரைத்து சித்துதாமும்
சுந்தரனார் காலாங்கி சமாதிபக்கல்
விந்தையது இன்னமிகக் காணஎன்று
விருப்பமுடன் குளிகையிட்டு சென்றிட்டாரே.
(6419)

போகர் சீனபதிப் புரவி அதிசயத்தை புலிப்பாணிக்கு கூறல்

சென்றாரே சீனபதிக் கடலோரத்தில்
சிறப்புடனே போகமுனி நாதர்தாமும்
வென்றிட்வே சிலநாள் அங்கு இருந்துமல்லோ
வேகமுடன் மகமேருவட பாகத்தில்
குன்றான மலைஓரம் செல்லும்போது
கூறான சார்பலென்ற குகைஓரத்தில்
அன்றுமல்லோ செம்புரவி தன்னைத்தானும்
அங்கெனவே போகர்முனி கண்டார்தாமே. (6420)

தானான குளிகையது பூண்டுகொண்டு
தாரணியில் வடபாகம் குகைஓரத்தில்
மானான மகமேரு தன்னைப்போலே
மகத்தான அசுவதா புரவிதன்னை
பானான சூரியன்போல் புரவிதானும்
பாங்குடனே கண்டவரும் பிரமித்துஏங்கி
தேனான மனோன்மணியை மனதில் உன்னி
தேற்றமுடன் புரவியிடம் இறங்கினாரே. (6421)

இறங்கியே போகரிஷி முனிவர்தாமும்
எழிலான செம்புரவி அருகில்வ்ந்து
திறமுடனே குளிகையது விட்டுமல்லோ
தீர்க்கமுடன் அஞ்சலித்து கரங்குவித்து
நிறமுடைய செம்புரவி தன்னைக்கண்டு
நிட்களங்கமான பரவசமும் கொண்டு
குறவனைப்போல் சித்துமுனி ரிஷியார்தாமும்
கும்பிட்டு முடிவணங்கிப் பணிந்திட்டாரே. (6422)

பணிந்துமே போகரிஷி முனிவர்தாமும்
பட்சமுடன் முடிவணங்கி நிற்கும்போது
மணியான செம்புரவி தானும்கண்டு
மகத்தான போகரிடியார் என்றுஎன்னை
அணியான காலாங்கி நாதர்பாதம்
அவர்பாத சீடன்என்று யானுரைத்தேன்
துணிவுகொண்டு அடியேனும் கூறும்போது
துப்புரவால் என்மீதிய் கருணையாச்சே. (6423)

கருணையெனும் வாய்மொழியை அறிந்துயானும்
கர்த்தாவே எந்தனை ஆதரிக்கவென்று
அருணனைப்போல் மின்னுகின்ற தொழுதேன்யானும்
வாகுடனே யாசீர்மம் மிகவும்கூறி
வருணரிஷி வளர்த்ததொரு புரவிஒன்று
வாகுடனே யாசீர்மம் மிகவும் கூறி,
தருணமது வந்ததொரு காரியத்தை
சாங்கமுடன் உரைக்கவென்று கேட்கலாச்சே.(6424)

வருணரிஷியார் அசுவம் போகரைக் கேட்பது

கேட்கவே போகரிஷி முனிவர்தானும்
கெடியான லோகாதி தேசம்எல்லாம்
மீட்கமுடன் குளிகைகொண்டு சுத்திவந்தேன்
மிக்கான பதிதனையே காணஎன்று
வாட்டமுடன் தரிசனைக்கு வந்தேன்யானும்
வளமான காலாங்கி கடாட்சத்தாலே
தேட்டமுடன் எந்தனுக்கு தெரிசனைத்தான்
தேவனே கிடைத்தது என்று பணிந்திட்டாரே.(6425)

பணிந்தாரே போகரிஷி நாதர்தாமும்
பாங்கான செம்புரவி ஏதுகூறும்
துணிவுடனே குளிகைபூண்டு இங்கேவந்த
துய்யதொரு சிறுபாலா உந்தனுக்கு
மணியான உபதேசஞ் செய்வேன் என்று
மார்க்கமுடன் செம்புரவி கூறியல்லோ
பணிபோன்ற செம்புரவி மாலையொன்று
பட்சமுடன் தான்கொடுத்து மதிக்கலாச்சே. (6426)

மதிக்கவே நவரத்தின மாலையொன்றும்
மன்னவனார் போகரிஷி நாதருக்கு
துதிக்கவே நெடுங்காலம் இருப்பதற்கும்
துடியான கற்பமென்ற மார்க்கம்தானும்
நதிராகத் தான்கொடுத்து அசுவந்தானும்
நயம்பெறவே கருவுஉள வானதெல்லாம்
கதிர்போன்ற போகரிடி நாதருக்கு
கனமாகத் தான்கொடுத்துக் கருதலாச்சே.
(6427)

செம்பரவி போகருக்கு உபதேசித்தல்

கருதவே காலாங்கி நாதர்தம்மை
கனமுடனே கேட்டதொரு புண்ணியத்தால்
பொருந்தவே போகமுனி நாதருக்கு
பொங்கமுடன் உபதேசம் செய்யஎண்ணி
அருமையுடன் மூலிகற்கம் ஆனதெல்லாம்
அன்புடனே கொண்டுபோய் மனதுஉவந்து
பெருமைபெற சதாகாலம் வையகத்தில்
பேரான மகிமைதனைக் கூறும்பாரே. (6428)

பாரேதான் போகரிஷி நாதாகேளும்
பாருலகில் வந்ததொரு குளிகைபாலா
சீருடைய சித்தாதி முனிவர்தாமும்
சீரான கா்னகத்தில் அனேகருண்டு
வீறுபுகழ் நாதாக்கள் சபிப்பாரப்பா
வித்தகனே உந்தமக்குத் தீங்குநேரும்
மாறுபாடு ஆனதொரு வார்த்தைகூறி
மன்னவனே மதிமோசம் செய்வார்தானே.
(6429)

தானான காலாங்கி சித்துபாலா
தண்மையுடன் உந்தமக்கு மூலிகற்பம்
கோனான மலைதனிலே சென்றுயானும்
கொற்றவனே உந்தனுக்கு மூலிகற்பம்
தேனான செம்புரவி உண்டகற்பம்
தேசமதில் மாண்பர்எல்லாம் காணாகற்பம்
பானான சூரியனார் காணாகற்பம்
பட்சமுடன் மனதுவந்து கொடுக்கலாச்சே.
(6430)

கொடுக்கவே வருணரிடி தன்தனக்கு
கொற்றவனார் உபதேசம் செய்தமூலி
நடுக்கடலில் கிருஷ்ணாவ தாரங்கொண்ட
நலமான கண்ணபிரான் மூலிதன்னை
அடுத்துமே ஆகாஸந்தான் பறந்து
அலைகடலின் மையமதில் இறங்கியல்லோ
எடுத்துமே வாய்தனிலே கௌவிக்கொண்டு
ஏறியேமேற் பறந்து வருகலாச்சே. (6431)

வருகவே மூலிதனை சாபந்தீர்த்து
சட்டமுடன் போகரிடி நாதருக்கு
குருஉரைத்த கற்பம்என்ற மூலிதன்னை
குவலயத்தில் ஒருவருக்கும் விள்ளாதப்பா
சருகுடைய மூலியின் தன்கற்பத்தாலே
சாட்சாதி கோடிவரை யிருக்கலாகும்
திருவருளால் உந்தனுக்கு எல்லாம்சித்தி
தீர்க்கமுடன் மூலிதனைப் பெற்றுக்கொள்ளே.

(6432)

கொள்ளவே என்றுமல்லோ மனதுஉவந்து
கொற்றவர்க்கு மூலிதனைக் கொடுத்துமேதான்
எள்ளளவு நாதாந்த சித்தர்தம்மால்
எளிதாக ஏற்றமது நேராமல்தான்
உள்ளபடி ஞானோபதேச மார்க்கம்
உத்தமனேதான் கொடுத்து அதிகம்கூறி
தெள்ளமுர்த மானதொரு மாயாகற்பம்
தெளிவுடனே செம்புரவி ஈயலாச்சே.

(6433)

ஆச்சப்பா புலிப்பாணி மகனேகேளு
அட்டதிசை தான்கடந்து புரவிகண்டேன்
பாச்சலுடன் குளிகையது மனதுஉவந்து
பட்சமுடன் கண்ணபிரான் உண்டகற்பம்
மூச்சடங்கி வருணரிஷி கொண்டகற்பம்
முனையான அசுவமது உபதேசத்தால்
ஆச்சரிய மானதொரு கற்பந்தன்னை
அன்புடனே பெற்றுவந்தேன் என்றிட்டாரே.

(6434)

என்னவே காலாங்கி நாதர் தம்மால்
எழிலான எட்டுதிசை குளிகைகொண்டான்
பன்னவே அசுவதா கடாட்சத்தாலே
பாலகனே பெருங்கற்பம் யானும்கண்டேன்
துன்னவே தேவதாரிடி வரத்தால்
துப்புரவாய் மகமேரு கற்பம் கொண்டே
உன்னவே புஜண்டமகாரிஷி சாபத்தால்
உத்தமனே கற்பமது பெற்றிட்டேனே.

(6435)

பெற்றேனே கிக்கிந்தாரிஷி வனத்தில்
பேரானகுளிகை கற்பம்யானும் கொண்டேன்
கற்றதொரு முதலைகற்பம் யானுங்கொண்டேன்
கருவான பச்சைவண்ணப் புரவிகற்பம்
வெற்றியுடன் இமயகிரி பர்வதத்தில்
வேகமுடன் ஏழுவரை சென்றேன்யானும்
பற்றிஅங்ஙனமே இருந்த தேவர்
பாங்கான ரிஷிநாதர் முனிகண்டேனே.
(6436)

கண்டேனே அவரிடமுங் குளிகைகொண்டேன்
காணவே மற்றொருவரையுங் கண்டேன்
விண்டபொருள் இருபத்தோர் வரையும்சென்றேன்
விட்டகுறை இருந்ததுவால் அனைத்துங்கண்டேன்
கொண்டல் முடிஅச்சுதனார் மூலிகற்பம்
கொடிதான சஞ்சீவி அனைத்துங் கண்டேன்
சண்டமாருதம் போலே புரவிகற்பம்
சாங்கமுடன் கண்டேன் என்றிட்டார்தானே.
(6437)

தானான புரவியது எந்தனுக்கு
தண்மையுள்ள கற்பமது கொடுத்ததாலே
கோனான எந்தேவர் காலாங்கிநாதர்
கொற்றவனார் பாதமது கடாட்சத்தாலும்
தேனான மனோன்மணியாள் கிருபையாலும்
தேற்றமுடன் கற்பமது கொண்டுமல்லோ
பானான வையகத்தில் பகைவர்தம்மை
பட்சமுடன் வென்றுமல்லோ ஜெயித்திட்டேனே.
(6438)

இட்டேனே புலிப்பாணி மைந்தாகேளு
எழிலான கற்பமதை யாருக்குந்தான்
தொட்டகுறி போலாகச் சொல்லிவைத்தேன்
துரைராஜ சுந்திரனே உந்தமக்கு
விட்டகுறை இருந்ததொரு புண்ணியத்தால்
விருப்பமுடன் உந்தமக்கு உபதேசித்தேன்
சட்டமுடன் என்னாளுங் காலாங்கிபாதம்
சதாகாலந்தான் வணங்கி வாழ்குவீரே.
(6439)

லவணபற்பம்

வாழ்கவே இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
வளமையுள்ள புலிப்பாணி மகனேகேளு
தாழ்கவே லவணமது இருபத்தைந்து
தப்பாமல் வகை ஒன்றுக் களஞ்சிவீதம்
மூழ்கவே குழிக்கல்லில் தன்னையிட்டு
முனையான காடியென்ற நீராலப்பா
மூழ்கவே முன்சொன்ன காடிதானும்
முசியாமல் தான்எடுத்து அரைத்திடாயே. (6440)

அரைத்துமே நாற்சாமம் ஆனபின்பு
அன்பாக பில்லையது லகுவாய்ச்செய்து
குறையாது ரவிதனிலே காயவைத்து
குணமாகச் சில்லிட்டு சீலைசெய்து
முறைதானும் பிசகாமல் பின்னுமப்பா
முசியாமல் கோழியென்ற புடந்தான்போடு
நிறைபோலே தீஆறி யெடுத்துப்பாரு
நிட்களங்கம் ஆனதொரு பற்பமாச்சே. (6441)

ஆச்சப்பா லவணமதை எடுத்துமைந்தா
அப்பனே முன்போலக் காடியாலே
மூச்சடங்கத் தான் அரைப்பாய் நாலுசாமம்
முசியாமல் முன்போல் சீலைசெய்து
பாச்சலுடன் ரவிதனிலே காயவைத்து
பாங்குபெற புடந்தனையே போடுபோடு
மாச்சலது வாராது லவணபற்பம்
மகத்தான நாதாக்கள் வித்தையாச்சே (6442)

வித்தையாம் லவணம் என்ற பற்பம் தன்னை
வீறுடனே இரண்டுபத்துப் புடமேபோடு
சுத்தமுள்ள பற்பமது என்ன சொல்வேன்
சுந்தரனே நாதாக்கள் செய்யும்வேதை
சத்தியமாய் யான் அறிந்த மட்டுமல்லோ
தண்மைபெற உந்தனுக்கு ஓதினேன்யான்
புத்தியுள்ள பூபாலா புண்ணியவானே
புகழுடனே செய்துகொண்டால் சித்திதானே. (6443)

லவணவகை இருபத்தைந்தும் என்னுடைய நிகண்டில் காண்க

தானேகேள் புலிப்பாணி மகனே அப்பா
தண்மையுள்ள லவணவகை இருபத்தைந்து
மானேகேள் எந்தனது நிகண்டிலப்பா
மகத்தான ஆயிரத்து எழுநூற்றுக்குள்
கோனான யென்குருவின் கடாட்சத்தாலே
கொற்றவனே லவணவகை இருபத்தைந்தும்
மானான பேர்கண்டு இடையுங்கண்டு
மகத்தான இனங்கண்டு சேர்வைகாணே. (6444)

காணவே லவணவகை பற்பந்தன்னை
கருவாக முடித்தவர்க்கு எல்லாம்சித்தி
பூணவே பாஷாணம் முப்பத்திரண்டும்
புகழான லவணவகை பற்பத்தாலே
ஆணவங்கள் தான்ஒடுக்கி மடங்கிக்கொல்லும்
ஆகாகா நாதாக்கள் மறைத்துவைத்தார்
வேணதொரு சரக்கெல்லாம் லவணத்தாலே
விஷங்கொண்டு மடிந்தல்லோ முடியும்பாரே. (6445)

லவணவேதைமுகம்

பாரேதான் லவணமதைக் கொண்டபோது
பாலகனே தேகமது கசிவேயில்லை
நேரேதான் கந்தமது யிருக்கிக்காட்டும்
நேர்மையுள்ள தேகமது உளுப்பேயில்லை
சீரேதான் காயாதி கற்பமாகும்
சிறப்பான லவணத்தின் பற்பமல்லோ
வீரேதான் கவணமென்ற காரத்தாலே
வெகுவித்தை ஆடுதற்கு இன்னுங்கேளே. (6446)

கேளேதான் பற்பமது தான்எடுத்து
கெடியான வெள்ளிதனில் நூற்றுக்கொன்று
நீளவே களஞ்சியது ஒன்றுதாக்க
நிட்களங்க மானதொரு குருவினாலே
பாளமென்றவெள்ளியது பழுக்கும்பாரு
பாருலகில் நாதாக்கள் செய்யும்வேதை
ஆளவே மாற்றதுவும் என்னசொல்வேன்
அப்பனே பதினாறு மாற்றுகாணே. (6447)

காணவே சிவயோகி மாண்பருக்கு
கருவான லவணமென்ற தங்கந்தானும்
பூணவே பூசைமுகஞ் சொன்னதல்லால்
புகழான வையகத்து மாண்பருக்கு
வேணபணி செய்வதற்கு சொன்னதல்ல
வேதைமுகம் தங்கமென்ற லவணந்தன்னை
மாணமருன் கல்வியுள்ள வேடத்தோர்க்கு
மகத்தான சிவயோகிக்கு ஆகும்பாரே. (6448)

போகர் புலிப்பாணிக்கு தந்திரபுத்தி கூறல்

பாரேதான் புலிப்பாணி மன்னாகேளு
பாருகில் கருமியுள்ள மாண்பர்உண்டு
நேரேதான் அவர்வாசல் காத்துநின்று
நேர்மையுள்ள பழக்கமது செய்யவேண்டாம்
சேரேதான் கிட்டிருந்த பழக்கத்தாலே
சேர்வையுடன் மனதுவந்து நூல்கள் சொல்வார்
வீரேதான் வாதம்என்ற போக்கைக்கேட்பார்
வேறுபட தூறுபட மயங்குவாரே. (6449)

மயங்குவார் பலநூலும் அறிந்தார்போலே
மார்க்கம்எல்லாம் தெரிந்ததொரு மவுனிபோலும்
தியக்கமுடன் நூல்பார்த்துத் தெரிந்தோர்போலும்
தீர்க்கமுடன் பவமகற்றி இருந்தார் போலும்
தயக்கமது கொண்டல்லோ வாதுகூறி
தப்பாமல் வேதைமுகம் கேட்பார்பாரு
நயம்படவே அவர்களுக்கு இதவுகூறி
நம்மையுடன் இருப்பதுவும் நன்றாம்பாரே. (6450)

நன்றான வார்த்தையது மிகவும்கூறி
நலம்பெறவே அவர்களுக்கு மதிகள்கூறி
குன்றான சாத்திரங்கள் கற்றநீங்கள்
குவலயத்தில் வேதைமுகம் வேணதுண்டு
வென்றிடவே உந்தமக்கு வேறுண்டோசொல்
வேதாந்த சித்துமுனியார் தான்உண்டோ
சென்றவர்கள் மடிந்தவர்கள் கோடானுகோடி
செகதலத்தில் உம்மைப்போல் சித்துகாணே. (6451)

சித்தான நாதரையாம் கண்டதில்லை
சிறப்புடைய நாதரவர் நீர்தாம்என்று
புத்தியுள்ள பூபாலர் உம்மைப்போலே
பூவுலகில் பெரியோரைக் கண்டதில்லை
சத்தியத்தில் மிகுந்ததொரு தருமவான்போல்
சட்டமுடன் முகதாவில் வந்தீர்என்று
புத்தியுடன் தந்திரமாய் வார்த்தைகூறி
புனிதனே வீட்டகற்றல் மெத்தநன்றே.
(6452)

நன்றான வார்த்தையது மிகவுங்கூறி
நலமுடனே பொய்ப்பகட்டு யாவும்கூறி
சென்றிடவே பின்தொடர்ந்து வழிதான்விட்டு
சென்மமுள்ள சீவன்தான் உள்ளமட்டும்
வென்றிடவே எப்போதும் மறக்கேன்என்றும்
வேதாந்த சித்தொளிவைப் பணிவேன்என்றும்
குன்றியே முகம்வாடி மனதுஉவந்து
குருபரனே தந்திரமாய் பணிகுவாயே.
(6453)

பணியவே கருமிஎன்ற சீடருக்கு
பாலமுதம் உண்டதொரு சந்தோ"ம்போல்
கணிதமுடன் தமக்குஉகந்த சீடன்என்று
கருத்துடனே உன்மீதில் பட்சம்வைத்து
அணிபெறவே விழியில்லான் என்றுஉவந்து
அப்பனே கடாட்சமது மிகப் புரிந்து
துணிவுடனே உன்மீதில் கிருபைவைத்து
துப்புரவாய் பற்பமது கொள்ளார்தானே.
(6454)

தானான புலிப்பாணி மைந்தாகேளு
தண்மையுள்ள நல்லோரும் தீங்கோருண்டு
கோனான குருக்கள்மார் யோகிமாண்பர்
கொற்றவனே ஜகதலத்தில் மெத்தஉண்டு
தேனான வார்த்தையது மிகவும் சொல்வார்
தெள்ளமிர்த மானதொரு நேசம்செய்வார்
பானான சீடன்மேல் பட்சம்வைத்து
பகட்டுவார் மெய்ப்பகட்டு அதிகம்பாரே.
(6455)

மாரண வேதை

பாரப்பா லோகமென்ற மாரணத்தைப்
பக்குவமாய்ப் பகருகிறேன் மன்னாகேளு
ஆரப்பா லோகமாரணத்தைச் சொன்னார்
அப்பனே சொன்னவர்கள் மறைத்துச்சொன்னார்
நேரப்பா உந்தனுக்கு சிடிகைவேதை
நேர்மையுடன் நான் உரைப்பேன் நீதியாக
கூறப்பா செம்பதுவும் பத்தேயாகும்
குறிப்பான வெள்ளியது ரெண்டுதானே. (6456)

தானான நாகமது ஒன்றேயாகும்
தாக்குடனே பதின்மூன்றும் ஒன்றாய்க்கூட்டி
தேனான செம்புதனை ஊதிப்போடு
தேற்றமுடன் சுத்தித்த செம்புதன்னை
மானான செம்புதன்னைப் பதனம்பண்ணு
மகத்தான லோகம்வகை வரிசைகேளு
கோனான தங்கமது ஒன்றேயாகும்
குறிப்பான வெள்ளியது ஒன்றுகாணே. (6457)

காணவே நாகமது ஒன்றேயாகும்
கனமான சூதமது ஒன்றேயாகும்
தோணவே முன்னுரைத்த செம்புதன்னில்
தோறாமலோ ஓர்இடைதான் எடுத்துக்கொண்டு
பூணவே மூவகை ஜெயநீராலே
புகழாகத் தான் அரைப்பாய் சாமமப்பா
மாணவே சரக்கெல்லாம் அறைத்தபின்பு
மார்க்கமுடன் மாத்திரை களைந்துபாரே. (6458)

செய்யவே வெள்ளிதனில் பத்துக்குஒன்று
செம்மலுடன் தான்உருக்கி குருதான் ஒன்று
பையவே கண்விட்டு ஆடும்போது
பாகமுடன் தான் உருக்கி குருஒன்றுஈய
துய்யதொரு வெள்ளியது மாற்றுஆறு ஆகும்
துப்புரவாய்ப் பசுமையது சொல்லப்போமோ
மெய்யான வித்தையிது ஏமவித்தை
மேதினியில் செய்பவர்கள் இல்லைதானே. (6459)

இல்லையே பத்துக்கோர் தங்கஞ்சேர்த்து
        எழிலான வாரடித்து புடத்தைப்போடு
தொல்லையெனும் பிறவியது மாறாத்தங்கம்
        சுயத்தங்கம் புடத்தங்கம் பசுமைத்தங்கம்
அல்லலது போக்கடிக்கும் அருமைத் தங்கம்
        ஆகாகா நாதாக்கள் மறைத்ததங்கம்
கல்லிலது விளைந்ததொரு தங்கந்தானும்
        கருவான தங்கம் இதற்குஒவ்வாதன்றே. (6460)

அன்றான தங்கமது என்னசொல்வேன்
        அரகர நாதாக்கள் ஒளித்ததங்கம்
குன்றான சாத்திரத்தில் மறைத்ததங்கம்
        கோவேந்தர் சுட்டலைந்து கெட்டதங்கம்
வென்றிடவே உந்தமக்கு ஓதிவைத்தேன்
        வேதாந்தக் கண்மணியே புத்திவானே
கன்றில்லாப் பால்கறந்த கதையைப்போலே
        காசினியில் சித்தர்எல்லாம் ஒளித்தார்தானே. (6461)

சூதவெள்ளி

தாமான இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
        தண்மையுள்ள புலிப்பாணி தம்பிரானே
கோமானுக்கு ஒப்பான கோவே கேண்மோ
        குவலயத்தில் எந்தனிட சத்தியவானே
ஆமான மானதொரு சத்தியவானே
        அப்பனே வெகுகோடி நூல்கள்பார்த்து
சாமானிய மானதொரு சூதவெள்ளி
        சாற்றுகிறேன் சன்மார்க்கப் புனிதவானே. (6462)

புனிதமாஞ் சூதமது துலாமேவைத்து
        புகழான காடியென்ற காரந்தானும்
கனிவுடனே காரமது ஒன்றேயாகும்
        கனமான மூசைதனில் இட்டுமைந்தா
பனிபோன்ற ஆறுவகை ஜெயநீர்தன்னால்
        பாங்குடனே மூசைதனில் நிறையவிட்டு
இனிதாகக் கலசமென்ற மண்பாண்டத்தில்
        எழிலாக மணலிட்டு மூசைவையே. (6463)

வைத்துமே மேல்மூடி சீலைசெய்து
வளமாக மேலுமந்த மணலைக்கொட்டி
சத்தமது போகாமல் பாண்டமிட்டு
சதுராகச் சீலையது வலுவாய்ச் செய்து
சுத்தமுடன் கணபதியைப் போற்றிசெய்து
சுந்தரனே நாற்சாமம் எரிப்பாயப்பா
துத்தமெனுங் காடிஎன்ற காரத்தாலே
துடியான சூதமது மடியலாச்சே.
(6464)

ஆச்சப்பா பாண்டமதை திறந்துமைந்தா
அப்பனே மூசைதனில் இருக்கும்சத்தை
பாச்சலென்ற சூதமது வெண்ணைதன்னை
பக்குவமாய் வழித்தெடுத்து பீங்கான்இட்டு
மூச்சடங்கிப் போனதொரு சூதம்தன்னில்
முசியாமல் கல்லுப்பு துலாமேபோடு
மாச்சலுடன் சூதமென்ற வெண்ணைதானும்
மார்க்கமுடன் உருகியல்லோ நிற்கும்பாரே.
(6465)

நிற்குமே சூதமென்ற வெண்ணைதன்னை
நீதியுடன் மூசையிட்டு உருக்கிப்பாரு
அற்பமென்று நினையாதே அறிவுள்ளானே
ஆகாகா வானத்து மீன்தானாச்சு
சொற்பமென்று நினையாமல் ரவிவான்சேர்த்து
துப்புரவாய்ப் பூசையது செப்பக்கேளு
துற்கையென்ற காளிக்குப் பூசைபோடு
துறையான வெள்ளிமுகம் காணலாமே.
(6466)

காணலாம் சூதமென்ற வெள்ளிதன்னை
காசினியில் நாதாந்த சித்தர்தாமும்
பூணலாஞ் சிதறுமுனிக்கு ஆனவேதை
பூவுலகில் சமுசாரிக்கு ஆகாவேதை
வேணபடி சூதமதைக் கொன்றபேர்க்கு
வெகுபாடு வெகுகேடு குஷ்டரோகம்
ஆணவங்கள் தானொடுங்கி யழிந்துதேகம்
அப்பனே சயரோக மாவார்பாரே.
(6467)

பாரப்பா சூதமதைக் கொன்றபேர்கள்
பாருலகில் வெகுபேர்கள் மடிந்தாரப்பா
நேரப்பா தவயோகி வேடம்பூண்ட
நிஷ்களங்க மானதொரு சிவயோகிக்கும்
கூறப்பா வித்தையது பலிக்கும்பாரு
குவலயத்தில் மற்றோர்க்குப் பலியாதப்பா
ஆரப்பா புலிப்பாணி புனிதவானே
அன்புடனே யான்உரைத்தேன் பண்பாய்க்கேளே.
(6468)

சூதசெந்தூரம்

பண்பான புலிப்பாணி பாலாகேளீர்
பகருகிறேன் சூதம்என்ற செந்தூரத்தை
நண்பான நூல்களுள் ஆராய்ந்தேதான்
நாதாந்த சித்துமுனி அறிந்துமல்லோ
திண்பான செந்தூரப் போக்குதன்னை
திசைமாறி இடைமாறிப் பிரட்டல்செய்து
உண்மையாய்ச் சொன்னதொரு மொழியைப்போலே
உவமைகொண்டு பாடிவைத்தார் பேதந்தானே.
(6469)

பேதமாம் சூதமென்ற வெண்ணைத்தானும்
பேரான கெந்தியென்ற திராவகத்தால்
நீதமுடன் தான் அரைப்பாய் இரண்டுசாமம்
நிர்மலமாய் சூதமதை மடிந்துகொல்லும்
போதமுடன் காசியென்ற குப்பிதன்னில்
பொங்கமுடன் மர்க்கல்லால் கொண்டுமூடி
வாதமது பலிப்பதற்கு மெய்யேஆனால்
வளமான சீலையது வலுவாய்போடே. (6470)

போடேநீ குப்பிக்குச் சீலையேழு
பொங்கமுடன் வாயைவிட்டுச் சீலைசெய்து
கூடேதான் தளவாயாம் பாண்டந்தன்னில்
கொற்றவனே மணலிட்டுக் குப்பிவைத்து
நாடேதான் குப்பிதனில் மணலுமிட்டு
நயமாக மேல்மூடி சீலைசெய்து
ஆடேநீ நாற்சாமம் எரித்தபோது
அப்பனே செந்தூர மாகும்பாரே. (6471)

பாரேதான் செந்தூரந் தனையெடுத்து
பாங்குடனே நாதாக்கள் சொன்னமார்க்கம்
சேரேதான் வெள்ளியது களஞ்சிநூறு
தேற்றமுடன் தானெடுத்துக்குகையிலிட்டு
கூரேதான் தான்உருக்கி மைந்தாகேளு
குறிப்புடனே குருவொன்று தன்னையீய
வீரேதான் வர்ணமது என்னசொல்வேன்
வீறான போக்கதுவும் கூறப்போமோ.

(6472)

போமேதான் வெள்ளிதனை உருக்கிப்பார்க்க
போக்கான வெள்ளியது தங்கமாச்சு
நாமேதான் சொன்னபடி தங்கமாற்று
நாதாக்கள் தம்மாலே கூறப்போமோ
வேமேதான் பிறவிஎன்ற தங்கந்தானும்
வேதாந்தத் தங்கமது இதற்கீடுண்டோ
ஆமேதான் சிவயோகத் தங்கமாகும்
அப்பனே காலாங்கி தங்கமாமே.

(6473)

தங்கமாம் இன்னமொரு போக்குசொல்வேன்
தண்மையுள்ள புலிப்பாணி தயவாய்க்கேளு
வங்கமதை தான்கொடுத்து ஊதிச்செம்பை
வளமாகத் தான்உருக்கி எடுத்துமைந்தா
துங்கமுள்ள செம்பதனில் நூற்றுக்குஒன்று
துப்புரவாய்த் தான்உருக்கி குருவொன்றீய
பங்கமிலாத் தங்கமது என்னசொல்வேன்
பாருலகில் சிவயோகி காணலாச்சே.

(6474)

ஆச்சப்பா செம்பதுவும் தங்கமாச்சு
அப்பனே நாதாக்கள் மறைத்துவைத்தார்
மாச்சலது வாராது தங்கச்செம்பாம்
மகத்தான தங்கமது இதற்குஈடுண்டோ
பூச்சுடையபிறவி என்ற தங்கரேக்கு
புகலவொண்ணா சுயத்தங்கம் இதற்குஈடுண்டோ
ஆச்சர்ய மானதொரு தங்கமாச்சு
அப்பனே நாதாக்கள் மறைத்தார் தானே.

(6475)

தானான தங்கமதைத் தான்எடுத்து
தண்மைபெற வெள்ளிதனில் பத்துக்கொன்று
கோனான குகைதனிலே விட்டுருக்கி
கொற்றவனே செம்பதுவும் ஒன்றோய்ந்தால்
தேனான வெள்ளியது பழுக்கும்பாரு
தேற்றமுடன் மாற்றதுவும் கூறப்போமோ
மானான தேவேந்திரன் வீற்றிருக்கும்
மகத்தான ஆணியென்ற தங்கமாச்சே. (6476)

ஆணியாம் இன்னமொரு போக்குசொல்வேன்
அப்பனே புலிப்பாணி மைந்தாகேளு
காணியாம் செந்தூரம் எடுத்துமைந்தா
கருத்துடனே குடவனிலே நூற்றுக்கொன்று
வாணிபதந் தாள்வணங்கி கொடுத்துப்பாரு
வளமான குடவனது ஊறல்ஏகி
ஆணியாந் தங்கமதுக் கொப்பேசொல்வார்
அப்பனே இந்திரபீட தங்கமாச்சே. (6477)

இந்திரனார் வீற்றிருக்கும் ஆணித்தங்கம்
எழிலான தங்கமது எவர்தான் செய்வார்
சுந்தரம்போல் சிவவேடம் பூண்டுமல்லோ
துப்புரவாய்த் தான் இருக்கும் யோகவான்கள்
விந்தையுடன் வினோதமென்ற வேதைதன்னை
விருப்பமுடன் செய்துமல்லோ மனதுஉவந்து
அந்தரமெலாம் புகழ வரமும்பெற்று
அப்பனே சித்திருப்பார் யோகமாண்பே. (6478)

வெடியுப்பு கட்டு

மாண்பான இன்னமொரு போக்குசொல்வேன்
மகத்தான புலிப்பாணி மன்னாகேளு
ஆண்மையுள்ள காலாங்கி நாதர்பாதம்
அப்பனே நான்வணங்கு சீனதேசம்
வீண் காலம் போகாமல் குளிகைகொண்டு
விட்டகுறை இருந்ததொரு புண்ணியத்தால்
தாண்டவம்போல் தேசாதி தேசமெல்லாம்
சற்குருவைத் தான் அடுத்து வரம்பெற்றேனே.
(6479)

பெற்றேனே காலாங்கி கடாட்சத்தாலும்
பெருமையுள்ள மனோன்மணியாள் கிருபையாலும்
சுற்றறிந்த நாதாக்கள் அருளினாலும்
கைலாச நாதருட புண்ணியத்தால்
சுற்றெங்குந் தேடியல்லோ கண்டு ஆராய்ந்து
சுத்தமுடன் வேதைமுகம் உளவுகண்டு
றதொரு மைந்தனைப்போல் உன்னையெண்ணி
பெருமையுள்ள மார்க்கமெல்லாம் ஓதினேனே.
(6480)

ஓதினேனே சிடிகையென்ற வேதையப்பா
உத்தமனே வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
தீதில்லா உப்பதுவும் கம்பிஉப்பு
தீர்க்கமுடன் பலமைந்து நிறுத்துமைந்தா
ஆதியென்ற முப்பூவைப் பூழச்சாற்றாலே
அப்பனே தான் அரைத்துக் கவசம்செய்து
சோதிமயம் தான்பெறவே ரவியில் வைத்து
சோராமல் சீலைய்து வலுவாய்ச்செய்யே.
(6481)

செய்யவே கோழிஎன்ற புடத்தைப்போடு
செயலான உப்பதுவும் கட்டிப்போச்சு
பையவே உப்பதுவும் கட்டிற்றானால்
பாலகனே ஏமமென்ற செடியுமாச்சு
துயயதொரு உப்பாலே எல்லாஞ்சித்தி
துப்புரவாய் ஜகத்தினிலை அற்றபோர்க்கு
உய்யதொரு பொருள் எல்லாம் தோயும்தோயும்
உத்தமனே வெடியுப்பைக் கண்டோர்தாமே.
(6482)

கண்டவர்க்கு உப்பினிட மார்க்கந்தன்னை
காட்டார்கள் கருவாளி மாணபாளல்லாம்
விண்டதொரு உப்பினால் அப்புக்கட்டும்
விண்ணுலகு மண்ணுலகும் இதிலடக்கம்
சண்டமா ருதங்கொண்ட உப்பினாலே
தொண்டு செய்து உப்பதனை அறியவேண்டும்
சகமெலாம் படல்கட்டி ஆறியவேண்டும்
துரைராஜ சுந்தரனே செப்பக்கேளே.
(6483)

செப்பவென்றால் வெடியுப்பை விட்டாலல்லோ
செம்மலுடன் பூவுமில்லைக் காயுமில்லை
அப்பினால் உப்பதனைக் கட்டலாகும்
ஆகாகா நாதாக்கள் சிடிகைவேதை
ஒப்பமுடன் சிடிகையென்ற உப்புதன்னை
ஓகோகோ நாதாக்கள் மறைத்துவைத்தார்
தப்பிதங்கள் நேராது உப்பின்மார்க்கம்
தன்மையுள்ள மன்னவனே சாற்றக்கேளே.

(6484)

சாற்றவென்றால் உப்பினிட கட்டினத்தை
சாங்கமுடன் குகையில்இட்டு உருக்கிமைந்தா
திட்டமுடன் குழலொன்று செய்துமல்லோ
தீர்க்கமுடன் நாலுபட்டை யாகச்செய்து
வட்டமுடன் உப்பதனை உருக்கிமைந்தா
வளமையுள்ள கருக்குழலில் பாச்சியேதான்
நாட்டமது நேராமல் கருவைநீக்கி
நயம்பெறவே உப்பதனை எடுத்திடாயே.

(6485)

எடுத்துமே உப்பதனைச் சொல்லக்கேளு
எழிலான பஞ்சவர்ணம் ஏற்றப்பாரு
தொடுத்ததொரு லிங்கமதை அரைத்துமைந்தா
தோறாமல் ஒருபக்கம் பூசிப்போடு
விடுத்ததொரு தாளகத்தை எடுத்துபாலா
விருப்பமுடன் ஒருபக்கம் பூசிப்போடு
படுத்ததொரு கெந்தகத்தை அறைத்துமைந்தா
பாங்குடனே ஒருபக்கம் பூசிப்போடே.

(6486)

போடேதான் கெவுரியது எடுத்துமைந்தா
பொங்கமுடன் ஒருபக்கம் பூசிப்போடு
ஆடேதான் நாற்சரக்கும் ஆனபின்பு
அப்பனே சீலையது வலுவாய்ச்செய்து
நாடேதான் ரவிதனிலே காயப்போடு
நலமான புடமதுவும் கோழியாகும்
தேடவே புடம்போட்டு எடுத்துப்பாரு
தெளிவான வர்ணமது தோற்றும்பாரே.

(6487)

தோற்றவே பக்கமொரு வர்ணபேதங்
தோறாத கம்பியுப்பு சாரணையேயாக்க
மாற்றதுவும் சொல்லஎன்றால் நாவேயில்லை
மகத்தான சாஸ்திரந்தான் ஓடும்பாரு
ஆற்றலே லிங்கமது மாற்றுஆயிரந்தான்
அப்பனே சொல்வதற்கு நாவுமில்லை
தேற்றமுடன் தாளகமும் ரெண்டாயிரம்மாற்று
தெளிவான உப்பினிட வேகம்பாரே.
(6488)

வேகமாம் கெந்தியது மூவாயிரம்மாற்று
எழிலான வேதைமுகஞ் சொல்லொண்ணாது
பாகமுடன் கெவுரியது ஐந்நூறுமாற்று
பாங்குடனே வேதைமுகம் சொல்லும்பாரு
சாகமுடன் உப்பினுட மேற்பட்டையப்பா
சதாநந்தர் வைகுந்தர் அறிவாரோதான்
போகமது கொண்டதொரு காலாங்கிநாதர்
பொன்னவனே எந்தனுக்கு உரைத்தார்தானே.
(6489)

தானான மாற்றினுட வேகமப்பா
தாரணியில் சித்தர்தம்மால் சொல்லப்போமோ
கோனான காலாங்கி கடாட்சத்தாலே
கொற்றவனே யான்உரைத்தேன் உந்தமக்கு
தேனான முறையதுவை யாரும்சொல்லார்
தேவாதி என்குருவே எந்தன்மைந்தா
பானான பரஞ்சுடரே உந்தமக்குப்
பாரினிலே பாலித்தேன் பண்பாய்த்தானே.
(6490)

பண்பான வேதையிது தாம்பிரவேதை
பாலகனே யாருந்தான் விள்ளாரப்பா
நண்பான சாத்திரத்தில் சொல்லிருந்தும்
நலமான மனோன்மணித்தாய் மறைத்தபாவம்
உண்மையாய் உளவறிந்து உரைத்தேன்தானே

கண்மலரோ பொன்மலரோ நீயெனக்கு
கருதாதே ஒருவருக்குங் காட்டொண்ணாதே.
(6491)

காட்டினால் லோகமெல்லாம் சித்தாய்ப்போகும்
கனமோசம் கனலோகம் கருவாய்ப்போகும்
நீட்டமுடன் சிவயோகி மாண்பாரப்பா
நீணிலத்தில் செய்துமல்லோ கண்டுஆராய்வார்
வாட்டமுடன் முறைபாடு கைபாடாக
வளமையுடன் செய்தவர்க்கு எல்லாம்சித்தி
தாட்டிகமாய்ப் புத்திவான் அறிவானப்பா
கண்டாள கருமிகளும் அறியார்பாரே. (6492)

கல்லுப்பு வேதை

பாரேதான் இன்னமொரு போக்குசொல்வேன்
பண்பான பரிகாரமான போக்கு
நேரேதான் புலிப்பாணி மன்னாகேளு
நேர்மையுடன் உந்தமக்கு உபதேசிப்பேன்
சீரேதான் பெரும்பாடியாம் லவணந்தன்னை
சிறப்புடனே தான்எடுத்து மனதுவந்து
நீரேதான் சொன்னமுறை வழிபாடாக
நிமலனே கைபாகஞ் செய்திடாயே. (6493)

செய்யவென்றால் உப்பதனை சேரைவாங்கி
செப்பவென்றால் வன்னியது பட்டையப்பா
கொய்யவே தானிடித்து மாவதாக்கி
சுகம்பெறவே உப்புக்குக் கீழ்மேலிட்டு
துய்யநல்ல உப்பதனை நடுவேவைத்து
துரைராஜ சுந்தரனே செப்பக்கேளு
வெய்யதமிழ்ப் பண்டிதங்கள் பலிப்பதற்கு
வேதாந்தத் தாயாரை வேண்டிக்கொள்ளே. (6494)

கொள்ளவே உப்பதனை சீலைசெய்து
கொப்பெனவே ரவிதனிலே காயவைத்து
மெள்ளவே கோழியென்ற புடத்தைப்போடு
மேன்மையுள்ள உப்பதுவுங் கட்டிப்போகும்
கள்ளமது வாராது உப்புக்கப்பா
காசினியில் கருவாளி அறிவான்பாரு
உள்ளபடி யான்உரைத்தேன் உந்தமக்கு
உத்தமனே கைபாகஞ் செய்வாய்காணே.
(6495)

காணவென்றால் உப்பதனை எடுத்துமைந்தா
கலங்காமல் பூநீரை சுத்திசெய்து
தோணவே நாலுகோரிடை தான்சேர்த்து
தோறாமல் தான் அரைப்பாய் கல்வமிட்டு
வேணபடி வன்னியின்தன் பட்டைச்சாற்றால்
வேகமுடன் தான்அரைப்பாய் நாலுஜாமம்
பூணவே பில்லையது லகுவாய்ச்செய்து
புண்ணியனே கோழியென்ற புடத்தைப்போடே. (6496)

புடமான புடமதுவும் ஆறிப்பாரு
புகழான உப்பினிட கட்டியல்லோ
நீடேதான் நிஷ்களங்க மானஉப்பு
நீடாழிஉலகு பதியார்தான் கண்டார்
கோடான கோடிமனு சித்தருண்டு
கொற்றவர்கள் கண்டுமல்லோ மறைத்தே வைத்தார்
பாடான பாடதுவும் யார்தான் செய்வார்
பாலகனே விதியாளி செய்வான்தானே. (6497)

உப்புக்கட்டு செந்தூரவேதை

விதியான கட்டென்ற உப்பைத்தானும்
விமலனே செந்தூரம் செய்யக்கேளு
மதிபோன்ற உப்பதுவுங் கசிவுநீங்கி
மகத்தான தவளட போல் உருகியல்லோ
துதியான உருக்கினம்போல் குடோரியாக
துப்புரவாய் இருக்கும்மந்த உப்புதன்னை
பதியானஅன மென்ற பேதிதன்னை
பாலகனே நாலுக்கோர் அளவு சேரே. (6498)

சேர்த்துமே கல்வத்தில் பழச்சார்விட்டு
செம்மையுடன் தான்அறைப்பாய் நாலுசாமம்
பார்த்துமே பில்லையது லகுவாய்ச்செய்து
பாலகனே ரவிதனிலே காயவைத்து
ஆர்த்துமே சில்லிட்டுச் சீலைசெய்து
அப்பனே யெழுசீலை வலுவாய்ச்செய்து
பூர்க்கவே செந்தூரம் லபிப்பதற்கு
புகழான அடுப்பில்வைத்து எரித்திடாயே. (6499)

எரிப்பதற்கு வயணமது சொல்வேன் அப்பா
        எழிலான தளவாயாம் பாண்டந்தன்னில்
திரியான மணலதனைக் கொட்டிமைந்தா
        தீர்க்கமுடன் கல்தன்னை மேலேவைத்து
சொரியான கருமணலை இன்னுமல்லோ
        சோராமல் பாண்டமதில் மணலைக்கொட்டி
சரியாக மேற்பாண்டந் தன்னைமூடி
        சட்டமுடன் தான்எரிப்பாய்ச் சாமம்நாலே. (6500)

நாலான சாமமது எரித்தபோது
        நலமான செந்தூரம் என்னசொல்வேன்
காலான செந்தூரம் தனைஎடுத்து
        கருமான வெள்ளிதனில் பத்துக்கொன்று
மாலான வெள்ளியது உருகும்போது
        மகத்தான செந்தூரம் களஞ்சிராய்ந்து
கோலான கரியினால் கிண்டும்போது
        கொற்றவனே உட்கொண்டு பழுக்கும்பாரே. (6501)

பாரேதான் மாற்றதுவும்என்ன சொல்வேன்
        பாங்கான வயததுவும் எட்டும் ஆகும்
கூறேதான் நாலுக்கோர் தங்கம்சேர்த்து
        குறிப்புடனே வாரடித்துப் புடத்தைப்போடு
நேரேதான் மறுபடியும் உருக்கிப்பாரு
        நேர்மையுள்ள தங்கமது கூறப்போமோ
ஆரேதான் செய்வார்கள் இந்தப்போக்கு
        அப்பனே உந்தமக்கு உரைத்தேன்தானே. (6502)

தானான புடத்தங்கம் பிறவித்தங்கம்
        தண்மையுள்ள குடோரியது உறங்காதப்பா
கோனான சிவராஜதங்கமப்பா
        கொற்றவனே லவணமதில் பிறந்ததங்கம்
தேனான சிவயோகிக்கு உகந்ததங்கம்
        தெளிவான நாணயத்துக்கு உகந்ததங்கம்
மானான வையகத்தில் மாண்பர்தாமும்
        மார்க்கமுடன் செய்கின்ற தங்கமாமே. (6503)

தங்கமாம் லவணம்என்ற காரசாரம்
தாரணியில் வெகுமாண்பர் காணமாட்டார்
புங்ககித்தி எட்டுஉரியோன் காண்பான்பாரு
புகழான சித்துமுனி செய்யும்தங்கம்
வங்கமதற்கு ஏங்காது வரணத்தங்கம்
வளமான புரிசடையோன் அணியுந்தங்கம்
இங்கிதமாய் சமுசாரி வழங்கும்தங்கம்
எழிலான உப்பினுட தங்கம்காணே. (6504)

தேர்மகிமை பஞ்சபூதவொடுக்க வேதைமுகம்

காணேதான் இன்னம்ஒரு மார்க்கம் சொல்வேன்
கருவான புலிப்பாணி கண்ணியவானே
தோணவே பூதம்என்றால் பஞ்சபூதம்
சொல்லுகிறேன் நாதாக்கள் மகிமைதன்னை
வேணபடி வாதம்எனுந் தேர்தான் அப்பா
விருப்பமுடன் பூட்டுகிறேன் பஞ்சபூதம்
ஆண்அரசா முன்னுக்குள் அஞ்சுபூதம்
அப்பனே சரக்குவகை பூதமஞ்சே. (6505)

அஞ்சானது ஏதுஎன்று கேட்பாயானால்
அப்பனே தங்கமது பிரிதிவாகும்
துஞ்சல்என்ற இரும்பு அதுவும் வாயுவாகும்
துப்புரவாய்ச் செம்புஅதுவும் தேய்வாகும்
மிஞ்சவே காரீயம் அப்புவாகும்
மிக்கான நாகம்அது ஆகாசந்தான்
துஞ்சலென்ற லோகமது அஞ்சுங்கூடி
துறையான பஞ்சபூதம் ஒடுக்கந்தானே. (6506)

ஒடுக்கமாந் தேருக்கு இருசியாச்சு
உத்தமனே பீடமது உரைப்பேன்பாரு
தொடுக்கவே பாஷாண பஞ்சபூதம்
தோராமல் பீடகை அரைப்பேன்பாரு
இடுக்கமுள்ள கெந்தியது பிரிதிவாகும்
எழிலான கெவுரியது தேய்வுமாகும்
விடுக்கவே லிங்கமது ஆகாசமாகும்
விரிவான வீரமது அப்புமாமே.
(6507)

அப்பான துரிசியது வாய்வும் ஆகும்
அழகாக பாஷாண பஞ்சபூதம்
உப்பான காரசார பஞ்சபூதம்
உத்தமனே யான்உரைப்பேன் விபரம்கேளு
கப்பல்என்ற தேருக்கு உருளையப்பா
கனமான லவணம்என்ற பூதமெல்லாம்
ஓப்பமுடன் வெடியுப்பு பிரிதிவாகும்
ஓகோகோ நாதாக்கள் ஆடுங்கூத்தே.
(6508)

கூத்தான வெடியுப்பு பிரிதிவாச்சு
குணமான வளையலுப்பு தேய்வுமாச்சு
நாத்தமென்ற கல்லுப்பு அப்புவாச்சு
நலமான சீனமது வாய்வுமாச்சு
சாத்திரத்தில் உரைத்தபடி பூநீரப்பா
தண்மையுள்ள ஆகாசந் தானேஆகும்
சூத்திரமாம் பிரிதிவினில் உற்பவித்த
சுடரான உப்பதுவும் ஆகாசம்ஆச்சே.
(6509)

ஆச்சப்பா சரக்கு அறுபத்திநான்கும்
அப்பனே ஐந்தைந்தாய் யுகம்பிரித்து
மூச்சடங்கிக் கிடந்ததொரு தேருக்கப்பா
முனையான சட்டமதில் தாள்கள் பார்த்து
ஆச்சரிய மாகவல்லோ சிகரம்மட்டும்
அப்பனே தூண்நிறுத்தி கால்கள்நாட்டி
பாச்சலென்ன உபசாரங்கள் தெண்ணூற்றாறும்
மார்க்கமுடன் அலங்கரித்து வரிசைகேளே.
(6510)

வரிசைபெற நவரத்தனம் ஒன்பதும்தான்
வளமைபெற கள்ளாணி ஆக்கிக்கொண்டு
அறிவுடைய சிம்பமதில் அத்திரந்தான்
அப்பனே மூலிகையைக் கயர்போலாக்கி
புரிசடையோன் தம்பிரான் தன்னைதானும்
புகழான தேர்மீதில் உச்சாடித்து
சரியுடனே மூலமதில்தான் கொண்டுபூட்டி
தற்பரனை கள்ளாணி முடுக்கிடாயே.
(6511)

முடுக்கவே கருவிகர ணாதிஅந்தம்
முனையான உடல்பொருள் கள்ஆவியெல்லாம்
தொடுக்கவே அண்டசராசரங்கள் மட்டும்
தோறாமல் தாம்கண்ட வேதைகோடி
நடுக்கடலில் நாணிஅறுந் திட்டாற்போலே
நலமான பூதமெல்லாம் ஒன்றேயானால்
படுகணையில் மாறன்விட்ட அம்புபோலே
பாரினிலே வாதமது பலிக்கும்பாரே.

(6512)

பலிக்குமே அறிவுடையோன் செய்துகொள்ளும்
பாங்கான வேதைமுகம் கோடாகோடி
ஜொலிக்குமே பிரணவத்தால் மூலிகட்டும்
சோராமல் சரக்குஎல்லாம் சுருண்டுமாளும்
ஒலிக்குமே லோகம்எல்லாம் ஒன்றாய்க்கூடி
உத்தமனே வாதத்துக்கு உறுதியாச்சு
சலியாத சரக்குஎல்லாம் ஐந்தஐந்துஆக
சட்டமுடன் செய்வார்க்கு வாதம்மே.

(6513)

வாதமென்றால் சரக்குகளில் பஞ்சபூதம்
வளமான பூதமதில் ஒன்றுதப்பில்
கீதமென்ற கின்னரிக்கு நாண் அற்றால்பேதல்
கீர்த்தியுள்ள சரக்குஎல்லாம் விழலாய்ப்போகும்
தோதமுடன் வாதமது காணஎன்றால்
தோறாமல் பஞ்ச பூதத்தைப்பாரு
பேதமது வாராது பூதம்கண்டால்
பேரான உலகினிலே சித்தாவாயே.

(6514)

சித்தான சித்துமுனி இந்தமார்க்கம்
சிறப்புடன் சாத்திரத்தில் சொல்லவில்லை
முத்தான நூல்எல்லாம் அனேகங்கண்டேன்
முனையான பஞ்சபூத பேதந்தன்னை
சத்தேனும் மாண்பர்களும் பிழைப்பதற்கு
தயவுவைத்து யாரேனும் கூறவில்லை
முத்திபெற சாத்திரங்கள் கோடாகோடி
மூதுலகில் சொன்னவர்கள் கோடிஉண்டே.

(6515)

கோடியே நாதாந்த சித்துதாமும்
குறிப்புடனே சாத்திரங்கள் அதிதஞ்சொன்னார்
தேடியே சாத்திரங்கள் தலைவகுத்து
செப்பினார் யாதொன்றும் கண்டதில்லை
பாடியதோர் வெகுநூல்கள் கைமறப்பு
பாருலகில் பாடிவைத்தார் சித்தர்தாமும்
நீடியே உந்தனுக்கு வாதம்காண
நீதியுடன் போதித்தேன் உண்மைதானே. (6516)

6508)

சூதவெள்ளி மணி

உண்மையாம் இன்னமொரு பாகம்சொல்வேன்
உத்தமனே நாதாக்கள் சொன்னாரில்லை
வண்மையுள்ள காலாங்கி கிருபையாலே
வளம்பெரிய சித்தர்எல்லாம் மறைத்துவைத்த
தண்மையுள்ள கைபாகம் செய்பாகத்தை
சட்டமுடன் நாதாக்கள் கூறவில்லை
நன்மைபெற மாண்பர்களும் பிழைக்களன்று
நன்மையுடன் யான்உரைப்பேன் பண்புதானே. (6517)

தானான சூதமது பலம்தான் ஐந்து
தாக்குடனே சுத்திசெய்து எடுத்துமைந்தா
பாங்குடனே மிருதாறு சிங்கிதன்னை
பட்சமுடன் தான் எடுத்து செப்பக்கேளு
மானான பலமதுவும் பத்தேஆகும்
மகத்தான கல்வமதில் இட்டு மைந்தா
தேனான செவ்வாயின் பழரசத்தால்
தேற்றமுடன் தான்அரைப்பாய் சாமம்நாலே. (6518)

நாலான சாமமது அரைத்தபின்பு
நலமான மூசையது குகைதான்செய்து
பாலான ரவிதனிலே காயவைத்து
பாங்குபெற மூசைதனை எடுத்துமைந்தா
தாலான தளவாயாம் பண்டம்தன்னில்
தன்மையுடன் பூமணலை கொட்டியல்லோ
காலான மூசைதனை மையம்வைத்து
கண்மணியே மூசைதனில் சூதம்தாக்கே.

(6519)

தாக்கவே மேலும் அந்த பில்லைமூடி
தளமுடனே மணலதனை மேலேபெய்து
நோக்கமுடன்தான் தான் எரிப்பாய் நாலுசாமம்
நுட்பமுடன் தீஆறி எடுத்துப்பாரு
பாக்கதுபோல் உருளையது திரண்டுமல்லோ
பாங்குடனே தான் இருக்கும் அருண்மைந்தாகேள்
வாக்கதுவும் பொய்யாது புண்ணியவானே
வளம்பெறவே சூதமதை எடுத்திடாயே.

(6520)

எடுத்துமே சூதம்என்ற மணியைஅப்பா
எழிலான சாரணைதான் செப்பக்கேளு
கொடுத்துமே ஆறுவகை செயநீர் தன்னால்
துப்புரவாய்த் தான் அரைப்பாய் நாலுசாமம்
விடுத்ததொரு வெண்ணைதனைத் தான்எடுத்து
விருப்பமுடன் நாகுஎன்ற காசந்தன்னை
அடுத்துமே பலமதுவும் நிறுத்துமைந்தா
அப்பனே கவசமது செய்திடாயே.

(6521)

செய்யவென்றால் காடிஎன்ற காரம்தன்னில்
செம்மலுடன் சூதம்என்ற வெண்ணைதன்னை
பையவே கவசமது செய்துபாலா
பாங்குபெற சுக்கானின் சீலைசெய்து
துய்யதொரு ரவிதனிலே காயவைத்து
துப்புரவா ஏழுசீலை வலுவாய்ச்செய்து
வெய்யவே உமிப்புடத்தில் போட்டுமைந்தா
விருப்பமுடன் தான்எடுப்பாய் பதமாய்த்தானே.

(6522)

பதமான சீலையது பிரித்து மைந்தா
பாங்குபெறத் தான் எடுப்பாய் சூதம்தன்னை
கதமான சூதமது இறுதியல்லோ
கண்மணியே கல்லதுபோல் இருக்கும்பாரு
பதமுடனே மணிஎடுத்து செப்பக்கேளு
பாங்குபெற வெள்ளாட்டுப் பாலினாலே
மிதமுடனே நாற்சாமம் சுருக்குதாக்கு
மிக்கான சூதம்என்ற மணியுமாமே.

(6523)

மணியான சூதமதை எடுத்துமைந்தா
மார்க்கமுடன் குளிகைக்கு வழிதான்சொல்வேன்
அணியான பூநாகம் பலம்பத்தப்பா
அப்பனே மண்போக்கி எடுத்துபாரு
கணிதமுடன் தேனதனில் அரைத்துமைந்தா
கருத்துடனே மணிதனக்குக் கவசம்செய்து
பணிதமுடன் சீலையது காவிக்கல்லால்
பான்மையுடன்தான் பொதிந்து ரவியில்போடே.
(6524)

போடவே ரவிதனிலே காய்ந்தபின்பு
பொங்கமுடன் மணல்மறைவில் புடத்தைப்போடு
தேடவே தீஆறி எடுத்துத்துப்பாரு
தெளிவுடனே கவசமது இறுகியல்லோ
மூடவே கவசமதை உடைத்துமைந்தா
உத்தமனே பார்க்கும் அந்த வேளைதன்னில்
கூடவே மண்ணாகஞ் செம்புதானும்
குணமான சூதமதை இறுக்கலாச்சே.
(6525)

ஆச்சப்பா சூதமது மணியும் ஆச்சு
அப்பனே சாரணைகள் இன்னம் சொல்வேன்
மூச்சடங்கி நெடுங்காலம் இருப்பதற்கு
முனையான சூதமதை மணியேசெய்தால்
பாச்சலுடன் நெடுந்தூரம் நடக்கலாகும்
பாங்கான குளிகையது கீழ்நோக்காது
வீச்சுடனே கிருஷ்ணாவ தாரன்அப்பா
விண்ணுலகில் ஆடியதோர் குளிகையாச்சே.
(6526)

குளிகைக்கு சாரணைகள் என்ன வென்றால்
கொற்றவனே ஊமத்தங் காய்கள் தன்னை
நளினமுடன் தான் அரைத்துக் கவசஞ்செய்து
நலமுடனே சீலையது வலுவாய்ச்செய்து
பளிதமது வராதுபாலாகேளு
பாங்குபெறமணல் மறைவில் புடத்தைப் போடு
வளிதமுடன் கவசமது நீக்கியல்லோ
வளமையுடன் தான் எடுத்து செப்பக்கேளே.
(6527)

செப்பவென்றால் குளிகையது என்னசொல்வேன்
செம்மலுடன் போகும்வகை முறைமைகேளு
ஓப்பமுடன் குளிகைதனை எடுத்துமைந்தா
ஓகோகோ நாதாக்கள் செப்பும்வண்ணம்
தப்பிதங்கள் வாராமல் தவளைசங்கு
சாங்கமுடன் தான் இடித்து மாவதாக்கி
இப்புவியில் சித்துவிளை யாடுதற்கு
எழிலான சாரணைகள் சொல்வேன்பாரே. (6528)

சொல்லவென்றால் சாரணை... ...ம்பழத்தால்
சுத்தமுடன் தான் அரைத்து மைபோலாக்கி
வெல்லவே சூதம்என்ற கட்டியப்பா
வேகமுடன் தான் அரைத்துக் கவசம்செய்து
புல்லவே ரவிதனிலே காயவைத்து
புகழான மண்மறைவில் புடத்தைப்போடு
வெல்லவே புடம்ஆறி எடுத்துப்பாரு
வேதாந்தத் தாயினது கடாட்சந்தானே. (6529)

தானான புடம் அதுவுங் கவசம்நீங்கி
தன்மையுள்ள மணிதனையே எடுத்துமைந்தா
பானான சங்கினிட கண்ணந்தனை
பார்த்திபனே தான்எடுத்து மைபோல்ஆட்டி
கோனான குருசொன்ன நீதிபோலே
கொற்றவனே கைமுறைகள் பிசகாமல்தான்
ஊனான சங்குதனை கவசம்செய்து
உத்தமனே புடம்நூறு போ...டாயே. (6530)

...டமதுவும் சதம்என்றால் நூறுபோடு
புகழான ரசமணியும் கட்டும்பாரு
தடமதுவும் நடப்பதற்கு இதுவேசித்தி
தண்மையுள்ள சூதமது குளிகை ஆச்சு
மடந்தனிலே தான்இருக்கும் சிவயோகிக்கு
மகத்தான குளிகையது கிட்டிற்று ஆனால்
நடராஜ சுந்தரனார் கிருபையாலே
நீ...சித்துஎனச் செப்பலாமே. (6531)

சித்தான சித்துகளும் இவர்க்கு ஈடுஉண்டோ
சிறப்பான நாதாக்கள் கண்டதில்லை
வெத்தியுடன் அஷ்டசித்தி இதனாலாகும்
வேதாந்தத் தாயாரும் பிரசங்கிப்பாள்
முத்திபெற மோட்சவழி காணலாகும்
முனையான சிவயோகிஇவர் தான்என்பார்
சத்தியங்கள் தவறாமல் குளிகைகொண்டு
சட்டமுடன் நடப்பவனே சித்தன்பாரே.
(6532)

பாரேதான் குளிகையது என்னசொல்வேன்
பாங்கான புலிப்பாணிப் பாவலோனே
நேரேதான் சாத்திரங்கள் உளவு ஆராய்ந்து
நேர்மையுடன் மாண்பர்களுக்கு ஆகவென்று
சீரேதான் குளிகைதனை முடித்துமல்லோ
சிறப்புடனே அஷ்டசித்து யாராலாகும்
ஆரோதான் உந்தமக்கு போதிப்பாரே
அப்பனே உந்தமக்கு அருள்செய்வேனே.
(6533)

அருளான அருள்இதுவும் என்னஎன்றால்
அப்பனே முன்செய்த புண்ணியத்தால்
பொருளான சூதம்என்ற மணிதான் அப்பா
புண்ணியனே உந்தமக்குக் கிட்டலாச்சு
இருளான பவக்கடலை விட்டகற்றி
எழிலான தவக்கடலை ஏகியேல்லோ
மருளான ஞானம்என்ற கடலைக்கண்டு
மன்னவே சிவயோக நிலையில்நில்லே.
(6534)

நிற்கவென்றால்உந் தமக்கு எல்லாம்கிட்டும்
நீதியுடன் சூதம்என்ற குளிகைதன்னால்
அற்பம்என்று நினையாதே அருண்மைந்தாகேள்
ஆகாகா விதிஇருந்து கிட்டலாச்சு
சொற்பம்எனும் கருமிஎன்ற மாண்பர்தம்மை
சுட்டுஅறுத்து விட்டுஅகற்றி துகள்அகற்றி
கற்புடைய மாயவலை சிக்குஅறுத்து
களங்கமில்லா சிவயோக தவத்தைப்போற்றே.
(6535)

போற்றியே சூதம்என்ற குளிகைதன்னை
பொங்கமுடன் துவாரம்இட்டுக் கயர்தான்மாட்டி
நாற்திசையும் மெச்சுதற்கு கண்டம்போல்
நாயகனே கழுத்திலிட்டு வேடம்பூண்டு
ஆற்றவே நெடுந்தூரம் நெடுந்தேசம்
அப்பனே ஆயிரமாம் காததூரம்
ஏற்றமுடன் தான்நடக்க வாசியோடும்
எழிலான குளிகையது மகிமைபாரே.

(6536)

பார்க்கவென்றால் அறுபத்து நான்குசித்தும்
பாருலகில் வெகுகூத்து ஆடலாகும்
தீர்க்கமுடன் ஆவினது முதுகில் வைத்தால்
திறமான பசுவதுவும் பால்கொடாது
ஏர்க்கவே குளிகையது வேகத்தாலே
எளிதான பாலதுவும் மேலேநோக்கும்
ஆர்க்கமுடன் மணியதுவை எடுத்தாலல்லோ
அப்பனே பாலதுவும் கறக்கும்பாரே.

(6537)

கறக்கின்ற ஆவதுவும் பால்கொடாது
காசினியில் இதுவுமொரு சித்துவாகும்
திறமுடைய குளிகைதனை எடுத்துமைந்தா
தீர்க்கமுடன் பதனமாய்ச் செய்துகொண்டு
உறமுடனே நெடுங்காலம் இருந்துகொண்டு
உத்தமனே சிவயோகம் சாதித்தேதான்
நிறமதுவும் மாறாமல் சதாகாலந்தான்
நீட்சியுடன் சமாதிமுகம் நின்றிடாயே.

(6538)

நிற்கவே விதியிருந்த புண்ணியத்தால்
நிலமையுள்ள குளிகையது கிடைக்கலாச்சு
அற்பமென்ற பொருள்எல்லாம் மாண்பாகேளு
அப்பனே உந்தனக்கு கிடைக்கலாச்சு
விற்பிடித்த மன்னவரும் நன்றமைத்து
விட்டகுறை இருந்ததொரு புண்ணியத்தால்
உற்பனமாம் குளிகையது வாய்க்கலாச்சி
ஓகோகோ நாதாக்கள் கடாட்சந்தானே.

(6539)

காணவே இன்னமொரு போக்குசொல்வேன்
கருவான புலிப்பாணி மகனேகேளு
தோணவே செம்பதுவும் சேர்தான்ஒன்று
செப்புகிறேன் செம்புதன்னை மூசைஇட்டு
வேணபடி சரக்குவகை சொல்வேன் அப்பா
வேதாந்தந் தாயினது கடாட்சத்தாலே
பாணமெனும் வெடியுப்பு பலம்தான்ஒன்று
பாங்குபெற துருசதும் பலந்தான்ஒன்றே. (6540)

ஒன்றான வளையுப்பு பலந்தான்ஒன்று
உத்தமனே சாரமது பலம்தான்ஐந்து
குன்றான வீரமது பலம் தான்ரெண்டு
குறையாமல் கல்லுப்பு பலம் தான்ரெண்டு
வென்றிட்டே அன்னமென்ற பேதிப்பா
வேகமுடன் நண்டோடு தானுஞ்சேர்த்து
சென்றுமே பொடியாக்கித் திரள்வேந்தாகேள்
செப்புகிறேன் கைவரிசை முறைமைபாரே. (6541)

முறையான சரக்கெல்லாம் ஒன்றாய்க்கூட்டி
உத்தமனே கல்வமதில் பொடியதாக்கி
குறையாமல் செம்புதனை உருக்கிமைந்தா
குணம்பெறவே நயம்பெறவே கிராசம்ஈவாய்
திறை அற்று செம்பதுவும் இருளுமேகி
தீர்க்கமுடன் சிவந்துமல்லோ இன்னம்பாரு
துறையான செம்புதனை எடுத்துமைந்தா
துகள் அகற்றி ஊதியெடு சுத்தியாச்சே. (6542)

சுத்தியாம் செம்பதனை எடுத்துபாலா
சுந்தரனே ஆறுவகை ஜெயநீர்தன்னால்
வெற்றிப்பெறத் தான் உருக்கிச் சாய்ப்பாயப்பா
வேதாந்தத் தாயினது காடட்சத்தாலே
சத்திரமாம் ஊறலது ஏகியல்லோ
சண்முகனார் பூசைக்கு ஏற்றமாச்சு
அத்திபுரந் தானெரித்த ஆலங்காடார்
அப்பனே தான்அணியும் செம்பு மாச்சே (6543)

செம்பான செம்புதனைப் பதனம்பண்ணு
செயலான முத்தியதும் பெறுவாயப்பா
கும்பமுனி சாத்திரத்தில் அநேகஞ்செம்பு
கூறினார் பன்னீராயி ரத்தில்ஆப்பா
நம்பியல்லோ செய்தவர்க்கு எல்லாஞ்சித்தி
நாதாந்த சித்துமுனி சாத்திரத்தில்
அம்பொன்னாஞ் செம்பொன்னின் வினோதவித்தை
அப்பனே கோடிமுறை சூட்டினாரே.
(6544)

சூட்டினேன் இச்செம்பு சிடிகைவேதை
சிறப்பான செம்புகளும் இன்னம்உண்டு
வாட்டமுடன் இச்செம்பை மதியில்தானும்
வளம்பெறவே பத்துக்கு ஓன்றுதாக்க
நாட்டமுடன் வயததுவும் என்னசொல்வேன்
நலமான மாற்றதுவும் மாணிக்காறு
ஆட்டிடையன் தைபோலே இருக்கவேண்டா
அப்பனே செம்பிருக்க கவலைவாருண்டே.
(6545)

உண்டான வெள்ளிதனை உருக்கிமைந்தா
உத்தமனே பத்துக்கோர் தங்கஞ்சேர்த்து
கண்டிதமாய் வாரடித்துப் புடத்தைப்போடு
கண்மணியே என்னசொல்வேன் மாற்றோஎட்டு
பண்டிதங்கள் பொய்யாது ஆயுர்வேதம்
பாரினிலே கலைவகுத்து நிலைவகுத்து
விண்டிடவே போகர் ஏழாயிரத்தை
விருப்பமுடன் பாடிவைத்தேன் காண்டம்ஏழே.
(6546)

ஏழான காண்டமது கடைக்காண்டத்தில்
எழிலான சிவபோகந் தவயோகங்கள்
மாழவே வைப்புமுதல் சிடிகைவேதை
அப்பனே யான்உரைத்தேன் உந்தமக்கு
வாழவென்றால் இன்னூல்தான் சத்தகாண்டம்
வையகத்து மாண்பருக்குப் போதாதுண்டோ
மீழவே கருஅறிந்து பொருள்அறிந்து
மிக்கான குருஅறிந்து நினைவாய்க்கொள்ளே.
(6547)

ஏழாவது காண்டம்

கொள்ளஎன்றால் சாத்திரத்தை உன்னிப்பாரு
கோடான கோடிமுறை குறிப்புசொன்னேன்
விள்ளவே மனோன்மணியாள் பதாம்புயத்தை
விருப்பமுடன் பணிந்தாக்கால் எல்லாஞ்சித்தி
உள்ளதொரு பொருள்எல்லாம் இதிலேதேயும்
உத்தமனே காண்டமது ஏழும்கண்டால்
கள்ளமது வாராது புண்ணியவானே
கருத்துடனே பாடிவைத்தேன் காண்டம்ஏழே. (6548)

செம்புசுத்தி

காண்டமாம் இன்னமொரு போக்குசொல்வேன்
கண்மணியே விண்மணியே கனிவாய்க்கேளு
வேண்டியதோர் கருமான வினோதமுண்டு
வித்தகனே நாதாக்கள் மறைத்துவைத்தார்
தூண்டியே பொருள்அறிந்து தொடர்புஅறிந்து
தூயதான சாத்திரத்தின் நிலை அறிந்து
ஆண்டிஎனும் சித்தர்முனி பதம்அறிந்து
அப்பனே கருமுறைகள் சொல்வேன்யானே. (6549)

சொல்லஎன்றால் புலிப்பாணி சொகுசுள்ளானே
சுந்தரனே இந்திரனே சுகுணமாரா
புல்லறிவால் உந்தனக்கு புகட்டுவோம்யாம்
புகழான செம்பினுட சுத்திதன்னை
வெல்லவே செம்பதுவும் பலம்ஒன்றாகும்
வேகமுள்ள வீரமது பலம்ஒன்றாகும்
சொல்லவே காரமது பலம்ஒன்றாகும் (6550)

ஒன்றான சாரமது பலம்ஒன்றாகும்
உத்தமனே கெவுரியது பலம்ஒன்றாகும்
வென்றிடவே துருசதுவும் பலம்ஒன்றாகும்
வேகமுள்ள சீனமது பலம்ஒன்றாகும்
நன்றான லிங்கமது பலம்ஒன்றாகும்
நலமான வெடியுப்பு பலம்ஒன்றாகும்
பன்றான கரியுப்பு பலம் ஒன்றாகும்
பாலகனே இதுகளெல்லாம் ஒன்றாய்க்கூட்டே. (6551)

கூட்டவே சரக்குளெல்லாம் கல்வமிட்டு
குமுறவே பொடியாக்கி மைந்தாகேளு
நாட்டமுடன் செம்புதனைக் குகையில்இட்டு
நலமாகத் தான்உருக்கி கிராசமீவாய்
வாட்டமுடன் கிராசமது கொடுக்கும்போது
வளமான செம்பதுவும் ஊறல்ஏகி
நீட்டமுடன் தங்கம்என்ற செம்புபோலாம்
நிதியான செம்புதன்னை பதனம்பண்ணே. (6552)

பண்ணவே செம்பெடுத்து மைந்தாகேளு
பாங்குபெற வெள்ளிதனில் பத்துக்குஒன்று
தண்ணமுடன் கொடுத்துஉருக்கி மாற்றைப்பாரு
தாக்கான வயததும் சுத்தமாகும்
திண்ணமுடன் சுயத்தங்கம் பிறவித்தங்கம்
தீர்க்கமுடன் தங்கமதின் பசுமையாகும்
உண்ணவே சீவனத்துக்கும் இடம்வேறுண்டோ
உத்தமனே நாதாக்கள் செம்புதானே. (6553)

தானான வெள்ளிதனில் பத்துக்குஒன்று
தன்மையுடன் தங்கமது ஒன்றுசேர்த்து
கோனான காலாங்கி கடாட்சத்தாலே
கொற்றவனே தான்உருக்கி வாரடித்துப்
பானான புடமதுவும் தீர்ந்துதானால்
பாலகனே மாற்றதுவும் எட்டதாகும்
மானான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
மன்னவனே செம்பினுட வேதைகாணே. (6554)

வைரவைப்பு

வேதையாம் இன்னமொரு போக்குசொல்வேன்
வேதாந்தத் தாயினுட மகிமையாலே
தீதொன்றும் நேராமல் ரவியின்மார்க்கம்
தீர்க்கமுடன் சொல்லுகிறேன் திறமாய்க்கேளு
போதமுடன் சீனமென்ற படிகக்கல்லாம்
பொங்கமுடன் சேரதுவும் நிறுத்திமைந்தா
வாதமதில் மேலான வைடூரியந்தான்
வளமான வச்சிரமாம் கல்லின்போக்கே.
(6555)

ஏழாவது காண்டம்

போக்கான படிகம்என்ற கல்தானப்பா
பொங்கமுடன் வச்சிரமாம் குகையிலிட்டு
வாக்கதுவும் பொய்யாமல் வசனிப்பேன்யான்
வளமான மாந்தளிர முருக்குப்பச்சை
நோக்கமுடன் சேரதுவுங் கால்தான் ஒன்று
நுட்பமுடன் பூநீறுக் கிடம்ஒன்றாக
ஆக்கமுடன் காக்கையென்ற நிமிளையப்பா
அடவான சேரதவுங் கால்தான்ஒன்றே.
(6556)

காலான குடோரிஎன்ற காரம்சேர்ந்து
கருவாக மூசையிட்டு உருக்கும்போது
பாலான சரக்கெல்லாம் ஒன்றாய்க்கூடி
பாகுபதம் போல்உருக்கி கண்விட்டாடும்
மாலான வயிரமது போலேதோன்றும்
மகத்தான நிமிளைஎன்ற வேதைதன்னால்
தூலான கெற்பமது உள்ளேதோன்றி
சுக்கிரன்போல் சாணைவெளி காணலாமே.
(6557)

காணலாம் ரவையென்ற கல்லுமாச்சு
கருவான தவளம்போலே இருக்கும்பாரு
பூணலாம் சாணையிட்டு ஒளியேகொண்டால்
புகழான சுக்கிரன்போல் பூர்க்கும்பாரு
தோணவே வேணமட்டும் குகைதான்இட்டு
தோறாமல் முன்சொன்ன கணக்குபோலே
வேணபடி கணக்கெடுத்து உருக்கிப்பாரு
வெகுகோடி நிதிஅனைத்தும் காண்பாய்பாரே.
(6558)

பாரப்பா மூசைஇட்டு உருகும்போது
பாலகனே சிறுமணியாம் கருஅமைத்து
நேரப்பா உருக்கியதை சாய்ப்பாயானால்
நெடிதான ஜெகஜோதி என்னசொல்வேன்
சீரப்பா இதற்கீடு ரத்னம்உண்டோ
சீருலகில் வெகுமாண்பர் தெரியாமல்தான்
ஆரப்பா முறையோடும் வழிபாடோடும்
அப்பனே தாம்உறைத்தார் அதிதவானே.
(6559)

அதிதமாம் வயிரமென்ற பாக்குதன்னை
அப்பனே யான் உரைத்தேன் நுணுக்கமெத்த
பதிதமுள்ள வைப்பதனை சித்துதாமும்
பாருலகில் மாண்பருக்குத் தெரியாமல்தான்
துதியோடும் பதியோடும் நூல்கள்சொல்லி
துப்புரவாய் மதிதனக்கு ஏராமல்தான்
விதியான சிடிகையென்ற கைபாகத்தை
விட்டகற்றி நூல்மறைத்து விலக்கினாரே. (6560)

விலக்கவே வைப்புமுதல் உளவுதன்னை
வெகுபேர்கள் அறியாமல் வினயம்கொண்டு
துலக்கமுடன் நூல்தனைக் காணாமல்தான்
துப்புரவாய்க் கருவிகர ணாதியந்தம்
பலக்கவே சிடிகையென்ற வேதைதன்னை
பாராமல் பாருலகில் கெட்டார்கோடி
ஜலக்கம் பமென்றதொரு கெந்திபோலே
சாங்கமுடன் செய்வதற்கு மதிபோனாரே. (6561)

மதியான வயிரமது பிறவிபோலாம்
மகத்தான நாதாக்கள் செய்தவேதை
துதியான பிறவியென்ற கல்லினாலே
துப்புரவாம் ராஜாதி ராஜர்தாமும்
நதிகளிலும் மலைகளிலும் கண்டெடுத்த
நாதாந்த சித்தொளிமே கல்போலாகும்
பதியான சுனைதனிலும் ஓடைதன்னில்
பாங்குடனே வயிரமது விளையுந்தானே. (6562)

கெம்புவைப்பு

தானான இன்னமொரு போக்குசொல்வேன்
தண்மையுள்ள புலிப்பாணி தம்பிரானே
கோனான இந்தமுறை வேதையப்பா
குவலயத்தில் நாதாக்கள் கூறவில்லை
பானான படிகமது சேர்தான் ஒன்று
பாலகனே பூநீறு பலந்தான் ஒன்று
தேனான தேன்வளையல் சேர்தான் காலாம்
தேற்றமுடன் பவளம்என்ற புத்துகாலே.
(6563)

காலான பண்பவள சேர்தான்காலாம்
கண்மணியே வளையலுப்புசேர்தான்காலாம்
மாலான சரக்கெல்லாம் ஒன்றாய்க்கூட்டி
மகத்தான வங்கம்என்ற செந்தூரந்தான்
நூலான நூற்படியே கால்சேர்கூட்டி
நுட்பமுடன் தான் உருக்கி கருவமைத்து
தூலான சொற்பமது உள்ளிருக்க
துப்புரவாய் மணிபோலே வார்திடாயே.

(6564)

வார்க்கவென்றால் மணியதுவும் உருகியல்லோ
வளமான கெம்பினுட தளம்போலாகும்
தீர்க்கமுடன் தளமெடுத்து சாணைதன்னில்
திறமுடனே தான்கொடுத்து மதியபூண்டு
ஏற்கவே இவ்வேதை சிடிகைவேதை
எழிலான கெம்பினுட தளந்தானாச்சு
பூர்க்கவே சாணைதனில் மணிகொடுத்தால்
புகழான கெம்பினுட சோதிதானே

(6565)

சோதியாம் கெம்பினுட மகிமைதன்னை
சுந்திரனார் சித்துமுனி மறைத்துவைத்தார்
வாதிகளும் காணாமல் மதியம்பூண்டு
வன்மையுடன் கைமற்றப்பைத் தெரியாமல்தான்
நீதியுடன் சாத்திரங்கள் படித்தாய்ந்து
நிஷ்களங்க மாயிருந்தார் கோடிபேர்கள்
வீதியெனுங் கொல்லனது மாளிதன்னில்
இரும்பூசி விற்றதொரு கதையுமாச்சே.

(6566)

கதையான கதைகாட்டி மையும்பூண்டு
காசினியில் தான்மறைத்தார் வினோதவித்தை
கெதையான உப்பினுட கெதையைச்சொன்னேன்
கெணிதமுடன் என்நிகண்டு காணாமல்தான்
விதைபோட்டால் சுரையொன்று காய்க்குமோசொல்
வித்தகனே நூல்களெல்லா வினையங்கூறு
உதயம்போல் கெம்பிவைப் புயிருக்க
உத்தமனே வெகுதேசஞ் சென்றார்பாரே.

(6567)

பாரேதான் மணிதனையே சாணைதன்னில்
பக்குவமாய்த் தான் கொடுத்து ஒளியுங்கொண்டு
நேரேதான் வணிகரிடம் சென்றாயானால்
நெடிதான செம்பதுவும் பிறவி என்று
சீரேதான் செகத்திலுள்ள மாண்பர்எல்லாம்
செகதலத்தில் பிறவியுள்ள கல்லேஎன்று
தீரேதான் செகத்திலுள்ள மாண்பர்எல்லாம்
செப்பிடுவார் பின்னொன்றும் செப்பார்தானே. (6568

தானான கெம்பதனை யார்தான் செய்வார்
தண்மையுள்ள புலிப்பாணி மன்னாகேளு
கோனான நாதாக்கள் சித்துதாமும்
குவலயத்தில் மறைத்துவைத்தார் நூல்களெல்லாம்
தேனான நூல்களெல்லாம் உளவு ஆராய்ந்து
தேற்றமுடன் ஓதிவைத்தேன் உந்தமக்கு
பானன பரஞ்சுடரே போற்றிசெய்து
பாலகனே சதாநித்தம் துதிப்பாய்தானே. (6569)

நற்பச்சை வைப்பு

துதிப்பான இன்னமொரு பாகம் சொல்வேன்
துப்புரவாய்ப் புலிப்பாணி மன்னாகேளு
மதிப்புடைய படிகம்என்ற கல்தானப்பா
மன்னவனே சேரதுவும் நிறுத்துக்கொண்டு
பதிவுடைய காச்சிக்கல் பச்சைதன்னை
பாங்குபெற இருசேராய் நிறுத்துக்கொண்டு
மதிபோன்ற பூநீறுங் கூடச்சேர்த்து
மகத்தான வளையல்ரங்கு தானும்சேரே. (6570)

சேரேதான் குகையிலிட்டு செப்பக்கேளும்
செயலான ஆறுவகை செயநீர் தன்னை
வீரேதான் மூசையிட்டு குடோரிசேர்த்து
விருப்பமுடன் துருத்தியது நாலுகொண்டு
நேரேதான் தான் உருக்கி மைந்தாகேளு
நேர்மையுடன் கருக்கட்டி வார்ப்பாயப்பா
ஆரேதான் மற்றொருவர் காணாமல்தான்
அப்பனே ஆறியபின் உடைத்துப்பாரே.

(657

உடைத்துமே பார்க்கையிலே என்னசொல்வேன்
ஓகோகோ நாதாக்கள் மறைத்தவண்ணம்
படிகமும் நவநீதம் தான் அறிந்து
பட்சமுடன் யான் உரைத்த பச்சைதன்னில்
மடைபோன்ற சீரலது இருக்கும்பாரு
மகத்தான வணிகரிடம் சென்றாயானால்
சடைநீக்கி சாணைதனில் கொண்டுமல்லோ
சட்டமுடன் சோதிதனை அறிந்துபாரே.
(6572)

அறிவான பச்சைஎன்ற வைப்புதன்னை
அப்பனே உந்தமக்கு உரைத்தவர்போல்
குறியான முறைஅறிந்து வழிஅறிந்து
குணமான பாகமது தான்அறிந்து
முறியாமல் உருக்குமுகம் பாலறிந்து
முனையான கருவதனில் பாச்சும்போது
நெறியான பிறவிஎன்ற கல்லைப்போலும்
நெடிதான பச்சைஎன்ற தளமும்ஆச்சே.
(6573)

ஜண்டரசபஸ்பம்

ஆச்சப்பா இன்னமொரு பாகம்சொல்வேன்
அறிவுள்ள சிறுபாலா அன்புள்ளானே
ஆச்சரிய மானதொரு செப்புதன்னை
அப்பனே புலிப்பாணி அறைவேன்பாரு
மூச்சடங்கித் தானிருந்த நெடுங்காலசித்து
மூதுலகில் சமாதிகொண்ட காலாங்கிநாதர்
பாச்சலுடன் சீனபதி சாமதிருந்து
பட்சமுடன் எந்தனுக்கு உரைத்தவாரே. (6574)

வாறான வெடியுப்பு பலமோபத்து
வளமையுள்ள சீனமது பலமோபத்து
கூறான கண்டரது பலமோபத்து
குறிப்பான கல்லுப்பு பலமோபத்து
சேறானமிரு தாருசிங்கி பலமோபத்து
செம்பவள புத்துமது பலமோபத்து
மாறான கெந்தியது துலாமோஐந்து
மகத்தான பூரமது பலமும்ஐந்தே. (6575)

அஞ்சான சரக்கெல்லாம் ஒன்றாய்க்கூட்டி
அப்பனே சாரம்என்ற செயநீர்தன்னால்
மிஞ்சவே தான் அரைப்பாய் நாலுசாமம்
மிக்கான பில்லையது லகுவாய்ச் செய்து
அஞ்சாமல் சக்ரமாம் வாலைதன்னில்
துப்புரவாய்த் தான்அமைத்து பாண்டந்தன்னில்
பஞ்சமென்ற கலசமது ஐந்தும்கொண்டு
பட்சமுடன் ஒன்றின்மேல் ஒன்றுவையே.

580) (6576)

[illegible]துமும கரகம்என்ற பாண்டந்தன்னில்
வளமுடனே சீலையது வலுவாய்ச்செய்து
பொய்த்துமே போகாமல் தீயைமூட்டி
பொங்கமுடன் தான்எரிப்பாய்க் கமலம்போலே
சுத்துமே சலமதனை விட்டுமைந்தா
சுந்தரனே வாலையது எரிக்கும்போது
பத்துமே தீயதுவும் ஏறாமல்தான்
பாங்குபெற வாலைதனை எரித்திடாயே.

(6577)

எரிக்கையிலே பதங்கமது என்னசொல்வேன்
எழிலாக சாமமதில் ஐந்திலே
சரியான சூதம்என்ற பதங்கம்தானும்
சதுரான மேற்கலசம் தனைப்பற்றி
சுரிகுழலில் மேலாகப் பதங்கம்ஏறி
சுத்தமுடன் தவளமது நிறத்தைப்போலும்
உரியதொரு சூதமென்ற ஆசுதானும்
உத்தமனே பளபளத்து நிற்கும்பாரே.

(6578)

பாராப்பா சாமமது நாலேயாகும்
பாங்குபெற தான்எரிப்பாய்க் கமலம்போலே
நேரப்பா எரித்தவுடன் காரமேறி
நேர்மையுடன் சரக்குமிக சேர்த்துமல்லோ
வேரப்பா அடிப்பாண்டம் சிட்டம்நின்று
விளக்கொளிபோல் சிறுபொடியாந்தக டுபோலே
ஆரப்பா தவளம்போல் இருக்கும்பாரு
அப்பனே சண்டரசப் பெருமைதானே.

(6579)

பெருமையாம் சண்டரசம் என்றபற்பம்
பேருலகில் நாதாக்கள் மறைத்துமல்லோ
அருமையாம் உள்ளதொரு பற்பந்தன்னை
அப்பனே தான்மறைத்துப் பாடிவைத்தார்
ஒருமையால் எல்லவரும் அறிவதற்கு
உத்தமனே உந்தமக்கு உகமைகூறி
பெருமையாய் யான்உரைத்தேன் உந்தமக்கு
பேரான கைமுறையைத் தெரிந்துகொள்ளே.

(6580)

கொள்ளவே ஜண்டரசம் போக்குசொல்வேன்
குறிப்பான ரோகமதைக் கொல்லும்வேகம்
விள்ளவே ரோகமது என்னவென்றால்
வீரான சூலையது பதினெட்டும்போம்
உள்ளதொரு குன்மமது எட்டும்போகும்
ஓகோகோ பாண்டுவகை ஆறுந்தீரும்
கள்ளமிலா பித்தமது நாற்பதும்போகும்
கருவான வாதமென்பதுவும் போமே.

(6581)

போமேதான் வாயுஎன்ற ரோகம்போகும்
பொல்லாத பீலிகையும் மகோதரம்போம்
ஆமேதான் கவுசியென்ற கெண்டைபோகும்
அப்பனே விக்கலென்ற உளமாந்தை போகும்
நாமேதான் சொன்னபடி வயிற்றுவலிபோகும்
நலமான சோகையோடு பிரமேகம்போம்
வேமேதான் மேகமது இருபதுவும்போகும்
வேகமுடன் விஷபாகம் தீரும்தானே.

(6582)

தானான சயரோகம் செயரோகம்போம்
தாக்கான இருமலொடு வீளைகச்சும்
கோனான மண்டையில் சூலைபோகும்
கெடிதான கருப்பனென்ற வியாதிபோகும்
பானான படர்தாமரை கறுப்புபோகும்
படையோடு சிலவிஷங்கள் எல்லாந்தீரும்
தேனான காலாங்கி நீதிவாக்கு
தேசமதில் பொய்யாது மெய்யதாமே.

(6583)

மெய்யான சிலவிஷமாம் குஷ்டம்போகும்
மேலான விப்புருதி கண்டமாலை
வெய்யவே கிராணியது கழிச்சல்போகும்
வெளுப்பான சீழ்மூலம் நவமூலம் போம்
துய்யதொரு பவுத்திரமும் அரையாப்பும்போம்
துலையாத புத்துவுடன் யோனிச்சீலை
எய்யவே மந்தார காசம்போகும்
எழிலான நேத்திரநோய் போகும்பாரே.

(6584)

பாரேதான் கண்நோய்தான் தொண்ணூற்றுஆறும்
பாங்கான பிடரிநோய் ஜன்னிபதிமூன்றும்
நேரேதான் அண்டமென்ற வாதம்போகும்
நெடிதான பாதத்தின் வீக்கம்போகும்
கூரேதான் குறிப்புற்றுக் கன்னப்புற்று
குடிகெடுக்கும் ராசனென்ற பிளவையோடும்
சேரேதான் முதுவாளை விலாவின்வாளை
செயலான தமர்காயச் சிலந்திகாணே.

(6585)

காணவே இடிவிழுந்து புரைமேல்புண்ணும்
கண்ணோசை சதைவளர்த்தி ரோகந்தானும்
தோணவே கபவாதம் ரத்தவாதம்
தோற்றாத கைம்முடக்கு கால்முடக்கு
வேணதொரு நாவரட்சி சந்திடுப்பு
வீரான கீலினது வாய்வுபோகும்
தோணவே நரம்புவலி முடிச்சிபோகும்
கோளான மலக்குற்றம் போகும்பாரே.

(6586)

போகுமே அனுபானம் கண்டறிந்து
போக்கவே வியாதிகளுக்கு உகந்தவண்ணம்
ஏகுமே கைபாகம் செய்பாகந்தான்
எழிலான புடபாகம் ருசிபாகந்தான்
ஆகுமே இத்தனையுங் கண்டறிந்து
அப்பனே நூல்வழியே சென்றாயானால்
பாகுபதம் கால்வழிதான் காணலாகும்
பாங்கான நாதாக்கள் கற்பந்தானே.

(6587)

கற்பமாஞ் சண்டரச சூதமப்பா
காசினியில் சித்தரெல்லாம் மறைத்துவைத்தார்
பற்பமது உலகோர்கள் அறியாமல்தான்
பான்மைபெற நூல்களிலே மறைத்துச்சொன்னார்
அற்பமென்று நினையாதே அருண்மைந்தாகேள்
அன்புடனே யாமுனக்கு உரைத்தநீதி
கற்பேந்திர காலமது நெடுங்காலந்தான்
காசினியில் இருப்பதுவும் உண்மைதானே.
(6588)

உண்மையாம் சண்டரச பற்பந்தன்னை
உலகுபதி மாண்பர்களும் உளவுஅறிந்து
தண்மையுடன் கைபாக செய்பாகத்தால்
சட்டமுடன் செய்குவது மெய்யேயானால்
வண்மையாஞ் சித்துமுனி நாதர்போலே
வளமுடனே வையகத்தில் நெடுங்காலந்தான்
திண்மையுடன் வெகுகோடி காலமப்பா
தீர்க்கமுடன் இருப்பதுவும் உண்மைதானே.
(6589)

உண்மையாம் வையகத்தில் நெடுங்காலந்தான்
உத்தமனே நாதாக்கள் சித்தரோடும்
பண்மையுள்ள சாத்திரங்கள் பல ஆராய்ந்து
பாருலகில் மாண்பர்களும் பிழைப்பதற்கு
கண்மையாய் காலாங்கி தாள்பணிந்து
கர்த்தாவை அஞ்சலித்து முடிகள்சாய்த்து
நன்மைபெற உந்தனுக்கு மனதுஉவந்து
நாட்டினேன் உண்மை சத்தியமும்பாரே.
(6590)

சத்தியமா மென்நூலை முழுதும்பார்த்து
சாங்கமுடன் செய்வதற்கு எல்லாம்சித்தி
முத்தியது பெறுவதற்குக் காயகற்பம்
முனையான பற்பமிது சூதபற்பம்
வெத்திபெற அஷ்டாங்க சித்தியெட்டும்
வேதாந்தத் தாயினிட நடனமார்க்கம்
முத்தியது பெறுவதற்கு தேககற்பம்
மூதுலகில் சத்தியர்க்குப் பலிக்கும்பாரே.
(6591)

பலிக்குமே சூதம்உண்ட மாண்பர்எல்லாம்
பாருலகில் மகானுபாவன் என்பார்பாரு
சொலிக்குமே தேகமது கல்தூண் ஆகும்
சோராது வாசியது மேல்நோக்காது
சுளிக்காது இருகண்ணும் அருந்ததியுந்தோன்றும்
காசினியில் வாசியாக மாண்பரென்பார்
சலிக்காது சண்டரச பற்பமப்பா
சட்டமுடன் செய்பவனே யோகிபாரே. (6592)

பஞ்சபூத சிவராசயோக செந்தூரம்

பாரப்பா புலிப்பாணி மைந்தா்கேளு
பாலகனே காலாங்கி நாதா்நீதி
ஆரப்பா எந்தனுக்கு உரைத்தமார்க்கம்
அப்பனே அஞ்சலித்து முடிவணங்கி
சேரப்பா சமாதிமுகம் சென்றபோது
செம்மலுடன் எந்தமக்கு கொடுத்தபாகம்
நேரப்பா சொல்லுகின்ற பஞ்சபூதம்
நெடிதான வேதைமுகம் நன்றாய்தானே. (6593)

வேதையாம் வேதைமுகம் பஞ்சபூதம்
மேன்மையுள்ள செந்தூரங் காயகற்பம்
கோதையெனும் மனோன்மணியாள் கடாட்சத்தாலும்
கொற்றவனார் நாதாக்கள் பாதத்தாலும்
பாதையெனும் பஞ்சபூத செந்தூரத்தை
பாருலகில் மாணாக்கர் பிழைப்பதற்கு
சூதையது கூறாமல் குமரவேலா
சுந்தரனே கைபாகம ரசபபுவேனே. (6594)

செப்புவேன் கெந்தியது சேர்தான்பாதி
செயலான வீரமது சேர்தான்பாதி
ஒப்பமுடன் லிங்கமது சேர்தான் ஒன்று
உத்தமனே சாரமது சேர்தான் ஒன்று
மெய்ப்புடனே பூரமது சேர்தான்ஒன்று
மேன்மையுடன் கல்வமதில் இட்டுமைந்தா
எப்படியும் ஒரைந்தாம் பட்சபூதம்
எழிலான சரக்கெல்லாம் பொடியாய்ப்போச்சே. (6595)

பொடியான சரக்கெல்லாம் மையதாக
பொங்கமுடன் தாகமது கருவிட்டாட்டி
கன்னமாஞ் சரக்கெல்லாம் நன்றாய் ஆட்டி
கண்மணியே ஜாமம்எட்டும் தீர்ந்தபின்பு
வடிவான பஞ்சரச சரக்கையெல்லாம்
வளம்பெறவே பில்லையது லகுவாய்த்தட்டி
மிடியோகஓட்டில் இட்டுச் சீலைசெய்து
மீட்சிபெற ரவிதனிலே காயப்போடே. (6596)

போடவே ரவிஆறிக் காய்ந்தபின்பு
பொங்கமுடன் மணல்மறைவில் புடத்தைப்போட
நாடவே இப்படியே பத்துமுறையோடு
நலமான தாகமென்ற கருவினாலே
சாடவே புடமதுவும் பத்துந்தீர்ந்தால்
சட்டமுடன் மறுபடியும் செப்பக்கேளு
கூடவே சரக்கதனைக் கல்வம்இட்டு
கொற்றவனே கையானின் ரசத்தைதாக்கே. (6597)

தாக்கவே நாற்சாமம் அறைத்தபின்பு
சட்டமுடன் பில்லையது லகுவாய்ச்செய்து
ஆக்கமுடன் ரவிதனிலே காயவைத்து
அப்பனே சில்லிட்டுச் சீலைசெய்து
போக்கான சரக்கெல்லாம் கட்டுதற்கு
பொங்கமுடன் மண்மறைவில் புடத்தைப்போடு
வாக்கதுவும் பொய்யாமல் கோழியாக
வளமுடனே புடம்போடக் கட்டும்பாரே. (6598)

கட்டுமே பஞ்சரசச் சரக்குதானும்
கருவாக பத்துமுறை இப்படியேபோட்டால்
சட்டமுடன் சரக்கைந்தும் கட்டிப்போகும்
சார்பான செந்தூரம் நீலவர்ணம்
மட்டுமே சிவப்பதுவும் ஏறாதப்பா
மார்க்கமுடன் பின்னும்வகை செப்பக்கேளு
பட்டுப்போல் செந்தூரஞ் சிவப்பதற்கு
பாலகனே வரிசையது செப்புவேனே. (6599)

செப்பவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
தேசத்தின் கருவாளி செய்வாரப்பா
ஒப்பமுடன் கருமிகட்கு வாய்க்காதப்பா
ஓகோகோ வாய்த்தாலும் விழலாய்ப்போகும்
இப்புவியில் உந்தமக்கும் தருமிகட்கும்
எழிலான வேதைமுகங் கூறினேன்யான்
தப்பிதங்கள் நேராது சன்மார்க்கவானே
சட்டமுடன் செய்பவேனே புத்திவானே.
€600)

புத்தியுடன் சரக்கதனை தானெடுத்து
பூபாலா பின்னுமந்தக் கல்வமிட்டு
பத்தியுடன் கருந்துளசிச் சாறுவிட்டு
பாலகனே நாற்சாமம் அரைத்தபின்பு
சத்தியமாய் பில்லையது வகுவாய்ச்செய்து
சாங்கமுடன் ரவிதனிலே காயவைத்து
முத்திபெற சில்லிட்டுச் சீலைசெய்து
முனையான சோதிஎன்ற புடந்தான்போடே.
(6601)

போடேதான் புடமதுவும் கோழியாக
பொங்கமுடன் இப்படியே பத்துமுறைபோடு
நாடேதான் செந்தூரம் நவிலப்போமோ
நாதாந்த சித்துமுனி சொல்லாவண்ணம்
கூடநீ செந்தூரம் தனைஎடுத்து
கொற்றவனே கல்வமதில் இட்டுமைந்தா
ஆடேதான் குமரியின்தன் சாற்றினாலே
அப்பனே தான்அரைப்பாய் ஜாமம்நாலே.
(6602)

நாலான ஜாமமது அறைத்தபின்பு
நலமான பில்லையது லகுவாய்ச்செய்து
பாலான ரவிதனிலே காயப்போடு
பாலகனே காய்ந்தபின்பு சில்லிசெய்து
மாலான சீலையது செய்தபின்பு
மகத்தான மணல்மறைவில் புடத்தைப்போடு
தூலான புடம்ஆறி எடுத்துப்பாரு
துப்புரவாய்ச் செந்தூரம் சொல்லொண்ணாதே.
(6603)

ஓண்ணாது செந்தூரம் என்னசொல்வேன்
ஓகோகோ நாதாக்கள் கூறவில்லை
மண்ணான சரக்கதுவும் பிரிதிவிதன்னால்
மகத்தான காரசாரம் அதுவேயாகி
தண்ணமுடன் வேதைமுகங் கோடாகோடி
தாக்கிடவே சிமிட்டுவித்தை என்னலாகும்
விண்ணான நாதாக்கள் காணாவித்தை
விருப்பமுடன் உந்தனுக்கு ஓதினேனே.
(6604)

ஓதினேன் செந்தூரந் தனைஎடுத்து
உத்தமனே வெள்ளிதனில் நூற்றுக்குஒன்று
நீதியுடன் தான்உருக்கி குருஒன்றூஈய
நிஷ்களங்கம் ஆனதொரு வெள்ளிதானும்
ஆதியென்ற பஞ்சபூத சரக்கினாலே
அப்பனே வரணமது மிகவேயாகி
பாதிமதி சடையணிந்த தம்பிரானால்
பலிக்குமடா வாதவித்தை சொலிக்கும்பாரே.
(6605)

சொலிக்குமே மாற்றதுவும்என்ன சொல்வேன்
சோராமல் வயதுபன்னி ரெண்டதாகும்
ஓலிக்குமே தங்கமதை என்னசொல்வேன்
ஓகோகோ சித்துமுனி அறியாத்தங்கம்
பலிக்குமே சிவயோக மாண்பருக்கு
பாவிஎன்ற மாண்பருக்குப் பலியாதப்பா
எலித்தலையில் கோடாரிதான் விழுந்தாற்போலே
எளிதான கைம்முறைகள் வினோதந்தானே.
(6606)

தானான சுயத்தங்கம் பிறவித்தங்கம்
தாக்கான சிவயோகி செய்யுந்தங்கம
கோனான காலாங்கி நாதர்சொன்ன
குருவான வாக்கதுவும் பொய்யாதப்பா
தேனான மனோன்மணியாள கடாட்சத்தாலே
தேற்றமுடன் பலவிதமாய் நூலைப்பாடி
மானான மாண்பர்களும் அறியாமல்தான்
மயக்கமுடன் மருட்கடலில் அழுந்திட்டாரே.
(6607)

மருட்டான சிடிகைஎன்ற வேதைதன்னை
மார்க்கமுடன் அறியாமல் மாண்பர்தானும்
இருட்டுவழி ஏகியல்லோ பாலர்எல்லாம்
எழிலான கைம்முறையைப் பாராமல்தான்
பொருளிருக்கும் இடமதுவுந் தோன்றாவண்ணம்
பொங்கமுடன் மதியீன மயக்கத்தாலே
குருட்டுவிழிப் பூனையது விட்டம் பாய்ந்த
குறிப்பான கதைபோல மேவலாச்சே. (6608)

நவலோக செந்தூரம்

மேவலாம் இன்னமொரு மேன்மைகேளு
மேதினியில் கீர்த்திபெற்ற புண்ணியவானே
ஆவலுடன் உந்தமக்கு மனதுவந்து
அப்பனே காலாங்கிப் பதம்பணிந்து
சாவதுவும் என்றைக்கும் நிட்சயந்தான்
சாங்கமுடன் பலதொழிலும் கற்றும்என்ன
போவது மெய்அல்லாது இருப்பதில்லை
பொங்கமுடன் வையகத்து வாழ்க்கையாமே. (6609)

வாழ்க்கையாம் வெகுகாலம் இருப்போம்என்று
வண்மையுடன் பலநூலும் உளவு ஆராய்ந்து
தாட்கமல பதாம்புயத்தை மனதில்உன்னித்
தகமையுள்ள காயாதி கற்பம்கொண்டு
வீட்கமுடன் நெடுங்காலம் சமாதிசென்று
விருதாவாய் மறுபடியும் வந்தும்என்ன
பாழ்க்கமுடன் பவக்கடலை விட்டுஅகற்றி
பாருலகில் சுந்தரம் போல்இருப்பீர்தானே. (6610)

சுந்தரனே காவிகஷாயம் பூண்டு
சுத்தமுடன் இருப்பதுவும் யோகியல்லோ
தந்திரமாய் அஷ்டசித்தி ஆடிஎன்ன
தாரணியில் யோகமது கொண்டும்என்ன
அந்தரமெல்லாம் புகழஞானம் கொண்டு
அவனிதனில் பொய்வேஷம் கொண்டும்என்ன
மந்திரத்தில் மாங்காய் விழுங்கதையைப்போல
மானிலத்தில் வெகுபேர்கள் மயங்குவாரே.
(6611)

மயக்கவே எந்தனது மணியேகேளும்
மாசற்ற நவலோகச் செந்தூரம்தான்
தியக்கமது வாராமல் லோகம்தன்னை
தீர்க்கமுடன் முறைபாடு சொல்வேன்யானும்
நயமுடைய தங்கமது ஒன்றேயாகும்
நலமான காரீயம் ஒன்றேகாலாம்
அயமதுவும் விராகனது ஒன்றேஆகும்
அப்பனே நாகமது ஆறதாமே. (6612)

ஆறான செம்பதுவும் ஒன்றேயாகும்
அப்பனே குடவனது ஒன்றேயாகும்
காரான வெள்ளியது ரண்டேயாகும்
கருவான வெள்வங்கம் ஒன்றோயாகும்
கூறான வெட்டுருக்கு ஒன்றேயாகும்
குறிப்பான நவலோகம் ஒன்றாய்க்கூட்டி
சோறான லோகமெல்லா ஒன்றாய்ச்சேர்த்து
செப்புகிறேன் வரிசைபெற வண்மைகேளே. (6613)

வண்மையாய் இடைகண்டு இனமும்கண்டு
வகுப்பான சேர்வையது யானும்கண்டு
தண்மைபெற நாதாக்கள் தாள்வணங்கி
தாம்உரைத்த முறைபாடு வழிபாடுஎல்லாம்
உண்மையுடன் தாமறிந்து புத்திவானை
உகமையுள்ள லோகமதைக் கண்டுஆராய்ந்து
திண்ணமுடன் மூசையிட்டு சீலைசெய்து
தீர்க்கமுடன் சரவுலையில் ஊதிடாயே. (6614)

ஊதவே நவலோகம் ஒன்றாய்ச்சேர்ந்து
உத்தமனே உருகியல்லோ களங்குமாகும்
நீதமுடன் களங்கெடுத்து உடைத்துமைந்தா
நிஷ்களங்கம் ஆகவல்லோ கல்வமிட்டு
சூதமது ஈரிடைக்கு ஒன்றேசேர்த்து
சுத்தமுடன் கெந்தியது ரெட்டிப்பாக
வாதமது பலிப்பதற்கு அருண்மைந்தாகேள்
வளம்பெறவே தாளகமும் பலம்தான் கூட்டே. (6615)

கூட்டியே கண்டரது கால்தான்சேரு
குணமான கெவுரியது களஞ்சிரண்டு
நீட்டமுடன் மனோசிலையும் காலதாக
நெடிதான வீரமது களஞ்சிநாலு
தாட்டிகமாய்த் துத்தமது களஞ்சிரெண்டு
தாக்கான பூரமது களஞ்சிஆறு
வாட்டமுடன் இடைகண்டு கல்வமிட்டு
வளம்பெறவே தான்அறைக்க வகையைக்கேளே.

(6616)

வகையான ஆறுவகை செயநீர்தன்னால்
வளம்பெறவே தான் அறைப்பாய் எட்டுசாமம்
துகையான சரக்கெல்லாம் ஒன்றாய்க்கூட்டி
தோறாமல் தான்அறைத்து பில்லைதட்டி
புகையாமல் இருப்பதற்கு ரவியில்வைத்து
புகழான சீலையது வலுவாய்ச்செய்து
பகையான புடமதுவும் மணலில்அப்பா
பாங்குபெற கோழிஎன்ற புடந்தான்போடே.

(6617)

புடமதுவும் தீஆறி சென்றபின்பு
புத்தியுள்ள பூபாலா உரைப்பேன்அப்பா
தடங்கண்டு வழிகண்டு தண்மையோடு
சட்டமுடன் மணலதனை நீக்கிமைந்தா
அடலான வாசல்தனை எடுத்துப்பாரு
அப்பனே செந்தூரம் நீலவர்ணம்
மடலான செந்தூரம்தனை எடுத்து
மன்னவனே பின்னுமந்த கல்வம்பூட்டே.

(6618)

பூட்டியே சரக்குஎல்லாம் கல்வமிட்டு
புத்தியுள்ள கண்மணியே செயநீரப்பா
தாட்டிகமாய் ஆறுவகை செயநீர்தன்னால்
சட்டமுடன் தான்அரைப்பாய்ப் பின்னுமல்லோ
வாட்டமுடன் தான்அறைத்து பில்லைதட்டி
வளமுடனே ரவிதனிலே காயவைத்து
நீட்டமுடன் சில்லிட்டுச் சீலைசெய்து
நீதியுடன் மண்மறைவில் புடந்தான்தாக்கே.

(6619)

தாக்கவே கோழியது புடமதாக்கி
தண்மையுள்ள பூபாலா போட்டாயானால்
நோக்கமுடன் ஓடதனை உடைத்துப்பாரு
உத்தமனே செந்தூரம்என்ன சொல்வேன்
ஆக்கமுடன் செந்தூரம் அருணன்போலாம்
அப்பனே நாதாக்கள் கூறவில்லை
வாக்கதுவும் பொய்யாது அருண்மைந்தாகேள்
வண்மைபெற செந்தூர வேதைதானே. (6620)

செந்தூரம் வேதைமுகம் ரோகநிவர்த்தி

தானான வேதைமுகம் சாற்றக்கேளீர்
தண்மையுள்ள பூபாலா தருமவானே
கோனான எனதையர் காலாங்கிநாதர்
கொற்றவனார் தாம்உரைத்த நீதிவண்ணம்
பானான பராபரியாள் பாதம்போற்றி
பாருலகில் மாண்பர்களும் பிழைக்கஎன்று
தேனான சிவயோக நிலையில்நின்று
தேற்றமுடன் வேதைமுகம் கூறுவேனே. (6621)

கூறுவேன் செந்தூரம் தனைஎடுத்து
குணமான வெள்ளிதனில் நூற்றுக்குஒன்று
மாறுதலாய்க். குகையில்இட்டு உருக்கிமைந்தா
மார்க்கமுடன் தகடடித்துப் புடத்தைப்போடு
தேறுதலாய் மாற்றதுவும் என்னசொல்வேன்
தேற்றமுடன் எட்டரைக்கு ஆணிக்கொக்கும்
கூறுதலாய்ப் பிறவிஎன்ற தங்கமாகும்
குணமான செந்தூர வேதைகாணே. (6622)

காணவே இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
கைலாச புலிப்பாணி கருவுள்ளானே
தோணவே செம்புஅதனை உருக்கிமைந்தா
துப்புரவாய் இடைக்கிடைதான் செந்தூரத்தை
வேணமட்டும் செம்புருக்கிக் கிராசமீவாய்
வித்தகனே செம்பதுவுங் களங்கமாகும்
மாணமருங் கல்வியுள்ள பூபாலாகேள்
மகத்தான செம்புதனை ஊதிப்போடே.
(6623)

ஊதவே செம்பதுவுந் தங்கச்செம்பாம்
உத்தமனே நாதாக்கள் மறைத்தசெம்பு
நீதமுடன் செம்பெடுத்து செப்பக்கேளும்
நிஷ்களங்க மானதொரு வெள்ளிதன்னை
தோதமுடன் நூற்றுக்கு ஒன்றுசேர்க்க
துப்புரவாய் மாற்றதுவும் பதினாறுஆகும்
வாதமது காணவென்றால் இதுவேவாதம்
வளம்பெரிய நாதாக்கள் வாதம்பாரே.
(6624)

பாரேதான் வாரடித்துப் புடம்தான்போடு
பாங்கான வெள்ளியது செம்பினாலே
நேரேதான் மாற்றதுவும் அதிகங்காணும்
நேர்மையுள்ள பிறவிஎன்ற தங்கமாச்சு
சீரேதான் இத்தங்கம் சிவயோகத்தங்கம்
சிறப்பான மாண்பர்களுக்கு உகந்ததங்கம்
ஆரோதான் சொல்வார்கள் உந்தமக்கு
அப்பனே யான்உரைத்தேன் உண்மைபாரே.
(6625)

உண்மையாம் நவலோக செந்தூரத்தை
உத்தமனே உந்தனுக்கு ஓதினேன்யான்
வண்ணமுடன் சீவனத்துக்கு இடமதாக
வளம்பெரிய செந்தூரம் பதனம் பண்ணு
எண்அரிய நற்பொருளை குருவாய்எண்ணி
எளிதான வறுமைவரும் காலம்தன்னில்
கண்மறையும் காலமது தான்அறிந்து
கண்மணியே சீவனத்துக்கு இடந்தான் கொள்ளே.
(6626)

கொள்ளவே வருமைவருங் காலம்தன்னில்
கொற்றவனே நவலோக செந்தூரத்தை
கள்ளமது வாராமல் மைந்தாகேளு
கணக்குடனே நாள்ஒன்றுக்கு இருநேரந்தான்
வள்ளல்உயர் வணிகரிடம் சென்றுமல்லோ
வகையுடனே பணவிடைதான் பொன்தான்ஈந்து
உள்ளவரை சீவியநாள் உள்ளமட்டும்
உத்தமனே காலமது கழிக்கநன்றே.
(6627)

நன்றான செந்தூரம் பதனம்பண்ணு
நாதாக்கள் மறைத்துவைத்த செந்தூரந்தான்
குன்றான மலைபழுக்கும் நவலோகம் தான்
கொற்றவனே கருமிகட்கு மனம்விடாதே
தின்றாலும் ஒருவனாய் மனதுவந்து
தீர்க்கமுடன் மருமமதாய் உஙபாயப்பா
அன்றெரித்த ஆதிசிவன் உந்தமக்கு
அப்பனே தான்கொடுத்த வேந்ததாமே.

(6628)

வேதையாம் இன்னமொரு போக்குச்சொல்வேன்
வேதாந்தக் கண்மணியே புனிதவானே
கோதையர்கள் மாயவலை சிக்கிடாதே
கொற்றவனே சிக்கினால் மனம்விள்ளாதே
மாதாவின் சீர்பதத்தை தாரணியில்
எப்போதுந் தலைமேல் கொண்டு
சீதையுடன் ராமருந்தான் இருந்தநேர்மை
செப்பினதோர் கதைதனையே கண்டீர்தானே.

(6629)

கண்டதொரு மாண்பர்களுக்கு இந்தலோகம்
கருவான ரோகமது போவதற்கும்
பண்துளவ மாலை அணி கிருஷ்ணாவதாரன்
பார்மாலை யாகவல்லோ பூண்டுகொண்டு
தண்டுளவ துளசி என்ற மூலிச்சாற்றால்
சட்டமுடன் நவலோக செந்தூரத்தை
கொண்டிடவே அனுபானம் பணவிடை தானப்பா
கொற்றவனே ரோகமது தீருங்காணே.

(6630)

காணவே நவலோக செந்தூரத்தால்
கசரோகஞ் க்ஷயரோகம் கழன்றுபோகும்
பூணவே திருகடுகை சூரணத்தில்
புகழான செந்தூரம் பணவிடைதான்கொள்ள
ஆணவத்தால் மிஞ்சிவந்த மேகரோகம்
அப்பனே கடல்புக்கி ஓடும்பாரு
மாணமருங் கல்வியுள்ள மன்னாகேளும்
மகத்தான வியாதிமுகம் இன்னங்கேளே.

(6631)

கேளப்பா அனுபானம் நெய்தேன்ஆகும்
கெடியான நவலோக செந்தூரத்தை
ஆளப்பா வியாதிமுகந் தான்அறிந்து
அப்பனே அனுபானம் அறிந்துகொண்டால்
கேளப்பா ஒருநாளும் வாராதப்பா
குணமுள்ள நவலோக செந்தூரந்தான்
பாரப்பா போகாமல் மண்டலந்தான்
பரிவுடனே கொண்டவர்க்கு ரோகம்போமே.
(6632)

போமேதான் பதினெட்டு குஷ்டம்போகும்
பொல்லாத மேகம்என்ற இருபதும்போம்
ஆமேதான் சூலைபதி னெட்டும்போகும்
அப்பனே காமாலை ஆறுந்தீரும்
வேமேதான் வாதமது எண்பதும்போகும்
வேகமுடன் பித்தமது நாற்பதும்போம்
நாமேதான் சொன்னபடி கிராணிபோகும்
நலமாகப் பாண்டுவகை தீருந்தானே.
(6633)

தீருமே தேகமது ஊதல்தீரும்
தீர்க்கமுடன் ரோகநீ ரெல்லாம்போகும்
ஈரதனில் தான்சுரக்கும் விஷநீரப்பா
எழிலான தந்தநோய் எல்லாந்தீரும்
நாறுடலம் கிரந்தியென்ற புண்கள்போகும்
நலமான தாதுடனே வலிவுண்டாகும்
கூறுமுனி காலாங்கி நாதர்வாக்கு
குவலயத்தில் ஒருநாளும் பொய்யாதாமே.
(6634)

பொய்யாது நவலோக செந்தூரந்தான்
பூட்டுகிறேன் நாலாயிரத்துச் சொச்சம்
மெய்யிலுள்ள ரோகமது எல்லாந்தீரும்
மேலான நவலோக செந்தூரந்தான்
வையங்கள் தான்புகழும் செந்தூரத்தை
வளம்பெரிய நாதாக்கள் மறைத்துவைத்தார்
துய்யநல்ல பண்டிதங்கள் மிக ஆராய்ந்து
துப்புரவாய் ஓதிவைத்தேன் நுணுக்கப்பாரே.
(6635

பாரேதான் நவலோக செந்தூரத்தை
பாருலகில் நாதாக்கள் மறைத்துவைத்தார்
ஆரோதான் சாத்தியங்கள் உளவு ஆராய்ந்து
அப்பனே போதிப்பார் யாருமில்லை
நேரேதான் உந்தன்முகம் மனதுஉவந்து
நெடிதான முறைபாடு வழிபாடெல்லாம்
தீரேதான் இடைபாகங்கை பாகங்கள்
தீர்க்கமுடன் உந்தமக்கு போதித்தேனே. (6636)

ரசவெள்ளி

போதித்தேன் இன்னமொரு மார்க்கங்கேளீர்
பொங்கமுடன் புலிப்பாணி புனிதவானே
ஆதித்தன் சந்திரன்போல் வெள்ளிபோக்கு
அப்பனே யான்உரைப்பேன் அன்புள்ளானே
நீதியுடன் சூதமது பலம் தான்ஒன்று
நிஷ்களங்கம் ஆனதொரு காடிவீரம்
தீதில்லா பாஷாணச் சுண்ணம்ஒன்று
தீர்க்கமுடன் களஞ்சியிடை தானுந்தூக்கே. (6637)

தூக்கியே கல்வமதில் இட்டுமைந்தா
துப்புறவாய் ஆறுவகை செயநீர் தன்னால்
நோக்கமுடன் தான்அறைப்பாய் இரண்டுசாமம்
நுணுக்கமுடன் மெழுகுதனை உருட்டிமைந்தா
வாக்குடனே பாகமது பிசகிடாமல்
வளமான சூதமென்ற வெண்ணைதன்னை
பாக்களவாய் உருட்டியதை மூசையிட்டு
பண்புபெற சில்லிட்டு சீலைசெய்யே. (6638)

சீலையென்றால் ஏழுசீலை வலுவாய்ச்செய்து
திட்டமுடன் சரஉலையில் வைத்துஊது
வாலையுடன் தீஆறி எடுத்துப்பாரு
வளமான சூதமது வெள்ளிஆகும்
காலையிலே தான் உதிக்குஞ் சூரியன்போல்
கருவான வெள்ளியது சோதிமெத்த
ஆலையெனும் தகடதனை யிறுத்திமைந்தா
அப்பனே புடம்போட துலக்கமாமே.

(6639)

துலக்கமாம் வெள்ளியது என்னசொல்வேன்
துப்புறவாய் சூதம்என்ற வெள்ளியாச்சு
பலத்ததொரு சிவராச வெள்ளிதன்னை
பாருலகில் நாதாக்கள் மறைத்துவைத்தார்
சுலபமென்ற வேதைமுகம் காணாமாண்பர்
சுந்தரனே வெகுகோடி மாண்பரப்பா
கலக்கமது வாராது சூதவெள்ளி
கருவான வங்கத்துக்கு அசைந்திடாதே.
(6640)

அசையாது சோதனைக்கு உறுதிவெள்ளி
அப்பனே நாதாக்கள் நூலறிந்து
வகையொன்றும் நேராமல் தாள்பணிந்து
அஷ்டாங்க யோகநிலை தன்னில்சென்று
திசைஎட்டுங் குளிகையது யானும்கொண்டு
திருவினையாள் மனோன்மணியாள் போற்றி செய்து
இசையுடனே உந்தமக்கு இந்தபாகம்
இன்பமுடன் தான்கொடுத்த வேதையாச்சே.
(6641)

ஆச்சப்பா கைபாகம் செய்பாகந்தான்
அப்பனே வினயமென்ற பதமறிந்து
மூச்சடங்கி நெடுங்காலம் இந்தசித்து
முனையான பாகமதைக் கைமறைத்தார்
பாச்சலுடன் அடியேனும் குளிகைகொண்டு
பாருலகை சுத்தியல்லோ மனதுஉவந்து
வீச்சுடனே உந்தமக்கு ஓதிவைத்தேன்
விட்டகுறை இருந்ததினால் வாய்க்கலாச்சே.
(6642)

வாய்க்கவே முன்செய்த புண்ணியத்தால்
வளமான வினயமென்ற வெள்ளிபோக்கு
தாய்க்கமலத் தாள்பணிந்த புண்ணியத்தால்
சட்டமுடன் உந்தமக்கு காணலாச்சு
பேய்பிடித்து மாண்பர்எல்லாம் வாதந்தேடி
பேரான நிலைகடந்து பதிகடந்து
மாய்கையெனும் சமுசாரம் விட்டிழந்து
மாடிழந்து வீடிழந்து மாண்டார்தாமே.
(6643)

மாண்டாரே வையகத்தில் கோடிமாண்பர்
மானிலத்தில் கணக்குண்டோ லக்கோயில்லை
வேண்டியதோர் கருமானம் அனேகம்கொண்டு
விட்டகுறை இல்லாமல் விழலாய்ப்போனார்
காண்டம்போல் பூர்வீக புண்ணியத்தால்
தற்பரனே உந்தமக்கு ஈந்தபாகம்
ஆண்டகையாள் மனோன்மணியாள் கடாட்சத்தாலே
அப்பனே உந்தமக்கு வந்தவாறே. (6644)

வெள்வங்கம் நீர்வாங்கல்

வாறானஇன்ன மொருபோக்கு சொல்வேன்
வளமையுள்ள புலிப்பாணி மன்னாகேளும்
கூறான வெள்வங்கம் பலந்தான்ஒன்று
கொற்றவனே சூதமது பலந்தான்பாதி
நீறான பாஷாண சுன்னமப்பா
நெடிதான மூசையிட்டு உருக்கியல்லோ
பேறுடைய பற்பமது குன்றியப்பா
பெருமையுடன் உருக்குமுகந் தன்னில்தாக்கே. (6645)

தாக்கவே வெள்வங்கம் உருகியல்லோ
தகைமையுள்ள நீர்தனைஉரிந்து கொள்ளும்
தேக்கலென்ற வெள்ளீய ஊட்டங்காய்ப்பு
தெளிவான நீரதுவும் ஏகியல்லோ
நோக்கமுடன் பிறவிஎன்ற வெள்ளியாச்சு
நெடிதான வங்கமதற்கு அசையாதப்பா
ஏக்கமது கொள்ளாமல் இந்தபாகம்
எளிதாகச் செய்தவர்க்கு சித்தியாமே. (6646)

சித்தியாம் வெள்ளீயம் பிரயோகித்தால்
சீரான சமுசாரிக்கான வித்தை
முத்திபெற வழியுண்டு ஞானம்உண்டு
மூதுலகில் நீயும்ஒரு சித்தனாவாய்
நித்தியமுஞ் சிவானந்த நிலையில்நின்று
நீதியுடன் சிவயோகம் தன்னைப்பாரு
சத்தியவான் வார்த்தையது பொய்யாதப்பா
சட்டமுடன் காலாங்கி சொன்னவாக்கே. (6647)

நாகக்கட்டு வேதை

சொன்னதொரு புலிப்பாணி மைந்தாகேளு
சொகுசுள்ள கண்மணியே தீராமாரா
நன்னயமாய் பலநூலும் கற்றுணர்ந்த
நாதாந்த சித்தொளிவை நவில்வேன்அப்பா
உன்னிதமாய் நாகம்என்ற லோகந்தன்னை
உற்பனமாய்த் தான்எடுத்து உண்மைபாரு
பன்னவே நாகமது தான்எடுத்து
பாலகனே உருக்கியல்லோ சாய்த்திடாயே. (6648)

சாய்க்கவே இலுப்பைநெய் தன்னில்அப்பா
சட்டமுடன் சாரமதைக் கிராசமீந்து
வாய்க்கவே பதினோரு முறைதான் அப்பா
வளமுடனே உருக்கிமிகச் சாய்த்தாயானால்
மாய்த்துமே கட்டையது சவளையாகி
மகத்தான நாகமது ஒருகண்ணாகி
பேய்ந்ததொரு மழையினால் மண்கட்டான
பேரான பிருதிவிபோல் இருக்கும்பாரே. (6649)

பாரப்பா புலிப்பாணி இன்னம்கேளு
பாகமுடன் முன்செய்த நாகம்தன்னை
நேரப்பா கரிவங்கம் தானுங்கூட்டி
நேர்மையுடன் தான்உருக்கி செப்பக்கேளீர்
ஆரப்பா தேன்வளையல் என்றுநீர்
அப்பனே தான்உருக்கி கருவிட்டாட்டி
தீரப்பா நாகமதற்கு அங்கியூட்டி
திறமுடனே ஏழுவகை சீலைசெய்யே. (6650)

ஏ்ழான சீலையது வலுவாய்ச்செய்து
எழிலான ரவிதனிலே காயவைத்து
ஆழான புடமதுவும் கோழியப்பா
அப்பனே தான்போட்டு எடுத்துப்பாரு
மீளான நாகமது கட்டும்பாரு
மிக்கான சவளைஎன்றே செப்பலாகும்
கோளாறு வாராது இந்தப்பாகம்
கொற்றவனே நாகமது கட்டிப்போச்சே.

(6651)

கட்டியதோர் நாகமது இன்னஞ்சொல்வேன்
கருவான கையானின் சாற்றினாலே
திட்டமுடன் தான்உருக்கி சாய்ப்பாயப்பா
திறமான நாகமது சீறல்ஏகி
சட்டமுடன் சவளையது போலேயாகி
தகைமையுள்ள நாகமது பகை அடங்கி
நட்டமிலாக் களங்கமதுபோல் ஜோதியோடும்
நலமான நாகத்தின் கட்டுதானே.
(6652)

தானான நாகமது கட்டுதன்னை
தண்மையுள்ள பூபாலா சாற்றக்கேளு
மானான மருதோன்றிச் சாற்றினாலே
மார்க்கமுடன் தான்உருக்கி சாய்ப்பாயப்பா
பானான பரஞ்சுடர்போல் சோதிமின்னும்
பாலகனே பத்துமுறை உருக்கிச்சாய்க்க
தேனான நாகமது கண் அடைந்து
தேற்றமுடன் புத்துமென்ற புட்டுதானே.
(6653)

புட்டான நாகமதைத் தான்எடுத்து
புகழான பழச்சாற்றில் உருக்கிச்சாய்க்க
திட்டமுடன் பத்துமுறை உருக்கிப்பாரு
தீர்க்கமுள்ள சவளையது போலே ஆகும்
சட்டமுடன் பாராமல் விராலிதன்னைக்
கருவாகத் தான்உருக்கி சாய்த்துப்பாரு
நட்டமென்ன சிவந்தகொடி வேலிதன்னை
நன்றாகப் பத்துமுறை சாய்த்திடாயே.
(6654)

பத்தான முறையதுவுஞ் சாய்த்தாயானால்
பாலகனே நாகமது கொட்டியகட்டாம்
சத்தான நாகமது கட்டேயானால்
சதகோடி சூரியர்போல் பிரகாசிக்கும்
உத்தமரும் ஞானமுள்ளோர் செய்யமாட்டார்
மூதுலகில் சமுசாரி செய்யும்வித்தை
குத்தமது வாராது நாகந்தன்னை
குணமுடனே செய்பவனே வாதியாமே.
(6655)

வாதியாம் நாகமென்ற களங்கெடுத்து
வரிசைபெற சூதமது நேரேசேர்த்து
நீதியாம் ஆறுவகை செயநீர்தன்னால்
நீட்டியரை எண்சாமம் தானும்அப்பா
ஆதியெனும் பரஞ்சுடரை மனதில்எண்ணி
சோராமல்தான் அரைப்பாய் மெழுகுபோலாம்
பாதிமதி சடையணி யுந்தம்பிரானால்
பாலகனே மெழுகதுபோல் இருக்குந்தானே.
(6656)

தானான மெழுகுதனை பில்லைதட்டி
தகைமையுடன் ரவிதனிலே காயவைத்து
கோனான குருசொன்ன வாக்குபோலே
கொற்றவனே சில்லிட்டு சீலைசெய்து
மானான மணல்மறைவில் புடத்தைப்போடு
மகத்தான செந்தூரம் நீலவர்ணம்
பானான புடமதுவும் பத்தேயாகும்
பாலகனேதான் அரைத்து போடுபோடே.
(6657)

போடவே செந்தூரம் அருணன்போலாம்
பொங்கமுடன் தான்எடுத்து செப்பக்கேளு
ஆடவே ஜீவனத்துக்கு இடமேதென்றால்
அப்பனே வழிபாடு சொல்வேனப்பா
நீடவே செம்பதுதான் களஞ்சிஒன்று
நெடிதான செந்தூரங் களஞ்சி ஒன்று
கூடவே தான்உருக்கி கொடுத்துப்பாரு
கொற்றவனே மாற்றதுவும் ஒன்பதாமே.
(6658)

தாமேதான் செம்புதனை வாரடித்து
தண்மைபெற புடம்போட பிறவித்தங்கம்
வேமேதான் காவிக்கு முப்புக்கேகா
வேதாந்தக் கண்மணியே விளக்கம்பாரு
ஆமேதான் பசுமைஎன்ற தங்கமப்பா
அப்பனே சமுசாரிக்கு ஆனதங்கம்
நாமேதான் சொன்னபடி நாகத்தங்கம்
நலம்பெறவே செய்பவனே புத்திவானே.
(6659)

ஏழாவது காண்டம்

புத்தியாம் இன்னமொரு போக்குசொல்வேன்
புகழான வெள்ளியது பத்துக்குஒன்று
வெற்றிபெற தான்உருக்கி குருஒன்றுஈய
வித்தகனே மாற்றதுவும் என்னசொல்வேன்
சத்தியமாய் எட்டரைதான் ஆணிக்கொக்கு
சன்மார்க்க புத்தியுள்ள பூபாலாகேள்
நித்தியமும் குருபதாம் புயத்தைப்போற்றி
நீமகனே ஜீவித்து இருப்பீர்காணே.

(6660)

காணவே வாரடித்து புடந்தான்போடு
கருவான வெள்ளியது பசுமையாகி
நீணவே தானிருக்கு மாற்றோமெத்த
நிஷ்களங்கம் ஆனதொரு தங்கமப்பா
ஆணவங்கள் தான்ஒடுக்கிப் பதாம்புயத்தை
அப்பனே என்னாளு மனதில்எண்ணி
காணவே கரங்குவித்து அஞ்சலித்து
காசனியில் மர்மமதாய் வாழ்குவீரே.

(6661)

வாழ்களன்றால் செந்தூரம் பதனம் பண்ணு
மகத்தான புலிப்பாணி மன்னாகேளு
வாழ்களன்றால் செந்தூரம் தனைஎடுத்து
வளம்பெறவே செயரோகந் தன்னில்ஈவாய்
வாழ்கவென்றால் மேகமென்ற இருபதுக்கும்
மகத்தான கசரோகம் தன்தனக்கும்
வாழ்கவென்றால் காயாதி கற்பம்போலே
வண்மையுடன் தான்அருந்தி வளமைகொள்ளே.

(6662)

கொள்ளவே அனுபானந் தன்னில்ஈய
கொற்றவனே காசமது ஆறும்போகும்
உள்ளதொரு பாண்டுவகை ஆறுந்தீரும்
உத்தமனே வாயுஎன்றது ஒன்பதும்போம்
கள்ளமிலாப் பித்தமது நாற்பதும்போம்
கயரோகஞ் சில்விஷங்கள் அற்றுப்போகும்
வள்ளலுயர் மேகமென்ற குஷ்டரோகம்
வண்மைபெறுந் தாமரையுந் தானும்போமே.

(6663)

போமேதான் பொல்லாத ரோகம் போகும்
போக்கான வாய்நாற்றம் வெள்ளைதீரும்
நாமேதான் சொன்னபடி நளிர்சுரங்கள்
நலமிலாக் கிராணியது ஆறுந்தீரும்
வேமேதான் நேத்ரவலி தொண்ணூற்றாறும்
விட்டகலும் மேனியது காந்திமெத்த
ஆமேதான் நாதாக்கள் கொண்டகற்பம்
அப்பனே நாகசெந் தூரம்பாரே. (6664)

பாரேதான் செந்தூரம் உண்டபேர்க்கு
பாலகனே ஏழானை பலமுண்டாகும்
நேரேதான் கிருஷ்ணாவ தாரனைப்போல்
நெடிதான ஸ்ரீலீலை மன்மதன்தான்
சீரேதான் செந்தூரந் தானுமல்லோ
ஸ்ரீராமர் கொண்டதொரு கற்பமாகும்
வேறேதான் கற்பமது இதற்கீடுண்டோ
வேதாந்தத் தாய்கொடுத்த கற்பமாச்சே.
(6665)

கற்பமாம் நாகமென்ற செந்தூரம்தான்
காலாங்கி நாதருட கடாட்சத்தாலே
சொற்பமென்று நினையாதே துய்யபாலா
சுந்தரனே சமுசாரிக் கானவித்தை
விற்பனர் கொண்டாடும் வேதைதன்னை
விள்ளாதே ஒருவருக்கும் விள்ளவேண்டாம்
அற்பமென்று நினையாதே அருள்மைந்தாகேள்
ஆச்சரிய மானதொரு மகிமைதானே. (6666)

பூரக்கட்டு வேதை

மகிமையாம் இன்னமொரு போக்குசொல்வேன்
மகத்தான புலிப்பாணி மன்னாகேளு
அகிலமெலாம் தான்புகழும் காலாங்கிநாதர்
அன்புடனே எந்தமக்குச் சொன்னநீதி
சகிதமுடன் உந்தமக்கு ஞானோபித்து
சகலகலைக் யானமெல்லாம் உபதேசிப்பேன்
விகிதராய்க் கருமிகளும் உம்மைப்பற்றி
வீரமுடன் நேசமது கொள்வார்பாரே. (6667)

பாரான கருமிகளும் உம்மைவேண்டிப்
பாருலகில் சிநேகமது செய்யஎன்று
காரான நல்லவர்போல் வார்த்தைகூறி
கடுஞ்சினத்தை மனதில்உன்னி மெய்யேபோலும்
நேரான சிடிகையென்ற வேதைமார்க்கம்
நேர்மையுடன் தாம்உரைக்க அதியஞ்சொல்வார்
கூறான வார்த்தையது மிகவிடாமல்
குணமுடனே நயமதுவாய் நேசங்கொள்ளே.
(6668)

கொள்ளவென்றால் பூரணத்தைக் கேட்பாரப்பா
கொற்றவனே மர்மமதை வெளிவிடாதே
தெள்ளுதமிழ் வாகடத்தைப் பேசுபேசு
தேஜொளிவின் சின்மயத்தை வெளிவிடாதே
உள்ளதொரு பொருளெல்லாம் உவமையோடும்
உத்தமனே தடம்பிரித்துக் கேட்பாரப்பா
கள்ளமனம் இல்லாமல் கபடகற்றி
கண்மணியே உண்மையது புகன்றிடாயே.
(6669)

புகலவே புலிப்பாணி மன்னாகேளு
புகழான பூரம்என்ற வேதைதன்னை
சகலமுனி சித்துகளும் சொன்னாரப்பா
தாரணியில் மர்மமதாய்ச் சொல்லிவிட்டார்
நிகலவே சாத்திரங்கள் கோடாகோடி
நீதியுடன் கட்டுமுறை அனேகம் கண்டார்
அகலமுள்ள இரும்பென்ற பாண்டந்தன்னை
அப்பனே வெண்மையதாய்த் துலக்கிப்போடே.
(6670)

போடவேதான் பூரம்என்ற சரக்குதன்னை
பொங்கமுடன் அயச்சட்டி தன்னிலிட்டு
நீடவே பலம்ஒன்றாய் நிறுத்திக்கொண்டு
நிஷ்களங்கமான வெள்ளாட்டுப் பாலால்
சாடவே சுறுக்கதுவும் எட்டுசாமம்
தன்மையுடன் தான்கொடுத்துப் பின்னும்கேளு
கூடவே பசுவின்பால் நாலுசாமம்
கொற்றவனே தான்கொடுத்து எடுத்திடாயே.
(6671)

எடுக்கவே பூரமதுஎன்ன சொல்வேன்
　　எழிலான தந்தமது போலேகாணும்
ஒடுக்கமதாய் உருகியல்லோ இறுகிக்காட்டும்
　　உத்தமனே சவளைநிறம் போலேகாணும்
தொடுக்கவே வெடியுப்புப் பலம்ஒன்றாகும்
　　தோறாமல் சீனமது பலம்ஒன்றாகும்
விடுத்ததொரு துருசதுவும் பலம்ஒன்றாகும்
　　வித்தகனே சிங்கியது பலம்ஒன்றாமே.
(6672)

ஒன்றான சரக்கெல்லாங் கல்வமிட்டு
　　உத்தமனே நாதாக்கள் சொன்னவண்ணம்
வென்றிடவே கல்வமதிலிட்டு மைந்தா
　　வேகமுள்ள அருக்கன்பால் தன்னால்ஆட்டி
குன்றான பூரமதுக்கு அங்கிபூட்டி
　　கூர்மையுடனே ரவிதனிலே காயப்போடு
நன்றான சீலையது ஏழுசெய்து
　　நலமுடனே எரிக்கும்வகை வரிசைகேளே.
(6673)

வரிசையாய்த் தளவாயாம் பாண்டம்தன்னில்
　　வகையுடனே பூமணலை கொட்டியேதான்
பரியான பூரமதை எடுத்துமைந்தா
　　பாங்குபெற மணலதனில் பொதிந்துமல்லோ
விரிவான மணலதனால் மேலும்மூடி
　　மேலுமந்தப் பாண்டமிட்டு சில்லுசெய்து
துரிதமுடன் ரவிதனிலே காயவைத்து
　　துப்புரவாய் வாலுகையால் ஏற்றிடாயே.
(6674)

ஏற்றியே தீபமது என்னசொல்வேன்
　　எழிலான புலிப்பாணி புத்திவானே
போற்றியே அம்பாளின் பதாம்புயத்தை
　　பொங்கமுடன் தான்எறிப்பாய்க் கமலம்போலே
நீற்றவே பூரமது கட்டுவாகு
　　நீதியுடன் தவளம்போல் நிற்கும்பாரு
ஆற்றியே ஜாமமது நாலுமாகும்
　　அப்பனே தான்எரித்து எடுத்திடாயே.
(6675)

எடுக்கவே கணபதியைப் போற்றிசெய்து
எழிலான பாண்டமது திறந்துபாரு
விடுத்ததொரு பூரமதுஎன்ன சொல்வேன்
விண்ணுலகு சந்திரன்போல் விளக்கம்மெத்த
தொடுத்ததொரு பூரமதைத் தான்எடுத்து
சேராமல் கவசமதை நீக்கியேதான்
தடுத்திடா மருந்து வகையான்உரைப்பேன்
தற்பரனே சிற்பரனே சார்ந்துகேளே.

(6676)

சார்ந்துமே பூரமதை எடுத்துபாலா
தண்மையுடன் பற்பமது செய்வதற்கு
ஓர்ந்துமே ஈயம்என்ற செந்தூரத்தை
ஓகோகோ நாதாக்கள் மறைத்துவைத்தார்
தீர்ந்ததொரு செந்தூரந் தனைஎடுத்து
தீர்க்கமுடன் பூரமதுக்கு இடையேதூக்கி
ஆர்ந்துமே சிற்றண்டக் கருவினாலே
அப்பனே தான்அரைப்பாய் சாமம்நாலே.

(6677)

நாலான சாமமது அரைத்தபின்பு
நலமாகப் பூரமதுக்கு அங்கிபூட்டி
பாலான ரவிதனிலே காயப்போடு
பட்சமுடன் தான்எடுத்து சீலைசெய்து
மாலான மண்மறை வில்புடத்தைப்பாரு
மகத்தான கோழிஎன்ற புடமேயாகும்
தூலான பூரமதுக் குள்ளிருந்து
சுந்தரனே சூதமது மடியும்பாரே.

(6678)

மடியுமே இப்படித்தான் பத்துமுறையோடு
மார்க்கமுடன் ஈயமென்ற செந்தூரத்தால்
படிபடியாய் கருவிட்டு ஆட்டி ஆட்டி
பாலகனே பூரமதுக்கு அங்கிபூட்டி
விடிந்தபின்பு ரவிதனிலே காயவைத்து
வித்தகனே சீலையது வலுவாய்ச்செய்து
முடிந்தபின்பு முன்போலே புடமும்போடு
முனையான பதமாறி எடுக்கக்கேளே.

(6679)

கேளேதான் பூரமது இறுகியல்லோ
கெடியான சூதமதும் அடங்கிநிற்கும்
வீளேதான் பூரமதை எடுத்துமைந்தா
விருப்பமுடன் பின்னுமல்லோ அதிதங்கேளு
நாளேதான் போகாமல் நாதவானே
நவிலுகின்றேன் பஞ்சபூத ஆதாரம்
சூளேதான் துருசுவெடியுப் புக்காரம்
சுந்தரனே அருஞ்சாரம் சீனந்தானே.
(6680)

சீனமாங்கரி உப்புததானும் சேர்த்து
சிறப்புடனே செவ்வாலம் பாலால்ஆட்டி
சோனமதாம் புரத்துக் கங்கிமூட்டி
சோராமல் ரவிதனிலே காயப்போடு
கானமருஞ் சுண்ணாம்புச் சீலைசெய்து
கடுரவியால் பின்னும்ஆங்கே காயவைத்து
ஊனமது வாராமல் மணல்தானப்பா
உத்தமனே கோழிஎன்ற புடத்தைப்போடே.
(6681)

புடம்ஆறித் தீர்ந்தபின்பு எடுத்துப்பாரு
புகழான ஆறுவகை சரக்குதன்னால்
தடமான பஞ்சபூத ஆறாதாரம்
.தண்மையுடன் சரக்கதுவும் சேர்த்துமல்லோ
திடமாகப் புகழடங்கி வீறுஅடங்கி
தீர்க்கமுள்ள பூரமதுஎன்ன சொல்வேன்
மடலான பூரமது உருகியல்லோ
மார்க்கமுடன் தந்தம்போல் இருக்கும்பாரே.
(6682)

தந்தமாம் பூரமது கட்டுமானால்
தண்மையுள்ள வேதையது என்னசொல்வேன்
அந்தமுடன் பூரமதை எடுத்துபாலா
ஆகாகா வராகமென்ற நெய்யினாலே
பந்தமுடன் சுருக்கதுவும் நாலுசாமம்
பாகுமுடன் தான்கொடுக்க முழுக்கட்டாகும்
விந்தையுடன் பூரமதுசிடிகை வேதை
விண்ணுலகில் மண்ணுலகில் காணார்தாமே.
(6683)

காணாமல் சித்துமுனி நாதர்தாமும்
கருவான சாத்திரங்கள் அதிகஞ்சொன்னார்
தோணாத கருக்குருவும் முறைபாடெல்லாம்
தோராமல் பாடிவைத்தார் நூல்கள்தோறும்
வீணாள்தான் போகாமல் சாத்திரத்தில்
விட்டகுறை இருந்தாலே லபிக்கும்என்று
மாணாக்கள் அறிய என்றுபல நூலெல்லாம்
மானிலத்தில் பலவிதமாய்க் கூறினாரே.
(6684)

கூறினார் வாதநூல் அநேகம்சொல்லி
குணமான பாகமதை விட்டறுத்து
தேறினார் நூல்கள்எல்லாம் முன்பின்னாக
தேற்றமுடன் கைமறைப்பாய்க் கட்டறுத்து
மீறியே சிலநூலின் உண்மைகூறி
மிக்கான செய்பாகம் வேறறுத்து
சீறியே மாணாக்கர் தமைச்சினந்து
சீரறுத்து வாரறுத்து திகைத்திட்டாரே.
(6685)

திகைத்ததொரு நூல்கள்எல்லாம் உளவு ஆராய்ந்து
தீர்க்கமுடன் காலாங்கிப்பதம் பணிந்து
பகைத்ததொரு சித்தர்களைக் கரங்குவித்து
பட்சமுடன் அஞ்சலிகள் மிகவும்செய்து
வகையுடனே குளிகையது பூண்டுமல்லோ
வளமான சீனபதி அடியேன் சென்று
தகமையுடன் குருபரனார் பதாம்புயத்தை
தாள்பணிந்து சதாகாலம் தெரிசித்தேனே.
(6686)

தெரிசித்தேன் சமாதிமுகம் மதிவாய்நின்று
தேற்றமுடன் குருவணக்கம் அதிகங்கூறி
புரிசடையோன் பதாம்புயத்தை மனதில்எண்ணி
பூபாலா காலாங்கி நாதர்பாதம்
தெரியாத எந்தனுக்கு உவமைகூறி
தெளிவான உபதேசம்மிகவே நண்ணி
சரியான சமாதியது பெறவேவேண்டி
சட்டமுடன் வரமெனக்கு அருள்என்றேனே.
(6687)

என்றதொரு வாக்கதுவும் கூறும்போது
எழிலான காலாங்கிநாதர் தாமும்
தென்திசையில் கும்பமுனி நாதருக்கு
தேற்றமுடன் தரிசனைகள் தந்தாற்போலே
சென்றதொரு எந்தனுக்கு ஆசீர்மங்கள்
தெளிவாக மனதுஉவந்து அதிகங்கொண்டு
கன்றழுகுங் காலமதில் தாய்உவந்து
கடும்பசிக்குப் பால்கொடுத்தக் கதைபோலாச்சே.
(6688)

ஆச்சப்பா எந்தனுக்கு உபதேசங்கள்
அவனிதனில் யாரதுதான் சொன்னாரில்லை
மூச்சடங்கி சென்றதொரு காலாங்கிநாதர்
முனையாக எந்தனுக்கு உண்மைகூறி
மாச்சலுடன் சமாதிமுகம் தான்இருந்து
மன்னவனே கருவிகரணா திஅந்தம்
ஏச்சலது வாராமல் பெற்றுமல்லோ
எழிலான சீனபதி கடந்திட்டேனே.
(6689)

கடந்தேனே சீனபதி நீங்கியல்லோ
காலாங்கி நாதருட கிருபையாலும்
சுடர்போன்ற மனோன்மணியாள் கடாட்சத்தாலும்
சுந்தரனே அஷ்டதிசை துடர்ந்துவந்தேன்
திடமான முறைபாடு வழிபாடெல்லாம்
தீர்க்கமுடன் குணபாடு தெரிந்துமேதான்
சட்டமுடன் காயாதி கற்பங்கொண்டு
தாரணியில் நெடுங்காலம் இருந்திட்டேனே.
(6690)

இருந்தேனே நெடுங்காலம் குளிகைகொண்டு
எழிலான சமாதிமுகம் எல்லாங்கண்டு
பொருந்தவே உந்தமக்கு உபதேசங்கள்
பொங்கமுடன் கொட்டிவைத்தேன் இடங்கொள்ளாது
திருந்தவே பூரமென்ற காயகற்பம்
திட்டமுடன் குன்றிவீதம் கொண்டாயானால்
அருந்தியதோர் தேகமது ஜோதிமின்னும்
அப்பனே பூரமதின் வேகந்தானே.
(6691)

தானான குருசொன்ன வாக்குபோலே
சட்டமுடன் மண்டலந்தான் உண்பாயானால்
பானான தேகமது என்னசொல்வேன்
பரிதிகண்ட பனிபோலே நோய்கள் தீர்ந்து
தேனான மேனியது காந்திவீசும்
தேசமதில் விதியாளி அறிவான்பாரு
மானான மகதேவர் கடாட்சத்தாலே
மார்க்கமுடன் உந்தமக்கு அமைக்கலாச்சே. (6692)

வேதைமுகம்

அமைப்பான பூரமதை எடுத்துமைந்தா
அப்பனே மதிதனிலே நூற்றுக்குஒன்று
நிமைப்பொழுதும் காலமது வீண்போகாமல்
நீதியுள்ள புலிப்பாணி புனிதவானே
சுமைதாங்கும் நலியாளக்குறை தீர்த்தாப்போல்
சுந்தரனே சிடிகையென்ற வேதைதன்னை
அமைப்புடனே மதிதானும் உருகும்போது
அப்பனே பூரமது ஆன்றுதாக்கே. (6693)

தாக்கியே உருக்குமுகம் தன்னிலப்பா
தகைமையுடன் வெள்ளிதனை எடுத்துப்பாரு
ஆக்கியோன் வாக்கதுவும் பொய்யாதப்பா
அப்பனேவெள்ளியது என்னசொல்வேன்
பாக்கியம் உண்டாகுதற்குப் பசுமையாகி
பாங்குடனே பத்தரையாம் மாற்றுமாகும்
வாக்கதுவும் பொய்யாது மைந்தாகேளு
வண்மையுள்ள பிறவியென்ற தங்கமாச்சே. (6694)

தங்கமாம் சுயத்தங்கம் பிறவித்தங்கம்
தாரணியில் நாதாக்கள் மெச்சுந்தங்கம்
புங்கசித்திக்கு உகந்ததொரு யோகத்தங்கம்
புகழான சமுசாரிக்கு ஆனதங்கம்
வங்கமதற் கசையாத வலுத்ததங்கம்
வளம்பெரிய சித்துமுனி போற்றுந்தங்கம்
இங்கிதமாம் மாண்பர்களுக்கு உகந்ததங்கம்
எழிலான நடராஜ தங்கம்பாரே.
(6695)

பாரேதான் புலிப்பாணி மைந்தாகேளு
பாலகனே இன்னமொரு போக்குசொல்வேன்
நேரேதான் செம்பதுவும் களஞ்சிநூறு
நேர்மையுடன் குகைதனிலே இட்டுமைந்தா
தீரேதான் பாகமது பிசகிடாமல்
தீர்க்கமுடன் தான் உருக்கி மருந்தைஈவாய்
கூரேதான் காரமது விட்டிருக்கி
கொற்றவனே குருவொன்று கொடுத்திடாயே.
(6696)

கொடுத்தவுடன் செம்பதுவும் உருகியல்லோ
கோவேந்தர் புலிப்பாணி மன்னாகேளு
அடுத்தவிஷஞ் செம்பினது ஊறல்ஏகி
அப்பனே மாற்றதுவுஞ் சொல்லப்போமோ
தடுத்திடா வர்ணமது என்ன சொல்வேன்
தாரணியில் நாதாக்கள் மறைத்தகூத்து
நடுப்படையில் வில்லுக்கு நாணும்அற்று
நானிலத்தில் விழுந்ததொரு கதைபோலாச்சே.
(6697)

கதையான செம்பதுவும் மாற்றோமெத்த
காசினியில் யாரறிவார் மகிமைதன்னை
சிதையாமல் வாரடித்துப் புடத்தைப்போடு
சட்டமுடன் தங்கமது என்னசொல்வேன்
உடையாது புடத்துக்கு அசைந்திடாது
உத்தமனே வங்கமதுக் குறந்திடாது
பதையாமல் வாரடித்துப் புடந்தான்போட
பாங்குபெற செம்பொன்னின் மகிமைபாரே.
(6698)

பாரேதான் கவசகுண்டலத்துக் காதி
பாங்குபெற சிவயோகிக்கு உகந்ததங்கம்
நேரேதான் வருமைவருங் காலந்தன்னில்
நேர்மையுடன் உண்பதற்குச் சொன்னநீதி
ஆரோதான் சொல்வார்கள் இந்தப்போக்கு
அப்பனே யாம்உனக்கு உரைத்தேனப்பா
சீரேதான் நெடுங்காலந் தவமிருந்து
சிற்பரனே வேதைமுகஞ் செய்துபாரே.
(6699)

செய்துமே குருவணக்கம் மிகவும்கூறி
செயலான பாக்கியமும் அதிகங்கொண்டு
வையகங்கள் தான்புகழ புத்திவானாய்
வளம்பெரிய நாதாக்கள் பதம்பணிந்து
துய்யநல்ல சிவவேடம் பூண்டுமல்லோ
துப்புரவாய் யோகநிஷ்டை தனிலிருந்து
பையவே உனக்குகந்த சீடன்தேடி
பாலகனே உபதேசஞ் சொல்வாய்தானே. (6700)

கொச்சி வீரக்கட்டு

தானான இன்னமொரு போக்குச் சொல்வேன்
தகமையுள்ள நற்பாலா நண்புள்ளானே
கோனான எனதையர் காலாங்கிநாதர்
கொற்றவனார் எந்தனுக்ககுச் சொன்னநீதி
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
தெளிவுடனே எந்தனுக்கு உபதேசித்தார்
பானான பரஞ்சுடரைப் போற்றியேதான்
பாடுகிறேன் கொச்சிஎன்ற வேதைகாணே. (6701)

காணவே கொச்சிஎன்ற வீரமப்பா
கவனமுடன் பலமதுதான் கொண்டுவந்து
தோணவே லட்சிமியாள் வீற்றிருக்கும்
துகையான வில்வமது பழந்தான்பத்து
நீணவே பழமதனைக் கீறியல்லோ
நீதியுடன் வீரமதை உள்ளமைத்து
மாணவே சீலையது வலுவாய்ச்செய்து
மயங்காமல் மணல்மறைவில் புடத்தைப்போடே.
(6702)

போடவே இப்படியே பத்துமுறைபோடு
போக்கான வீரமது கட்டிபோகும்
நீடவே வீரமது கட்டினாக்கால்
நீடாழி உலகமெல்லாம் கட்டலாம்பார்
சாடவே வீரமதைத் தான்எடுத்து
சட்டமுடன் சமென்ற செந்தூரத்தை
ஆடவே பழச்சாற்றால் தான் அரைத்து
அப்பனே வீரமதுக்கு அங்கிபூட்டே. (6703)

பூட்டியே ரவிதனிலே காயவைத்து
பொங்கமுடன் சீலையது வலுவாய்ச்செய்து
நீட்டியே மணல்மறைவில் புடத்தைபபோடு
நீதியுடன் வீரமது புகை அடங்கி
தாட்டிகமாய் உருகியே கட்டிநிற்கும்
தாடாண்மை ஆனதொரு அப்புதானும்
கூட்டியே பின்னும் அந்த வீரந்தன்னை
குணமாக மறுபடியும் செப்பக்கேளே.

(6704)

செப்பஎன்றால் இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
செயலான வீரமது தான்எடுத்து
ஒப்பமுடன் மிருதாரு சிங்கிதன்னை
ஓகோகோ நாதாக்கள் மனறப்புநீங்கி
தப்பிதங்கள் வாராமல் சிங்கிதன்னை
சட்டமுடன் வெண்கருவால் தான் அரைத்து
மெய்ப்புடனே வீரமதற்கு அங்கிபூட்டி
மேன்மையுடன் ரவிதனிலே காயப்போடே.

(6705)

காய்ந்தபின்பு சீலையது வலுவாய்ச்செய்து
கவனமுடன் மண்மறைவில் புடத்தைப்போடு
தேய்ந்ததொரு வீரமது கட்டுமாகி
தேற்றமுடன் படிகம்என்ற கல்லுபோலாம்
மாய்ந்ததொரு வீரமதைத் தான்எடுத்து
மறுபடியும் முன்போலப் பாகம்செய்து
பாய்ந்ததொரு மண்மறைவில் புடந்தான்பத்து
பாலகனே போட்டுவரக் கட்டிப்போமே.

(6706)

கட்டியதோர் வீரமதைத் தான்எடுத்து
கலங்காமல் சீலையது விலக்கியல்லோ
திட்டமுடன் பின்னுமொரு பாகஞ்சொல்வேன்
தீர்க்கமுள்ள புலிப்பாணி புகலக்கேளீர்
எட்டியென்ற வித்ததுவும் பலந்தான் ஐந்து
எழிலாக நிம்பழத்தின் சாற்றினாலே
கொட்டியதோர் விஷந்தனைத்தான் அறைத்து
கூறவே வீரமதற்கு அங்கிபூட்டே.

(6707)

அங்கியென்ற வீரமதை ரவியில்வைத்து
அப்பனே யேழுசீலை வலுவாய்ச் செய்து
இங்கிதமாய் மண்மறைவில் புடத்தைப்போடு
எழிலான புடம் ஆறி எடுத்துப்பாரு
சங்கையில்லா வீரமது என்னசொல்வேன்
சட்டமுடன் மணிபோலே இறுகிநிற்கும்
வங்கமென்ற மணிபோலே தோற்றும்பாரு
வளமையுள்ள வீரமணி ஆகும்தானே. (6708)

தானான வீரமணி என்னசொல்வேன்
தாக்கான புடமதுவும் முன்போலாக
கோனான புடமதுவும் நூறுபோடு
கொற்றவனே வீரமணி என்னசொல்வேன்
மானான வீரமணி கட்டினாக்கால்
மதகரியில் ஏறுதற்கு ஐயமுண்டோ
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
தேஜொளியின் வீரமணி காணலாமே. (6709)

காணலாம் வீரமணி தனைஎடுத்து
கனமான மதகரியின் மேலே சென்று
பூணவே வீரமணி கட்டினேன்யான்
புகழான எதிரிஎன்ற மாண்பர்தம்மை
வேணவே மண்டைதனை பிளப்பேன் என்று
விருதுபறை அறைந்திடலாம் மணியினாலே
நாணவே சித்தாதி முனிவர்தாமும்
நடுங்குவார் மணிதனையே கண்டபோதே. (6710)

கண்டதொரு நாதாந்த சித்து தாமும்
கனமுடனே உந்தனைத்தான் போற்றுவார்கள்
மண்டலத்து ராஜாதி ராஜர்தாமும்
மகாவீரன் என்றல்லோ மதிப்பார்தானும்
கொண்டல் வண்ணன் அச்சுதனார் கிருஷ்ணவதாரன்
குவலயத்தில் கொண்டதொரு குளிகைஎன்பார்
தெண்டிரைசூழ் மாண்பர்எல்லாம் உம்மையல்லோ
தேர்ந்ததொரு சித்துமுனி என்பார்பாரே. (6711)

பாரேதான் வீரமென்ற குளிகைதன்னை
பாங்குடனே தான்எடுத்துப் பகரக்கேளு
நேரேதான் ஆவினது முதுகின்பேரில்
நேர்மையுடன் தான்வைக்கப் பால்கொடாது
சீரேதான் வீரமணி ஆட்டந்தன்னால்
சிறப்பான பாலதுவுஞ் சுவறிப்போகும்
நீரேதான் மணி அதனை எடுத்தீரானால்
நிஷ்களங்க மானபால் சுரக்கும்பாரே. (6712)

சுரக்குமே மணிதனையே எடுத்துபாலா
சுந்தரனே சொல்லுகிறேன் சூட்சம்பாரு
இரக்கமுடன் உன்மீதில் மனதுஉவந்து
எழிலான மணியினது பூட்டகத்தை
திறக்கவே மணிஎன்ற வண்மைதன்னை
தீர்க்கமுடன் புகலுகிறேன் திண்ணம்பாரு
பறக்கவே வாயுவேகம் தன்னைப்போலே
பாரினிலே வாயில்இட்டு நடக்கலாமே. (6713)

நடக்கவே நெடுந்தூரம் நெடுங்காலந்தான்
நடராஜ சுந்தரனே நவில்வேனப்பா
அடக்கமுடன் குளிகைதனை வாயிலிட்டு
அவனியெல்லாம் நடந்தாலும் அசைத்திடாது
படம்வரையும் மாதர்தனைப் புணர்ந்திட்டாலும்
பகரவே கூடாது லீலாவண்ணம்
சடமதுவுந் தோன்றாது உந்தமக்கு
சட்டமுடன் குளிகைதன்னைக் கொள்வீர்தாமே.
(6714)

குளிகை வேதைமுகம்

கொள்ளவே இன்னமொரு போக்குசொல்வேன்
குணமான புலிப்பாணி கேந்திராகேள்
எள்ளளவும் பிசகாது இந்தபாகம்
எழிலான வீரமணி வேதையப்பா
விள்ளாதே ஒருவருக்கும் இந்தபாகம்
விட்டகுறை இருந்ததினால் உந்தமக்கு
கள்ளமது வாராமல் மனதுவந்து
கண்மணியே கடாட்சித்தேன் பண்புதானே. (6715)

பண்பான வீரமணி தன்னைஎடுத்து
பார்வேந்தா வெள்வங்கம் சேர்தானப்பா
திண்ணமுடன் தான்உருக்கி குகையில்இட்டு
தீரமுடனே வீரமணி தனைஎடுத்து
அண்ணலார் பதம்போற்றி அடிபணிந்து
அப்பனே குளிகையது எடுத்துமைந்தா
வண்ணமுடன் வங்கமது இருகும்போது
வளம்பெறவே குளிகைதனைப் பொதிந்திடாயே.
(6716)

பொதியவே நீருண்டு மேலெழும்பி
பொங்கமுடன் மணியதுவும் தெறிக்கும்பாரு
மதிபோன்ற வெள்ளியது என்னசொல்வேன்
மகத்தான வெள்ளீயம் நீர்தான்ஏகி
துதிபெறவே வெள்ளியது மாற்றோமெத்த
துப்புரவாய் சொல்வதற்கு நாவுமில்லை
பதியான வீரமணி தனில்உதித்த
பரிதியென்ற வெள்ளியது காணலாமே.
(6717)

காணவே இன்னமொரு போக்குசொல்வேன்
கண்மணியே புலிப்பாணி கவிராஜேந்திரா
ஆணவத்தால் வந்ததொரு கசரோகங்கள்
அப்பனே தேன்தனில் அனுபானித்தால்
நாணமது வாராமல் ரோகங்கள்
நாடாது மேனிவிட்டு நழுவும்பாரு
மாணமருங் கல்வியுள்ள புத்திவானே
மார்க்கமுடன் இன்னமொரு மருமங்கேளே
(6718)

கேளப்பா மணியதனை எடுத்துமைந்தா
கெவனமுடன் பாணிதனிற் பதனம்பண்ணு
வாளப்பா தேகமது செல்லும் போது
வளமுடனே ஐந்தறிவுங் குண்ணனுமல்லோ
நாளப்பா உடலைவிட்டு ஆத்துமந்தான்
நீங்கியே போவதற்கு முன்னதாக
பாளப்பா தன்னைத்தான் மறந்துமல்லோ
பாழுடலம் போவதற்கு நாளும்உண்டே.
(6719)

உண்டான காலமது ஒடுக்கந்தன்னில்
உத்தமனே தாகமென்ற கருவுதன்னில்
கொண்டிடவே வீரமென்ற குளிகைதன்னை
கொற்றவனே தான்இழைத்து நாவில்தீட்ட
தண்டமுடன் செத்தசவம் போலானாலும்
தாரணியில் தலைஎடுத்து வார்த்தைகூறும்
சண்டமாருதம்போலே இந்தவீரம்
சட்டமுடன் உந்தனுக்கு ஓதினேனே. (6720)

சகலரோகங்களுக்குஞ் சூரணபாகம் காயகற்பம்

ஓதவே இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
ஓகோகோ நாதாக்கள் ஒளித்தமார்க்கம்
நீதமுடன் காயகற்பச் சூரணந்தான்
நிலையான யோகிகட்கும் மாண்பருக்கும்
தோதமுடன் சரக்குவகை செப்பக்கேளும்
தோன்றாமல் சுக்குடனே மிளகுமாகும்
ஆதமுடன் திப்பிலியுங் கடுக்காய்த்தான்றி
அப்பனே மாசிக்காய் தானும்கூட்டே. (6721)

கூட்டவே தேசாவரம் வாய்விளங்கம்
குணமான கார்போகம் கடுக்காய்ப்பூவும்
நாட்டமுடன் சிற்றரத்தை பேரரத்தை
நலமான வாலுளுவை ஓமந்தானும்
வாட்டமுடன் சிறுமல்லி பேராமல்லி
வளமான குராசுரனி யோமந்தானும்
கோஷ்டமுடன் கண்டதிப்பிலியுங் கூட்டி
குணமான அதிமதுரம் ஏலம் தானே. (6722)

தானான கிராம்புடனே லவங்கப்பட்டை
தண்மையுள்ள ஜாதிக்காய் ஜாதிப்பத்திரி
கோனான தக்கோலம் பிரப்பின்மூலம்
கொடிதான பூமிசர்க்கரையும் ஆகும்
தேனான பரங்கியுட பட்டைதானும்
தெளிவான வால்மிளகு செங்கடுக்காய்
பானான துளசிஎன்ற வித்துதானும்
பாங்கான ஆலினது வித்துங்கூட்டே.
(6723)

வித்தான அரசினது வித்துமாகும்
வீரான பிச்சினுட வித்துமாகும்
சித்தமுள்ள பூனையென்ற காலிதானும்
சுந்தரனே ஊமத்தை வித்துங்கூட்டு
மெடுத்த அரி தானதுஒரு விராலிவித்து
மேன்மையுள்ள பூஅரசன் வித்துகூட்டு
சத்தநதிக்கு அப்பாலே விளையும்வித்து
சந்தனமாம் வித்ததுவுங் கூடச்சேரே.
(6724)

சேரப்பா அத்தியுட வித்துதானும்
செயலான அழிஞ்சியுட வித்துதானும்
கூரப்பா சாரத்தின் வித்துதானும்
குறிப்பான ஊமத்தின் வித்துதானும்
நேரப்பா முருக்கிலையின் வித்துதானும்
நெடிதான எருக்கினுட வித்துதானும்
ஆரப்பா தூரியுடவித்து தானும்
அப்பனே எள்ளினுட வித்துகாணே.
(6725)

காணவே வகைவகைக்குப் பலந்தான்ஒன்று
கருத்தாகத்தான் வறுத்து தூரணித்து
தோணவே தூரணத்தை ஒன்றாய்க்கூட்டி
சோராமல் பசும்பாலில் சுத்தித்தேதான்
வேணதொரு சரிபாகம் சீனிசேர்த்து
விருப்பமுடன் சீசாவில் பதனம்பண்ணு
ஆணவங்கள் உண்டாக இந்தபாகம்
அப்பனே சரிகூட்டி பதனம்பண்ணே.
(6726)

பண்ணவே முப்பூவுகளஞ்சி சேர்த்து
பண்மையுடன் மண்டலந்தான் கொண்டபேர்க்கு
நண்ணவே நடுச்சாம வயதுதன்னில்
நாட்டமுடன் சிவயோகம் செய்யும்பேர்க்கு
திண்ணவே மண்டலந்தான் காயகற்பம்
தீர்க்கமுடன் சமுசாரிக்கு ஆனவித்தை
வண்ணமுடன் இப்பாகஞ் சித்தருக்கு
வளமையுடன் மறைத்துவைத்தார் உண்மைபாரே.
(6727)

பாரேதான் மண்டலங் காயாதிஅப்பா
பாங்குபெற உண்டவர்க்கு எல்லாம்சித்தி
நேரேதான் சமுசாரிக் கானகற்பம்
நெடிதான துறவிகட்கும் உகந்தகற்பம்
சீரேதான் காயாதி கொண்டபின்பு
தீர்க்கமுடன் வழலையது கொள்ளவேண்டும்
நீரேதான் வழலையது கைபாகந்தான்
நீதியுடன் அறிவதற்கு இன்னங்கேளே. (6728)

யோகஞ்சாதிப்போர்க்கு வழலைத்திராவகம்

கேளப்பா புலிப்பாணி மன்னாபாரு
கெடியான யோகங்கள் சாதிப்போர்க்கு
வாளேதான் சமுசாரி குடியுள்ளோர்க்கு
வகுப்பான சிவயோகி வேடத்தோர்க்கும்
பாளேதான் யோகமது போகாமல்தான்
பகருகிறேன் திராவக வழலையப்பா
சூளேதான் கைபாகம் செய்பாகந்தான்
சூட்டுகிறேன் வரிசைமுறை இன்னங்கேளே. (6729)

முறையான முறைபாடு ஏதுஎன்றாக்கால்
முனையான லவணமது வெடியுப்பாகும்
துறையான கல்லுப்பு வளையலுப்பு
துடியான சவுட்டுப்பு இந்துப்புஆகும்
குறையகற்பம் கரியுப்பு பூநீறுப்பு
குணமான சாரமுடன் சீனகற்பம்
பிறைபோன்ற பாஷாணங் கௌரிதானும்
பேரான லிங்கமது பூரங்கூட்டே. (6730)

கூட்டவே வீரமுடன் சிங்கிதானும்
குணமான தாளகமும் கெவுரிதானும்
நீட்டவே மனோசிலையும் அரிதாரம்தான்
நிலையான கெந்தியுடன் கற்பாஷாணம்
நாட்டமுடன் சங்குஎன்ற பாஷாணந்தான்
நலமான துத்தமுடன் துருசும்கூட்டு
வாட்டமுடன் சரக்கெல்லாம் சமனதாக
வளமுடனே தான்நிறுத்தி யெடுத்துக்கொள்ளே.
(6731)

கொள்ளவே சரக்குநிகர் சாரஞ்சேர்த்து
கொடிதான சீனமது ரெட்டிப்பாக்கி
விள்ளவே குழிக்கல்லில் பொடியதாக்கி
வீரான வாலையிட்டு திராவகந்தான்
மெள்ளவே பாண்டமதில் சரக்கைஇட்டு
மேன்மையுடன் சக்கரமாம் வாலைதன்னை
எள்ளளவும் கோளாறு நேராமல்தான்
எளிதான திராவகத்தை வாங்குவாங்கே. (6732)

வாங்கையிலே திராவகந்தான் வெளுத்தவண்ணம்
வளமையுடன் மறுபடியும்மடித்து வாங்கு
தூங்கியே திரியாதே துய்யபாலா
துப்புரவாய் திராவகத்தை ஏழுமுறைவாங்கு
ஏங்கியே இருக்காமல் திராவகத்தை
எழிலான சீசாவில் பதனம்பண்ணு
சாங்கமுடன் யோகமது சாதிக்குங்கால்
சட்டமுடன் திராவகத்தின் தன்மைகேளே. (6733)

தண்மையாம் திராவகத்தை தாக்குவண்ணம்
தகைமையுள்ள புலிப்பாணி தயவுள்ளானே
உண்மையுடன் மண்டலம் தான்அந்திசந்தி
உத்தமனே களஞ்சியது கொண்டாயானால்
தண்ணமுடன் வாசியது மேல்நோக்காது
நளினமது வாராது நடுங்காமேனி
சுன்னமது கொண்டாலும் ஒன்றுமில்லை
சுந்தரனே திராவகத்தை பதனஞ்செய்யே. (6734)

புலிப்பாணிக்கு போகர் ஞானப்பால்வூட்டல்

செய்யவே இன்னமொரு வளப்பஞ்சொல்வேன்
செயலான புலிப்பாணி கணிதவானே.
வையகத்தில் நெடுங்காலம் இருந்துமல்லோ
வளமுடனே உபதேசம் அனேகங் கொண்டீர்
வெய்யவே மகுத்துவங்கள் கோடாகோடி
மேன்மையுடன் தான் அடைந்தீர் புண்ணியத்தால்
பையவே உந்தமக்கு ஞானப்பாலை
பகருகிறேன் புலிப்பாணி பண்புள்ளானே.
(6735)

பண்பான புலிப்பாணி பாருள்ளானே
பகருகிறேன் ஞானமென்ற பாலையப்பா
நண்பான வேங்கைதனை விட்டுஇறங்கி
நலமுடனே திருப்பாலின் கடலின்மார்க்கம்
விண்ணதனில் குளிகையிட்டு என்பின்னாக
விட்டகுறை இருந்ததொரு புண்ணியத்தால்
வண்ணமுடன் பின்தொடர்ந்து வருகஎன்று
வணக்கமுடன் போகரவர் கூறுவாரே.
(6736)

கூறுவார் வாய்திறந்து போகர்தாமும்
குணமான புலிப்பாணி தன்னைத்தானும்
நாறுமுடலம் தமக்கு உபதேசங்கள்
நற்கதிகள் பெறுவதற்கு நயமதாக
ஆறுபடை சூழ்நகரந் தன்னைநீங்கி
அப்பனே திருப்பாலின் கடல்வாவென்று
பேறுடைய சப்தமுடன் உச்சாடித்து
பெருமையுடன் சீடனுக்கு போதிப்பாரே.
(6737)

போதிப்பார் லோகமது மார்க்கந்தன்னை
பொங்கமுடன் சாத்திரத்தின் வழிபாடெல்லாம்
சாதிப்பாய் உலகமெல்லாம் ஆடலாகும்
தற்பரன்போல் இருப்பதற்கு ஞாயமுண்டு
நீதியுடன் வையகத்து மகிமைஎல்லாம்
நிஷ்களங்க மாகவல்லோ நடத்தலாகும்
ஆதிஅந்தம் ஆனதொரு சாதிபேதம்
அப்பனே நடத்துவதாம் உண்மைபாரே.
(6738)

பாரேதான் திக்கெட்டும் ஆளலாகும்
பாராளும் மன்னவரை வெல்லாகும்
தீரேதான் திக்குவிஜயம் கொண்டதீரன்
தீர்க்கமுள்ள பற்குணனை வெல்லலாகு.
சீரேதான் எழுகடலும் காணலாகும்
சிறப்புடனே நீரின்மேல் நடக்கலாகும்
கூரேதான் மிருகம்என்ற ஜாதிதன்னை
குறிப்புடனே அழைப்பதற்கு வசியம்உண்டே.
(6739)

வசியமாம் பட்சிதனை பிடித்துவந்து
வழக்கமுடன் பாஷைகளைச் சொல்லலாகும்
நிசிதமுடன் அரவமதை ஆட்டலாகும்
நிஷ்டூர மானதொரு கொடியபேரை
நசிதமுடன் நன்மைபாற் செலுத்தலாகும்
நலமான பரியோகம் செய்யலாகும்
பசிவந்த பாலகனுக்கு பால்கொடுத்த
பாருலகில் கதைபோல முடியுந்தானே.
(6740)

தானான உலகமதை ஆண்டும்என்ன
தாரணியில் கீர்த்தியது பெற்றும்என்ன
கோனான கோவேந்தர் தன்னைப்போலே
கொற்றவனே கிரீடமதைக் கொண்டும்என்ன
தேனான மாளிகையும் கட்டிஎன்ன
திகழான சமுசாரம் கொண்டும்என்ன
பானான பாலகரை பெற்றும்என்ன
பாலகனே ஞானம்என்ற பால்தான்வேண்டே.
(6741)

பாலான ஞானமென்ற பாலையப்பா
பகருகிறேன் புலிப்பாணி பளிங்குள்ளானே
மேலான பதந்தனையே நண்ணவேண்டும்
மேதினியில் பவக்கடலை அகற்றவேண்டும்
நாலான பதந்தனக்கு மேலேஅப்பா
நற்பதமாம் சொற்பதத்தை நண்ணல்வேண்டும்
காலான சிதாபாசப் பொருளையப்பா
கருதுவேன் உத்தமக்குக் கருதுவேனே
(6742)

கருதவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
கண்மணியே புலிப்பாணி கவிராஜேந்திரா
திருதமுள்ள திருப்பாலின் கடலின்பக்கம்
சிற்பரனே என்பாலா சீரியோனே
குருவினது காலாங்கி வாக்குபோலே
குணமா உபதேசம் நீயும்பெற்று
பரிதிமதி யுள்ளநாள் அளவுமட்டும்
பாலகனே கூபதேசம் போற்றுவாயே.
(6743)

போற்றவே புலிப்பாணி புகழ் உள்ளானே
பொங்கமுடன் திருப்பாலின் நடுமையத்தில்
ஆற்றவே கிரு"ணாவ தாரனப்பா
அலைக்கடலில் பள்ளிகொண்ட அம்பலத்தில்
நால்திசையும் நாதாந்த சித்துதாமும்
நடுக்கமுடன ரிஷிகளெல்லாம் பார்த்திருக்க
மேற்புறத்தில் போகரிஷி நாதர்தாமும்
மெல்லெனவே வடபாகம் சாதிப்பாரே
(6744)

சாதிக்க வடபாகந் தானிருந்து
சட்டமுடன் புலிப்பாணிக்கு உபதேசிக்க
மேதினியில் தேவாதி தேவரெல்லாம்
மேன்மையுடன் கண்டல்லோ பிரமித்துஏங்க
ஆதியென்ற பராபரியாள் முன்னேநிற்க
அங்ஙனவே உபதேச மனதுவந்து
சோதிமணி மந்திரத்தை உச்சாடித்து
சுந்தரற்கு உபதேசங் கூறுவாரே.
(6745)

கூறுவார் உபதேசம் என்னவென்றால்
குணமான திருப்பாவின் கடலின்மேலே
மாறுபாடு ஆனதொரு மயத்தை நீக்கி
மகத்தான சிதாபாச நிலையில்நின்று
தேறுதலாய் சமாதிமுகம் நிற்கவேண்டும்
தேஜொலியின் சின்மயத்தை அறியவேண்டும்
ஆறுதலம் என்றதொரு பிரளயத்தை
அப்பனே உச்சரித்து நிலையில்நில்லே.
(6746)

நிலையான நிலையதுவும்என்ன சொல்வேன்
நிஷ்களங்க மானதொரு சுபாலபீடம்
கலையான கலையதுவும் இடகலைபிங்கலையில்
கருவான நாசியது மையம்பற்றி
மலையான கபாலமென்ற பீடம்பற்றி
மகத்தான மூலவரை மேலேசென்று
தலையான பஞ்சேந்திர முள்ளடக்கம்
சாற்றுகிறேன் சிவயோகஞ் சாற்றுவேனே.
(6747)

சாற்றுகிறேன் துவாரமது ஒன்பதுந்தான்
சட்டமுடன் தான் அடைத்து மேலேபூட்டி
போற்றியதோர் கும்பகத்தில் நின்றுகொண்டு
போதனாசத்தி எல்லாம் மனதில் உன்னி
தூற்றியேதான் புடைத்து பொருளாராய்ந்து
துப்புரவாய் சிதாபாசக் களையறுத்து
மாற்றியே அட்சரத்தை உள்ளாராய்ந்து
மகத்தான உளவுதனை யறிந்துகொள்ளே. (6748)

கொள்ளவே அறுபத்துக் கலைநான்காகக்
கோடான கலைவகுத்துக் கயிர்கள்மாட்டி
விள்ளவே சச்சிதா நிலையில்நின்று
விட்டகுறை வருமளவும் மேலேநோக்கி
உள்ளதொரு பூரணத்தை வெளிகாட்டாமல்
உத்தமனே விசித்தியிலே நின்றுகொண்டு
தெள்ளமுர்த மானதொரு ஞானப்பாலை
தேற்றமுடன் ஊசரத்தி லிருந்துதாக்கே. (6749)

தாக்கவே யூசரத்தைக் கொள்ளும்போது
தகைமையுள்ள அனாகத்தை எட்டிவாங்கு
நோக்கமுடன் கேசரத்தைக் கொண்டாயானால்
நுணுக்கமுடன் கலைவகுத்துப் பிரிக்கலாகும்
ஆக்கமுடன் விசித்தியிலே இருந்துகொண்டு
ஆண்மையுடன் சுழித்தியிலே மேலேபாய்ந்து
சாக்கரதை சொற்பனமும் அவஸ்தைஅற்று
சட்டமுடன் இருப்பதுவே சமாதிதானே. (6750)

ஞானப்பாலறிதல்

தானான சமாதியிலே நின்றுகொண்டு
சட்டமுடன் யோகமது கொள்ளும்போது
கோனான குருநிலையைக்கை நிலையாய் ஊன்றி
குவலயத்தில் நடப்பவனே யோகவானாம்
தேனான தேஜொளிவின் மயத்தைக்கண்டு
தேற்றமுடன் சொக்கியல்லோ போகாமல்தான்
பானான பரஞ்சுடரைப் பற்றியல்லோ
பரவெளியில் சமாதிவழி சாதிப்பாயே.

(6751)

சாதிக்க முச்சுடரை அறியலாகும்
சட்டமுடன் நிஷ்டானு பூதிகொண்டு
ஆதிஅந்தம் கருவிகரம் உளவாராய்ந்து
அஷ்டாங்க யோகநிலை தன்னில்சென்று
நீதியுடன் மாயவலை சிக்கறுத்து
நிஷ்களங்கமான சுபநிலையில் சென்று
சோதியெனும் உட்பொருளை மனதில்உன்னி
சுந்தரனே கமலமென்ற பிடந்தாக்கே.
(6752)

தாக்கையிலே கேசரத்தில் நின்றுகொண்டு
தகமையுள்ள பூரணத்தைப்போற்றி செய்து
நோக்கமுடன் கும்பத்தின் மேலிருந்து
நொடிக்குள்ளே சுவாதிஷ்டானம் தெரிந்து
வாக்குடனே மனோலயத்தை உச்சரித்து
வளமுடனே அஷ்டநிலை பதியில்சென்று
தூக்கமெனும் இருட்கடலை விட்டுஅகற்றி
துய்யகருணா னந்தம் கருவிபூணே.
(6753)

பூணவே கருவிளன்றால் ஞானப்பாலை
புகழான பவக்கடலை விட்டுஅகற்றி
தோணவே சின்மயத்தை மனதில்உன்னி
தோறாதகடுஞ் சினத்தை சிக்கறுத்து
வேணபடி மூச்சுடரைப் பற்றியல்லோ
வேதாந்த மனோன்மணியைத் துதித்துநின்று
நீணவே வைராக்கிய கியானம்ஊட்டி
நிஷ்களங்கம் ஆனதொரு நிலையில்நில்லே.
(6754)

நில்லப்பா பசுபதியாம் பாசம்தனை
நிலையான மவுனமென்ற நிலையில்பூட்டி
வல்லதொரு பிரகாச நிலையில்நின்று
வளம்பெறவே சூக்குமத்தின் வேர்அறுத்து
புல்லவே பாஷாந்திர பேதாபேதம்
புகழான கருவிகர ணாதிஅந்தம்
நல்லதொரு சிவானந்த நிலையைப்பற்றி
நாட்டமுடன் மனதுஉவந்து நவிலக்கேளே.
(6755)

நவிலவே சிதாபாச வலை அப்ற்றி
நலமுடனே பௌஷிகத்தின் வேர் அறுத்து
நவிலவே கற்பாந்திர காலமட்டும்
கருத்துடனே கச்சிதா நிலையைப்பற்றி
புவிலவே அருட்கடலைக் காண்பதற்கு
புகழான இருட்கடலை விட்டுஅகற்றி
விவிலவே வித்தியா ரண்ணியத்தை
விருப்பமுடன் கூறுகிறேன் உண்மைபாரே.
(6756)

பாரேதான் சன்னியாசி வர்த்தங்சொண்டு
பாங்கான கலையகற்றி நிலையைப்பற்றி
சேரேதான் சிவானந்த லகிரியாலே
செம்மலுடன் குருசம்பிரதாய வர்க்கம்
நீரேதான் கற்றறிந்து நிலையில்நின்று
நிட்திதமாம் பொருள்அதனை விட்டுஅகற்றி
கூரேதான் சசிவர்ண சுயரூபத்தை
குணமுடனே ஓதுகிறேன் இன்னந்தானே.
(6757)

தானான மனக்குரங்கை விட்டு அகற்றி
தண்மையுள்ள இதிகாசச் பொருள் அறிந்து
தேனான அமுர்தம் எனுஞ்சீர பாத்திரம்
தெகிட்டாத தெள்ளமுர்த ஞானப்பாலை
மானான மதிஅமுர்தங் கொண்டாற்போல
மதகரியாம் ஆணவத்தை ஒடுக்கிநின்று
பானான பத்மமெனும் யுகாந்தப்போரை
பற்றுஅறுத்து விட்டுஅறுத்து பதிவாய்நில்லே.
(6758)

நிற்கையிலே சோதிமயம் தன்னில்தோற்றும்
நீதியுள்ள பாடுதுறை வழிதான் காட்டும்
அற்பமென்று நினையாதே அடிவணங்கி
அம்பரத்தின் மேலிருந்து அறிவாய்உன்னி
சொற்பமதாய் வாசியதை கீழ்நோக்காமல்
சோறாமல் மனந்தளர்ந்து சூட்சமேகி
உற்பனமாய் உமிழ்நீரை வழலையாக்கி
உத்தமனே நாள்தோறும் அமுர்தம்உண்ணே.
(6759)

உண்ணவே தேகமெனுங் கோட்டைதன்னில்
உத்தமனே உட்கோட்டை ஏழுகோட்டை
நண்ணவே துவாரமது ஒன்பதாகும்
நலமான பஞ்சேந்திரியம் ஐந்துமாகும்
திண்ணவே உடல்பொருள் ஆவி அந்தம்
தீர்க்கமுள்ள ஏழுசுற்றுக் கோட்டைக்குள்ளே
வண்ணமுடன் கலையதுதான் முப்பத்திரண்டு
வளமான இடகலையின் கலைதான் ரெண்டே.
(6760)

இரண்டான கலைக்குள்ளே முப்பத்திரெண்டு
எழிலான கலையதுவும் இதில் அடக்கம்
திரண்டுமே ரேசக பூரகத்தைப்பற்றி
தெளிவான கும்பகமும் அதில்அடக்கம்
கரண்டகம் போல் ஆகாச கபாடமாகும்
கருவிகரணா தியந்தம் அதில் அடக்கம்
வரண்டதொரு மேல்வீடு மோட்சவீடு
வளம்பெரிய ஆகாயம் கோட்டையாமே.
(6761)

கோட்டையாங் கபாலம்என்ற கோட்டை அப்பா
கொடிதான சின்மயத்தின் கோட்டையாகும்
பாட்டையுடன் வாசலது அதிலேஉண்டு
பாலகனே சின்மயத்தின் வாசலப்பா
தேட்டைஎனும் அமுர்தமப்பா உமிழ்நீர்தேட்டை
தேஜொளிவின் பம்பரம்போல் சுராகுந்தேட்டை
காட்டையது கண்டாலும் காணலாம்பார்
காயாபுரிக் கோட்டையின்தான் கருகாணாரே.
(6762)

காணாரே பஞ்சேந்திரியக் கோட்டைதன்னை
கருவான தடங்களது காணமாட்டார்
தோணாரே வாசலது தடம்கண்டாலும்
தோறாமல் சின்மயத்தின் வழி அறிந்து
வீணாளைப் போக்காமல் விட்டில்போலே
வியாபித்துக் கருஅயர்ந்து விழலாய்ப்போனார்
ஊணாமல் பரஞ்சுடரை அளல்என்றெண்ணி
உத்தமனே பாதைவழி தெரியார்காணே.
(6763)

தானான அட்சரத்தை ஓதமாட்டார்
தண்மையுள்ள குருட்டுவழி தன்னில்சென்று
தேனான மடாலயத்தை வீடுஎன்று எண்ணி
தேற்றமுடன் கிருஷ்ணாவ தாரன் அப்பா
பானான கீதையிலே உபதேசித்த
பற்குணனார் உபதேசம் போலே அப்பா
மானான பதமபீடம் பெற்றேன் என்று
மார்க்கமுடன் தாம் உரைத்து கெட்டாரீர. (6764)

கெட்டாரே ஞானத்தின் பீடம்கண்டால்
கெடியான மோட்சவழி காணலாகும்
தொட்டாலே சின்மயத்தின் பொருளே தொட்டால்
தோறாமல் கேசரிதான் பத்தலாகும்
விட்டகுறை இருந்தாலும் ஞானப்பால்தான்
விருப்பமுடன் உந்தமக்கு லபிக்கும்பாரு
தொட்டகுறி போலதுவே துய்யபாலா
துப்புரவாய் உபதேசம் செய்திட்டேனே. (6765)

துருசு செந்தூரக்களங்கு

இட்டேனே இன்னமொரு பாகம்சொல்வேன்
எழிலான புலிப்பாணி ராஜாபாலா
நட்டதொரு பயிர் எல்லாம் பயிர்தான் ஆமோ
நாடுஅதனில் பெற்றதெல்லாம் பாலர் ஆமோ
துட்டரென்றால் துட்டரது சொல்லப்போமோ
துரைராஜ சுந்தரனே துய்யவேலா
கெட்டவர்கள் நல்லவர்கள் ஆவாரோதான்
கெடியான வையகத்தில் மாண்பர்தாமே. (6766)

மாண்பான வையகத்தின் மார்க்கம்சொல்வேன்
மார்க்கமுடன் முறைபாடு வெவ்வேறு ஆகும்
தாண்பான கொக்கது தான் அன்னமாமோ
தாடாண்மை கொண்டதொரு கோழிதானும்
ஆண்பான கலாபம் என்றமயில் தான் ஆமோ
அப்பனே குன்றின்மணி கெம்பாமோசொல்
காண்பான செக்கதுவும் லிங்கமாமோ
தாரணியில் முறைபாடு இன்னம்கேளே.
(6767)

கேளேதான் பனியதுவும் மழைதான் ஆமோ
கெடியான மின்மினிதான் விளக்கு ஆமோசொல்
தாளான பிரிதிவென்ற பவளந்தானும்
தாக்கான நற்பவளம் ஆகுமோசொல்
பாளான சிப்பியது வெள்ளி ஆமோ
பாலான வெள்ளைமணல் உப்பு ஆமோசொல்
கேளான மாண்பர்களில் நிகர்தான்கூற
கொற்றவனே வேணவித்தியாசம்பாரே.

(6768)

பாரேதான் சவுரியங்கள் அதிகம் உள்ளோர்
பாருலகில் ஒருவருக்கு ஓர்ஈடும்உண்டோ
நேரேதான் அவரொக்க ரிஷிகளாவார்
நேர்மையுடன் இவரொக்கர் அவரேயாவார்
சீரேதான் சீர்வளங்கள் மிகவும்பாடி
சிறப்புடனே பேர்வளங்கள் மிகக்கொண்டாடி
கூரேதான் சித்துமுனி சாத்திரங்கள்
கூறினார் வெகுகோடி வேதைதானே.

(6769)

வேதையாம் இன்னமொரு பாகம்சொல்வேன்
வேதாந்தந் தாயினது கிருபையாலே
பாதையாம் சமுசாரிக்கு ஆனவித்தை
பாலகனே உந்தமக்குப் பகருவேன்யான்
சீதையெனும் பெண்ணரசி மாதுபூண்டச்
செகசோதி தங்கமதை என்னசொல்வேன்
சூதுஅகற்றி மயக்குஅறுத்து சுட்டிடாமல்
சுந்தரனே சிடிகைஎன்ற வேதைகேளே.

(6770)

கேளேதான் துருசதுவும் சேர்தான்எட்டு
கெடியான தாரமது சேர்தான்ஒன்று
பாளேதான் போகாமல் கல்வமிட்டு
பாலகனே தான்அரைப்பாய் நாலுசாமம்
நீளேதான் செருப்படையில் நாலுசாமம்
நிலையான நுணாமூலி நாலுசாமம்
கீளேதான் வேர்ஓடிப் படர்ந்திருக்கும்
கொடியான கும்மட்டி மூலிவாங்கே.

(6771)

வாங்கியே தான் அரைப்பாய் நாலுசாமம்
வளமுடனே மாத்திரையாய்ச் செய்துகொண்டு
தூங்கியே திரியாதே துய்யபாலா
துப்புரவாய் மாத்திரையைப் பீங்கானிட்டு
ஓங்கியே வெள்ளாட்டுக் கோமியந்தான்
உத்தமனே மண்டலந்தான் ஊறப்போட்டு
சாங்கமுடன் மண்டலந்தான் சென்றபின்பு
சட்டமுடன் மாத்திரைதான் எடுத்துக்கொள்ளே.
(6772)

கொள்ளவே மாத்திரைதான் பதனம்பண்ணு
கோவந்தா புலிப்பாணி புனிதவானே
விள்ளவே வெள்ளியது பலந்தான்ரெண்டு
விருப்பமுடன் மாத்திரைதான் துலந்தான்பத்து
எள்ளளவும் பிசகதுவும் நேராமல் தான்
எழிலான வெள்ளிதனை மூசை இட்டு
உள்ளபடி வெள்ளியது உருகும்போது
உத்தமனே மாத்திரைதான் துலமும்போடே.
(6773)

போடேதான் மாத்திரைதான் உருகியல்லோ
பொங்கமுடன் தான்இறக்கி வைத்துமல்லோ
நாடேதான் மற்றாநாள் பின்னுமப்பா
நலமுடனே மூசைதனை உருக்கிக்கொண்டு
நீடேதான் பின்னும் அந்த மூசைதன்னில்
நிலையான மாத்திரையை துலந்தான்ஈவாய்
கூடேதான் மூசைதனை இறக்கிவைத்து
குணமாக மற்றாநாள் உருக்கிக்கொள்ளே.
(6774)

உருக்கியே பத்துமுறை பத்துநாளப்பா
முனையான மாத்திரையை கிராசம்ஈவாய்
செருக்குடனே பத்துநாள் ஆனபின்பு
செவ்வையுடன் மூசைதனை எடுத்துமைந்தா
பெறுக்கவே ஆறுவகை செயநீர் தன்னில்
பேரான வெள்ளிதனை உருக்கிச்சாய்ப்பாய்
சுருக்கமது வாராது வெள்ளிக்கப்பா
சுந்தரனே பத்துமுறை உருக்கிஊத்தே.
(6775)

ஊத்தையிலே இருண்டசெம்பு வெள்ளிதானும்
உத்தமனே மஞ்சள்என்ற வரணங்கானும்
நாத்தமுள்ள செம்பதுவும் ஊறல்ஏகி
நலமான வெள்ளியது பழுக்கும்பாரு
பார்த்தவர்கள் வாதம்என்ற சூதுவித்தை
பாருலகில் மகிமைதனை அறிவாரோதான்
நேர்த்தியுள்ள கண்டரது மகிமையாலே
நேர்மையுள்ள வெள்ளியது பழுக்கலாச்சே.
(6776)

ஆச்சப்பா மலைநாட்டுக் குள்ளிருக்கும்
அப்பனே குரும்பரென்ற சித்துதானும்
பாச்சலுடன் காடுமலை வனாந்திரங்கள்
பாங்கான குகைதனிலே இருந்துகொண்டு
ஏச்சலது வாராமல் என்நாளைக்கும்
எழிலான கண்டருட வேதைதன்னை
ஆச்சரிய மாகவல்லோ செய்துகொண்டு
அப்பனே கடைமாறி உண்ணுவாரே.
(6777)

உண்ணுவார்ச் சமுசாரி தம்மிடத்தில்
உத்தமனே நிதிவாங்கிப் பொன்கொடுத்து
திண்ணமுடன் மாற்றதுவும் என்னசொல்வேன்
துய்யவெள்ளி பத்தரையும் காணுங்காணும்
எண்ணிய நற்பொருளைக் காணாமல்தான்
எழிலான சமுசாரி எல்லாம் மாய்ந்தார்
பண்ணவெனக்கு மகிமையது அறியாமல்தான்
பாருலகில் யானுமல்லோ மயங்கினேனே.
(6778)

மயங்கியதோர் எந்தனுக்கு மன்னாகேளு
மகத்தான காலாங்கி கிருபையாலே
நயம்படவே வித்தையது யானும்கண்டு
நாதாந்த சித்தொளிவின் ஒளியுங்கண்டு
செயம்பெறவே வாதமென்ற வேதைதன்னை
சேர்வையுடன் உந்தனுக்கு யானும்தந்தேன்
பயப்படவே என்னாளும் பதாம்புயத்தைப்
பணிந்துமல்லோ அஞ்சலித்து துதிப்பாய்தானே.
(6779)

தானான ஸ்ரீராமர் கொண்டசீதை
தகமையுள்ள ஜானகியாள் தன்தனக்கு
கோனான கோவேந்தர் பதியிலப்பா
கொற்றவனே சித்தர்களும் முடித்தவேதை
தேனான செம்பொன்னே தங்கவர்ணம்
தேற்றமுடன் பிறவிஎன்ற தங்கமாகும்
பானான சுயத்தங்கம் நயத்தங்கம்
பாருலகில் நாதாக்கள் மறைத்தார்காணே. (6780)

காணவே நாதாக்கள் மறைத்ததாலே
காலாங்கி நாதருட கிருபையாலும்
தோணவே மனோன்மணியாள் கடாட்சத்தாலும்
தோறாமல் உந்தனுக்கு மனதுவந்து
வேணதொரு நீதி முறைபாடுகூறி
வேதாந்த உபதேச உண்மைகூறி
நீணவே உந்தனுக்கு உபதேசித்தேன்
நீடாழி பதவிதனை ஆளுவீரே (6781)

தாளக்கட்டு வேதை

ஆளஎன்றால் இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
அப்பனே புலிப்பாணி அறிவுள்ளானே
நீளவே தாரமது சேர்தான்எட்டு
நிலையான காரமது சேர்தான்ரெண்டு
தூளவே துருசதுவுஞ் சேர்தான்ரெண்டு
சுந்தரனே சூதமது சேர்தான்ரெண்டு
மீளவே இவையெல்லாம் கல்வமிட்டு
மிக்கான சிவகரந்தைச் சாற்றால்ஆட்டே. (6782)

ஆட்டவே நாற்சாமம் ஆனபின்பு
அப்பனே மாத்திரைதான் செய்துகொண்டு
தாட்டிகமாய் வெள்ளிதனை உருக்கிமைந்தா
சட்டமுடன் சேருக்கு பத்துதாக்கு
நீட்டமுடன் வெள்ளியது உருகும்போது
நிஷ்களங்கம் ஆனதொரு மருந்துதன்னை
வாட்டமில்லா சேரதுதான் ஒன்றுதாக்கு
வளமுடனே வெள்ளியது உரியும்பாரே.
(6783)

உரியுமே மாத்திரையை வாங்கிக்கொள்ளும்
உத்தமனே மூசைதனை ஆறவைத்து
சரியாக ஐந்துநாள் தணியவிட்டு
சாங்கமுடன் மறுபடியும் பின்னுமல்லோ
புரியான வெள்ளிதனை மூசையிட்டு
பட்சமுடன் தான்உருக்கி மருந்தைஅப்பா
வரியான கணக்குடனே முன்போலப்பா
வளமுடனே சேருக்கு ஒன்றுதாக்கே.
(6784)

தாக்கவே மூசையிட்டு உருக்கிமைந்தா
தன்மையுடன் நாளதுவும் ஐந்ததாக
நோக்கமுடன் இப்படியே ப்த்துமுறையப்பா
நுணுக்கமுடன் உருக்கியல்லோ ஆறவைப்பாய்
வாக்கதுவும் பொய்யாது காலாங்கிநீதி
வளபெரிய சித்தர்களும் மறைத்ததோஷம்
ஏக்கமது கொள்ளாமல் எழில்வேந்தாகேள்
எழிலுடனே செய்குவதும் பாகமாமே.
(6785)

பாகமாம் இப்படியே பத்துமுறை தீர்ந்த
பாலான வெள்ளிதனை எடுத்துமைந்தா
ஆகமத்தில் முறைபாடு செய்பாடுஎல்லாம்
அப்பனே கண்டுமிக உளவாராய்ந்து
வேகமுடன் ஆறுவகை ஜெயநீர் தன்னில்
வேட்கமுடன் தான்உருக்கி சாய்ப்பாயப்பா
பாகமது பொய்யாது மெய்யேயாகும்
பாருலகில் செய்தவர்க்கு சித்திதானே.
(6786)

சித்தியாம் இப்படியே பத்துமுறைபோடு
சேர்வைகண்டு பதனங்கண்டு உருக்கிச்சாய்ப்பாய்
சத்தியவான் காலாங்கி நாதர்வாக்கு
சங்கரனே பொய்யாது வேதவாக்கியம்
பத்தியுடன் மனோன்மணியைத் தொழுதுபோற்றி
பாலகனே முறைபோல செய்வாயப்பா
சுத்தியுள்ள வெள்ளிதனை ஊதிப்பாரு
சுந்தரனே மாற்றதுவும் சொல்லொண்ணாதே.
(6787)

சொல்லவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
துரைராஜ சுந்தரனே எவர்தான்காண்பார்
வல்லதொரு சித்தாதி முனிவர்தாமும்
வளம்பெரிய சாத்திரத்தில் மறைத்துவைத்த
கல்லான முறைகள்எல்லாம் கருக்கள்காட்டி
கருவிகரணா தியந்தம் முடிவுண்டாக்கி
நல்லதொரு முறைபாடு செய்பாடெல்லாம்
நாட்டினிலே மாண்பர்களுக்கு உரைத்திட்டேனே.
(6788)

உரைத்தேனே தாரமென்ற களங்குமார்க்கம்
ஓகோகோ நாதாக்கள் கூறவில்லை
வரையான பொருள்எல்லாம் இதிலேதாயும்
வளமான மாற்றதுவும் பத்தேயாகும்
திரைகடலில் நாதாக்கள் மறைத்ததாலே
தீர்க்கமுள்ள வேதைமுகம் யானும்கண்டு
விரைபோட்டால் சுரையொன்று முளைக்குமோதான்
வித்தகனே தாரமென்ற தங்கமாமே. (6789)

நாற்பத்தெண்பேர் முனிவர்கள் பதினெண்சித்தர்கள் நவகோடி ரிஷிகள் போகரை வருத்தல்

தங்கமாம் இன்னமொரு வயணம்சொல்வோம்
தன்மையுள்ள புலிப்பாணி தயவுள்ளானே
இங்கிதமாய் எந்தனையும் சித்தர் கூடி
எழிலான விண்ணப்ப வருந்தல் தன்னை
சங்கமென்ற சபையாரும் மனதுவந்து
சட்டமுடன் எந்தனையும் கேள்விகேட்க
வந்தனமாய்ச் சொன்னதொரு வளம்பாடெல்லாம்
வண்மையுடன் உந்தனுக்கு ஓதுவேனே. (6790)

ஓதுவேன் எந்தனையும் சித்தர்கூடி
ஓகோகோ நாதாக்கள் கூட்டத்தோடும்
நீதமுடன் எந்தனையும் வரவழைத்து
நீதியுடன் முறைபாடு வழிபாடெல்லாம்
தோதகமாய் கட்டுரைத்தார் கோடாகோடி
தோறாமல் யானுமல்லோ விடைகள்சொன்னேன்
போதனைகள் மிகவுரைத்தார் இறங்கியல்லோ
பொங்கமுடர் யானுமல்லோ விடைதந்தேனே. (6791)

தந்தேன் விடையதுவும் என்னவென்றால்
தகமையுள்ள ரிஷிகூட்ட முனிவரெல்லாம்
சொந்தமுடன் வாதாடி உறவுகொண்டு
சோறாமல் எந்தனுக்கு இதவு கூறி
வந்தனங்கள் மிகச்செய்து அஞ்சலித்து
வளம்பெரிய காலாங்கி நாதர்சீடா
இந்தவரை நெடுங்காலம் கோடிகாலம்
இகபரமும் கண்டறிந்த சித்துபாரே.
(6792)

பாரேதான் வையகத்தின் மகிமை எல்லாம்
பட்சமுடன் காலாங்கி நாதர்தாமும்
சீரேதான் உந்தமக்கு உபதேசங்கள்
செய்துவைத்த படியாலே தோஷமில்லை
நீரேதான் குளிகையது பூண்டுகொண்டு
நீடாழி உலகமெலாம் சுற்றிவந்து
கூரேதான் மகிமைஎல்லாம் அறிந்துகொண்டீர்
கொற்றவனார் காலாங்கி கடாட்சந்தானே.
(6793)

தானான மகிமைஎல்லாம் அறிந்தாலுந்தான்
தாரணியில் ஒருபோதும் தோஷமில்லை
கோனான உமதையர் காலாங்கிநாதர்
கொற்றவனார் குருபாத கடாட்சத்தாலே
தேனான சாத்திரத்தின் முறைபாடெல்லாம்
தெளிவுடனே சிக்கருத்து சப்தகாண்டம்
பானான சூரியன் போல்ஏழாயிரந்தான்
பாடிவைத்தீர் சீனபதி மாண்பருக்கே.
(6794)

மாண்பான சாஸ்திரத்தை உந்தன்சீடன்
மகத்தான புலிப்பாணிக்கு உபதேசித்தீர்
ஆண்மையுள்ள சித்தாதி சித்தர் எல்லாம்
அவர்பேரில் மெத்த மனஸ்தாபம் உண்டு
வீண்போன்ற சாத்திரமாய் இருந்தாலல்லோ
விருப்பமுடன் அவர்தமக்கு உபதேசிக்க
தாண்மையுள்ள சாத்திரந்தான் சப்தகாண்டம்
தாரணியில் மருத்துவங்கள் மெத்தஉண்டே.
(6795)

உண்டான சாத்திரத்தை அவர்க்குமல்லோ
உத்தமனே மனதுவந்து உபதேசித்தீர்
கண்டாலும் விடுவாரோ ரிஷிகள்தாமும்
கருவான மகிமமஎன்ற வேதைமார்க்கம்
சண்டமாருதம் போலே உலகவாழ்க்கை
சட்டமுடன் வெகுகோடி ஊதிவிட்டு
மண்டலத்தில் மகிமைஎல்லாம் வெளியிட்டாக்கால்
மாண்பர்களும் ஒருவருந்தான் மதியார்தானே. (6796)

தானான சப்தகாண்டம் ஏழாயிரம்தான்
தகைமையுடன் கூறிவிட்டீர் தோஷமில்லை
பானான எண்ணாயிரம் சாத்திரத்தைப்
பகரவேண்டாம் புலிப்பாணி நாதருக்கு
தேனான சாத்திரத்தை மனதுவந்து
தேற்றமுடன் மேருகிரி தன்னிலப்பா
கோனான குகைதனிலே வைத்தாலல்லோ
கொற்றவனே லோகமெலாம் மதிப்பார்தானே. (6797)

மதிப்பான சாத்திரத்தை வெளியில் இட்டால்
மகதேவர் ஆனவரும் ஒருவருண்டோ
துதிப்புடனே ஒருவருந்தான் தன்னைதானும்
துப்புரவாய் மதிப்பாரும் யாருமில்லை
விதிப்படியே விட்டகுறை இருந்ததானால்
விருப்பமுடன் வினயம் வந்து கிட்டும்பாரு
கதிபெறுவர் எண்ணாயிரம் காவியத்தால்
காசினியில் அதிகமென்ற மார்க்கம்பாரே. (6798)

பாரேதான் காண்டம் ஏழாயிரத்தில்
பாருலகில் வெகுகோடி அதிசயங்கள்
நேரேதான் சித்தாதி கூட்டத்தோடு
நேர்மையுடன் பாடிவைத்த நுணுக்கம்எல்லாம்
சேரேதான் கிட்டிருந்து உளவு கொண்டு
சேனரகசி யங்கள் எல்லாம் வெளியாய்விட்டீர்
ஊரேதான் உலகெல்லாம் இதிலடக்கம்
உத்தமனே ஏழாயிரம் பாடல்தானே. (6799)

பாடலாய் மறைத்துவைத்த சங்கைளெல்லாம்
பாரிலுள்ள மாண்பர்களும் கண்டுகொள்வார்
தேடவே சாத்திரத்தைப் புனிதவானே
தேற்றமுடன் புலிப்பாணிக்கு உறுதிகூறி
ஆடவே அம்பலத்தில் நல்லோர்தம்மை
அறிவுடையோர் சிவயோக மாண்பருக்கு
கூறவே சாத்திரத்தைத் தேர்ந்துமல்லோ
குணமான வெகுபுத்தி கூறுவீரே.

(6800)

கூறுவீர் இதிகாச புத்திசொல்லி
குவலயத்தில் ஆள்கண்டு பதமும்கண்டு
தேறியதோர் சிறுபாலர் ஆனாலும்தான்
தேற்றமுடன் புத்திமதி மிகஉரைத்து
மீறியே கட்டளைக்கு மிஞ்சிடாமல்
மிக்கமனது வந்துமல்லோ அதிகங்கூறி
ஆறியே சினமதுவும் மிக அகற்றி
அப்பனே நூல்கொடுத்துப் பதனஞ்சொல்லே.

(6801)

சொல்லவே புலிப்பாணிக்கு உண்மைகூறிச்
சோறாமல் மனத்திடமும் நன்றாய்ச்சொல்லி
வெல்லவே அவரவர்க்குத் தக்கதாக
வேதாந்த சின்மயத்தை ஓதச்சொல்லி
புல்லவே சாத்திரத்துக்கு உறுதிசொல்லி
புகழான சத்தியங்கள் வாங்கியேதான்
நல்லதொரு சாத்திரத்தைத் தந்தீரானால்
நலமாக இருக்குமென்று நவின்றிட்டாரே.

(6802)

நவின்றதொரு வாக்கதுவும் பிசகாமல்தான்
நாதாக்கள் சொல்லுதற்கு இடையூறுஇன்றி
குவின்றிடவே புலிப்பாணி புனிதவானே
குவலயத்தில் புத்தியுண்டாய் மாண்பர்கண்டு
தவின்றிடவே விதியாளி குணமுங்கண்டு
தக்கபடி நூல்ஈய்ந்தால் தருமமாகும்
புவின்றிடவே எந்தனது மனதுபோலே
பூதலத்தில் நடப்பதுவும் கடாட்சந்தானே.

(6803)

தானான காலாங்கி நீதிபோலே
சட்டமுடன் போகர் ஏழாயிரத்தை
கோனான வையகத்தில் யானும்பாடி
கொற்றவனே உந்தனுக்கு உபதேசித்தேன்
தேனான சாத்திரத்தைப் பாதுகாத்து
தேசத்தில் கொடுப்பதுவும் உந்தன்பாரம்
பானான கருமிகட்குக் கொடுப்பாயானால்
பாலகனே பாவம்வந்து எய்தும்பாரே.

(6804)

பாரேதான் இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
பாங்கான புலிப்பாணி பளிங்குள்ளானே
நேரேதான் அவரவர்கள் மகிமைதன்னை
நேர்மையுடன் சொல்லுகிறேன் உண்மையாக
சீரேதான் சித்தரெல்லாம் ஒன்றாய்க்கூடி
சிறப்புடனே காலங்கி நாதர்தம்மை
வீரேதான் சீனபதி தன்னில் ஏகி
விருப்பமுடன் மனது உவந்து வந்திட்டாரே.

(6805)

வந்தாரே காயாதி கொண்டசித்து
வளம்பெரிய சீனபதி மார்க்கம் தன்னை
அந்தமுடன் காலாங்கி சமாதிபக்கல்
அற்புதமாய் வெகுகோடி நாதர்தாமும்
சொந்தமுடன் எனதையர் காலாங்கிநாதர்
சுடரொளியைக் காணஎன்று மனங்களித்து
விந்தையாய் உபதேசம் பெறவேநண்ணி
விருப்பமுடன் சமாதியிடம் வந்தார்தானே.

(6806)

தானான நெடுங்காலம் சமாதியிந்த
தண்மையுள்ள நாதாக்கள் ரிஷிகள்தாமும்
கோனான எனதையர் காலங்கிநாதர்
கொற்றவனார் முன்பாக வினயங்கூறி
தேனான மகத்துவங்கள் இதிகாசங்கள்
தேற்றமுடன் செய்தல்லோ மேவல்செய்தார்
பானான பரஞ்சுடராம் எந்தன்நாதர்
பட்சமுடன் அதிசயத்தைக் கண்டிட்டாரே.

(6807)

பூதானந்தசித்தர் மகிமை

கண்டாரே இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
கனகரதி பூஷணமே கல்விவானே
அண்டமதில் ஆகாயந்தன் நிலல்லோ
அப்பனே மகாபூதா நந்தநாதர்
உண்டைவில்லுகவுண் ஏகும்ஆகாயத்தில்
உத்தமனே அந்தமட்டும் சொல்வேன்என்று
கண்டிதமாய்க் காலாங்கி வாக்குத்தந்து
கனமுடனே வாசியோகம் நடத்தினாரே. (6808)

வாசியைத் தான்நடத்தி பூதநாதர்
வளமான கேசரத்தின் அம்பரத்தில்
மாசியெனும் மண்டலத்தில் ஏகியல்லோ
மன்னவனார் மண்டலந் தான் அங்கிருந்த
காசிபதி கடலோரம் தன்னில்சென்று
கனமான சீனபதி அருகில்வந்து
தேசியெனும் வாசியைத் தான்நடத்தியல்லோ
தேற்றமுடன் சீனபதி இறங்கினாரே. (6809)

இறங்கினார் நாற்பதுநாள் மண்டலம்தான்
எழிலான ஆகாசம் தனிலிருந்து
சிறந்ததொரு வாசியைத் தான்நடத்தியல்லோ
சிறப்புடனே வையகத்தோர் காணஎன்று
பறந்து மேல்வையகத்தில் இறங்கியேதான்
பாங்கான காலங்கி சமாதிமுன்னே
இறந்ததொரு சவம்போலே விழுந்தாரல்லோ
எழிலாக பூதநாத சித்துதானே. (6810)

சித்தான சித்துமுனி நாதர்தாமும்
சிறப்பான காலாங்கி தம்மிடத்தில்
பத்தியுடன் அஞ்சலிகள் மிகவும்செய்து
பான்மையுடன் சிரம்குனிந்து கரங்குவித்து
முத்திபெற எந்தனுக்கு உபதேசங்கள்
முனிவரே செய்யவென்று அடிபணிந்து
சத்தியமாய் எந்தனைத் தான் ஆதரிக்க
சட்டமுடன் கடாட்சமது அருள்செய்வீரே.
(6811)

அருளான அருளதுவும் பெற்றுமல்லோ
அன்புடனே பூதானந்த கிந்து
இருளான இருளகற்றி மையம்பூண்டு
எழிலான சீனபதி விட்டுமல்லோ
குருவானடமரகனானந்தனாரை
குறிப்புடனே காண்பதற்கு மனதில்எண்ணி
திருவான ஜோதிமயம் தன்னைக்காண
தீர்க்கமுடன் தென்பொதிகை வந்திட்டாரே. (6812)

கருவூரார் மகிமை

வந்தாரேஇன்ன மொருமார்க்கஞ் சொல்வேன்
வளமான புலிப்பாணி அறிவுள்ளானே
இந்த மானிலத்தில் வெகு அதிசயங்கள்
எழிலான சித்துமுனி கோடான கோடி
சுந்தரனார் காலாங்கி நாதர்பக்கல்
துப்புரவாய் வந்தவர்கள் லக்கோயில்லை
விந்தைகளும் மிகச்செய்தார் ரிஷியார்தாமும்
விண்ணுலகு கருவூரார் சித்துபாரே. (6813)

பாரப்பா புலிப்பாணி பண்புள்ளானே
பாலகனே எந்தனிரு மணியேகேண்மோ
ஆரப்பா ஆகாய மண்டலத்தில்
அப்பனே நட்சத்திர அளவுமட்டும்
நேரப்பா வாசியைத் தான்நடத்தியல்லோ
நேர்மையுடன் ஆகாயம் சென்றாரில்லை
கூரப்பா கருவூரார் என்றசித்து
கொற்றவனே ஆகாயம் சென்றார்காணே. (6814)

காணவே கருவூரார் என்றசித்து
காசினியில் மகிமைவெகு கொண்டசித்து
தோணவே நடேசரைத் தான் உண்டுசெய்த
தோறாத கருவூரார் என்றசித்து
மானமருங் கல்வியுள்ள சித்தர்எல்லாம்
மானிலத்தில் மதிப்பதற்குக் கீர்த்திகொண்ட
ஆணவமாம் காமியத்தை விட்டுஒழித்த
அப்பனே கருவூரார் என்றசித்தே.
(6815)

சித்தான சித்துமுனி கருவூரார்தான்
சிறப்பான காலாங்கி நாதர்முன்னே
சுத்தமுடன் காலாங்கி நாதர்தம்மை
சுந்தரனார் சீனபதிசமாதி தன்னில்
வித்தகனார் பார்த்திருக்க மகிமைபூண்டு
விண்ணுலகம் ஆகாயஞ் செல்வேன்என்று
யுத்தியுடன் நட்சத்திர அளவுமட்டும்
பரஞ்சுடரே செல்வேன்என்று ஏகினாரே. (6816)

ஏகவே வாசியோகம் செய்துகொண்டு
எழிலான நட்சத்திர மண்டலத்தில்
போகவே மனஉறுதி கொண்டுமல்லோ
பொங்கமுடன் மூன்றுமண்டலந் தானப்பா
சாகாமல் ஆகாய மண்டலத்தில்
சட்டமுடன் மூன்றுமண்டலம் இருந்து
வேகமுடன் வாசியோகம் செய்துகொண்டு
வேட்கையுடன் பூமிதனில் இறங்கிட்டாரே. (6817)

இட்டாரே கருவூரார் என்றசித்து
எழிலான வையகத்தின் மகிமைகோடி
சட்டமுடன் செய்தல்லோ யாகம்பூண்டு
சதுராக நெடுங்காலம் தாம்இருந்தார்
திட்டமுடன் காலாங்கி நாதர்தாமும்
தீர்க்கமுடன் கருவூரார் தன்தனக்கு
வட்டமுடன் முதலியதோர் மகிமைஎல்லாம்
வளமுடனே உபதேசம் செய்தார்பாரே. (6818)

சுந்தரானந்தர்மகிமை

பாரப்பா புலிப்பாணி பளிங்குள்ளானே
பகருகிறேன் சித்தருட மகிமைதன்னை
ஊரப்பா சீனபதி தேசம்தன்னில்
உத்தமனார் காலாங்கி நாதர்தம்மை
சேரப்பா சமாதியிடம் சென்றுமல்லோ
செம்மலுடன் காலாங்கி தம்மைக்காண
ஆரப்பா என்றல்லோ காலாங்கிநாதர்
அப்பனே மனதுவந்து கூறென்றாரே. (6819)

கூறென்று சொல்லுகையில் சித்தரான
குணமான சுந்தரா னந்தமூர்த்தி
தேறலுடன் யார்என்று வினவிக்கேட்ட
தெளிவான காலாங்கி நாதர்தாமும்
மாறலது வாராமல் சித்துதாமும்
மகத்தான காலாங்கி நாதருக்கு
ஆறலுடன் அஞ்சலித்து மனதுஉவந்து
அப்பனே சுந்தரனார் என்றிட்டாரே.
(6820)

என்றாரே சுந்தரா நந்தமூர்த்தி
எழிலான காலாங்கி நாதருக்கு
வென்றிடவே என்தேவா லோகநாதா
விருப்பமுடன் தங்களிடம் மனங்களித்து
சென்றுநான் வந்தேனே சீனதேசம்
செம்மலுடன் அடியேனைப் பாதுகாத்து
குன்றான உபதேசம் எந்தனுக்கு
கொப்பெனவே கூறுமென்று பணிந்திட்டாரே.
(6821)

பணிந்துமே சுந்தரானந்தர் தாமும்
பட்சமுடன் காலாங்கி நாதருக்கு
துணிந்துமே எந்தனது மகிமைதன்னை
துப்புரவாய்க் காட்டுகிறேன் குருவேந்தாகேள்
கணிதமுடன் மேகமண்டலத்தில் யானும்
கர்த்தாவே வாசியோகம் செய்துகொண்டு
பணிவுடனே ஆகாசம் சென்றுமல்லோ
பாகுடனே மேகத்தோடு குவேனே.
(6822)

ஏகுவேன் மேகத்தோடு இணக்கமாகி
எழிலான திருப்பாலின் கடலின்மேலே
போகுவேன் மேகங்கள் ஜலந்திரட்டி
பொங்கமுடன் தான்இறங்கும் காடுதன்னில்
தாகுடனே மேகமது ஆகாசத்தில்
தகமையுடன் செல்லுமது பக்கம்எல்லாம்
வாகுடனே ஆகாசம் திரிந்துயானும்
வளமுடனே நெடுங்காலம் இருப்பேன்தானே.
(6823)

தானான பூமிசுஞ் சாரமில்லை
தண்மையுடன் மேகத்தில் மேகமாக
கோனான மண்டலத்தில் நெடுங்காலந்தான்
கொற்றவரே வாசியோகம் செய்துகொண்டு
தேனான மனோன்மணியைத் துதித்துமல்லோ
தேற்றமுடன் நெடுங்காலந் தான்இருந்தேன்
பானான பரஞ்சுடரே சொரூபாநந்தா
பரம்பொருளே உபதேசம் பகருவீரே. (6824)

பகரவென்று சுந்தரா நந்தர்கேட்க
பாருலகில் இதிகாச மகிமைகண்டு
நிகரமுடன் இவர் தமக்கு உபதேசங்கள்
நீதியுடன் கூர்வதற்கும் மனங்களித்து
உகரமென்ற அட்சரத்தை உபதேசித்து
உததமனார் சுந்தரா நந்தருக்கு
ககரமுடன் அகரமுதல் உயிர்கள்எல்லாம்
கருவான அட்சரத்தை ஓதினாரே. (6825)

ஓதவே அஞ்சலிகள் மிகவும்பெற்று
உத்தமனார் சீனபதி கண்டுமல்லோ
நீதமுடன் விடையதுவும் பெற்றுமல்லோ
நிலையான தம்பதிக்கு ஏகினார்காண்
சேதமது வாராமல் சித்துதானும்
ஜெகதலத்தில் நெடுங்காலம் இருந்தாரல்லோ
தோதமுள்ள சித்தாதி சித்தரெல்லாம்
தோறாமல் என்குருவைக் கண்டிட்டாரே. (6826)

போகர் புலிப்பாணிக்கு பாஷாண விளைவுகள் கூறல்

கண்டாரே இன்னமொரு கருமானங்கேள்
கைலாச புலிப்பாணி கருவுள்ளானே
அண்டரண்டதேச மெல்லாம் சுற்றிவந்தேன்
அப்பனே பாஷாண விளைவு கண்டேன்
துண்டரிக மானதொரு விளைவுமார்க்கம்
துப்புரவாய் யான்கண்டுஇடமும் கண்டேன்
சண்டமாருதம் போல விளைவுகண்டேன்
தண்மையுள்ள பாஷாண விளைவுகேளே.
(6827)

கருமாக்கல் விளைவு

கேளப்பாகருமாவின் விளைவுமார்க்கம்
கெடியான டில்லிக்கு மேற்கேயப்பா
ஆளப்பா பூமியெல்லாம் கருமாவாகும்
அப்பனே நீலாஞ்சனக் கல்லுதானும்
கேளப்பா வாராது அஞ்சனக்கல்
கொற்றவனே கருமாவின் கீழ்மட்கித்தாε
கீளப்பா அஞ்சனமாம் பாறையல்லோ
கெடியான கல்லினுட பூமியாமே. (6828)

கெந்தகவிளைவு

பூமியாம் டில்லியாம் கிழக்கேயப்பா
புகழான கெந்தகத்தின் பூமியாகும்
சாமியது கிருபையினால் விளையும்கெந்தம்
சதுரான சித்தர்களுக்கு ஊகந்தகெந்தி
வாமிசிவகாமி யம்மாள் வீற்றிருக்கும்
வளமான சிவப்பு கெந்தி அங்கேஉண்டு
நாமிகவேகுளிகை கொண்டு சென்றேன்அப்பா
நலமான டில்லிக்கு கிழக்கேதானே. (6829)

கிழக்கான பூமியப்பா நெடுந்தூரந்தான்
கிளையான ஆறுஉண்டுசுனை தான்உண்டு
பழக்கமதாய் மாண்பர்களும் போனதில்லை
பாங்கான குரும்பருட நாடேயாகும்
அழகான பூமியது சொல்லொண்ணாது
அப்பனே கெந்தகந்தான் விளையும்நாடு
தழலான செடிமரங்கள் பூண்டுமில்லை
தாரணியைக் குளிகைகொண்டு கண்டிட்டேனே.

தாளகவிளைவு

இட்டதொரு கிழக்குக்குத் தெற்கேயப்பா
எழிலான திருசங்கு மைந்தனல்லோ
சட்டமுடன் ஆண்டிருந்த ராச்சியத்தின்
சதுரான மேற்புறத்தின் ஓடையப்பா
வட்டமுள்ள பூமியது நெடுந்தூரந்தான்
வளமான தாளகத்தின் பூமியாகும்
திட்டமுடன் பூமியெல்லாம் தாளகந்தான்
திரமான நடுமையேறி தளமாமே. (6831)

அரிதான அரிதாரம் என்னசொல்வேன்
அப்பனே அதின்கீழ் மனோசிலையுமாகும்
சரிதான விளைவல்லோ பூமியெல்லாம்
சாங்கமுடன் தாளகத்தின் பூமியாகும்
பரியான தங்கமது விளையும்நாடு
பாருலகில் நாதாக்கள் கண்டதுண்டு
திரிலோகந்தான் மதிக்கும் தங்கமப்பா
தீர்க்கமுடன் விளைகின்ற நாடுதானே. (6832)

கற்பரிபாஷாண விளைவு

நாடான நாடதுதான் சொல்வேன்அப்பா
நலமான புலிப்பாணி நண்புள்ளானே
காடான காடெல்லாம் யான்திரிந்து
கனமான குளிகையது கொண்டுமல்லோ
மேடான பூமியது திரிந்துமேதான்
மேன்மையுள்ள கற்பரிபாஷாணங் கண்டேன்
தாடாண்மை உள்ளதொரு பாஷாணத்தால்
தாரடீரியில் தங்கமிகச் செய்யலாமே. (6833)

செய்யவே கற்பரி பாஷாணந்தன்னால்
செயலான நவலோகம் வெல்லலாகும்
துய்யதொரு நவலோகம் நீறிப்போகும்
துப்புரவாய் லோகங்கள் சத்துருவேயாகும்
வெய்யவே நடுமையந் தன்னிலப்பா
வேட்கமெனும் அவுல் பாஷாணந்தானாகும்
பையவே அதின்கீழே தானிருக்கும்
பாங்கான ஜலபாஷாணந்தான் பாரே. (6834)

காயகற்ப அயச்செந்தூரம்

பாரப்பா இன்னமொரு பரிகாரந்தான்
பாலகனே ஸ்தூலமது உறுதிசெய்ய
ஆரப்பா மணலிரும்பு கொண்டுவந்து
அப்பனே உருக்கியல்லோ தகடுஅடித்து
சீரப்பா முன்சொன்ன பாஷாணத்தை
சிறப்புடனே நிம்பழத்தின் சாற்றினாலே
ஊரப்பா மூன்றுவகை பாஷாணந்தான்
உத்தமனே தான்அரைப்பாய் சாமம்நாலே. (6835)

நாலான சாமமதுதான் அறைத்து
நலமான இரும்பதனைத் தகடதாக்கி
பாலான சரக்கெல்லாம் மேலேபூசி
பட்சமுடன் ரவிதனிலே காயவைத்து
மாலான சில்லிட்டுச் சீலைசெய்து
மார்க்கமுடன் கோழிஎன்ற புடந்தான்போடு
தூலான அயதுமதுவும் களங்கமாகி
துப்புரவாய்த் தானிருக்கும் அயந்தான்காணே. (6836)

காணவே அவரெலாந் தானெடுத்து
கருவாக புடமதுவாய்ச் சேர்த்துக்கொண்டு
தோணவே கடைசரக்கு செப்பக்கேளீர்
தோறாமல் கெவுரியென்ற வீரந்தானும்
மாணவே கெந்தகமும் லிங்கந்தானும்
மகத்தான சிங்கியுடன் பூரமாகும்
நீணவே வகைவகைக்குப் பலந்தான் காலாய்
நிஷ்களங்க மாகவல்லோ பழச்சார்தானே. (6837)

தானான சாறதுவும் பிழிந்துகொண்டு
தண்மையுள்ள அயப்பொடியாம் களங்குதன்னில்
தேனான செம்பழத்தின் சாற்றினாலே
தெளிவுறவே தான்அறைப்பாய் நாலுசாமம்
பானான வில்லையது லகுவாய்ச்செய்து
பாலகனே ரவிதனிலே காயவைத்து
மானான ஓட்டிலிட்டுச் சீலைசெய்து
மகத்தான மண்மறைவில் புடத்தைப்போடே. (6838)

போடேதான் இப்படியே புடந்தான்போடு
பொங்கமுடன் தான்அறைத்து வில்லைதட்டி
நீடேதான் முன்உரைத்த பாகம்போலே
நீதியுடன் வில்லைதட்டிக் காயவைத்து
கூடேதான் சில்லிட்டுச் சீலைசெய்து
கொற்றவனே கோழிஎன்ற புடந்தான்போடு
போடேதான் மண்மறைவில் பத்துமுறைபோடு
பொலிவுடனே அயமதுவும் சிவக்கும்பாரே. (6839)

சிவக்குமே அயமதுவும் பாஷாணத்தால்
சிறப்புடைய குற்றமது பதினொன்றும்போம்
தவப்பலனைக் கொண்டவர்க்குச் சித்தியாகும்
தகமையுள்ள மணல்இரும்பு செந்தூரந்தான்
அவப்பலனைக் கொண்டோர்கள் காணமாட்டார்
அப்பனே புத்தியுள்ள புனிதவானே
பவக்கடலை விட்டு அகற்றிப் பாலாநீயும்
பாருலகில் இருப்பதுவே புண்ணியமாமே.

(6840)

புண்ணியனாய் இருக்கவென்றால் பூபாலாகேள்
புகழான செந்தூரம் உண்பதற்கு
திண்ணமுடன் தேன்தனில் மண்டலந்தான்
தீரமுடன் தான்அருந்த தேகங்கல்தூண்
வண்ணமுடன் வாசியது மேல்நோக்காது
வளமான செந்தூரந் தானுமல்லோ
நண்ணமுடன் சட்டையது தள்ளும்பாரு
நாதாந்த சித்தர்கள் தான் ஆடுங்கூத்தே.

(6841)

கூத்தான செந்தூரம் மண்டலந்தான்
குறிப்புடனே கொண்டவர்க்குப் பலனைக்கேளு
நீத்தமுடன் நெடுங்காலம் இருக்கலாகும்
நெடியான ரோகமது கடலேபோகும்
சாத்தகியாழ்வார்தானுங் கொண்டகற்பம்
தாரணியில் வெகுகாலம் இருந்தாரல்லோ
பூத்தமலர்முக சுகுண மாதர்தம்மை
புகழாக ஆயிரம்பேர் கூடலாமே.

(6842)

கூடலாங் கிருஷ்ணா வதாரன்அல்லோ
கொற்றவனார் சிலகால முண்டகற்பம்
ஆடலாம்தேச விளையாட்டை எல்லாம்
அப்பனே அயமென்ற செந்தூரத்தால்
ஓடலாம் வெகுதூரம் நடக்கலாகும்
உத்தமனே நடந்தாலும் இளைப்போயில்லை
தேடலாம் வெகுகோடி திரவியங்கள்
தேடினால் பலனொன்று மில்லைதானே .

(6843)

இல்லையே செந்தூரம் வேதைகாண
ஏழிலான வெள்ளியது களஞ்சிநூறு
தொல்லையெனும் பிறவியது மாற்றம்போலே
தோறாமல் வர்ணமது சொல்லப்போமோ
கொல்லனது உலையில்வைத்து உருக்கியல்லோ
கொற்றவனே செந்தூரங் களஞ்சிதாக்கு
வல்லதொரு வெள்ளியது பழுப்புமாகி
மகத்தான ஏமமது சொல்லொணாதே. (6844)

ஒண்ணாத தங்கமது மாற்றுசொல்வேன்
ஒகோகோ நாதாக்கள் மறைத்துவைத்தார்
தண்ணமுடன் மாற்றதுவோ லக்கோயில்லை
தாடாண்மை கொண்டதொரு உறத்ததங்கம்
பண்ணுதற்கு விட்டகுறை இல்லாவிட்டால்
பலிக்குமோ பாராளும் மாண்பருக்கு
எண்ணமுடன் மனதுஉவந்து இந்தபாகம்
எழிலாக செய்பவர்க்குப் பலிக்குந்தானே. (6845)

பலிக்குமே இத்தங்கம் பிறவித்தங்கம்
பாரிலுள்ள சிவயோகிக்கு ஆனதங்கம்
ஒலிக்குமே ஜெகஜோதியான தங்கம்
உத்தமனே கருமிகட்கு வாய்க்காது அப்பா
நலியாளர் தங்களுக்கு இந்தத் தங்கம்
நாதியற்ற பேர்களுக்கு நவிலவேண்டும்
பலியாது கருமிகளாய் இருப்பாரானால்
பாருலகில் கருமிகட்கு வாய்க்காதன்றே. (6846)

மகாசிழுகை அயச்செந்தூரம் சமுசாரிக்கானவேதை

அன்றான இன்னமொரு போக்குசொல்வேன்
அப்பனே புலிப்பாணி அன்புள்ளானே
குன்றான செந்தூரம் என்னசொல்வேன்
குறிப்பான அயம்அதுவும் பலந்தான்பத்து
வென்றிடவே நிம்பழத்தின் சாற்றினாலே
விருட்: "முடன் சுத்தியது செய்துமல்லோ
நன்றாக கல்வமதில் இட்டுமைந்தா
நளமுடனே தான் அரைக்க மருந்தைக்கேளே.
(6847)

கேளப்பா முருங்கைவேர் பட்டைதன்னை
கிருபையுடன் தான் இடித்து சார்பிழிந்து
பாளப்பா போகாமல் பத்துசாமம்
பாங்குடனே தான் அரைப்பாய் சுன்னநீரும்
ஆளப்பா பலமதுவும் ஒன்றேயாகும்
அப்பனே தான்போட்டு அரைத்துமல்லோ
தூளப்பா வில்லையது லகுவாய்ச்செய்து
சுந்தரனே ரவிதனிலே காயப்போடே.
(6848)

காய்ந்தபின்பு பில்லையதை எடுத்துமைந்தா
கருவாக ஓட்டிலிட்டுச் சீலைசெய்து
வாய்ந்ததொரு புடமதுவும் கெஜமேயாகும்
வளமுடனே போட்டபின்பு எடுத்துப்பாரு
தீய்ந்துமே போகாமல் செந்தூரந்தான்
தீர்க்கமுடன் அருணனது நிறம்போலாகும்
மாய்ந்துமே அயமதுவும் மடிந்துமல்லோ
மகத்தான செந்தூரம் சொல்லொணாதே.
(6849)

சொல்லவென்றால் நாவில்லைப் பாவுமில்லை
துப்புரவாய் நாதாக்கள் மறைத்தசித்து
வெல்லவே இவ்வேதை யார்தான் செய்வார்
விதியாளி செய்வாரே மற்றோர்காணார்
புல்லவே செந்தூர மகிமைதன்னை
பூதலத்தில் மாண்பர்களும் கண்டதில்லை
அல்லவென்றால் செந்தூரம் கோடிபாகம்
அப்பனே கண்டதுண்டு மெத்தகாணே.
(6850)

காணவே செந்தூரம் மண்டலந்தான்
கருவாக கொண்டவர்க்குப் பலனைக்கேளு
தோணவே தேனதனில் கொண்டாலல்லோ
தோறாமல் தேகமது இருக்கும்பாரு
வேணதொரு ரோகம்எல்லாம் நீங்கியல்லோ
விரைக்குமே நரம்பதுவுந் துடிப்புமெத்த
பாணமெனு மன்மதனார் வேகந்தன்னை
பாலிக்கும் அயத்தினுட வீரங்காணே.
(6851)

வீரமாம் வாசியதுமே வோடாது
வீரான நரம்புகளும் முறுக்குமேறி
சாரமுடன் தேகமது மூன்றுவிசை தள்ளும்பாரு
சட்டையது மூன்றுவிசை தள்ளும்பாரு
கோரமென்ற தேகமது வழக்குமீறி
கொற்றவனே நெடுங்காலம் இருக்கலாகும்
பாரமென்ற அயமதுவும் சொல்லப்போமோ
பாராளும் சித்தர்முனி வேதையாச்சே (6852)

வேதையாம் இன்னமொரு போக்குசொல்வேன்
வேதாந்த புலிப்பாணி புண்ணியவானே
பாதையாம் மதிதனிலே பத்துக்கொன்று
பட்சமுடன் தான் உருக்கி குருஒன்றுஈய
சோதனைக்கு யிடையாது உறத்ததங்கம்
சோராமல் லிங்கமிட்டு ஊதிப்போடு
வேதைமுறை சொன்னவழி தப்பாதப்பா
வேதாந்த சித்தினுட உண்மைபாரே.
(6853)

சிமிகை அயச்செந்தூரம்

உண்மையாம் இன்னமொரு பாகம்சொல்வேன்
உத்தமனே புலிப்பாணி புனிதவானே
திண்ணமுடன் அயவதுவும் பலந்தான்பத்து
திறமான நிம்பழத்தின் சாற்றினாலே
வண்ணமுடன் தான் அரைப்பாய் நாலுசாமம்
வாகுடனே கழுவியல்லோ அயம்எடுத்து
தண்ணமுடன் கல்வமதில்இட்டுமைந்தா
தகமையுடன் பழமதுதான் செப்பக்கேளே. (6854)

செப்பவென்றால் கருநாகப் பழரசத்தால்
செம்மையுடன் தான் அறைப்பாய் நாலுசாமம்
ஒப்பமுடன் முப்பூவுங் களஞ்சிசேர்த்து
உத்தமனே தான் அறைத்து பில்லைதட்டி
தப்பிதங்கள் வாராமல் ரவியில்வைத்து
சட்டமுடன் சில்லிட்டுச் சீலைசெய்து
மெய்ப்புடனே கோழியென்ற புடத்தான் போடு
மேலான செந்தூரம் ஆகுந்தானே. (6855)

தானான செந்தூரம் தனைஎடுத்து
தன்மையுடன் முன்போல கல்வமிட்டு
தேனான கருநாகப் பழரசத்தால்
தேற்றமுடன் தான் அறைப்பாய் நாலுசாமம்
பானான பில்லையது லகுவாய்ச்செய்து
பாலகனே ரவிமுகத்தில் காயப்போடு
மானான சில்லிட்டுச் சீலைசெய்து
மார்க்கமுடன் முன்போலப் புடத்தைப்போடே.
(6856)

போடேதான் பத்துமுறை இப்படியேபோடு
பொங்கமுடன் அயமதுவும் செந்தூரந்தான்
நாடேதான் முறைபோலே செய்வாயானால்
நலமான செந்தூரம் வேதையாகும்
கூடேதான் ஆவின்பால் வெண்ணைதன்னில்
குணமுடனே நெல்லிடைதான் கொண்டாயானால்
தேடேதான் காலாங்கி கடாட்சத்தாலே
தெளிவாக தேகமது மின்னும்பாரே.
(6857)

பாரேதான் மண்டலந்தான் கொண்டபோது
பாங்கான தேகமது சட்டைதள்ளும்
நேரேதான் தேகமது வண்டுபோலாம்
நெடிதான வாசியதுமேல் நோக்காது
கூரேதான் தேகமது கல்தூண் ஆகும்
கொற்றவனே யமனுக்கு நாளுமில்லை
வேரேதான் கற்பமது வேண்டுமோதான்
வித்தகனே அயத்தினுட மகிமைகாணே.
(6858)

காணவே இன்னமொரு மகிமைசொல்வேன்
கருவான புலிப்பாணி கணிதவானே
தோணவே வெள்ளியது களஞ்சிபத்து
தோறாமல் தான்உருக்கி மருந்தொன்றீய
மாணவே வெள்ளியது பழுக்கும்பாரு
மகத்தான மாற்றதுவும் என்னசொல்வேன்
வேணபடி வங்கமதைக் கொடுத்தேஊது
வேட்கையுடன் வர்ணமது ஏகாதன்றே.
(6859)

ஏகாது உப்புக்கும் காவிக்குந்தான்
எழிலான செந்தூரம் என்னசொல்வேன்
போகாது புடத்துக்கு உறுதிதங்கம்
பொங்கமுடன் நாதாக்கள் உரைத்ததில்லை
சாகாமல் இருந்திடலாம் செந்தூரத்தால்
சதாகாலங் கற்பமது உண்டுபாரு
வேகாது தேகமது தீயில்பட்டால்
வெந்தாலும் மேனியது வினை கொள்ளாதே. (6860)

போகர் காலாங்கிநாதர் சீவிய சரித்திரத்தை புலிப்பாணிக்கு உப்தேசித்தல்

கொள்ளவே இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
கொற்றவனே புலிப்பாணி குணமுள்ளானே
தெள்ளமுர்த மானதொரு எந்தன்சாமி
தெளிவான காலாங்கி நாதர்தாமும்
உள்ளபடி திரே தாயின்யுகத் திலப்பா
உத்தமனே தாமிருந்த வண்மையெல்லாம்
கள்ளமின்றிப் புகழாமல் யானுரைப்பேன்
கைலாச புலிப்பாணி கருவாய்க்கேளே. (6861)

கருவான திரேதாயி னுகத்திலப்பா
காலாங்கி நாதருட வண்மையெல்லாம்
திருவான குருமுனி சொன்னநீதி
தீர்க்கமுடன் இருவரது சரித்திரங்கள்
குருவான என்தேவர் எந்தனுக்கு
கூறியதோர் லோகஅதிசயங்கள் எல்லாம்
கருவறிந்து வழியறிந்து உந்தமக்கு
கழறுவேன் புலிப்பாணி கவிவல்லோனே. (6862)

வல்லதொரு திரேதாயின் யுகத்திலப்பா
வளமான லட்சத்தி நாற்பதாண்டில்
புல்லான வுலகமது மகிமைசொல்வேன்
புகழான பிரளயங்கள் நேர்ந்தபோது
கல்லான மலைகளுமே முழுகியல்லோ
கடலெழுந்து கடந்துமலை மட்டந்தான்
வல்லமையாய் சத்தசமுத்திரங்கள் எல்லாம்
வளமுடனே பொங்கியது நிற்கலாச்சே. (6863)

நிற்கையிலே காலாங்கி நாதர்தாமும்
நீடாழி உலகமதைக் கண்டேஏங்கி
சொற்பமுடன் தன்மனதில் எண்ணியல்லோ
தோறாமல் காலாங்கி கமலர்தாமும்
விற்பனர்கள் இருவருமாய்க் காலாங்கிகிரியில்
வீற்றிருந்தார் மண்டலந்தான் நெடுநாளப்பா
அற்பமுடன் வையகத்து மாண்பர்தம்மில்
அனேகம்போ் அம் மலையிலிருந் திட்டாரே.
(6864)

இருந்தாரே நெடுங்காலம் காலாங்கிநாதர்
எழிலான மலைமீதில்என்ன சொல்வேன்
பொருந்தவே காயாதி கற்பம்கொண்டு
பொங்கமுடன் உலகமதின் மகிமைஎல்லாம்
திருந்தவே கண்ணினால் கண்டுமல்லோ
தீர்க்கமுடன் தன்மனதில் உள்ளடக்கி
அருந்தவத்தில் உதித்ததொரு ரிஷிகள்தேவர்
அனேகரிடமகிமை எல்லாம் பார்த்திட்டாரே.
(6865)

பார்த்தாரே காலாங்கி மலையிலப்பா
பாங்கான ரிஷியினுட மகிமைசொல்வேன்
தீர்த்தமென்ற கரையிலப்பா ரிஷியாருண்டு
திறமான ரிஷியாரும் புலிரூபந்தான்
ஆர்க்கவே திருமுகத்தைக் கண்டல்லோ
அப்பனே மானிடத்தின் சித்துபோலாம்
மூர்க்கமது வாராது முனிநாதர்க்கு
முனையான வேங்கையுட சித்துதானே.
(6866)

சித்தான வேங்கைஎன்ற மனிதசித்து
ஜெகதலத்தில் யாரேனும் கண்டதில்லை
பத்தியுள்ள என்தேவர் காலாங்கிநாதர்
பாங்கான திரேதாயின் யுகத்திலப்பா
வெத்தியுடன் கண்டதொரு மகிமைதன்னை
வேதாந்த சித்தெனக்கு வெளியிட்டார்காண்
எத்திசையும் சித்தர் முனிகண்டதில்லை
எழிலான அதிசயத்தின் கூறுதானே.
(6867)

மச்சரிஷி

கூறான கோடிவகை அதிசயங்கள்
கொற்றவனே காலாங்கி மலையிலப்பா
நீறானமலை முனியாந் தவசியப்பா
நெடுங்காலந் தானிருக்குங் கொடியசித்து
வாறான மச்சமென்ற தேகமப்பா
வளமான திருமுகந்தான் மனிதரூபம்
சேறாடும் சுனையோரம் மலைஓரத்தில்
செம்மலுடன் தவமிருப்பார் ரிஷியார்தானே. (6868)

தானான வள்பெருமை மெத்தவுண்டு
தகமையுள்ள சித்தாதி கண்டதில்லை
கோனான என்தேவர் காலாங்கிநாதர்
கொற்றவனார் எந்தனுக்குக் சொன்னநீதி
தேனான மகிமைகளும் கோடாகோடி
திரேதாயின் யுகத்திலப்பா கண்டதுண்டு
மானான நெடுங்கால சித்துவென்று
மகதேவர் சொல்லெனக்குத் தெரியலாச்சே. (6869)

கூர்ம ரிஷி

ஆச்சப்பா இன்னமொரு மார்க்கம் சொல்வேன்
அப்பனே புலிப்பாணி அரியவானே
மூச்சடங்கி நெடுங்காலம் இருந்தசித்து
முனையான காலாங்கி நாதரப்பா
பாச்சலுடன் பிரளயங்கள் வந்தபோது
பாங்கான மலைமீதில் இருக்குங்காலம்
மாச்சலுடன் தவயோகி ரிஷியார்தம்மை
மன்னவனே கண்ட அதிசயத்தைக்கேளே. (6870)

கேளப்பா தேகமது கூர்மவர்ணம்
கெடியான திருமுகந்தான் மனுஷரூபம்
வாளப்பா நெடுங்காலந் தவசிருந்து
வளமையுடன் காலாங்கி மலைமேல்தானுங்
ஆளப்பா பிரளயங்கள் வந்தபோது
அப்பனே தவசிருந்த சித்துமாகும்
காளப்பா திரேதாயின் யுகத்தில்தானும்
கருவான மலையதனில் இருந்தசித்தே. (6871)

வராகரிஷி

சித்தான புலிப்பாணி சிறியபாலா
சிறப்புள்ள அதிசயங்கள் இன்னஞ்சொல்வேன்
பத்தியுடன் காலாங்கி நாதர்தாமும்
பாருலகில் திரேதா யின்யுகத்திலப்பா
சத்தியங்கள் தவறாமல் தவசுசெய்து
சாங்கமுடன் பிரளயங்கள் வந்தபோது
சுத்தியே நிற்பதற்கு இடங்கொள்ளாமல்
சுந்தரனார் மலைமீதில் ஏறினாரே (6872)

ஏறினார் காலாங்கி மலையின்மேலே
எழிலான பிரளயங்கள் வந்தபோது
மீறியே யாகங்கள் செய்துகொண்டு
மிக்கான மலைகளிலே இருக்கும்போது
கூறியதோர் வராகமென்ற ரிஷியார்தாமும்
கொற்றவனார் மலையதனில் தவசிருந்தார்
கோறியே காலாங்கி நாதர்தாமும்
கொப்பெனவே தவசியிடஞ் சென்றார்பாரே. (6873)

பாரேதான் எனதையர் காலங்கிநாதர்
பாங்கான மலைதனிலே தவசிருந்த
சீரான வராகரிஷி தன்னைத்தானும்
சிறப்புடனே காலாங்கி காணும்போது
தீரான உருவமது வராகம்போலும்
தீர்க்கமுள்ள திருமுகந்தான் மனிதரூபம்
நேரேதான் தவயோகஞ் செய்துகொண்டு
நேர்மையுடன் தானிருந்த ரிஷிகண்டாரே. (6874)

கண்டாரே நெடுங்காலம் தவசிருக்கும்
கருவான ரிஷியாரை மனதுவந்து
தெண்டமுடன் காலாங்கி நாதர்தாமும்
தேற்றமுடன் ரிஷியாரைக் கேட்கும்போது
சண்ட மாருதம்போலே ரிஷியார்தாமும்
சட்டமுடன் மனதுவந்து சாற்றலுற்றார்
திண்ணமுடன் திரேதா யினுகத்திலப்பா
திருவாண்டு முதல்வருஷஞ் சமாதிதானே.
(6875)

தானான காலாங்கி நாதரேகேள்
தகைமையுடன் திரேதா யினுகத்திலப்பா
தேனான மனோன்மணியாள் கிருபையாலே
திரளான பிரளயங்கள் வந்தபோது
மானான மகதேவர் கடாட்சத்தாலே
மன்னவனே நெடுங்காலந் தவசிருந்தேன்
பானான வையகத்தி லாரேனுந்தான்
பக்கல்வந்து கேட்டதில்லை என்றிட்டாரே.
(6876)

இட்டாரே வராகரிஷி முனிவர்தாமும்
எழிலான காலாங்கி தன்னைக்கண்டு
விட்டகுறை இருந்ததொரு புண்ணியத்தால்
விருப்பமுடன் எந்தனையுங் காணலாச்சு
சட்டமுடன் உந்தனுக்கு உபதேசங்கள்
சாங்கமுடன் போதிப்பேன் என்றுசொல்லி
திட்டமுடன் உலகத்தில் மகிமையெல்லாம்
தீர்க்கமுடன் காலாங்கிக்கு ஓதினாரே.
(6877)

ஓதினார் சமாதிமுகம் இருந்தகாலம்
உத்தமனார் காலாங்கி நாதருக்கு
ஆதியெனும் பாரபரத்தின் ரகசியத்தை
அப்பனே காலாங்கிக் கோதினார்காண்
நீதியுடன் உபதேசம் பெற்றுமல்லோ
நிகட்சியுடன் தெற்குமுகம் திரும்பிவந்தார்
பாதிமதி சடையணிந்த தம்பிரான்போல்
பரமகுரு ரிஷியொருவர் இருந்திட்டாரே. (6878)

நரசிங்க ரிஷி

இருந்தாரே இன்னமொரு மார்க்கம்சொல்வேன்
எழிலான புலிப்பாணி இன்புள்ளானே
பொருந்தவே திரேதாயுன்யு கத்திலப்பா
பொங்கமுடன் காலாங்கி நாதர்தாமும்
திருந்தியே கண்டதொரு அதிசயங்கள்
தீர்க்கமுடன் எந்தனுக்குச் சொன்னநீதி
வருந்தவே நரசிங்க ரிஷியார்தன்னை
வளப்பமுடன் கண்டதொரு உண்மைபாரே. (6879)

உண்மையாங் காலாங்கி நாதர்தாமும்
உத்தமனார் திரோயின் யுகத்திலப்பா
வண்மையுடன் காலாங்கி நாதர்தாமும்
வாகுடனே மலைமீதில் கண்டசேதி
திண்மைபெற மார்க்கமது ஏதுஎன்றாக்கால்
தீர்க்கமுடன் கிரிசுத்தி வருகும்போது
வண்மையுள்ள சுனையொன்று தடாகமுண்டு
வளம்பெரிய தவசிதனைப் பார்த்திட்டாரே.
(6880)

பார்த்தாரே நரசிங்க ரிஷியார்தம்மைப்
பட்சமுடன் காலாங்கிகாணும்போது
தீர்த்தமுடன் ரிஷியாரின் தவசின்வேடம்
திரேகமெல்லாஞ் சிம்மத்தின் ரூபமாகும்
நேர்த்தியுள்ள வர்ணமது தங்கவர்ணம்
நேர்மையுடன் வையகத்தில் இருந்தசித்து
ஆர்த்ததொரு திருமுகம் மனிதரூபம்
அப்பனே தவநிலையை அறிந்திட்டாரே.
(6881)

அறிந்தாரே தவசியது மகிமைதன்னை
அன்புடனே மனதுவந்து அருகில்வந்து
சிறந்ததொரு ரிஷியாரைக் காலாங்கிநாதர்
தேற்றமுடன் வினவியங்கே கேழ்க்கும்போது
குறித்ததொரு காலாங்கி நாதருக்கு
குணமான நரசிங்க ரிஷியார்தாமும்
மறித்துமே காலாங்கி நாதர்தாமும்
மன்னவனே மார்க்கமது கூறுவேனே.
(6882)

கூறுவேன் என்றலுமே ரிஷியார்தாமும்
குணமான காலாங்கி நாதருக்கு
தேறுதலாய் உபதேசம் மிகவும் சொல்லி
தேற்றமுடன் நெடுங்காலம் மலையிலப்பா
மாறுலக வையகத்தில் தவசிருந்து
மன்னவனே யான் அறிந்த மகிமைகோடி
ஆறுதலாய் உபதேச அதிதங்கூறி
அப்பனே போகவென்று விடைதந்தாரே.
(6883)

தந்தாரே காலாங்கி நாதருக்கு
        தாரணியில் அதிசயங்கள் அதிதஞ்சொன்னார்
பொருந்தியே காலாங்கி நாதருக்கு
        போனதொரு கிரிகைதனில் மேற்குபாகம்
சொந்தமுடன் காணுதற்கு மனதுவந்து
        தோறாமல் கிரியோரம் வருகும்போது
விந்தையுடன் அதிசயங்கள் என்னவென்றால்
        வீரான வாமரிஷி தனைக்கண்டாரே. (6884)

வாமரிஷி

கண்டாரே புலிப்பாணி கணிதவானே
        காசினியில் இன்னும்வெகு அதிசயங்கள்
அண்டர்பிரான் நாதாக்கள் ரிஷியார்தாமும்
        யாரேனுங்கண்டறிந்து சொன்னதுண்டோ
சண்டமாருதம்போலே எந்தன் தேவர்
        சட்டமுடன் காலாங்கி நாதர்தாமும்
கண்டறிந்த அதிசயத்தை யான் உறைப்பேன்
        கண்மணியே விண்மணியே கழறக்கேளே. (6885)

கேளப்பா எந்தனது காலாங்கிநாதர்
        கெடிதான திரேதாயின் யுகத்திலப்பா
ஆளப்பா கிரிசுத்தி வருகும்போது
        அப்பனே மலையோரம் வடபாகந்தான்
மீளவே தவநிலையைப் பார்க்கவென்று
        மிக்கான சுனையருகே வந்தபோது
தூளப்பா ரிஷியார்கள் கூட்டத்தோடும்
        சுந்தரனே வாமமகாரிஷி கண்டாரே.
(6886)

கண்டாரே வாமமகா ரிஷியார்தம்மை
        கருவான தேகமது வாமரூபம்
கொண்டதொரு திருமுகமும் மனிதரூபம்
        கோடான கோடியது நெடுங்காலந்தான்
அண்டமகா ரிஷிபோலே வாமர்தாமும்
        அருளான பெருந்தவசு தானிந்தார்
கொண்டல்வண்ணன் அச்சுதன்போல் விசுவரூபம்
        கொடியதவஞ் செய்திருக்க கண்டிட்டாரே. (6887)

கண்டாரே திரேதாயி னுகத்திலப்பா
கடுந்தவசு செய்திருந்த ரிஷியார்தம்மை
சண்டமா ருதம்போலே தவசிருந்து
சாங்கமுடன் வையகத்து மகிமையெல்லாம்
வண்டணியாள் ரேணுகையாள் மகிமைதன்னை
வளமுடனே தானுரைத்தார் காலாங்கிக்கு
குண்ணதின் மேலிருந்து தவசியாரும்
கூறினார் வெகுகோடி மகிமைதானே. (6888)

பரசுராம ரிஷி

தானான இன்னமொரு தன்மைசொல்வேன்
தன்மையுள்ள புலிப்பாணி கனவானேகேள்
கோனான எனதையர் காலாங்கிநாதர்
கொற்றவனார் எந்தனுக்குச் சொன்னநீதி
தேனான திரேதாயின் யுகத்திலப்பா
தேற்றமுடன் இருப்பதாம் ஆண்டுதன்னில்
பானான பிரம்மகுல பரசுராமன்
பெருந்தவசு தானிருந்த வண்மைபாரே. (6889)

பாரேதான் பிரளயங்கள் வந்தபோது
பாங்கான காலாங்கி மலையின்பேரில்
நேரேதான் நெடுங்காலந் தவசிருந்து
நேர்மையுள்ள பிரம்மகுல சித்துதானும்
சீரேதான் கிரிதனக்கு கீழ்பாகந்தான்
சிறப்புடனே தவமிருந்த ரிஷியார்தம்மை
ஆரேதான் காண்பதற்கு வையகத்தில்
அப்பனே யாராலும் முடியாதன்றோ.
(6890)

அன்றான காலாங்கி நாதர்தாமும்
அறிவுடைய சித்துமகா ரிஷியாரல்லோ
குன்றான பருவத்தைத் தேடியேதான்
குணமான காலாங்கி நாதர்தாமும்
சென்றாரே பரசுமகா ரிஷியார்பக்கல்
செம்பவள ரிஷியாரும் அருகில்சென்று
நின்றாரே நெடுநேர முடிகள்சாய்ந்து
நீதியுடன் காலாங்கி பணிந்திட்டாரே. (6891)

பணிந்திட்ட காலாங்கி நாதருக்கு
பட்சமுடன் பரசுமகா ரிஷியார்தாமும்
துணிந்திட்ட காலாங்கி நாதருக்கு
துப்புரவாய் உபதேசம் கோடிவண்ணம்
அணிபெறவே வையகத்து மகிமைஎல்லாம்
அப்பனே உபதேசம் செய்தாரல்லோ
கணிதமுடன் காலாங்கி நாதர்தாமும்
கருத்துடனே மலையைவிட்டு ஏகினாரே. (6892)

ஏகவே காலாங்கி நாதர்தாமும்
எழிலான சீனபதி தன்னில்சென்று
பாகமுடன் லோகஅதி சயங்கள்எல்லாம்
பாலித்தார் சீனபதி பெண்களுக்கு
ஆகம சாஸ்திர புராணங்கள்எல்லாம்
அங்ஙனவே போதித்து வினயங்கூறி
போகரென்ற எந்தனையும் சீடனாக்கி
பொங்கமுடன் நெடுங்காலம் இருந்திட்டாரே. (6893)

ராம ரிஷி

இருந்தாரே இன்னமொரு வயணம் சொல்வேன்
எழிலான புலிப்பாணி யெந்தன்சீடா
பொருந்தவே சீனபதி விட்டுநீங்கி
பொங்கமுடன் காலாங்கி நாதர்தாமும்
திருந்தவே திரேதாயினு கத்திலப்பா
தீர்க்கமுடன் பிரளயங்கள் வந்தபோது
அருந்தவசி யாயிருந்த ராமர் தன்னை
அங்ஙனவே கண்டுமல்லோ மதித்திட்டாரே. (6894)

மதித்தாரே ராமரிஷி முனியார்தம்மை
மார்க்கமுடன் காலாங்கி நாதர்தேவர்
துதிப்புடனே ராமரிஷி யென்றுமேதான்
துப்புரவாய் அஞ்சலிகள் மிகவுஞ்செய்து
விதிப்படியே பட்டாபிஷேக ரென்று
விருப்பமுடன் தன்மனதிலுவந்து கொண்டு
நதிக்கரையை தான்தேடி தீர்த்தங்கொண்டு
நமஸ்கார துதிகள்மிக செய்திட்டாரே. (6895)

செய்ததொரு காலாங்கி நாதர்தம்மை
செங்கண்மால் ரிஷியாரும் மனங்களித்து
துய்யதொரு துளபமாம் மாலைதன்னை
துப்புரவாய் கையேந்தி முடிகள்சாய்த்து
வெய்யபுகழ் உபதேசம் எந்தனுக்கு
விருப்பமுடன் செய்யவென்று வினவிக்கேட்க
கைதவமாய் உபதேச உண்மைதன்னை
கர்த்தாவும் எந்தனுக்கு கூறிட்டாரே.
(6896)

கூறியே உபதேச உண்மைதன்னை
குணமான காலாங்கி நாதருக்கு
தேறியதோர் கிரேதாயி னுகத்தில்தானும்
தேற்றமுடன் தானடைந்த மகிமையெல்லாம்
ஆறிடவே காலாங்கி நாதருக்கு
அங்ஙனமே உபதேசஞ் செய்தாரல்லோ
மீறியே காலாங்கி நாதர்தாமும்
மிக்கவே சீனபதி சென்றிட்டாரே.
(6897)

சென்றுமே சிலகால மங்கிருந்து
செம்மலுடன் கிரேதாயின் யுகத்தில்தானும்
குன்றுமலை வனாந்திரங்கள் குகைகள்தேடி
கூறான சித்துமுனி அனைத்துங்கண்டு
தென்றிசையில் கும்பமுனி மலையுங்கண்டு
தேற்றமுடன் காலாங்கி மலையைக்காண
வென்றிடவே பிரளயங்கள் வந்தபோதும்
மேன்மையுடன் மலைதனிலே இருந்திட்டாரே.

பலராம ரிஷி

இருந்தாரே இன்னமொரு இணக்கஞ்சொல்வேன்
எழிலான புலிப்பாணி புனிதவானே
திருந்தவே திரேதாயின் யுகத்திலப்பா
தீர்க்கமுடன் காலாங்கி நாதர்தாமும்
அருந்தவசி பலராமர் என்னுஞ்சித்து
அம்மலையில் நெடுங்காலந் தவசிருக்க
குருந்தமெனும் மரக்கலப்பைத் தோளிலேந்தி
குணமான ரிஷியாரின் தவங்கண்டாரே. (6899)

தவமான ரிஷியாரும் கிரியைதன்னில்
சட்டமுடன் நெடுங்காலந் தவசுகொண்டு
சவம்போல மூச்சடங்கி ரூபத்தோடும்
சட்டமுடன் தவசிருக்கும் வண்மைதன்னை
பவமகற்றும் காலாங்கி நாதர்தாமும்
பண்புடனே முடிசாய்ந்து தலைகுனிந்து
நவகோடி அஞ்சலிகள் மிகவும்செய்து
நாதாந்த சித்துருவே கதியென்றாரே. (6900)

கெதியென்று காலாங்கி கேட்குங்காலம்
கெடியான பலராம ரிஷியார்தாமும்
பதிதனையைத் தேடிவந்த ரிஷியாருக்கு
பட்சமுடன் ஞானோப தேசங்கூறி
மதிபோன்ற மகதேவர் காலாங்கிக்கு
மார்க்கமுடன் உலகஅதிசயங்கள் எல்லாம்
இதிகாச புராணமெனும் மறைப்பைஎல்லாம்
இஷ்டமுடன் மனதுவந்து போதித்தாரே. (6901)

பௌத்த ரிஷி

போதிக்க இன்னமொரு வயணம்சொல்வேன்
பொங்கமுடன் புலிப்பாணி புகழும்உள்ளானே
ஆதித்தன் சந்திரன்போல் பௌதமசித்து
அரகராஎன்ன சொல்வேன் கிரியிலப்பா
சோதிபிரகாச மென்ற காலாங்கிநாதர்
சொர்ணமென்ற கிரியைதனில் செல்லும்போது
சாதியிலா தவனார் பௌதமசித்து
சட்டமுடன் நெடுந்தவசி பார்த்திட்டாரே. (6902)

பார்த்தாரே என்தேவர் காலாங்கிநாதர்
பாரான மலைதனிலே தவசியாரை
சார்த்தகையாள் வார்போலே தவங்கள்பூண்டு
சட்டமுடன் நெடுங்கால சித்துதம்மை
கோர்த்துமே கரமெடுத்து அஞ்சலித்து
கொப்பெனவே காலாங்கி வணக்கஞ்செய்தார்
தீர்க்கமுடன் பத்திரமாந் துளபமாலை
தீர்க்கமுடன் தான்கொடுத்து வசனித்தாரே.
(6903)

வசனிக்க ஞானோப தேசந்தன்னை
வளமுடனே பௌத்தமகா ரிஷியார்தாமும்
நிசமுடனே மனங்களித்து மனதுவந்து
நிட்சயமாம் ஞானமென்ற இதிகாசத்தை
வசனமதாய் உபதேச உண்மையாக
வாக்களித்தார் காலாங்கி நாதருக்கு
தசமுடனே பஞ்சதசா காயமாக்கி
சட்டமுடன் மனதுவந்து கொடுத்திட்டாரே. (6904)

கலிக ரிஷி

கொடுக்கவே இன்னமொரு மார்க்கம் சொல்வேன்
கோளாறு தான் அப்ற்றி மைந்தாகேளு
விடுக்கவே காலாங்கி நாதர்தாமும்
விட்டகுறை இருந்ததொருதன்மையாலே
படுகளம்போல் பத்தாவ தாரந்தன்னை
பாற்கடல்கள் சுற்றிவந்து பான்மை கண்டார்
தொடுகுறிபோல் கலிக்கமகா ரிஷியார்தம்மை
தோறாமல் கிரிதனையே கண்டார்தாமே. (6905)
தானான கலிக்கமகா ரிஷியார்தன்னை
தகமையுள்ள காலாங்கி நாதர்தாமும்
பானான கிரேதாயினு கத்திலப்பா
பாங்கான மலைதனிலே கண்டாரங்கே
தேனான பிரளயங்கள் வந்தபோது
தேற்றமுடன் மலைதனிலே நின்றசித்து
கோனான கொடுந்தவசி யானசிதது
கொப்பெனவே சித்துமகா பத்துமாமே. (6906)

கலியுகத்தாருக்கு வியாசமகாரிஷியார் இந்த தசரிஷிகளை பத்தாவதாரமென்று புராணக்கட்டு கூறினார். இவர்கள் கிரேதாயுகத்து மனிதரென்று சொல்லப்படுவர்

பத்தான மகிமையது என்னசொல்வேன்
பாங்கான புலிப்பாணி பாலாகேளீர்
செத்துமே சாகாமல் காயங்கொண்டு
சேனை நெடுங்காலமது வரையிலப்பா
முத்தான மோட்சவழி பெறுவதற்கு
முனையான பத்துமகா ரிஷியார்தாமும்
சுத்தமுடன் கிரேதாயி னுகத்திலப்பா
சுந்தரனே தவசிருந்து சித்துபாரே. (6907)

பாரேதான் காலாங்கி நாதர்தாமும்
பட்சமுடன் எந்தனுக்கு சொன்னநீதி
நேரேதான் அவர்களுந்தான் மனிதர் அன்றி
நெடிதான தேவதாவ தாரமல்ல
சீரேதான் கலியுகத்து மாண்பர்எல்லாம்
சிறப்புடனே தசாதாரக் கடவுளென்று
வேறேதான் இன்னமொரு தெய்வமுண்டோ
வித்தகனே என்றல்லோ விதிக்டுன்றாரே. (6908)

வித்தகனே இவர்களெல்லாந் தெய்வமல்ல
விண்ணுலகம் பதிப்பதற்கு கூடுமோதான்
செத்தவர்கள் கோடிமனு மாண்பருண்டு
தேவாதி தேவரிஷி யானபேரும்
கைத்தவங்கள் தான்மறந்து மண்ணாய்ப்போனார்
காசினியில் யாவருந்தான் இப்படியேபோனார்
மெய்த்தவங்கள் செய்துமல்லோ காயம்பூண்டு
வெகுகோடி மாண்பர்களும் இருக்கின்றாரே. (6909)

போகர் ஆயிரத்தெட்டு சிவாலயப் பெருமைகூறல்

இருக்கவே இன்னமொரு மகத்துவங்கள்
எழிலான புலிப்பாணி கண்ணியவானே
பொருக்கவே வையகத்தின் மகிமையெல்லாம்
புகட்டினேன் கணக்குண்டோ லக்கோயில்லை
பெருக்கவே துகைகண்டு விதிகண்டு
பேரான ஸ்தலமகிமை யாவும்கண்டு,
குருக்கவே திசைஎட்டும் மதிக்குநான்கும்
கூரான தேவகோட்டை கூறுவேனே. (6910)

கூறுவேன் புலிப்பாணி மன்னாகேளு
கொற்றவனார் காலாங்கி சொன்னநீதி
பேறுடைய வையகத்தின் ஸ்தலங்களெல்லாம்
பேர்வகுத்துச் சீர்வகுத்துப் பிரித்துச்சொன்னார்
ஆறுதலம்பஞ்ச பூதஸ்தலத்தைக் கண்டு
அப்பனே எந்தனுக்கு ஓதினார்காண்
மாறுபடா ஸ்தல மகிமைஉந்தனுக்கு
மார்க்கமுடன் வகைபிரித்துச் சொல்வேன்தானே.
(6911)

தானான பஞ்சபூத ஸ்தலமேதென்றால்
தாக்கான காளஸ்திரி காஞ்சியாகும்
தேனான திருக்காசி சிதம்பரந்தான்
தெளிவான திருவருணை ஸ்தலமுமாகும்
பானான தலத்தினது சேர்வை சென்னேன்
பாங்கான ஆறாதாரங்கள்சொல்வேன்
மானான மகதேவர் மதுரையைத்தான்
மகத்தான ஸ்தலமென்று மதிப்பிட்டாரே.

(6912)

மதிப்பான ஸ்தலத்தினது கோர்வைசொல்வேன்
மகத்தான மதுரைக்குள் எண்பத்துநாலு
துதிப்புடைய சிதம்பரங் கோர்வை சொல்வேன்
துப்புரவாய்ப் பதினாறு ரெண்டுயெட்டு
இதிலான வருணைக்குக் கோர்வைசொல்வேன்
விற்பனனே சோடசமா மொன்றுநான்கு
மதிபோன்ற காளஸ்திரி கோர்வைசொல்வேன்
மார்க்கமுடன் கலைரெண்டு தசங்களொன்றே.

(6913)

ஒன்றான காசியின்றன் கோர்வைசொல்வேன்
ஓகோகோ நாதாக்கள் மறைத்தகூத்து
சென்றதொரு கோர்வையது ஏதென்றாக்கால்
செம்மலுடன் ஒன்றுபத்து நான்குளட்டு
நன்றான திருக்காஞ்சி கோர்வைசொல்வேன்
நலமான பஞ்சம்ரண்டு சத்தம்நாலு
குன்றான கணக்குவகை இன்னுஞ்சொல்வேன்
குணமுள்ள புலிப்பாணி மன்னாகேளே.

(6914)

மன்னாகேள் திருவானைக் காவலப்பா
மகத்தான ஸ்தலத்தினது கோர்வைசொல்வேன்
நன்நயமாய் அதைச்சார்ந்த தேவஸ்தானம்
நலமான ஈறாறு தலமேயாகும்
தென்னாடன் கும்பமுனி அகஸ்தியன்தான்
தேவதா கிரியுடனே ஸ்தலமுஞ்சொல்வேன்
முன்னேதான் பெரியோர்கள் உரைத்தவண்ணம்
முனியான கோயில்வகை கூறுவேனே.

(6915)

வரையான அகஸ்தியனார் ஸ்தலம்ஒன்று உண்டு
வளமான கோர்வையது இன்னம்சொல்வேன்
திரையான சத்தமது மூன்றேயாகும்
திகழான வட்டமது நான்கேயாகும்
குறையாத நந்தியது கோட்டையப்பா
கொற்றவனார் மலையருகே சுற்றியுண்டு
முறையான அகஸ்தியனார் தேவஸ்தானம்
முனையான லக்கமிது சொல்லொணாதே.
(6916)

ஒண்ணாது திருக்கடையூர் தேவஸ்தானம்
உத்தமனே கோர்வையது என்னசொல்வேன்
திண்ணமுடன் கலைநான்கு இருமூன்றாறு
திகழான மண்டபங்கள் பதினெட்டாகும்
வண்ணமுடன் சீர்காழி தேவதானம்
மகத்தான கோர்வையது என்னசொல்வேன்
திண்ணமுடன் கலைநான்கு பதிகள்எட்டு
தாக்கான மண்டபமும் பதினாலாமே.
(6917)

நாலான சேதுபதி தலமும்சொல்வேன்
நலமான கோர்வையது என்னசொல்வேன்
காலான அறுபத்து நாலுமாகும்
கருவான மண்டபந்தான் முப்பத்திரெண்டு
மாலான மகதேவர் எந்தன்நாதர்
மார்க்கமுடன் கண்டறிந்த தலமுமாகும்
பாலான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
பாங்கான புதுமைஇன்னுங் கூறுவேனே.
(6918)

கூறுவேன் தணிகையது தலமுமாகும்
கூரான கோர்வையது என்னசொல்வேன்
ஆறுதலங் கோட்டையது மலைமேலப்பா
அப்பனே தசம்ரெண்டு சத்தம்நாலு
வேறுண்டோ வையகத்தில் சொன்னாரில்லை
வெட்டவெளி யானதொரு தலமுமில்லை
நாறுண்டோ பூவதுபோல் மணமுமாகி
நானிலத்தில் கோடிதலங் கண்டேன்பாரே.
(6919)

பாரேதான் கோணமது நவகோணந்தான்
பாங்கான கும்பமென்ற கோணமப்பா
நேரேதான் தேவதா தலமுமாகும்
நெடிதான கோர்வையது என்னசொல்வேன்
கூரேதான் கலையாறு ருசிகையிட்டு
குணமான தேவதா தவமுமாகும்
நீரேதான் வகுத்தறிய இன்னஞ்சொல்வேன்
நிஷ்களங்க மாயவா் தலமுமாமே.
(6920)

தலமான தேவதா தலமுமாகும்
தக்கான கோர்வையது என்னசொல்வேன்
பிலமான கோயிலது முப்பத்திரெண்டு
பேரான மணடபந்தான் அறுபத்துநான்கு
வலமான பாஞ்சால தேசமப்பா
வளமான தேவதா தலமுமாகும்
நலமான கோர்வையது என்னசொல்வேன்
நாடடிலே நவில்வதற்கு நாவில்லைதானே.
(6921)

நாவில்லையப்பா இல்லைஎன்ன சொல்வேன்
நன்மையுள்ள அறுபத்து நாலுசத்தம்
காவிலா நேபாள தேசமப்பா
கருவான தேவதா தலமுமாகும்
பூவிலுயா் கோர்வையது என்னசொல்வேன்
புகழான சத்தமது பரிசுமெட்டு
தாவுபுகழ் ஆவுடையாா் தலமுமாகும்
தகமையுள்ள கோர்வையது சொல்லக்கேளே.
(6922)

சொல்லவென்றால் நாற்பத்தி ஆறேயாகும்
சுத்தமுள்ள சத்தமது நாலேயாகும்
வெல்லவே பழனி மகா தலமுமாகும்
வேதாந்த தலத்தினது கோர்வைசொல்வேன்
புல்லவே சதுரெட்டு திசைகள்நான்கு
புகழான கோணமது அறுபத்துநான்கு
வெல்லவே கழுக்குன்ற பதிதானப்பா
மேன்மையுள்ள தலமென்று செப்பலாமே.
(6923)

செப்பவென்றால் கோர்வையது என்னசொல்வேன்
ஜெகதலத்தில் யாராலும் சொல்லப்போமோ
ஒப்பமுடன் இருபத்து நாலுமாகும்
ஓகோகோ நாதாக்கள் மறைத்தகூத்து
எப்படியும் ஈரைந்தாய்ப் பதினாறாக
எழிலான மண்டபமுங் கூறலாகும்
தப்பிதங்கள் இல்லாமல் தயவுள்ளானே
சாற்றுகிறேன் திருவொற்றி யூரைத்தானே. (6924)

தானான துவார்பரமாம் யுகத்திலப்பா
தகமையுடன் பிரளயங்கள் வந்தபோது
கோனான திருவொற்றி யூர்தானப்பா
கொற்றவனே நடுக்கடலில் நெடுந்தூரந்தான்
தேனான மாபுரமுங் கோபுரந்தான்
தெரியாமல் பிரளயங்கள் வந்துமல்லோ
மானான தலமதுவும் முழுகியல்லோ
மன்னவனே சமுத்திரமும் மேவலாச்சே (6925)

மேவவென்றால் கோர்வையது என்னசொல்வேன்
மேன்மையுள்ள நாற்பத்தி யெட்டேயாகும்
தாவுகடல் அலையதுவு மிஞ்சியேதான்
சட்டமுடன் பூமியல்லோ முழுகலாச்சே
ஆவலுடன் குளிகைகொண்டு சென்றேனப்பா
அப்பனே திருப்புவனங் கண்டேன்யானும்
நாவதனில் கூறுதற்கு நளினமில்லை
நலமான தலமதுவும் மகிமையாச்சே. (6926)

ஆச்சப்பா கோர்வையது என்னசொல்வேன்
அப்பனே பதினெட்டு ரெண்டுபத்து
பாச்சலென்ற திருப்பழனி தலமுமாகும்
பாங்கான மகிமையது என்னசொல்வேன்
மாச்சலென்ற கோர்வையது முப்பத்திரண்டு
மகத்தான மண்டபமும் எட்டுநாலு
வீச்சுடனே குளிகைகொண்டு பார்த்துவந்தேன்
விதக்கவே புலிப்பாணி யின்னங்கேளே. (6927)

கேளப்பா பிணிதீர்த்த வயித்தியநாதம்
கெடியான தலமென்றது ஒன்றுஉண்டு
ஆளப்பா சோர்வையது என்னசொல்வேன்
அப்பனே பதினாறு திக்குநாலு
வாளப்பா திருப்பரமாங் குன்றந்தானும்
வளமையுள்ள கெடிஸ்தலமாம் அதற்குப்பேரு
தூளப்பா கோர்வையது யென்னசொல்வேன்
துப்புறவா இருமூன்று சதுரம்எட்டே.

(6928)

எட்டான திருவாரூர் என்னலாகும்
எழிலான கோர்வையது என்னசொல்வேன்
சட்டமுடன் திருவாசலறு பத்துநான்கு
தகமையுள்ள கலையாறு சத்தமெட்டு
திட்டமுடன் திருவிடையா மருதூரப்பா
தேவதா தலமென்று செப்பலாகும்
வட்டமுடன் கோர்வையது அன்பத்தாறு
அப்பனே பரிசமது நாலுதானே.

(6929)

நாலான திருவிரிஞ்சி தலமுமப்பா
நலமான மலைநாடு கள்ளர்தேசம்
பாலான கோர்வையது என்னசொல்வேன்
பாங்கான விளையாட்டு சத்தமெட்டு
காலான திருச்சோழ தலமுமாகும்
கருவான மகிமையது என்னசொல்வேன்
நூலான கோர்வையது நாலுபத்து
நுட்பமுடன் கலையாறு பாசமெட்டே.

(6930)

எட்டான சேரனது தலமுமப்பா
எழிலான மகிமையது யென்னசொல்வேன்
மட்டான தலபதியின் மகிமைசொல்வேன்
மகத்தான கோர்வையது தொண்ணூற்றாறு
திட்டமுடன் பாண்டியனார் தலமுமப்பா
திகழான வையைவள நாடேயாகும்
வட்டமுடன் கோர்வையது என்னசொல்வேன்
வண்மையுள்ள கரைரெண்டு சோடசமும்ஏழே.

(6931)

ஏழான காசியது எட்டேயாகும்
எழிலான மகிமையது என்னசொல்வேன்
பாழான கோர்வையது நூற்றிரண்டுபத்து
சட்டமுடன் மகிமையது மெத்தவுண்டு
காழான நாகார்ச்சுன தலமுமாகும்
கருவான கோர்வையது எழுபத்திரெண்டு,
தாழான டில்லியது மகிமைமெத்த
தாக்கான கோர்வையது எண்பத்திரெண்டே. (6932)

ரெண்டான சீனபதி தன்னில்சென்று
எழிலான குளிகையது யானும்பூண்டு
குண்டலியாம் வாசிதனைப் பூட்டியல்லோ
கொற்றவனே சீனபதி யானிருந்து
சண்டமாருதம் போலேசில நாட்சென்று
சாங்கமுடன் குளிகையது பூண்டுகொண்டு
வண்ணமுடன் தீர்த்தவரை காணுதற்கு
வளமுடனே சென்றதொரு மகிமைபாரே. (6933)

தீர்த்த மகிமை

பாரேதான் படிகாமாந் தீர்த்தங்கண்டேன்
பாங்கான ஜம்புவென்ற தீர்த்தங்கண்டேன்
நேரேதான் செந்தாமரை தீர்த்தங்கண்டேன்
நெடிதான மனோன்மணியாள் தீர்த்தங்கண்டேன்
கூரேதான் மயேஸ்வரனார் தீர்த்தங்கண்டேன்
குறிப்பான மச்சமென்ற தீர்த்தங்கண்டேன்
சீரேதான் மானிடவர் தீர்த்தங்கண்டேன்
சிறப்பான கோபருவ தீர்த்தங்காணே.
(6934)

காணவே பட்சியென்ற தீர்த்தங்கண்டேன்
கருவான சங்கினுட தீர்த்தங்கண்டேன்
பூணவே சந்தனமாம் தீர்த்தங்கண்டேன்
புகழான வியாசமுனி தீர்த்தங்கண்டேன்
மாணவே மகதேவர் தீர்த்தங்கண்டேன்
மகத்தான பச்சையென்ற தீர்த்தங்கண்டேன்
கோணவே திருப்பாலின் தீர்த்தங்கண்டேன்
தோறாக வண்டூரன் தீர்த்தமாமே.
(6935)

தீர்த்தமாங் கரியமால் தீர்த்தங்கண்டேன்
திறமான நாகேஸ்வர தீர்த்தங்கண்டேன்
பூர்த்தியாய்ப் பரமசிவ தீர்த்தங்கண்டேன்
புகழான பாகவத தீர்த்தங்கண்டேன்
கீர்த்தியுள்ள செங்கண்மால் தீர்த்தங்கண்டேன்
கெடியான புண்ணியத் தீர்த்தங்கண்டேன்
பார்த்தேனே சடாயுவென்ற தீர்த்தங்கண்டேன்
பாங்கான வச்சிரவல்லி தீர்த்தந்தானே.
(6936)

தானான குசலமென்ற தீர்த்தங்கண்டேன்
தாக்கான யமுனையென்ற தீர்த்தங்கண்டேன்
கோனான அகஸ்தியனார் தீர்த்தங்கண்டேன்
குணமான வன்னியனார் தீர்த்தங்கண்டேன்
தேனான மல்லியென்ற தீர்த்தங்கண்டேன்
தெளிவான அனுமாரின் தீர்த்தங்கண்டேன்
பானான காசியென்ற தீர்த்தங்கண்டேன்
பாங்கான கைலங்கிரி தீர்த்தம்பாரே.
(6937)

பாரேதான் செண்பகத்தின் தீர்த்தங்கண்டேன்
பாங்கான கைகேசி தீர்த்தங்கண்டேன்
நேரேதான் கறுப்பண்ணா் தீர்த்தங்கண்டேன்
நெடிதான கிட்கிந்தா தீர்த்தங்கண்டேன்
கூரேதான் அஷ்டமென்ற தீர்த்தங்கண்டேன்
குணமான ஜெகமோகினி தீர்த்தங்கண்டேன்
திரேதாயின் திருவல்லி தீர்த்தங்கண்டேன்
திறமான கற்பத்தின் தீர்த்தங்காணே.
(6938)

காணவே இன்னம்வெகு தீர்த்தங்கண்டேன்
கண்மணியே விலாடமென்ற தீர்த்தங்கண்டேன்
பூணவே இரணியனார் தீர்த்தங்கண்டேன்
புகழான புஜண்டரிட தீர்த்தங்கண்டேன்
வேணபடி திருமாலின் தீர்த்தங்கண்டேன்
விருளான கும்பமென்ற தீர்த்தங்கண்டேன்
நீணவே காளிங்க தீர்த்தங்கண்டேன்
நிஷ்களங்க சொர்ணமென்ற தீர்த்தந்தானே.
(6939)

தானான தீர்த்தமது யென்னசொல்வேன்
தகமையுள்ள புலிப்பாணி தம்பிரானே
மானான தாமரையின் தீர்த்தங்கண்டேன்
மகத்தான ஞானமென்ற தீர்த்தங்கண்டேன்
வேனான யாதவமாந் தீர்த்தங்கண்டேன்
வெளியான அமுர்தமென்ற தீர்த்தங்கண்டேன்
பானான அசுவனியாந் தீர்த்தங்கண்டேன்
பாங்கான அற்புதமாந் தீர்த்தமாமே.

(6940)

ஆமேதான் புலிப்பாணி அன்புள்ளா
அப்பனே அனாகத்தின் தீர்த்த ண்டேன்
நாமேதான் காலாங்கி நாதர்தம்மால்
நலமான குளிகையது பூண்டுகொண்டு
தாமேதான் காலாங்கி சொன்னநீதி
தண்மையுடன் வாக்கதுவும் பொய்யாமல்தான்
போமேதான் அஷ்டதிசை யான்கடந்து
பொங்கமுடன் தீர்த்தமதை கண்டிட்டேனே.

(6941)

கண்டேனே வெகுகோடி தீர்த்தந்தன்னை
காசினியில் யார்கண்டார் என்னைப்போலே
உண்டான சித்துமுனி ரிஷிகள்தேவர்
உலகமெலாங் குளிகைகொண்டு சென்றதுண்டே
ஓண்டொடியாய் மரம்பொந்து சமாதிபீடம்
ஓகோகோ நாதாக்கள் கண்டதில்லை
சண்டமா ருதம்போலே குளிகைபூண்டு
சட்டமுடன் அஷ்டதிசை கண்டிட்டேனே.

(6942)

இட்டேனே இன்னமொரு மார்க்கஞ்சொல்வேன்
எளிதான நாதாந்த சித்துதாமும்
பட்டமாம் விட்டல்லோ பாரின்மீது
பாருலகி லதிசயத்தைக் கண்டதில்லை
விட்டகுறை இருந்ததொரு புண்ணியத்தால்
வேதாந்தத் தாயினது மகுத்துவத்தால்
சட்டமுடன் வையகத்து மகிமையெல்லாம்
தாரணியில் கண்டறிந்த புதுமைபாரே.

(6943)

புதுமையாம் வெகுகோடி சித்தர் தாமும்
புகக்ஷான உலகுதனில்கோடானகோடி
கதுமையுள்ள தேவரிஷி இருந்தாரல்லோ
காசினியில் அதிசயங்கள் கண்டே என்றும்
பதுமமுகம் அஷ்டதிக்குப் பரிசம்யாவும்
பார்த்துவந்த உறுதியதும் கூறவில்லை
வதுமைபுரி சுரக்காயுங் கரிக்காயென்ற
வார்த்தையது போலலைவாய் நவின்றிட்டாரே.(6944)

நவின்றாரே சித்துமுனி கோடாகோடி
நாற்பத்து எட்டுலட்ச கிரந்தந்தன்னை
குவின்றதொரு சாத்திரங்கள் மலைபோலாக
குணமுடனே பாடிவைத்தார் லக்கோயில்லை
கவிந்ததொரு குருக்குவழி சுறுக்குமார்க்கம்
கண்டுமனது உவந்தல்லோ உளவு ஆராய்ந்து
அவிந்த திருவிளக்கது மையேற்றினார்போல்
அப்பனே சப்தகாண்டம் பாடினேனே. (6945)

போகர் தன் வரலாற்றை புலிப்பாணிக்கு கூறல்

பாடினேன் இன்னமொரு மார்க்கஞ் சொல்வேன்
பாலகனே புலிப்பாணி பகரக்கேளாய்
நீடியதோர் காலாங்கி கிருபையாலே
நீதியுடன் நெடுங்காலம் இருந்தேன் அங்கே
தேடியே காலாங்கி நாதர்தாமும்
தேற்றமுடன் தன்தனக்கு உகந்தசீடன்
நாடியே வேண்டுமென்று நன்மையாலே
நானவற்கு நற்சீடன் ஆகினேனே. (6946)

ஆகினேன் நெடுங்காலம் பணிதிசெய்து
அப்பனே சமாதிக்குப் பூசைசெய்தேன்
பாலில்விழும் ஈயைப்போல் பரதவித்தேன்
பட்சமுடன் என்மீதில் மனதுவந்து
சாகின்ற சடலமதுங் காயந்தந்து
சட்டமுடன் எந்தனுக்கு இதவுகூறி
மேதிடவே ஞானோபதேசம் சொல்லி
மேன்மையுடன் எந்தனை ஆசீர்மித்தாரே.
(6947)

என்னவேகும் பமுனிஎன்ற நாமம்
　　எழிலான அகஸ்தியரின் நாமமாகும்
பன்னவே அகஸ்தியனார் என்ற நாமம்
　　பலபலவாம் சாத்திரத்தில் முறைபாடாக
துன்னவே கும்பமுனி என்றுமேதான்
　　துப்புரவாய் எப்போதும் வழக்கம்பாரு
சொன்னதொரு நூல்களிலே மகிமைகோடி
　　தோறாமல் பாடிவைத்தார் முனிவர்தாமே.
(6956)

முனியான சாத்திரங்கள் பலநூல்கோர்வை
　　மூதுலகில் பாடிவைத்தார் சித்தர்எல்லாம்
கனியான நவகனியாம் நூல்தானப்பா
　　கருத்துடனே பனிரெண்டு காண்டம்சொன்னார்
பனியதுதான் சூரியனைக் கண்டாற்போலே
　　பறக்குமடா பனிரெண்டு காண்டமுன்னே
தொனிபோன்ற சாத்திரங்கள் களவுமார்க்கம்
　　துப்புரவாய்க் காவியத்துக் கொவ்வாதன்றே.
(6957)

அன்றான சாத்திரமாங் கோர்வையப்பா
　　அப்பனே பனிரெண்டு காண்டம்சொன்னார்
குன்றான மலைபோல கோடித்தங்கம்
　　கொட்டினார் பனிரெண்டு காண்டத்துள்ளே
சென்றிடவே வயித்தியமும் வாதமார்க்கம்
　　செயலான யோகமுதல் ஞானமார்க்கம்
வென்றிடவே மாந்திரீகம் மாரணவேதம்
　　வேண்டியதோர் கருமானம்மிக உண்டாமே.
(6958)

உண்டான சாத்திரத்தில் இல்லாமார்க்கம்
　　உத்தமனே பெருநூலில் காணலாகும்
கண்டாலும் விடுவாரோ பெருநூலப்பா
　　காசினியில் பனிரெண்டு காண்டந்தன்னை
விண்டதொரு பொருளெல்லாம் அதிலேதோயும்
　　வித்தகனே மற்றோர் நூல் காண்பதில்லை
சண்டமாருதம் போலே பனிரெண்டுகாண்டம்
　　சங்கையற ஆயிரத்துக்குஒரு காண்டம்தானே.
(6959)

சங்கையில்லா பெருநூலைப் பார்த்தபேர்கள்
சாயுச்சிய பதவிதனைப் பெறவேயாகும்
இங்கிதமாய்ப் பெருநூல்கள் பார்க்கமாண்பர்
எழிலான சாலோக சாமீபம்தான்
அங்கமுடன் சாரூபபதவி மூன்றும்
அப்பனே கிட்டுவதும் அரிதேயாகும்
புங்கசித்தி எட்டுவித போகம்தன்னை
புகமுடனே பெருநூலோர் காண்பார்தானே. (6960)

போகர் புலிப்பாணியை ஆசீர்வதித்து புத்திகூறல்

தானான இன்னமொரு தண்மைசொல்வேன்
தாக்கான புலிப்பாணி தயவுள்ளானே
கோனான எனதையர் காலாங்கிநாதர்
கொற்றவனே எந்தனுக்குச் சொன்னநீதி
பானான பார்லோகம் இடங்கொள்ளாது
பாலகனே சொல்வதற்கு நாளுமில்லை
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
தேற்றமுடன் கோடிமுறை சொல்வேன்பாரே. (6961)

பாரேதான் கலியுகம் பிறக்கலாச்சு
பாலகனே சத்தியமும் விழலாய்ப்போச்சு
ஆரேதான் உனக்குமதி சொல்வார் அப்பா
அப்பனே உபதேசம் பெற்றமட்டும்
பேர்இருக்க ஊர்இருக்க பிதாஇருக்க
பேரான மகுத்துவத்தை வெளியிடாதே
சீரழிந்த மாண்பரெல்லாம் செனிப்பாரப்பா
ஜெகதலத்தில் கருமிஎன்ற கோடிப்பேரே. (6962)

கோடியாம் நல்லவர்போல் இருப்பாரப்பா
கொற்றவனே உந்தனுக்கு உபதேசித்த
தேடியதோர் பொருளப்பா சப்தகாண்டம்
தெளிவான ஏழாயிரக் காவியத்தை
பாடியே உந்தனுக்கு தத்தமாக
பட்சமுடன் யான்கொடுத்த பெருநூலப்பா
வாடியே மயங்காதே மனம்விடாதே
மதிகெட்டு நில்லாதே நூல்கொடாதே.
(6963)

கொடுத்தாலும் விதியாளி பார்த்துஅறிந்து
கொற்றவனே கொடுத்தாலும் புண்ணியம்எய்தும்
கொடுத்ததொரு குடிகெடுக்கும் பாவிகட்கும்
கெடியான சண்டாள மாண்பருக்கும்
அடுத்துறவு நயம்பேசி புரளிகூறும்
அனியாயக் காரருக்கும் அறிவிலார்க்கும்
தொடுத்ததொரு பெருநூலாம் சப்தகாண்டம்
துப்புரவாய்க் கொடுத்தாலே பாவமாமே.
(6964)

பாவாமாம் நூலதனைப் பதனம்பண்ணு
பாலகனே சமாதிமுகம் வைத்துப்போற்று
ஆவலுடன் விதியாளி வந்துகேட்டால்
அப்பனே நீகொடுத்து மதிகள்கூறு
சாவதுவும் தலைமேலே இருக்குமப்பா
சாங்கமுடன் நூல்கொடுத்தால் மெத்தநன்று
போவதுமெய் இருப்பதுபொய் என்றவாக்கியம்
பொங்கமுடன் வேதமது நுணுக்கமாமே.
(6965)

வேதங்கள் நுணுக்கறிந்து ஈயாவிட்டால்
வெகுசாபம் வெகுசாபம் நரகமெய்தும்
நீதமுடன் பரிசுத்த வாளருக்கு
நீதியுடன் கொடுப்பது வேகம்மமாகும்
தோதமுடன் விதியாளி வந்துகேட்டால்
தோறாமல் சமாதிமுகமிருந்த நூலை
ஆதவமாம் அருளினது விசுவாசத்தால்
அப்பனே நூல்கொடுத்து மதிகள்கூறே.
(6966)

கூறவென்றால் புலிப்பாணி குணமுள்ளானே
கொற்றவனே கலியுகமும் பிறந்து போச்சு
மாறலுடன் வையகத்தில் வெகுபாடப்பா
மாண்பர்களும் வெகுகேடு படுவாரப்பா
சீறலுடன் பொய்சூது கபடுதந்திரம்
சிறப்பான குறைபாடு அதிதமார்க்கம்
மீறவே தான்நடக்கும் கலியுகத்தில்
மிக்கான உண்மையது அறிந்துகொள்ளே.
(6967)

கொள்ளப்பா எவரையும் நம்பவேண்டாம்
கொற்றவனே கலியுகத்தில் அனியாயங்கள்
தள்ளவே போகாது தரணிமீதில்
சட்டமுடன் அநேகவித தெய்வமென்பார்
விள்ளவே விசுவாசம் பாவமுண்டு
வித்தகனே அனேகவித சாத்திரங்கள்
உள்ளபடி கூறுவார் மாண்பரப்பா
உத்தமனே மயங்காதே புத்திவானே. (6968)

புத்தியாய் கலியுகத்தில் சிலதுகாலம்
புகழுடனே தாமிருந்து சமாதிகொள்வாய்
சத்தியத்தைத் தவறாதே தம்பிரானே
சதகோடி சூரியன்போல் ஞானங்கொள்ளு
வித்தகனே விற்பனனே விண்ணுள்ளானே
விட்டகுறை நேருமட்டும் வையகத்தில்
புத்தியாய் நெடுங்காலந் தவமிருந்து
புண்ணியனே சமாதிமுகம் புகுவீர்தானே.
(6969)

போகர் சமாதிக்குப் போகல்

தானான புலிப்பாணி தகமையோனே
தாக்கான என்தேவர் சொன்னநீதி
கோனான காலாங்கி வாக்குபோலே
கொற்றவனே சமாதிமுகம் செல்வேன்அப்பா
மானான மனோன்மணியாள் கடாட்சத்தாலும்
மகதேவர் காலாங்கி கிருபையாலும்
பானான பாரிலுள்ளோர் புண்ணியத்தால்
பாலகனே சமாதிமுகம் செல்வேன்தானே. (6970)

செல்கவென்றால் எந்தன் முறைபாடுபோலே
ஜெகதலத்தில் சிலகாலம் நீரிருந்து
புல்கவே வையகத்தைத் தான்மறந்து
புகழான சமாதிமுகம் மேவநன்று
வில்கவே கலியுத்தில் இருந்துமென்ன
விட்டகுறை இருந்தாலும் என்னலாபம்
அல்லவது நெடுநாளும் இருந்தாலுந்தான்
அப்பனே தேகமது மண்ணாய்ப்போமே. (6971)

மண்ணான தேகமது இருந்தும்என்ன
மகிதலத்தில் நெடுங்காலம் வாழ்ந்தும்என்ன
வண்ணமுடன் கலியுகத்தில் அனியாயங்கள்
வாகுடனே சதாகாலம் நடக்கும்பாரு
எண்ணமது கலியுகத்து மாண்பருக்கு
எழிலான கோடிமுறை தத்துவங்கள்
கண்ணவிந்த மாண்பரப்பா கலியுகத்தார்
காசினியை மறப்பதுவும் மெத்தநன்றே. (6972)

நன்றான காசினியை மறந்துமல்லோ
நான்போகும் சமாதிமுகம் தன்னைப்போலே
குன்றான கலியுக்தில் நீயுமப்பா
கொற்றவனே சமாதிமுகம் செல்கநன்று
என்றைக்கும் வையகத்தின் வாழ்க்கைஎல்லாம்
எழிலுடனே மறப்பதுவும் மெத்தநன்று
தென்திசையில் கும்பமுனி சமாதிபக்கல்
தேற்றமுடன் சமாதிமுகங் கொள்வீர்தானே. (6973)

போகர் சித்தர்களுக்கும் ரிஷிகளுக்கும் வணக்கங் கூறுகின்றார்

தானான அகஸ்தியருக்குச் சரணஞ்சொன்னேன்
தாக்கான அவர்பாதம் போற்றிபோற்றி
கோனான வரரிஷியார் தாள்பணிந்தேன்
கொற்றவனே அவர்பாதம் போற்றிபோற்றி
தேனான காலாங்கி சரணம்சொன்னேன்
தேற்றமுடன் அவர்பாதம் போற்றிபோற்றி
மானான சட்டமுனி சரணம் சொன்னேன்
மார்க்கமுடன் அவர்பாதந் தொழுதிட்டேனே
(6974)

தொழுதேனே ரோமரிஷி சரணம்சொன்னேன்
தோறாமல் அவர்பாதம் பணிந்துபோற்றி
பழுதுபடா மச்சமுனி சரணம்சொன்னேன்
பாலகனே அவர்பாதம் போற்றிபோற்றி
தொழுதுமே சிவவாக்கியர் சரணம்சொன்னேன்
விருப்பமுடன் அவர்பாதம் பணிந்திட்டேனே.
(6975)

பணிந்தேனே தன்வந்திரி சரணம்சொன்னேன்
பாலகனே அவர்பாதம் தொழுதுபோற்றி
அணியான ராமருக்குச் சரணம்சொன்னேன்
அப்பனே யவர்பாதம் போற்றிபோற்றி
துணிந்துமே கௌபாலர் தாள்பணிந்தேன்
துப்புரவாய்ச் சரணங்கள் மிகவும்சொன்னேன்
மணியான சுந்தரா நந்தருக்கு
மகத்தான சரணங்கள் போற்றிதானே.

(6976)

போற்றியே தேரையர் சரணம்சொன்னேன்
புகழுடனே அவர்பாதந் தொழுதுபோற்றி
ஆற்றலுடன் பூதனாம் அநந்தருக்கு
அப்பனே அவர்பாதம் தொழுதுபோற்றி
மாற்றலுடன் புண்ணாக்கு ஈசருக்கு
மகத்தான சரணங்கள் மிகவும் சொன்னேன்
தேற்றமுடன் இடைக்காடர் சரணம்சொன்னேன்
தெளிவுடனே அவர்பாதந் தொழுதேன்தானே.

(6977)

தானான டமரா னந்தருக்கு
தண்மையுடன் மிகனோக்கிச் சரணம்சொன்னேன்
கோனான தட்சணா நாயகருக்கு
கோடிமுறை சரணங்கள் மிகவும்சொன்னேன்
பானான அகப்பேய் சித்தருக்கு
பட்சமுடன் வெகுகோடி சரணம் சொன்னேன்
மானான யாக்கோபு பாதம்போற்றி
மார்க்கமுடன் சரணங்கள் கூறினேனே.

(6978)

கூறினேன் குறும்பரென்ற சித்தருக்கு
கோடான கோடியது சரணம்சொன்னேன்
தேறியே அவர்பாதம் தொழுதுபோற்றி
தோற்றமுடன் அஞ்சலிகள் மிகவும்செய்தேன்
மாறுபடா சோதியென்ற முனிவருக்கு
மகத்தான சரணங்கள் அதிகம்சொன்னேன்
ஆறுநதி தீர்த்தமது கொண்டுமல்லோ
அவர்பாதம் அர்ச்சனைகள் செய்திட்டேனே.

(6979)

செய்தேனே இன்னம்வெகு மார்க்கஞ்சொல்வேன்
செயலான புலிப்பாணி செல்வவானே
துய்யநல்ல ஊர்வசியாள் சரணம்சொன்னேன்
துப்புரவாய் என்மீதில் கடாட்சம்வைத்து
வெய்யபுகழ் காலாங்கி கடாட்சத்தாலே
விருப்பமுடன் என்மீதில் மன்துஉவந்து
தையலெனும் ஊர்வசியாள் கடாட்சத்தாலே
சட்டமுடன் சப்தகாண்டம் பாடினேனே
(6980)

பாடினேன் புலிப்பாணி மைந்தாகேளு
பாலகனே வியாசமுனி நாதருக்கு
தேடியே அவர்பாதம் தொழுதேனப்பா
தேற்றமுடன் சரணங்கள் மிகவும்சொன்னேன்
கூடியே கௌதம ரிஷியாரின்தன்
கொற்றவனே அவர்பாதந் தொழுதுபோற்றி
நீடியே அஞ்சலிகள் மிகவும்செய்து
நீதியுடன் அவர்பாதம் பணிந்திட்டேனே.
(6981)

இட்டேனே திருமூலர் சரணம்சொன்னேன்
எழிலுடனே அவர்பாதந் தொழுதுபோற்றி
சட்டமுடன் பாம்பாட்டி சித்தருக்கு
சதகோடி நமஸ்காரம் செய்தேன்யானும்
திட்டமுடன் அவர்பாதம் தொழுதுபோற்றி
தீர்க்கமுடன் மேலும் அஞ்சலிகள் செய்தேன்
பட்சமுடன் கடுவெளியார் சித்தருக்கும்
பாலகனே நமஸ்காரம் செய்தேன்பாரே.
(6982)

பாரேதான் கமலமென்ற முனியாருக்கு
பட்சமுடன் சதகோடி சரணம் சொன்னேன்
சீரேதான் அவர்பாதந் தொழுதுபோற்றி
சிறப்புடனே அஞ்சலிகள் மிகவும்செய்தேன்
நேரேதான் கைலாச ரிஷியாருக்கு
நேர்மையுடன் அவர்பாதம் தொழுதுபோற்றி
கூரேதோன் நமஸ்காரம் மிகவும் சொன்னேன்
கொற்றவனே புலிப்பாணி பண்புள்ளானே.
(6983)

பண்பான அஞ்சனமாம் ரிஷியாருக்கு
பாலகனே சரணங்கள் அதிகம் சொன்னேன்
நண்புடனே தாள்பணிந்து முடிகள்சாய்ந்து
நன்மையுடன் அவர் பாதம்தொழுது போற்றி
வண்பான நவகண்டர் பாதம்போற்றி
வளமுடன் அவர்தனக்குச் சரணம்சொன்னேன்
திண்பான அஞ்சலிகள் மிகவும்செய்து
தீர்க்கமுடன் கரங்குவித்து வணங்கினேனே.
(6984)

வணங்கவே இன்னம் வெகுசித்தருண்டு
வளமான நாதறுந்தரிஷி யாரப்பா
இணங்கினேன் ஜமதக்கினி முனியாருக்கு
எழிலான சரணங்கள்மிகவும் சொன்னேன்
சுணங்கமது வாராமல் ரிஷியாருக்கு
சுத்தமுடன் அவர் பாதம்தொழுது போற்றி
மணங்கமழும் திரணாக்கிய முனிவருக்கு
மார்க்கமுடன் அவர்பாதம் தொழுதிட்டேனே.
(6985)

தொழுதேனே இன்னமொருமார்க்கம் சொல்வேன்
தொல்லையெனும் பிறவியது மயக்கறுத்த
பழுதுடா புலிப்பாணி பகர்வேனப்பா
பாலகனே இன்னம் வெகுசித்தருண்டு
முழுதுமே மூதுலகில் கீர்த்திபெற்ற
முனையான அசுவனியாய் தேவருக்கு
தொழுதுமே அவர்பாதம் போற்றிபோற்றி
தோற்றமுடன் அஞ்சலிகள் பகருவேனே.
(6986)

பகரவே புஜண்டமகாரிஷியாருக்கு
பண்புடனே வெகுகோடி சரணம்சொன்னேன்
நிகரவே யவர்பாதம் தொழுதுபோற்றி
நீதியுடன் தலைகுனிந்து முடிகள் சாய்த்தேன்
சகராஜ பரிட்சித்து மன்னனுக்கு
சட்டமுடன் சோதிடங்கள் தாமுரைத்து
சுகரென்ற ரிஷியாருக்குச் சரணம்சொன்னேன்
துப்புரவாய் அவர்பாதம் பணிந்திட்டேனே.
(6987)

பணிந்தேனே புலிப்பாணி மன்னவாகேள்
        பாருலகில் கும்பமென்ற ஈசருக்கு
துணிந்துமே அவர்பாதம் தொழுதுபோற்றி
        துப்புரவாய் சரணங்கள் அதிகம் சொன்னேன்
கணிதமென்ற மூலத்தின் ஈசருக்கு
        கனகாபி“கமுடன் சரணம் சொன்னேன்
மணிபோன்ற பாதமதைத் தொழுதுபோற்றி
        மன்னவனே சதாகாலம் நினைப்பேன்காணே
(6988)

காணவே கருவூரார் சித்தருக்கு
        கனகாபிஷேகமது மிகவும் செய்து
தோணவே அவர் தனக்குச் சரணம்சொன்லே
        துப்புரவாயவர் பாதம் போற்றிபோற்றி
மாணமருங் கல்வியுள்ள கொங்கணர்க்கு
        மகத்தான சரணங்கள் மிகவும் சொன்னேன்
நீணவே வாலையா நந்தருக்கு
        நீதியுடன் பாதமது பணிந்தேன்தானே.
(6989)

தானான புலஸ்தியர்க்குச் சரணம்சொன்னேன்
        தாக்கான வால்மீகர் பாதம்போற்றி
கோனான சுப்பிரமணியர் சரணம்சொன்னேன்
        கூரான அவர்பாதம் தொழுதுபோற்றி
தேனான ஜெயகண்டி பாதம் போற்றி
        செங்கமல வள்ளுவனார் சரணம்சொன்னேன்
மானான மகதேவர் காலதூதர்
        மகத்தான பாதமது பணிந்திட்டேனே.
(6990)

இட்டேனே நவகோடி ரிஷியாருக்கும்
        எழிலான பதினெண்பேர் சித்தருக்கும்
சட்டமுடன் நாற்பத்தி எட்டுபேர்கள்
        சதுரான முனிவருக்கும் சரணம்சொன்னேன்
திட்டமுடன் நாற்பத்தி எட்டுபேர்கள்
        திகழான சுடர்ஒளியாம் சோதிபோற்றி
அட்டதிசை தான்புகழும் காலாங்கிநாதர்
        ஐயனேஉன்பாதம் போற்றிதானே.
(6991)

போகர் சித்தர்களுக்கு அவையடக்கம் கூறல்

தானான சித்துமகா ரிஷியாருக்கும்
தண்மையுள்ள மனுவொன்று சொல்வேனப்பா
கோனான எனதையர் காலாங்கிநாதர்
கொற்றவனார் சீனபதி தேசந்தன்னில்
மானான வையகத்து மகிமைஎல்லாம்
மார்க்கமுடன் எந்தனுக்கு உபதேசித்தார்
பானானசதகோடி சூரியன்போல் பாடினேன்
சப்தகாண்டம் பண்பாய்த் தானே. (6992)

பண்பான லோகவதிசயங்கள் எல்லாம்
பாருலகில் நாதாக்கள் மறைத்ததாலே
நண்பான மாண்பர்களும் பிழைக்கவேதான்
நலமான புலிப்பணி பாலனுக்கு
திண்ணமுடன் இதிகாச வித்தைஎல்லாம்
தீர்க்கமுடன் சத்தசாகரத்தைப் போலே
உண்மையாம் போகர் ஏழாயிரந்தான்
உவமையுடன் பாடிவைத்தேன் காண்டம்பாரே.(6993)

பாரேதான் மருத்துவங்கள் வெளியாச்சென்று
பண்புள்ள நாதாக்கள் நீங்களெல்லாம்
வேரேதான் சாபமது கொள்ளாமல்தான்
வேழ்க்கமுடன் எந்தன்மேல் கிருபைவைத்து
சீரேதான் சிறுபாலன் என்னையுந்தான்
சிறப்புடனே மனதுவந்து அஞ்சலித்து
நேரேதான்என்மீதில் சினம் கொள்ளாமல்
நேர்மையுடன் கொண்டணைத்தல் பாரமாமே. (6994)

பாரமாம் என் நூலில் துகள்உண்டானால்
பாலகனே சிக்கறுத்து மனங்களித்து
தூறான வார்த்தையது மிகக்கொள்ளாமல்
துப்புரவாய்ச் செந்தமிழைச் சீர்திருத்தி
கூறான விதிபாடு முறைபாடோடு
குணபாடு வழிபாடு தானமர்த்தி
சீறான போகர் ஏழாயிரத்தை
சிறப்புடனே உகந்துமனங் கொள்வீர்தாமே.
(6995)

தாமான சித்துமுனி ரிஷியார்முன்னே
தகமையுடன் பாடிவைத்த சப்தகாண்டம்
ஆமேதான் பசபசுங்கிள்ளை முன்னே
அப்பனே அருங்காக்கை சத்தம்போலும்
வேமேதான் செந்தமிழால் சித்தர்முன்னே
வேட்கையுடன் யான்செய்த சப்தகாண்டம்
தாமேதான் புல்லறிவா லுரைத்ததாலே
தண்மையுடன் பெரியோர் புன்னகையுமாமே.
(6996)

நகையான போகர் ஏழாயிரம்தான்
நலமான சித்தர் முனி நாதருக்கு
தகமையுள்ள காண்டமது பெருமையோசொல்
தாரணியி லனேகம்பேர் சித்தர்கூடி
குகைதனிலே வெகுநூல்கள் பாடியல்லோ
கொற்றவனே சமாதிமுகம் வைத்தாரப்பா
வகையான சாத்திரத்துக் கொப்புசொல்ல
வல்லவனே என்னாலும் முடியாதன்றே.
(6997)

அன்றான ஆதிசேடன் தன்னினாலும்
அப்பனே வினவிடவும் போகாதப்பா
குன்றானமலைபோலே சாத்திரங்கள் கொட்டினார்
சித்தரெல்லாம் லக்கோயில்லை
வென்றிடவே கும்பமுனி வர்க்கத்தோரும்
வேதாந்தத் திருமூல வர்க்கத்தோரும்
நன்றாகப் பாடிவைத்தார் கோடிநூல்கள்
நலமாகப் பாடிவைத்தேன் சின்னூலாமே. (6998)

சின்னூலா மென்றதொரு யிந்தநூலை
சினமதுவும் கொள்ளாமல் மனதுஉவந்து
பன்னூலும் பெருநூலாய் இருந்திட்டாலும்
பட்சமுடன் மனங்களித்து ஆசீர்மித்து
என்னூலைக் குற்றமது கூறாமல்தான்
எழிலான சிறியேன்மேல் அன்புகூர்ந்து
நன்னூலாயிதம் பூண்டு யின்னூல்தன்னை
நன்மையுடன் அனுசரித்துக் கொள்ளநன்றே.
(6999)

கொள்ளவே போகரேழா யிரந்தான்
கொற்றவனே நெடுங்காலந் தவமிருந்து
உள்ளபடி உடல்பொருள்கள் ஆவிஎல்லாம்
உத்தமனே இந்நூலுக்கு ஒப்பிவைத்தேன்
கள்ளமில்லா சாத்திரமாம் சப்தகாண்டம்
கலியுகத்தார்தான் பிழைக்கப் பாடிவைத்தேன்
உள்ளபடி சாபமது இந்நூலுக்கில்லை
உத்தமனே காண்டமது ஏழுதானே.

(7000)

தானான காண்டமது ஏழுக்குள்ளே
சதகோடி சூரியன்போல் மகத்துவங்கள்
கோனான காலாங்கி கடாட்சத்தாலே
கொற்றவனே பெருநூலாம் குருநூலாக
தேனான மனோன்மணியாள் கிருபையாலும்
தேஜொளியின் சின்மயத்தின் அருளினாலும்
மானான போகரேழா யிரந்தான்
மார்க்கமுடன் பெருநூலும் முற்றதாமே.

(7001)

போகர் சத்தகாண்டம் - 7000
ஏழாவது காண்டம்
முற்றுப் பெற்றது

அரும் பொருள் விளக்கம்

நிஷ்களங்கம் –கெடுதல் இல்லாமல்
அனந்தம் – அநேகம்
அனித வழி – நேர்மையற்ற பாதை
சிடிகை – கைமுறை (அனுபவம்)
பதாம்புயம் – பாதாரவிந்தம், திருவடிதாமரை
அரி – சிங்கம்
கரி –யானை
பரி – குதிரை
கல்லால மரம் – விழுது இல்லாத ஆலமரம்
லக்கோயில்லை – எண்ணிக்கை சொல்ல முடியாத அளவு
கோனான் – பாகன்
வசனித்தல் – சொல்லுதல்
ஆசுகவி – உடனே பாட்டு இயற்றுபவர்
குண்ணு – குன்று
கிரி மூலி – மலை மூலிகை
பசிமூலி – உண்ணும் (உபயோகிக்கும்) பச்சிலை
வேதிக்கு மூலி – ரசவாத மூலிகை
ஏம வித்தை – இரசவாதம்
கபடு – வஞ்சகஎண்ணம்
களஞ்சி – (அளவு)
ஊசிஇரும்பு – ஊசிக்காந்தம்
வழலை – முப்பு
சிறியானின் நங்கை – சிறியா நாங்கை
பெரியாளின் மூலி – பெரியா நங்கை
சுருதி – இசை, மந்திரம், வேதம், காது,
ஏமம் – இன்பம், பொன், புதையல்
சிதாபாசம் – மயக்கம்
விருதாக – வீணாக
எரிகாலன் – ஆமணக்கு
சாமம் – மணிநேரம்
துயம் – தோலா எடை
பாகம் – பக்குவம்
முப்பொழுது – மூன்று நாள் (பகல்)

கதுமையுடன் – வேகமாக
பாஷாணம் – வெள்ளைப் பாஷாணம்
கூர்மம் – ஆமை
தேஜோளி – ஞானப் பெருவெளி
விந்தி – விந்தியமலை
சிங்கி – மிருதார் சிங்கி
சிற்றண்டம் – கோழிமுட்டை
தாளி – வாய் அகலமான பானை
பஞ்சமுஷ்டி – பஞ்சமூலிகை, ஆல், அரசு, அத்தி, நாவல் இத்தி முதலிய பட்டைகள்.
பஞ்ச திரவியம் – மரத்தின் வேர், பட்டை, இலை, பூ, காய்
பஞ்ச கோலம் – சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி வேர், கொடி வேர்,
லவணம் – உப்பு
காடி – புளித்த நீர்
குடோரி –ஒரு வகை ஆயுதம்
செவ்வா – செவ்வாழை
மூமத்தங்காய் – ஊமத்தங்காய்
சாரம் – நவச்சாரம்
அண்டோடு – முட்டையின் ஓடு
கையானின் சாறு – கரிசலாங்கண்ணிச் சாறு
தானம் – ஸ்தானம், இடம்
எத்தனங்கள் – முயற்சி
முசியாமல் – தயக்கமில்லாமல்
சாரவிதை –
குழிக்கல் – மருந்து அரைக்கும் கல்வம்
பற்குணன் – கிருஷ்ணபகவான்
தம்பதி – தமது நாடு, தமது ஊர் (தம் + பதி)
சுருமாக்கல் – கண்களில் தீட்டக்கூடிய ஒருவகை அஞ்சனக்கல்
கட்டலாம் – வெல்லலாம்
கடைவாசல் – மூலத்துவாரம்
கனல் – மூலாக்கனி
காயம் இரண்டு – பெருங்காயம், வெங்காயம்
ஐம்பொறி – மெய், வாய், கண், மூக்கு, செவி

ஏழாவது காண்டம்

பஞ்சகாலம் – சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், வெங்காயம்.

ஐங்காரம் – சீனாக்காரம் வெங்காரம், பூங்காரம், சவர்க்காரம்

சுத்திகள் ஐந்து – மண்ணுக்குள் புதைத்து வைத்தல், தண்ணீரால் கழுவுதல், காடியால் கழுவுதல், புடமிடுதல், எரித்தல், காற்றில் உலரவைத்தல், வெயிலில் வைத்தல்.

பஞ்சபட்சி – காகம், வல்லூறு, மயில், ஆந்தை, கோழி,

புடங்களின் வகை – 1000 வரட்டி வைத்து எரிப்பது மகாபுடம். 500 வரட்டி வைத்து எரிப்பது கஜபுடம், 200 வரட்டி வைத்து எரிப்பது பன்றிபுடம் (வராகபுடம்), எட்டு வரட்டி வைத்து எரிப்பது கோழிப்புடம் (குக்குடபுடம்).

புத்தாஞ்சோறு – கரையான் புற்று மண்.

ஆறாதாரம் – மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை.

இடகலை – வலதுகால் பெருவிரலில் இருந்து இடது நாசி வரையிலும் முள்ளந்தண்டின் இடது பக்கமாய் ஓடி நிற்கும் நாடி, சந்திரகலை எனவும் சொல்வதுண்டு.

பிங்கலை – வலது நாசியில் ஓடும் சரம்

பஞ்சபூதம் – மண், நீர், தீ, காற்று, ஆகாயம்

பஞ்சயாகம் – கர்மயாகம், ஞானயாகம், ஜெபயாகம், தபோ யாகம், தியானயாகம்.

கலைகள் – சூரியகலை பதினாறு. சந்திரகலை பன்னிரண்டு, அக்கினிகலை அறுபத்தி நான்கு

குண்டலினி – மூலாதாரத்தில் உள்ள பாம்பு வடிவம் போன்ற சக்தி

சல்லியன் – மந்திரவாதி

தச தீட்டை – யோகம் பயில்பவரின் பத்து முயற்சிகள்

தச வாயு – பிராணன், அபானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் முதலிய பத்து வகைப்படும்.

தியானம் – ஆழ்ந்த தெய்வ சிந்தனை

திரிகரணம் – மனம், வாக்கு, காயம்

தொந்தித்தல் – கட்டுப்படுத்துதல், கலத்தல்

பஞ்சகிருத்தியம் – படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலிய செயல்கள்

மந்தமாருதம் – மெல்லிய காற்று, தென்றல்,

தாமரை

நூலகம்